கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
இடியுடன் கூடிய மழை

# உதயன்

அழுவதற்கும் நினைவு கூரவும் எங்களுக்கு உரிமை உள்ளது

பக்கம் 06

சுடர் 30 கதிர் 178 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 10, ஞாயிற்றுக்கிழமை 24.05.2015


# போர்க் குற்றம் புரிந்த இராணுவம் இங்கு வேண்டாம்

## வடக்கு முதலமைச்சர் நேற்றுச் சீற்றம்

யாழ்ப்பாணம், மே 24

போர்க் குற்றம் இழைத்த இராணுவத்தினரை எமது மண்ணில் ஆக்கிரமிப்புப் படையாக ஆள விடுவது எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. எமது பாதுகாப்புக்காக நாங்கள் இராணுவத்தை இங்கு இருக்குமாறு எங்கும் – எவரும் கூறவில்லை. அவ்வாறு யாராவது கூறி யிருந்தால் அவர் இராணுவத்தின் அனுசரணையாள னாகவோ, இராணுவத்திற்குப் பயந்தவனாகவோ அல்லது அரசின் ஒற்றனாகவோ தான் இருக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இணுவில் இந்துக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவும், புதுக் கட்டடத் திறப்பு விழாவும் – கையளிப்பும் நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:– பக்.21



## புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 23 ஆம் திகதி

யாழ்ப்பாணம், மே 24

தரம் 5 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள 5 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை பழைய முறைமையின்படியே இடம்பெறும். மேலும், புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லை முடிவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த–5)

## வித்தியாவுக்காக திருமலையில் ஆர்ப்பாட்டம்

திருமலை, மே 24

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்தும், கொலையாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்குப் பாரபட்சம் காட்டாது உச்ச தண்டனை வழங்குமாறு கோரியும் கிழக்குப் பல்கலைக் கழக திருகோணமலை வளாக மாணவர்கள் நேற்றுக் பக்.21

## பதவி ஏற்றார் ஜெயலலிதா



சென்னை, மே 24

தமிழகத்தின் முதலமைச்சராக 5ஆவது முறையாக ஜெயலலிதா நேற்றுப் பதவி ஏற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் ரோசையா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

நேற்று முற்பகல் 10.37 மணிக்கு போயஸ் கார்டனில் இருந்து ஜெயலலிதா புறப்பட்டார். வழி நெடுக அவருக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். முற்பகல் 11 மணிக்குச் சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்திற்கு வந்தார். பதவியேற்க பக்.21

## 20 ஆவது திருத்தம் அரசுக்குள் குழப்பம்

### ஆசன தொகையில் கருத்து முரண்பாடு

கொழும்பு, மே 24

புதிய தேர்தல் சீர்திருத்தம் உள்ளடங்கிய 20 ஆவது சீர்திருத்தச் சட்டம் நடைமுறைப் படுத்துவது தொடர்பில் தேசிய அரசில் இருக்கும் பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இடையில் பெரும் கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பக்.21

## அதிரடிப்படையின் கட்டுக்குள் யாழ்.நகர்

### மீண்டும் பதற்ற நிலை



யாழ்ப்பாணம், மே 24

யாழ்.நகரப் பகுதி உள்பட குடாநாடு முழுவதும் இயல்பு நிலை தோன்றியிருந்தது. இவ்வாறானதொரு நிலையில் திடீரென நேற்று, யாழ்.நகரப் பகுதியில் மாத்திரம் பெருமளவிலான விசேட அதிரடிப்படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டனர். அத்துடன் பவள் கவசன வாகனங்களும் நிறுத்தப்பட்டது. இதனால், நகரில் நேற்று மீண்டும் பதற்றமான சூழ்நிலை தோன்றியது.

நீதிமன்றத்தினால், நகரப் பகுதியில் பக்.21

## போராட்டங்கள் நடத்தத் தடை

யாழ்ப்பாணம், மே 24

யாழ்.நகரப் பகுதியில் இரு வாரங்களுக்கு பேரணிகளையோ, கவனவீர்ப்புப்போராட்டங்களையோ நடத்துவதற்கு யாழ்.நீதி வான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித் துள்ளது. இதனை மீறி போராட்டங்கள் நடத்தப்பட்டால், போராட்டத்தில் ஈடுபடும் அனைவரும் கைது செய்யப்படுவர் என்றும் அந்தத் தடை உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்.21

## மீள்குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லை

### அதிகளவான நிதி ஒதுக்குமாறு ரணிலிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை


யாழ்ப்பாணம், மே 24

மீள்குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள் அரசால் செய்து கொடுக்கப் படவில்லை. அதனை உடனடியாக மேற்கொள்வதற்கு, மீள்குடியேற்ற அமைச்சுக்கு அதிகளவான நிதி ஒதுக்குங்கள்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேரில் பக்.21

## மாணவி கொலைக்கு எதிராகப் போராட்டம்

### கொக்குவிலில் நேற்று




யாழ்ப்பாணம், மே 24

புங்குடுதீவு மாணவியின் படுகொலையைக் கண்டித்து 'பெண் விடுதலைச் சிந்தனை' அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று யாழ். பஸ் நிலையத்தில் நடத்தப்படவிருந்த கவனவீர்ப்புப் போராட்டம் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களுக்கு யாழ்.நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை உத்தரவை பக்.21


ஐந்துக்கு பத்து

* உங்கள் 5 வருட நிலையான வைப்புக்கு ஆகக்கூடிய 10% வட்டி (நிறைவடையும் போது)

வ.நி.வீ. 8.45%

| | 3 மாதங்கள் | 6 மாதங்கள் | 1 வருடம் |
|---|---|---|---|
| நிறைவடையும் போது | 7.25% | 7.50% | 8.25% |
| வ.நி.வீ | 7.45% | 7.64% | 8.25% |

வேறு நிலையான வைப்புகளுக்கு கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்
மேலதிக விபரத்துக்கு அருகில் உள்ள சணச அபிவிருத்தி வங்கியை நாடுங்கள் அல்லது அழையுங்கள் 0242 227 928

SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சர்வதேசத் தரத்தில் படகுகள் ஏற்றுமதி தெற்காசியாவில் இலங்கை முதலிடம்

இலங்கையின் ஏற்றுமதி வருவாயைப் பெற்றுத் தருவதில் படகு உற்பத்தி இரண்டாவது இடத்தில் உள்ளதாகவும், தெற்காசியாவிலேயே மிகப் பெரிய சர்வதேச தரத்திலான படகுகளை வடிவமைத்து ஏற்றுமதி செய்யும் நாடாக இலங்கை கருதப்படுவதாகவும், அதிவேகக் கடல் பாதுகாப்பு ரோந்துப் படகு ஏற்றுமதியிலும் இலங்கை முந்துகின்றது எனவும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இந்தியக் கடற்படையினருக்கு வழங்கத் தயாராக இருந்த படகுகளைப் பார்வையிடுவதற்காகக் கடந்த வெள்ளிக்கிழமை ஹெந்தலை எலக்கந்தையில் அமைந்துள்ள படகு கட்டும் தளத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்தவேளையே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

புதிய அரசின் தொழில் வளர்ச்சியானது மக்களின் வேலை வாய்ப்பையும், பொருளாதாரத்தையும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை எழுந்துள்ள நிலையில் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதாகவும் அமைகின்றது. இலங்கையில் தற்போது வளர்ச்சிப் பாதையில் காணப்படும் படகு தயாரிப்பானது சர்வதேசச் சந்தையில் அதிக கிராக்கியை ஏற்படுத்தியுள்ளது.

அதி உச்ச நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இந்தப் படகுகளை வடிவமைத்தல், படகுத் துறை சார்ந்த நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களில் முன்னணியில் காணப்படும் ஒரேயொரு நிறுவனம் சாலோஸ் மரைன் லங்கா ஆகும். கடல் பாதுகாப்பு அபிவிருத்திக்குக் கடல் பாதுகாப்பு ரோந்துப் படகு கள் பயனுள்ளதாக அமைகின்றது.

பிராந்திய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், மொரீஷியஸ், மடகஸ்கார், மாலைதீவு ஆகிய நாடுகள் அனைத்தும் படகுத் துறையிலும், கடற் போக்குவரத்திலும், விரிவான அனுபவத்தையும், வளங்களையும் கொண்டுள்ள நாடுகளாகும். எனினும் இவற்றில் சில நாடுகள் இலங்கையில் தயாரிக்கப்படும் இந்தப் படகுகள் மீது அதிக ஆர்வம் காட்டுகின்றன—எனத் தெரிவித்தார். (த–10)

## கிழக்கு ஆசிரியர்கள் விரும்பின் சொந்த மாவட்டத்தில் நியமனம்

மட்டக்களப்பு, மே 24

கிழக்கு மாகாணத்திலிருந்து வெளி மாகாணப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களை அவர்களின் சொந்த மாவட்டப் பாடசாலைகளில் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதால் விரும்பியவர்கள் விவரங்களை அனுப்புமாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலகம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்துக்கு வெளியில் கற்பிக்கும் ஏராளமான ஆசிரியர்கள் தங்களின் பயணம் மற்றும் குடும்பக் கஷ்டங்களைக் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமத்திடம் எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து குறித்த நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே கிழக்கு மாகாணத்துக்கு வெளியில் மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில் கடமையாற்றும் தங்களையும் தங்கள் மாகாணத்திலேயே நியமியுங்கள் என்று கூறும் அனைவரும் தங்களது பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தற்பொழுது கற்பிக்கும் பாடசாலை போன்ற விவரங்களை east.complaineg mail.com என்னும் ஈமெயிலுக்கு அனுப்பி வைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–10)

## இலங்கை மீனவர் நேற்று விடுவிப்பு

கொழும்பு, மே 24

இந்திய அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 16 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியக் கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளிடம் இந்த மீனவர்களை ஒப்படைத்துள்ளனர்.

நேற்றுக் காலை 7.00 மணியளவில் காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து இந்த இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகக் கடற்படைப் பேச்சாளர் இந்திக டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். திருகோணமலை, சிலாபம் உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (த)

## காலம் தவறிய மழை மரக்கறி விலை உச்சம்

பயிர் வகைகளும் அழிவு

குடாநாட்டில் கடந்த வாரம் காலம் தவறிப் பெய்த தொடர் மழையினால் மரக்கறி வகைகளின் விலை அதிகரித்துள்ளதுடன், மேட்டு நிலங்கள், வயல் நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள சிறு தானியங்களும் அழிந் துள்ளன.

குடாநாட்டில் சிறுபோக நெல் அறுவடையைத் தொடர்ந்து பெரும்பாலான விவசாயிகள் வயல் நிலங்களிலும், மேட்டு நிலங்களிலும் எள்ளு, சணல், பயறு, கச்சான் போன்ற சிறு தானியங்களைப் பயிரிட்டிருந்தனர்.

இந்த நிலையில் காலம் தவறிப் பெய்த தொடர் மழையினால் வயல் நிலங்களில் தேங்கி நின்ற மழை வெள்ளத்தினால் பெரும்பாலான சிறுதானியப் பயிர்கள் அழிந்துவிட்டன. (த–115)

# சிங்கள - தமிழ் மக்களின் இன நல்லிணக்கத்துக்கு மடுப் பதியில் ஆராதனை

யாழ்ப்பாணம், மே 24

சிங்கள – தமிழ் மக்களிடையே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மடுத் திருப்பதியில் எதிர்வரும் 30 ஆம் திகதி மாலை 7 மணிக்கு திருப்பலியோடு ஆரம்பித்து திருவிழிப்பு ஆராதனை நிகழ்வொன்று இடம்பெறவுள்ளது.

இந்த ஆராதனையில் நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான மக்கள் ஒன்று கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தந்தையே எம்மை ஒன்றுபடுத்தும் எனும் மையப்பொருளில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை மற்றும் காலி ஆயர் றேமண்ட் கிங்ஸ்லி விக்கிரமசிங்க ஆண்டகை ஆகியோரின் ஆதரவுடன் உயிர்த்த ஆண்டவர் சமூகத்தினரால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படுகிறது.

30 வருடப் போர் முடிவுக்கு வந்தாலும் அதனால் ஏற்பட்ட காயங்களும் தவறான எண்ணங்களும் இன்று எமது மக்கள் மத்தியில் பல ரின் இதயங்களில் ஆழமாகப் பதிந்துள்ளது. இந்தக் காயங்களை ஆற்றுவதும் பிரிவுச் சுவர்களை இல்லா தொழிப்பதும் முடியாத ஒரு காரியமாகவே தென்படுகிறது. இதன் காரணமாகவே இந்தச் செப ஆராதனையை முன்னெடுக்கிறோம். இறைவன் எமது நாட்டின் சூழலில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி நீதியிலும் உண்மையிலுமான அமைதியையும் ஒன்றிப்பையும் ஏற்படுத்துவார் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும் என இந்த ஆராதனை ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த–103)

## புலிக் கொடிப் புரளி பரப்புகிறார் மஹிந்த

சாடுகிறார் அமைச்சர் ருவான் விஜேவர்த்தன

கொழும்பு, மே 24

இலங்கையின் முன்னாள் ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ஷவோ எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்களோ கூறுவதுபோல, வடக்கில் எங்குமே, கடந்த மே 18ஆம் திகதி புலிக்கொடி பறக்கவிடப்படவில்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

யாழ்ப்பாணத்தில் மாணவி ஒருவர் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம், விடுதலைப் புலிகளை நினைவு கூர்ந்து, வேறு நாடுகளில் நடந்த நிகழ்வுகளின் காணொளி என்பனவற்றைப் பயன்படுத்திச் சில அரசியல் மற்றும் கடும்போக்குச் சக்திகள் தெற்கிலுள்ள மக்களைத் தவறாக வழிநடத்த முனைகின்றன. இது குறித்து மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட ஆறாவது ஆண்டு நினைவு நாளன்று வடக்கில் சில பகுதிகளில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் புலிக்கொடி ஏற்றியதாக, முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ள குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது.

வடக்கு, கிழக்கில் அவ்வாறான எந்தவொரு நிகழ்வும் இடம்பெறவில்லை என்பதைப் புலனாய்வு அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

தமது அரசியல் நலன்களை அடைவதற்காக, ஊடகங்கள், சமூக வலையமைப்புகள் மூலம், குறிப்பிட்ட சிலர் இதுபோன்ற வதந் திகளைப் பரப்பி வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார். (த)

# மாணவியின் சடலம் மீது மஹிந்த அரசியல் ஆதாயம்

## நீதியமைச்சர் விஜயதாச கண்டனம்

கொழும்பு, மே 24

புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவின் சடலத்தின் மீது இனவாத அரசியல் ஆதாயம் தேடும் கேவலமான முயற்சியில், முன்னாள் ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ஷ இறங்கியுள்ளதாக, நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

மாணவி வித்தியாவின் படுகொலைச் சம்பவத்தை உலகமே அனுதாபத்துடன் நோக்கும் இந்தத் தருணத்தில், நாட்டின் முன்னாள் ஜனாதிபதி இந்தச் சம்பவத்தை இனவாதத்தைத் தூண்டும் பகடைக்காயாக உபயோகித்திருப்பது மனிதாபிமானமற்ற செயலாகும்.

தேசப்பற்றுடைய எந்தவொரு நபராலும் இது போன்ற மிலேச்சதனமான செயற்பாடுகளை தாங்கிக் கொள்ள இயலாது.

ஆனால் மஹிந்த ராஜபக்ஷ, தான் இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி என்ற உணர்வின்றி இது குறித்து மிகவும் இழிவானதும் கீழ்த்தரமானதுமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். நாட்டில் இனவாதத்தை ஏற்படுத்திக் குழப்ப நிலையை உருவாக்க வேண்டுமென்பதே அவரது ஒரே குறிக்கோள்.

இந்த அரசு ஆட்சியில் இருக்கும் வரை மீண்டும் நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

மாணவியின் சடலம் கிடைத்ததும் இதனைத் தாங்கிக்கொள்ள இயலாத பொதுமக்கள், கோபத்தில் எதிர்பாராத விதமாக நடந்து கொண்ட சம்பவத்தை இனவாத ரீதியில் நோக்குவது தவறாகும்.

இது மனித சுபாவம். இதனைக் கட்டுப்படுத்தி வழிநடத்துவது தான் எமது கடமை. அனைத்து தரப்பினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பை நாம் முறையாக முன்னெடுத்துள்ளோம்.

இராணுவத் தலையீடு இன்றி பொலிஸாரின் ஒத்துழைப்பை மாத்திரம் கொண்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விஜயகலா மகேஸ்வரன், ரவூப் ஹக்கீம் ஆகியோரும் தமிழ் ஊடகங்களும் திருப்தி வெளியிட்டுள்ளனர்.

யாழ். நீதிமன்றம் மீது கல்லெறியப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் அரசியல் தலையீடு இருந்தால் அது விசாரணைகளின் முடிவில் உறுதியாகும் –என்று தெரிவித்தார். (த)

# நீதியமைச்சருக்கு எதிராக சீறுகின்றது சிங்கள ராவய

இலங்கை சிங்கள நாடல்ல இலங்கையர்களின் நாடென நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ வெளியிட்ட கருத்திற்கு சிங்கள ராவய அமைப்பு எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரரே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதியமைச்சரின் இவ்வாறான ஒரு கருத்தினால் எமது அமைப்பு அதிருப்தியடைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் வினவிய போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இவ்வாறானதொரு கருத்தை வெளியிடுவார் என என் வாழ்நாளில் நான் நினைக்கவில்லை. நான் ஒரு பௌத்தன். நானும் அவர் மேல் அன்பு வைத்துள்ளேன். அவரும் என் மீது அன்பு வைத்துள்ளார். நாடாளுமன்றத்தில் விஜயதாஸ ராஜபக்ஷவுடன் நல்ல ஒரு உறவைக் கட்டியெழுப்பியுள்ளோம். எனினும் அமைச்சர் இவ்வாறான தொரு கருத்தை வெளியிடுவார் என நான் நினைக்கவில்லை.

மேலும் இவரின் கருத்தினால் நாங்கள் மிகவும் மனவேதனையடைந்துள்ளதுடன், மீண்டும் இவ்வாறான ஒருவரை நாடாளுமன்ற அமைச்சராக மக்கள் நியமித்தால் சிங்களவர்களுக்காகக் குரல் கொடுக்கும் எங்கள் அமைப்பைக் கலைத்து விடுவோம்–என்றார். (த–10)

# சம்பூர் அபிவிருத்திக்கு நேற்றுக் குழு அமைப்பு

மூதூர்,மே 24
சம்பூர் மக்களைச் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்வதற்கென கிழக்கு மாகாண கல்வி மற்றும் மீள் குடியேற்ற அமைச்சர் சி.தண்டாயுதபாணி தலைமையில் சம்பூர் அபிவிருத்திக் குழு நேற்றுச் சனிக்கிழமை நிறுவப்பட்டது .
இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட் மற்றும் கிழக்கு மாகாண சபைக்கு உட்பட சகல திணைக்களங்களின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.
இதன்போது உரையாற்றிய அமைச்சர்.
மத்திய அரசை விடவும் மாகாண சபையும் அதன் திணைக்களங்களும் அர்ப்பணிப்புடன் விரைந்து செயற்பட்டுச் சம்பூர் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களைக் குடியேற்ற நடவடிக்கை



எடுக்க வேண்டியது அனைவரதும் தார்மீக கடமையாகும்.
இவர்களுடைய வீடமைப்பு மற்றும் வாழ்வாதாரம், கல்வித் தேவையே இன்று முன்னுரிமையில் உள்ளது. இதற்கான முன்னெடுப்புக்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.
எனவே உடனடியாக ஒரு வார காலத்துக்குள் அனைத்து திணைக்கள அதிகாரிகளும் சம்பூருக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய தேவைகளை அடையாளப்படுத்தி அங்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பான திட்டத்னை சமர்ப்பிக்க வேண்டும்–என்றார். (த–40)

# இளைஞனின் காலில் புகைக்குண்டுச் சிதறல்

## சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம்,மே 24
யாழ். நீதிவான் நீதிமன்றத்தின் முன்பாக கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்ட கண்ணீர் புகைக் குண்டுத் தாக்குதலின்போது இளைஞர் ஒருவரின் காலில் கண்ணீர் புகைக் குண்டுச் சிதறல்கள் தாக்கிக் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட் டுள்ளார்.
இந்தச் சம்பவத்தில் கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காலில் குண்டு சிதறல்கள் தாக்கி அதே இடத்தில் விழுந்துள்ளார். இதன்போது துரத்தி வந்த பொலிஸார் இளைஞரைத் தூக்கி சென்று பொலிஸ் நிலையத் தடுப்பு காவலில் வைத்தனர்.
பிற்பகல் 1.30மணியளவில் காயமடைந்த இளைஞன் அதிகாலை 3 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
நேற்றுமுன்தினம் இவருக்கு வைத்தியர்களால் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை மூலம் காலில் கண்ணீர்ப் புகைக்குண்டின் சிதறல் முழங்கால் பகுதியில் இருந்து அகற்றப்பட்டது. (த–ரி)

# தண்டவாளம் காலில் வீழ்ந்து இளைஞர் காயம்

தென்மராட்சி, மே 24
உயரத்தில் வைக்கப்பட்டிருந்த இரும்புத் தண்டவாளம் காலில் வீழ்ந்ததில் இளைஞர் காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் சாவகச்சேரி பெரிய மாவடியில் இடம்பெற்றது.
பலகைகளுக்கு மேல் வைக்கப்பட்டிருந்த தண்டவாளம் பலகையை எடுத்தபோது, கீழே வீழ்ந்ததில் இளைருக்குக் காலில் பாதிப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுஜீபன் (வயது–28) என்பவர் பாதிப்புக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (த–9)

# வன்முறையால் வழக்கை திசை திருப்ப வேண்டாம்

## வடமாகாண அமைச்சர் டெனீஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 24
வன்முறைகள் வழக்கை வேறு திசைக்குத் திருப்பிவிடும். இதனால் நீதிமன்றை தாக்கியவர்கள் பக்கம் கூடிய கவனத்தை ஈர்ப்பதாக மாறி கொலைக்குற்றவாளிகள் இலகுவில் தப்பி விடுவார்கள். இளைய சமூகத்தினரை வன்முறையை கையில் எடுக்கவேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளார் வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் அந்த அறிக்கையில்,
கொலைக் காமுகர்களால் வன்புணர்வு செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவிக்காக உலகம் முழுவதும் இரங்கல் தெரிவித்துக்கொண்டும், கொலைகாரருக்கு அதிக பட்ச தண்டனை வழங்கக் கோரியும் கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அதைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தும் பொருட்டு சில அரசியல் சக்திகள் தமது அராஜகக் கும்பலை பயன்படுத்தி நீதிமன்றுக்கு பங்கம் விளைவித்தும் நாட்டின் சுமுகமான சூழலுக்கு இடையூறு விளைவித்தும் வருவது மிகவும் வேதனை அளிக்கின்றது. வித்தியாவின் கொடூரமான கொலையை வைத்து அரசியல் செய்யவேண்டாம். இளைய சமுதாயத்தினர் வன்முறையை கையில் எடுக்க வேண்டாம்.
கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவ் விடயத்தில் நீதியான விசாரணை நடத்த வேண்டி அழுத்தங்களைக் கொடுக்க வேண்டியிருப்பினும், நீதிமன்றுக்கு கல் வீசுவதாலோ, பொதுச் சொத்துக்கள் தனியார் சொத்துக்கள் போன்றவற்றை சேதப்படுத்துவதாலோ பயனேதும் கிடைக்கப்போவதில்லை.
இவ்வாறு திட்டமிட்ட வகையில் அடாவடித்தனங்கள் செய்யும் போது இந்த வழக்கு வேறு திசைக்கு திரும்பி, நீதிமன்றை தாக்கியவர்கள் அல்லது அராஜகக்காரர்களின் பக்கம் அது கூடிய கவனத்தை ஈர்ப்பதாக மாறி கொலைக் குற்றவாளிகள் இலகுவில் தப்பி விடுவார்கள்.
எனவே இளைய சமுதாயம், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல் வாதிகள் அனைவரிடமும் கேட்டுக்கொள்வது மாணவியின் கொலையை அரசியலாக்காமல் கொலையாளிகளுக்குத் தண்டனையைப் பெற்றுக்கொடுக்க அமைதியாக சிந்தித்து செயற்படுங்கள்.
மாணவியின் கொலையுடன் அச்ச உணர்வுடன் இருக்கும் மக்களை மேலும் பயத்துக்குள்ளாக்காது, ஒருவரை ஒருவர் அரசியல் ரீதியாகக் குற்றம் சுமத்தாதும், நீதியான விசாரணைக்கும் கடுமையான தண்டனையை பெற்றுக்கொடுக்கவும் சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# உயிர்களைக் காவு கொள்ள காத்திருக்கும் பட்ட வேம்பு

## கைதடி மக்களை அச்சுறுத்துகிறது கடும் காற்று

கைதடி,மே.24
கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்துக்கு அண்மையிலுள்ள வீதியில் வேப்பமரம் ஒன்றுகடந்த பல மாதங்களாகப் பட்ட நிலையில் மின் கம்பத்துக்கு மேலாக முறிந்து விழும் தருவாயில் இருப்பதாக பொது மக்களால் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.
இந்த வீதியால் பாடசாலை மாணவர்களும் பொது மக்களுமென தினமும் நூற்றுக்கணக்கானோர் செல்வதாகவும் இது சம்பந்தமாக வேப்பமரம் நிற்கும் காணி உரிமையாளருக்கு பல தடவைகள் தெரிவித்த போதும், அவர் அதனைத் தறிப்பதற்கான எதுவித நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.
இதேவேளை, அந்தப் பகுதியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் ஒருவர் இந்தப் பட்ட வேப்ப மரத்தின் ஆபத்துப் பற்றி மின்சார சபைக்கு சில மாதங்களுக்கு முன் இதனை அகற்றுமாறு கோரி கடிதம் நேரடியாகச் சென்று கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்தப் பட்ட மரம் தற்போது வீசும் கடுங்காற்றின்போது மின் கம்பத்தின் மீது முறிந்து விழுமாயின் இந்த இடத்தில் பல உயிர்களை காவு கொடுக்கும் நிலை ஏற்படும்என பொது மக்கள் பலராலும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.
எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து இதனை அகற்ற வேண்டும் எனவும் பொது மக்கள் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ–288)

# நுகர்வோர் பாதுகாப்புச் சபை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 24
யாழ்.மாவட்ட நுகர்வோர் பாது காப்புச் சபையின் கலந்துரையா டல் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ். மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெறும்.
இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு திணைக்களத் தலைவர்களுக்கு யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (த–9)

# பொங்கல் விழா நடைபெறாது

கற்கிடங்கு கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் விழா நடைபெறமாட்டாது.
முல்லைத்தீவு மாவட்ட மாங்குளம் பிரதேசத்திற்குட்பட்ட கருநாவல் பற்று தெற்கு கற்கிடங்கு கண்ணகை அம்மன் பொங்கல் விழா நாளை திங்கட்கிழமை நடைபெறத் தீர்மானிக் கப்பட்டிருந்தது.
ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் இம்முறை பொங்கல் விழா நடைபெறமாட்டாதென கற்கிடங்கு கண்ணகை அம்மன் கோயில் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (த–422)



புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்கு நீதி கோரி நேற்று முன் தினமும் வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முனனெடுக்கப்பட்டன. வவுனியா தபால் நிலைய உத்தியோகத்தர்களாலும் ,ஓமந்தை ஆட்டோ சங்கத்தினராலும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (த)

3,6 மற்றும் 12 மாததவணை காலப்பகுதியில்
உங்கள் தெரிவுப்படி மீளச்செலுத்தலாம்
ரூபா.5மில்லியன்வரை
பெற்றுக்கொள்ள முடியும்
நம்பமுடியாத குறைந்தவட்டி வீதத்தில்
ரூபா.1மில்லியனுக்கு மாதாந்தவட்டி ரூபா.13,990 மட்டுமே
SINGER FINANCE நாடுங்கள்
உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து
உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்



தொடர்புகளுக்கு
தனு 077 9 357 124
தர்ஷன் 077 7 009 666
சுஜந்தன் 077 7 391 449
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

# மாணவி கொலையின் பின்னால் உள்நோக்கம் கொண்ட மூலசக்தி

## நாடாளுமன்றில் சரவணபவன் எம்.பி குற்றச்சாட்டு

கொழும்பு, மே 24

புங்குடுதீவு மாணவியின் கொலை ஒரு பாலியல் வேட்கை அடிப்படையில் மட்டும் நடந்த கொலை என்றோ தனி மனித விரோதங்கள் காரணமாக மட்டும் நடந்த கொலை என்றோ நம்பி விடமுடியாது. இந்தக் கொலையின் பின்னால் ஒரு பெரும் உள்நோக்கம் கொண்ட மூலசக்தி இருந்துள்ளது என்றே கருதவேண்டியுள்ளது எனத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

கடந்த 21ஆம் திகதி நாடாளுமன்றில் ஆற்றிய உரையின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று நான் இந்தச் சபையில் மிகவும் மனம் நொந்தநிலையிலும் ஆத் மார்ந்த கோபத்துடனும் உரையாற்றவேண்டிய நிலையில் உள்ளேன். புங்குடுதீவிலுள்ள பள்ளி மாணவி ஒருவர் சில மிருகத்தனமான நபர்களால் கடத்தப்பட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுப் படு பயங்கரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். முழு மனித குலமுமே வெட்கித் தலைகுனிய வேண்டிய இழிச்செயல் இது என்பதில் நீங்கள் அனைவரும் என்னுடன் உடன்படுவீர்கள் என நம்புகிறேன்.

கடந்த காலங்களில் வடக்கில் சிறுமியர், மாணவிகள் உட்படப் பெண்களுக்குப் பாலியல் பாதுகாப்போ,உயிர்ப் பாதுகாப்போ இல்லாத ஒரு நிலை நிலவியது. அப்படியான சில குற்றங்களில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. இன்னும் சிலவற்றில் சிலர் கைது செய்யப்பட்டாலும் ஒரு சில நாள்களில் பிணையில் விடப்பட்டுச் சுதந்திரமாக நடமாடும் நிலை இருந்தது. ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்பு இப்படியான கொடுமைகளிலிருந்து தமிழ்ப் பெண்களுக்கு விடிவு கிடைக்கும் என நாம் நம்பினோம். எமது நம்பிக்கையைச் சிதறடிக்கும் வகையிலும் அந்த இருண்ட யுகம் இன்றும் கலையவில்லை என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் வகையிலும் இந்த மனிதகுல விரோத நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

காரைநகரில் சிறுமி ஒருத்தி கடற்படைச் சிப்பாய் ஒருவரால் ஏமாற்றிப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை, பாலியல் தொந்தரவு காரணமாகத் தீவுப் பகுதியில் ஒரு மருத்துவமாது தற்கொலை செய்தமை, நெடுங்கேணியில் பள்ளிச் சிறுமி ஒருத்தி படையினன் ஒருவனால் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டமை, கனகராயன் குளத்தில் ஒரு மாணவியின் கொலை என அடுக்கடுக்காக நடந்த பாலியல் கொலைகள் தொடர்பான சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை. இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

எனவேதான் புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பாக நியாயபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக் கோரி வடபகுதியே கொதித்தெழுந்தது. இது ஒரு பாலியல் வேட்கை அடிப்படையில் மட்டும் நடந்த கொலை என்றோ தனி மனித விரோதங்கள் காரணமாக மட்டும் நடந்த கொலை என்றோ நம்பி விடமுடியாது. இந்தக் கொலையின் பின்னால் ஒரு பெரும் உள்நோக்கம் கொண்ட மூலசக்தி இருந்துள்ளது என்றே கருதவேண்டியுள்ளது.

சந்தேக நபர் ஒரு கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர் எனவும், மாணவியின் தாயார் அவருக்கெதிராகச் சாட்சி சொல்லியதாலேயே பழிவாங்கும் முகமாக மாணவி கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இக் கொலையில் சம்பந்தப்பட்டதாகக் கொழும்பிலிருந்து வந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சுவிஸ் நாட்டிலிருந்து திரும்பி வந்த ஒருவரும் இதில் சம்பந்தப்பட்டவர் எனவும் அவர் சம்பவத்தைப் படமெடுத்தார் எனவும் கூறப்படுகிறது.

இதில் சம்பந்தப்பட்டவர் கொள்ளையில் ஈடுபட்டவர் என்றால் இவரின் கொள்ளைக் கோஷ்டி மற்ற நபர்கள் யார்?அவர்கள் வேறு எங்கு கொள்ளைகளில் ஈடுபட்டனர். அவர்கள் ஒரு தனியான கொள்ளைக் கோஷ்டியா அல்லது அவர்களை இயக்கும் பின்னணிச் சக்தி உண்டா?என்ற கேள்விகள் எழுகின்றன. இவர்கள் இந்தக் கொலையைத் தாங்களே செய்தார்களா அல்லது கூலிக்குச் செய்தார்களா என்பதும் அறியப்படவேண்டும்.

எனவே இந்தச் சம்பவம் தொடர்பாக ஆழ மாக,துல்லியமாக எந்த ஒரு சக்தியினதும் அழுத்தங்களுக்கு உட்படாத வகையில் புலனாய்வு செய்யப்பட வேண்டும். கடந்த காலத்தில் இப்படியான சம்பவங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட திருப்தியற்ற நடவடிக்கைகள் போல இப்போதும் இருந்துவிடக் கூடாது.

அவ்வகையிலேயேகுற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் எனக் கோரி வடபகுதி முழுவதும் போராட்டங்கள் எழுச்சி பெற்றன. மாணவர்கள், ஆசிரியர்கள்,பல்கலைக்கழகச் சமூகம், வணக்கத் தலங்கள்,பொதுநிறுவனங்கள் என வடபகுதியில் முழு மக்களுமே நீதி கோரி வீதியில் இறங்கினர். மக்கள் நீதியைக் கோரி ஜனநாயக வழியிலேயே தங்கள் போராட்டங்களை நடத்தினர். அதை யாரும் தடுக்கவும் முடியாது. தவறு எனக் கண்டிக்கவும் முடியாது. ஏனெனில் அது அவர்களின் மறுக்க முடியாத உரிமை.

மக்களின் போராட்டங்கள் நியாயமானவை என்பதால் அவற்றுள் சில விஷமிகளால் திட்டமிட்ட முறையில் வன்முறை புகுத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இவர்கள் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவதையும் எவ்வித அழுத்தங்களுக்கும் உட்படாமல் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதைக் குழப்பவுமே இவ் வன்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன என நான் திடமாக நம்புகிறேன்.

கடந்த செவ்வாயன்று ஒரு கோஷ்டியினர் யாழ்.நகரெங்கும் திரிந்து கடைகளையும்,அரச காரியாலயங்களையும் பூட்டும்படி மிரட்டியமையை நாம் இங்கு சாதாரண விடயமாகப் பார்க்க முடியாது. மக்கள் இயல்பாக எழுச்சி பெற்ற நிலையில் சில விஷமிகள் மேற்கொள்ளும் இப்படியான மிரட்டல்கள் வன்முறைக்கு இடப்பட்டஅத்திவாரமாகவே நான் கருதுகிறேன்-என்றார். (த)


Room நாள் வாடகைக்கு
600/=, 800/=, 1200/=, 2500/=,3950/=, A/C,TV
இணைந்த குளியலறையுடன் Hotel Villa,
422, Galle Road, Wellawatte. 072 255 2222
(இராமகிருஷ்ணா வீதிக்கு அருகில்)

உதயன் advt@uthayan.com 0215671111

SB TRAVELS & TOURS (PVT) LTD — SPECIAL AIR FARES

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CHENNAI | 21,800/- | AI | LONDON | 79,500/- | KU |
| MADURAI | 17,400/- | MJ | TORONTO | 115,100/- | 9W |
| TRICHI | 26,600/ | UL | MALDIVES | 16,700/- | MU |
| BOMBAY | 28,100/- | AI | PARIS | 63,600/- | 9W |
| BENGALURE | 30,700/- | UL | NEWYORK | 108,800/- | CX |
| KOCHI | 25,500/- | UL | MELBOURNE | 90,900/- | MH |
| DELHI | 29,800/- | AI | CANTON | 63,900/- | MH |
| MALAYSIA | 18,600/- | AK | PERTH | 99,800/- | MH |
| SINGAPORE | 28,100/- | MH | NARITA | 65,900/- | CX |
| BANGKOK | 28,400/- | MH | AUCKLAND | 109,300/- | CX |
| ONEWAY: CHENNAI - 11,500/- SG | | | SYDNEY | 104,800/- | MH |

*Condition Apply
VISA / MASTER AMERICAN EXPRESS CARD ACCEPTED.
IATA
DUBAI - 17,300/- QR , DOHA - 19,800/- KU, SHARJAH - 14,000/- QR
சகல நாடுகளுக்குமான டிக்கட்டுகளை மிக நியாய கட்டணத்தில் பெற இன்றே அழையுங்கள்:0771083480,81,82,83
0766911080,81,82,83,84,85,86,87,89,90
Doha Qatar Bureau Arrangement செய்து தரப்படும்.
India, Bangkok, Malaysia Visa Arrangement செய்து தரப்படும்.
No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280
No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -011 2333322
NO 15, JEMPATTAH STRRET, COLOMBO-13. TEL- 011 2446666
E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurence




4 YEAR EDUTRUST COLLEGES களில்.....
வங்கிக் கடன் வசதி
Course: Hotel Management, Tourism, Business Management , IT
கற்கை நெறிக்கான கட்டணம் - RS.300,000/- முதல்
➤ க.பொ.த. (சா.த) போதுமானது
➤ அடிப்படை ஆங்கில அறிவு போதுமானது
➤ வயதெல்லை 18 - 38 வரை
➤ பகுதிநேர வேலைவாய்ப்பு மூலம் 2 இலட்சத்துக்கு மேல் சம்பளம்.
IELTS தேவை இல்லை
அரச அங்கீகாரம் பெற்ற எமது நிறுவனம் மூலம்.....
FREE - AIR PORT PICKUP, AIR TICKET, SIM CARD
நேர்முகத்தேர்வு யாழ்ப்பாணத்தில் உள்ள TILKO Hotel இல் நடைபெறும்
0767 665 447
0776266309

Orient Lanka Employment Agency
No: 2/1/1A, High Level Road, Kirulapone, Colombo - 06.
Tel: 011318 6396, 0112515146



UK, Australia, Canada, USA, New Zealand , Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...

வங்கியில் பணவைப்பு
Saving book, Fixed Deposit, Statement
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு (அரசவங்கிகளில் மட்டும்)
Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment / New Applications etc...
(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

SKYWALK Visa Solutions
ஸ்கைவோக் விசா சொலூஷன் பிரைவட் லிமிட்
No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)
077-7711905



பெயர் மாற்றம்
வண்ணாங்கேணி வடக்கு பளையை முகவரியாகக் கொண்ட சிவயோகம் சிவராஜசிங்கம் என்ற எனது பெயரை இன்றிலிருந்து சிவயோகம் சிவராசா என மாற்றிக் கொள்ளுகின்றேன்.
சி.சிவராசா (57109) (3.6.7)

நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
பொமேரியன், ஜேர்மன் செப்பேட், டொபர் மன், கிறேடன் போன்ற நாய்க்குட்டிகள் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
Multi Farm Pet Paradise
K.K.S. வீதி, தட்டாதெருசந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 075 4985400 (60137)

முக்கிய அறிவித்தல்
சாவகச்சேரி நுணாவில் மேற்கு, முகமட் நவாஸ் முகமட்சர்பூன் ஆகிய எனது பாவனையில் இருந்து கடந்த 03.01.2014 ஆண்டு விற்கப்பட்ட Np WT 6263 இலக்க பிளான்ரினா பஜாஜ் மோட்டார் சைக்கிளின் பெயர் பதிவு இன்னும் மாற் றம் செய்யப்பட வில்லை. மேற்படி இலக்க முடைய மோ. சைக்கிளை கண்டால் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 518 9131 (61147)(4.3.7)



கண்ணீர் அஞ்சலி
யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கத்தின் செயலாளர் Dr.Lion. K.M பத்மநாதன் அவர்களின் சகோதரி
திருமதி நாகேஸ்வரி தனபாலசிங்கம்
சிவபதமடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
தலைவர் Lion M. தவக்குமாரன் MJF
நிர்வாக சபை உறுப்பினர்கள், கழக அங்கத்தவர்கள்
யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் (60138) (10.6)

BAIRAHA இறைச்சிகோழி குஞ்சு விற்பனைக்கு
முதற்தரமான BAIRAHA இறைச்சிக் கோழிக் குஞ்சு விற்பனைக்குண்டு. ஒரு குஞ்சின் விலை ரூபா 90/= பிரதி சனிக்கிழமைதோறும் ஓடர்களுக்கு வவுனியா, கிளிநொச்சி, பரந்தன், கொடிகாமம், நெல்லியடி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு:-
SAHAN'S FARM PLUS
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
T.P: 077 9959 382, 077 9069 298 (59717) (10.6)

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### இடம் விற்பனைக்கு

இடம்- பளை,
10 Lms (100 பேர்ச்சஸ்) வெறும் நிலம் விற்பனைக்கு

தொடர்பு
திரு.நெல்சன்-0771235353

### காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை கிழக்கு, பிரதான வீதியில் உள்ள 515/10 இலக்கமுடைய தென்னந் தோட்டக் காணி விற்பனைக்குண்டு.
(60041) (4.3.7)
தொடர்பு: 021 222 3318

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, பலாலி வீதிக்கு மிக அருகில் (விவசாயப் பாடசாலை அருகில்) 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. திருமண மண்டபம், கல்வி நிறுவனங்கள் அமைக்க உகந்தது.
தொடர்பு: (60092)(4.3.7)
071 901 9554, 077 217 4038

### விற்பனைக்கு

ஒருதரம் பாவித்த Plywood சட்டரின் பலகைகள், இரும்பு Gates, மரயன்னல்கள், பாவித்த பலகைகள் முதலிய கட்டடப் பொருள்கள் மானிப்பாயில் விற்பனைக்குள்ளன.
(59995) தொடர்பு: 077 664 6975

### விற்பனைக்குண்டு

42 நாள்கள் நிறைந்த பொமேரியன் பெண்நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.
கருவேலடி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொடர்பு: 021 300 1267- 11011 (60094) (4.3.7)

### வீடு விற்பனைக்குண்டு

தெல்லிப்பழையில் Union கல்லூரிக்கு அண்மையாக ஒரு வீட்டுடன் கூடிய 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
(60097) (3.5.7)
தொடர்பு : 077 629 3710

### சொத்து விற்பனைக்கு

நவாலி, மானிப்பாயில் 10.675 Lms (106.75 பேர்ச்சஸ்) நிலத்துடன் வீடு விற்பனைக்கு

தொடர்பு
திரு.பார்த்திபன்-0777555826

### ரொயோற்றா (Toyota) கார் விற்பனை

AXIO-G கிறேற் வருடம்-2010
கலர்- சில்வர் KL xxxx
விலை - 36 இலட்சம்
தொடர்பு: 077 755 9590 (57108) (4.3.7)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி தபால் கந்தோர் வீதியில் 5¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சந்தை, ரயில் நிலையம், பாடசாலை, நீதிமன்றம் என்பனவற்றுக்கு மிக அருகில் உள்ளது. பார்வையிடுவதற்கும் மேலதிக தொடர்புகளுக்கும்.
077 818 7963, 077 063 9711

### காணிகள் விற்பனைக்கு

சுன்னாகம் மின்சார நிலையத்துக்கு அருகில் 14பரப்புக் காணியும் மயிலணி பகுதியில் 6 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.
(சி/16141) (4.3.7) தொடர்பு: 077 208 5271

### வாத்து கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு

சிறந்த ரக ஒருநாள், ஒருமாத யாழ்ப்பாணக் குஞ்சுகள் திருநெல்வேலியில் விற்பனைக்குண்டு.
ஒருநாள் குஞ்சு ரூபா 70/=
(59916)(45.3) தொடர்பு: 077 349 7277

### விற்பனைக்கு

நாட்டுக் கோழிக் குஞ்சுகள், ஒரு நாள், ஒரு கிழமை, இரண்டு கிழமை, ஒரு மாத, ஆரோக்கியமான, நோய்த் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டவை. (சி/16796)(4.3.7)
நாத்தாண்டிய தொடர்பு: 072 340 9941

### வீடு உடன் விற்பனைக்குண்டு

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
15/6A, சிறாம்பியடி லேன்
தொடர்பு: 077 976 3278 (60090) (4.3.7)

## தேவை




### தேவை

இரண்டு காவல்காரக் குடும்பம் மாதம்பை சிலாபத்தில் உள்ள தென்னந்தோட்டத்திற்கு தேவை. மதுப்பழக்கம் இல்லாதோர் தொடர்பு கொள்ளவும். தகுந்த சம்பளம் கொடுக்கப் படும்.
தொடர்பு:- 077 9095491/077 0417926

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.
077 458 7746 (60044) (3.5.7)

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரிலிருந்து 2 KM சுற்றாடலில் அமைந்த வீடு வாடகைக்குத் தேவை.
(சி/16143) (4.3.7) தொடர்பு: 077 972 3648

### வீட்டுப்பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம்: 12000/=
(60113)(4.3.7) தொடர்பு: 076 637 0647

### தேவை

கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ள மொத்த வியாபார கடைக்கு ஏற்றி இறக்க டிலிவரி பையன்கள் தேவை. (C/16790) (3.5.7)
தொடர்பு : 011 247 8218 011 232 0860

### முகாமையாளர் தேவை

பரந்தனில் உள்ள அரிசி ஆலைக்கு மில் அனுபவம் உள்ள அல்லது இளைப்பாறிய உத்தியோகத்தர் தேவை.
தபால்மூலம் தங்களது CV ஐ கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
K.S பொன்னம்பலம்
எரிபொருள் நிரப்பு நிலையம் பரந்தன்.
021 320 7042 (60031)(4.3.7)

### தேவை

கொழும்பில் உள்ள வீடொன்றுக்கு தங்கி இருந்து வீட்டு வேலை செய்ய நடுத்தர வயதுள்ள பெண் ஒருவர் தேவை.
(சி/16798)(4.3.7) தொடர்பு: 077 772 7654

### தேவை

நால்வர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு நல்லூர்ப் பிரதேசத்தில் வீடு வாடகைக்குத் தேவை.
(60042)(4.3.7) தொடர்பு: 077 791 6170

### பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில் வயதான தாயாரைப் பராமரிப்பதற்கு மூவர் அடங்கிய குடும்பத்துக்கு வீட்டு வேலையில் செயற்படக்கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் உடன் தேவை. சம்பளம்- 16, 000/=
(சி/16797)(4.3.7) தொடர்பு: 076 809 4923

## மணமக்கள் தேவை

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1979, ஜனவரி, ரோகிணி முதலாம் பாதம் இடப லக்கினத்தில் சந்திரன் 3 இல் குரு 4 இல் சனி, ராகு 7 இல் சுக்கிரன் 8 இல் சூரியன் செவ்வாய், புதன் 10 இல் கேது லக்கின பாவம் 44 மூன்று சுற்றும் 69¼ உயரம் 5'2" அழகான ஆசிரியைக்கு தகுந்த மணமகன் தேவை.
(60066)(4.3.7) தொடர்பு: 077 771 1071

### மணமகள் தேவை

லண்டன் வாசியான மணமாகாத (Computer Technician) 59 வயதான இந்து ஆண் மீள வந்து மணம்முடித்து யாழில் வசிப்பதற்கு 48 வயதுக்குட்பட்ட விதவை அல்லது மணமாகாத பெண்ணைத் தேடுகிறார்.
(60096) (4.3.7) தொடர்பு: 077 953 8968

### மணமகள் தேவை

வடலியடைப்பு யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1983 Denmark citizen Medical Doctor ஆக தொழில்புரியும், உயரம் 5'9" உத்தரட்டாதி நட்சத்திரம், மீனராசி, கிரகபாவம் முதல் சுற்று 0 மூன்று சுற்று 10½ செவ்வாய் தோஷம் இல்லை. மகனுக்கு பெற்றோர் Doctor or Medical Student மணமகளை ஐரோப்பாவில் இருந்து எதிர் பார்க்கின்றனர். Denmark Norway Sweden விரும்பத்தக்கது. Profile nr.M 3845433 tamilmatrimony.com
தொடர்புகட்கு: 004561429096 (60038)(4.3.7)
sunrise4100 @hotmail.com

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## வாடகைக்கு

### வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு முன்பாக இல.8 புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள், இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை மாத வாடகைக்கு ண்டு.
(சி/16786) (4.3.7) தொடர்பு:
011 250 4281/ 071 299 1256

### கடை வாடகைக்குண்டு

கஸ்தூரியார் வீதியில், புதிய கட்டடத் தொகுதியின் கீழ்த்தள கடை வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 361 1282 (சி/16160) (4.3.7)

### வீடு வாடகைக்குண்டு

நீராவியடி , யாழ்ப்பாணம்
84 ஆம் இலக்க வீடு
நிறுவனத்திற்கு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 807 2985 (60098) (3.7.6)

### வீடு வாடகைக்கு

மாத வாடகைக்கு வீடு கொடுக்கப்படும். பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது.
இல. 355, அரசடி வீதி, நல்லூர். (60112) (4.3.7)
தொடர்பு: 077 160 6578

### வாடகைக்கு

சாவகச்சேரி பெருங்குளம் சந்திக்கு அருகிலுள்ள கடைக்கட்டடம் பலசரக்கு கடைக்காக வாடகைக்கு வழங்கப்படும். (41145) (3.5.7)
தொடர்பு : 021 227 0610 ,077 781 5109

## வேலைவாய்ப்பு

### வேலை வாய்ப்பு

யாழ், வல்லையில் இயங்கும் ஆடைத்தொழிற்சாலை ஒன்றிற்கு பின்வருவோர் உடனடியாக தேவை.
Machine Operators, தர கட்டுப்பாட்டாளர் (QC), உதவியாளர்கள்.
தொடர்பு: 021-3215611

### வேலைவாய்ப்பு

F.R. Advertising International கம்பனியில் வேலைக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
O/L, A/L தகைமை உள்ளவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.
(ஆண், பெண் இருபாலாரும்)
(57110)(4.3.7) தொடர்பு:
077 280 3773, 077 354 8006, 077 208 3140

## ஏனையவை

### கணிதம் / விஞ்ஞானம் O/L

6ஆம் வகுப்பில் இருந்து G.C.E O/L வரை தமிழ்/ ஆங்கில மொழிகளில் ஆங்கில மொழி மூல விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரினால் மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படுகின்றது. தனிப்பட்ட முறையி லும் பிரபல கல்லூரிகளில் மிகச் சிறப்பாகக் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியர்.
R.Balasubramaniyam B.Sc
42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.
பெற்றோர் சமேதம்.
தொடர்பு : 077 242 3400, 077 887 1217, 077 517 8727

### இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புன்னிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா?, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச் சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல்
மாலை 5.00 மணி வரை.
இல.424/11, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
(சிவன் கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)
T.P: 072 681 6681, 072 681 6691
(57712) (4.3.6)

### ஆங்கிலம் கணக்கியல் கற்கைநெறி

தரம்1- 13 மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், வேலை செய்பவர்களுக்கு ஆங்கிலமும் ,உயர்தரம் மற்றும் சாதாரணதர மாணவர்களுக்கு கணக்கியலும் கொழும்பு சர்வதேசப்பாடசாலைகளில் கற்பித்த 15 வருட அனுபவமுடைய ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.
தொடர்பு: இல 25,விவேகானந்தநகர்கிழக்கு, கிளிநொச்சி. T.P 077 758 8112 (57405) (3.5.7)

### நாவலா மருத்துவ நிலையம்

* எலும்புகள் அதிகளவு செயலிழக்கச் செய்யும் வாதம் மூட்டுச்சவ்வுதேய்வு, முழங்கால்வீக்கம் மேலும் பல குணமாகும் மருந்தியல்.
* குழந்தையின்மை, பெண்ணியல் நோய்க்கான -சிறப்புச்சிகிச்சை (60095) (4.3.7)

சங்கிலியன்லேன், ரத்தினம் வைரவர் கோவிலடி (ஜெயந்திவீடு), மானிப்பாய். தொடர்பு: 077 321 2740

Study & Work in
Singapore
Hotel Management
Learn & Earn up to Rs. 70,000/- Month
அடிப்படை தகைமை O/L மட்டும்
Study & Work in
UK / USA / CANADA
AUSTRALIA / CYPRUS
VISA FORM FILLINGS - USA, Canada, UK, France, Italy, German, Swiss
போன்ற நாடுகளுக்கு விசா Form சிறந்த முறையில் செய்து தரப்படும்.
flex Institute
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel : 2364157 Fax : 2501766
www.flexinstitute.lk

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நெருப்பினுள் தூக்கி எறியப்பட்ட வைக்கோலின் நிலை வேண்டாமே....

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படும் இடங்களையும், பாலியல் தொந்தரவு மேற்கொள்ளப்படும் பகுதிகளையும், மாவட்டச் செயலகம் இனம்கண்டுள்ளது. மாவட்ட நன்னடத்தை அலுவலர்கள் அவற்றை அடையாளப் படுத்தி உள்ளனர்.

தாம் இனம் கண்ட, நேரில் கண்டறிந்த இருபத் தெட்டுப் பகுதிகளை அவர்கள் பட்டியல் இட்டுள்ளனர். முழுமையான விவரங்கள் அடங்கிய அவர்களின் அறிக்கை, வடமாகாணத்தின் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் கையளிக்கப்பட்டு விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நன்னடத்தை அதிகாரிகள் திரட்டிய தகவல்களின் பிரகாரம், பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள்களின் பாவனையை அறிமுகப்படுத்தி, அவற்றுக்கு அடிமைகளாக்கும் பகுதிகள் இனங்காணப் பட்டுள்ளன.

அதே வரிசையில், மாணவர்களை மதுவுக்கு அடிமையாக்கும் பகுதிகளும் இனம் காணப்பட்டுள்ளன.

மேலும், பாலியல் ரீதியான தொந்தரவுகள் இடம் பெறும் பகுதிகளும் அடையாளம் காணப்பட்டு வெளிப் படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.நகரில் உள்ள பிரபல கல்லூரிகளுக்கு அருகில் மட்டுமன்றி, புறநகர்ப் பகுதிகளின் பாடசாலைகளை அண்டியும் போதைப் பொருள் வியாபாரம் 'ஓகோ' என்று, தட்டிக் கேட்க எவரும் இல்லை, தங்களை இனம் காண்பதற்கு எவராலும் இயலாது என்ற உச்ச வீச்சுடன், மாணவர்களின் கல்வியை, வாழ்வை சீரழிக்கிறார்கள், அதற்குத் தூண்டுதல் கொடுக்கிறார்கள், உசுப்பேற்றுகிறார்கள்.

நன்னடத்தைப் பிரிவு அலுவலர்களின் அறிக்கையில், மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையை அர்க்கெடுத் திப் பாழாக்கும் சமூக விரோதிகளின் உள்நோக்கம் விண்ணளவு உயர்ந்து நிற்கிறது.

குடாநாட்டின் எதிர்காலச் சந்ததியினரை கருகிய மொட்டுக்கள் ஆக்கிவிடுவதற்கான அத்திபாரத்திற்குக் குழி ஆழமாகத் தோண்டப்படுகிறது.

அதனைத் தடுப்பதில் எமது எதிர்காலச் சந்ததியினரை, நல்வழிக்குத் திசை திருப்புவதில் சமூக நலனில் அக்கறை உள்ள சகலரும், ஒன்றுப்பட்டுச் செயற்பட வேண்டும்.

எங்கள் மண்ணின் எதிர்காலச் சந்ததியினரான இன்றைய மாணவச் செல்வங்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பு, இங்கு வாழும் சகலரதும் தட்டிக்கழிக்க முடியாத பெரும் கடமையும் ஆகும்.

அனைத்துத் தரப்பினரது நெஞ்சங்களும், எங்கள் எதிர்காலச் சந்ததியினரை நல்வழிப் படுத்த ஒன்றிணைய வேண்டும்.

இளையோர் வாழ்வை நாசமறுக்கவல்ல போதைப் பொருள் பாவனையை அவர்களிடம் இருந்து வேரறுக்கக் கங்கணம் கட்டாவிடில்,--

எமது இனத்தின் ஜனநாயக உரிமைகளை வழங்க மறுக்கும், பின்னடிக்கும் பெரும்பான்மையினருக்கு தீனிபோடும் பாவிகள் ஆவோம்.

இது குறித்த வாதப் பிரதிவாதங்கள், கருத்து வேறுபாடுகள், துடைத்து எறியப் படவேண்டும்.

அதற்கு மனங்கொள்ளுதலே எங்கள் எதிர்காலச் சந்ததியினரை வாழ வைக்கும்.

குற்றம் நேர்வதற்கு முன்னரே, அது வராமல் காத்துக் கொள்ளாதவன், நெருப்பிற்குள் எறியப்பட்ட வைக் கோல் போன்று அழியும் நிலையே மேலெழும்.

# அழுவதற்கும் நினைவு கூரவும் எங்களுக்கு உரிமை உள்ளது

■ தமிழில்– ரஜீவன்

வடக்கு–கிழக்கில் மே 18 ஆம் திகதி போரில் கொல்லப் பட்ட தங்கள் உறவுகளை நினைவு கூர்ந்து மக்கள் பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நிகழ்வுகளை, அரசியல்வாதிகளும், மதத் தலைவர்களும், சிவில்சமூகத்தைச் சேர்ந்தவர்களும், மகளிர் அமைப்புகளும் ஏற்பாடு செய்திருந்தன. இவற்றில் பல மத நிகழ்வுகளாகவும், போரில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூருபவையாகவும் அமைந்தி ருந்தன.

நான் பார்த்த நிகழ்வுகள் எவற்றிலும் விடுதலைப்புலிகளோ அல்லது அரச படையினரோ நினைவு கூரப்படவில்லை, அதற்கான முயற்சிகள் கூட இடம்பெறவில்லை.

ஆனால், இதற்கு மாறாக மாத்தறையில் இடம்பெற்ற படைவீரர்கள் தின நிகழ்வு முற்றிலும் படையினரை மையப்படுத்துவதாகவே காணப்பட்டன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கினார். இம்முறை போரின் போது கொல்லப்பட்ட அனைவரும் நினைவுகூரப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டாலும் உண்மையில் இந்த நிகழ்வு படையினருக்கு முக்கியத்துவத்தை வழங்குவதாகவே காணப்பட்டது.

போர் முடிவடைந்த பின்னர் ராஜபக்ஷ அரசு அதன் படையினரும் தமிழ்மக்கள் போரில் கொல்லப்பட்ட தங்கள் உறவுகளை நினைவு கூரும் நிகழ்வுகளைத் தடுத்துவந்துள்ளது நன்கு அறியப்பட்ட விடயம். இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்பவர்கள் அச்சுறுத்தப்பட்டனர், துன்புறுத்தப்பட்டனர்.தாங்கள் இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்வது குறித்து அச்சம் கொண்டுள்ளதை பல தமிழர்கள் கடந்த காலங்களில் என்னிடம் தெரிவித்திருந்தனர்.

எனினும், இம்முறை தங்கள் உறவுகளை கூட்டாகவும். கௌரவமாகவும் நினைவுகூருவதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளதாக கருதிய மக்கள் அதற்கான முன்முயற்சிகள் பலவற்றில் ஈடுபட்டனர்.

முள்ளிவாய்க்காலுக்கு அருகில் நடைபெற்ற இவ்வாறானதொரு நிகழ்வில் நான் கலந்துகொண்டேன், இதில் கலந்துகொண்ட கிறிஸ்தவ மதகுரு வொருவர் அழுவதற்கு எங்களுக்கு உரிமையுள்ளது, எனினும், கடந்த காலங்களில் இந்த உரிமை மறுக்கப்பட்டது எனப் பகிரங்கமாகச் சாடினார்.

கல்லறைகள் போல அமைக்கப்பட்டிருந் தவற்றில் மலர்களை தூவி அஞ்சலிசெலுத்திய மக்கள் பார்ப்பவர்கள் இதயம் நொறுங்கும் விதத்தில் கதறியழுதனர்.அதிகமாகக் கதறி அழுத வயது முதிர்ந்த பெண் மணியொருவரே நினைவுத்தீபத்தை ஏற்றியது குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களை போன்று சீருடை அணிந்த படையினர் இந்த நிகழ்வுகளைக் குழப்புவதற்கு முயற்சிகளை மேற்கொண்டது குறித்து நான் கேள்விப்படவில்லை, பத்திரிகைகளில் வாசிக்கவுமில்லை.

பொலிஸாரும் இந்த நிகழ்வுகளைத் தடுக்க முயலவில்லை, இவற்றில் கலந்துகொண்டவர்களை இலக்கு வைத்து அச்சுறுத்தவில்லை.

எனினும், இந்த நிகழ்வுகள் அனைத்திலும் கடும் பொலிஸ் கண்காணிப்பு காணப்பட்டது, சிவில் உடையில் காணப்பட்ட பலர் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்கள், இவற்றை ஏற்பாடு செய்தவர்களை படமெடுத்தனர். இவர்கள் பொலிஸ் மற்றும் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த புலனாய்வாளர்கள் என நான் உரையாடிய அனேகமான மக்கள் எனக்கு தெரிவித்தனர்.

சிவில் உடையில் நடமாடிய இவ்வாறான நபர் ஒருவர் என்னைச் சுற்றி திரிந்தார், பின்னர் நான் யார் எனக் கேள்வி எழுப்பினார், நான் அவர் யார் என கேள்வி எழுப்பிய வேளை தனது பொலிஸ் அடையாள அட்டையைக் காண்பித்தார்,

பின்னர் அவரும் இன்னொரு நபரும் நான் ஊடகவியலாளனா எனக் கேள்வி எழுப்பியதுடன் குறிப்பிட்ட நிகழ்வுகளில் வெளிநாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டது குறித்து என்னிடம் கேள்வி எழுப்பினார், நான் அதற்குப் பதிலளிக்க மறுத்துவிட்டேன்.

பின்னர் எனது சகாக்களும், கத்தோலிக்க மதகுருக்களும் என்னைச் சுற்றி சூழ்ந்துகொண்ட பின்னர் அவர் அங்கிருந்து பின்வாங்கினார்.

எனினும், சிவில் உடையில் காணப்பட்டவர்களும் வெளிநாட்வர்களைக் கேள்வி கேட்டனர்.ஊடக அமைச்சின் அடையாள அட்டை நன்கு தெரியும் விதத்தில் நடமாடிய ஊடகவியலாளர் ஒருவரிடமும் கேள்வி கேட்டனர்.

இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதில் கிறிஸ்தவ மதகுருமாரும், தமிழ் அரசியல்வாதிகளும் முக்கிய பங்காற்றினர்.இதனால், அவர்கள் தடைகளையும், அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளவேண்டி வந்தது.

முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுகளுக்கு எவரையும் ஏற்றிச்செல்ல வேண்டாமெனதங்களுக்குத் தொலைபேசி மூலம் உத்தரவிடப்பட்டதாக இரணைப்பாலையில் 7 பேருந்து சாரதிகள் கிறிஸ்தவ மதகுருமார்களுக்கு தெரிவித்தனர். இதனால், அவர்கள் தங்கள் பேருந்துகளை வழங்க மறுத்தனர்.

திருகோணமலையில் கிறிஸ்தவ மதகுருமார் மே 18 நிகழ்வுகளுக்காக நகரசபை மண்டபத்தை ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால், அதனைப் பயன்படுத்தவேண்டாமென பொலிஸார் அழுத்தங்களைக் கொடுத்தனர்.

கிளிநொச்சியில் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட கிறிஸ்தவ மதகுரு ஒருவருக்கான நினைவு ஆராதனைகள் இடம் பெற்றவேளை, அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

முள்ளிவாய்க்காலில் மே 29 திகதி வரை பேரணி எதனையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்துவதற்கான தடையை விதிக்கும் நீதிமன்ற உத்தரவை பொலிஸார் 15 ஆம் திகதி பெற்றுக்கொண்டனர்.

முள்ளிவாய்க்காலில் நினைவு நிகழ்வுகளை நடத்தவிரும்பிய மகளிர் அமைப்பிடம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கான தடையுத்தரவை மூத்த பொலிஸ் அதிகாரியொருவர் காண்பித்துள்ளதுடன் அவர்களையும் தடுத்து நிறுத்தியுள்ளார்.

ஊடகங்களில் இவ்வாறு பல சம்பவங்கள் குறித்த தகவல்கள் வெளியாகியிருந்தன.மட்டக்களப்பு வாகரையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டவர்களின் பெயர் விவரங்களைப் பொலிஸார் சேகரித்துள்ளனர். யாழ் பல்கலை கழகத்திற்குவெளியேபெருமளவுபுலனாய்வுப் பிரிவினர் குவிக்கப்பட்டிருந்தனர். முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் முள்ளிவாய்க்காலுக்குச் சென்றவர்களின் வாகனங்கள் தடுத்துநிறுத்தப் பட்டன. அவர்கள் விசாரிக்கப்பட்டனர்.மன்னாரிலும்நீதிமன்றதடையுத்தரவு விதிக்கப்பட்டது. கிழக்கு பல்கலைக் கழகத்திலும் பொலிஸார் நிகழ்வுகளுக்குத் தடைவிதித்தனர்.

இலங்கை போன்ற ஒரு நாட்டில் நினைவுகூரும், அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் மிகவும் குழப்பகரமானவை. அவை மிக ஆழமாக இனமயப்படுத்தப்பட்டுள்ளன. நான்கலந்துகொண்ட நிகழ்வுகள் அனைத்தும் முற்றுமுழுதாக தமிழர்களுடையவை, நான் கலந்துகொண்ட நிகழ்வில் எனது சிங்கள நண்பர்கள் சிலரும் கலந்துகொண்டனர். முள்ளிவாய்க்காலில் நான் கலந்துகொண்ட நிகழ்வில் சிங்கள மற்றும் முஸ்லிம் மதகுருவொருவரையும் காணமுடிந்தது.

எனினும், தமிழ் மக்களின் துயரங்களை எத்தனை தூரம் அவர்களால் பகிர்ந்துகொள்ள முடிந்தது என்பதை என்னால் நிச்சயமாக தெரிவிக்க முடியவில்லை.

சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் சார்பில் எவரும் நிகழ்வுகளை முன்னெடுக்கவில்லை, சிங்கள மக்கள் அரசின் யுத்தவீரர்கள் நிகழ்வுடன் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டனர்.

நினைவுகூரும் நிகழ்வுகள் என்பவை ஆழமாக தனிப்பட்ட துயரங்கள் தொடர்பானவை, அதேவேளை அவை பல்வேறுபட்ட சமூகங்கள் தொடர்பானவை என்பதுடன் அதிகளவிற்கு அரசியல் மயப்படுத்தப்பட்டவை.

இலங்கையில் நினைவுகூருவது குறித்த பாரம்பரியம் காணப்படும் அதேவேளை, அதனை தடைசெய்யும் பாராம்பரியமும் காணப்படுகின்றது. போர் முடிவடைந்த பின்னர் ராஜபக்ஷ அரசு அதனை தீவிரமாக நடைமுறைப்படுத்தியது.

நினைவுகூருவதற்கான உரிமை குறித்து யாழ்.நூலகத்தில் கலந்து கொண்ட கலந்துரையாடலில் 10 ஆம் திகதி நான் கலந்துகொண்டேன், பல்வேறு சமூகத்தினருக்கு நினைவுகூருவதற்குள்ள உரிமை தொடர்பானது அந்த நிகழ்வு. குறிப்பிட்ட விடயம் தொடர்பாக தீவிரமாக ஆராயப்பட்டதை இந்த விடயத்தில் சிறந்த ஆரம்பமாகவே நான் கருதுகிறேன்.

குறிப்பிட்ட நிகழ்வுகளில் கலந்த பின்னர் நான் ரயிலில் கொழும்பு திரும்பிக் கொண்டிருந்தேன், இதுவரை நாள் போரில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூருவதற்கு அஞ்சிக் கொண்டிருந்த இன்னொரு வன்னி சமூகத்தினர், தாங்களும் நினைவு கூரும் நிகழ்வை ஏற்பாடு செய்யப் போவதாக தெரிவித்தனர். வடக்கு –கிழக்கில் நடைபெற்ற பரந்துபட்ட நிகழ்வுகள் குறித்து அறிந்த பின்னரே அவர்கள் இந்த ஏற்பாட்டை செய்யவுள்ளனர்.

தடைகள் மற்றும் அச்சுறுத்தல்களையும் மீறி ஏற்பாட்டாளர்களும், கலந்து கொண்டவர்களும் காட்டிய உறுதிப்பாடு இலங்கையர்கள் நினைவு கூருவதற்கான, கதறி அழுவதற்கான உரிமையை அனுபவிக்க முடியும் என்ற புதிய நம்பிக்கையை அளித்துள்ளது.

நல்லிணக்கத்திற்கும், போரிலிருந்து மீண்டு முன்னோக்கி நகர்வதற்கும் இது முக்கிய விடயமாக அமையும்

# மரண அறிவித்தல்கள்

## சரவணை மாணிக்கம்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை மாணிக்கம் நேற்று (23.05.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாணிக்கத் தியாகராஜா வீதி,
சுன்னாகம். (60093) (45.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி செல்லாச்சி (செல்லம்மா) கந்தையா



மந்துவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லாச்சி (செல்லம்மா) கந்தையா 20.05.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - தெய்வானை தம்பதியின் செல்வப் புதல்வியும் கந்தையாவின் அன்பு மனைவியும் நகுலேஸ்வரி, செல்வக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுப்பிரமணியம், நிதர்சனா ஆகியோரின் அன்பு மாமியும் கௌரீசன், கௌசல்யன், கௌரிதா, துபிந்தா, அபிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24.05.2015) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (41544)(9.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி கமலாதேவி (தேவி) விமலராசா



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 18.07.1955 | 23.05.2015 |

புங்குடுதீவு, குறிகட்டுவானைப் பிறப்பிடமாகவும் 'ஆ' பகுதி தேவிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி விமலராசா நேற்று (23.05.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை மற்றும் இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், விமலராசாவின் அன்பு மனைவியும் கவிதா, சம்மந் தன், கோவி, சுஜா ஆகியோரின் அன்புத் தாயும், ரவி, தர்சி, சுதா ஆகியோரின் அன்பு மாமியும், கனிமாறன், கனிமதி, கனிநிலா, கனிநிலவன், தேவகாந், தர்மிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்காலிக முகவரியான மூங்கிலாறு உடையார்கட்டு வடக்கில் நாளை (25.05.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தேரா வில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூங்கிலாறு,
உடையார்கட்டு வடக்கு.
தொ.பே. 076 649 6791 (60091) (45.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பு மற்றும் கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம் 20.05.2015 அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் ஆருயிர் மனைவியும்,தெய்வேந்திரம் (சுப்ரா உணவகம்- சங்கானை), அஞ்சலாதேவி (கனடா), தர்மபாலன் (கனடா), காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் சற்குணதேவி (கனடா), மகேந்திரராசா (கனடா), சிவசுந்தரம் (தேவன் - கனடா), சுசிலாதேவி (கனடா), நவீந்திரராஜா (அப்பன் - கனடா), தயாளகுணதேவி (கனடா), ரவீந்திரன் (கனடா), பாலநாரயணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம், அன்னபூரணம், இராசேந்திரம், அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாரதாதேவி (இலங்கை), கிருஷ்ணபிள்ளை (கனடா), சந்திரபவானி (கனடா), சுசிலா தேவி (இலங்கை), காலஞ்சென்ற மனோகரன் மற்றும் சிவனேஸ்வரி (கனடா), தேவலோசினி (கனடா), ஜோதீஸ்வரன் (கனடா), பத்மராணி (கனடா), விக்கினேஸ்வரம் (கனடா), சுகிர்தா (கனடா), ரவிச்சந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.05.2015) திங்கட் கிழமை கனடாவில் உள்ள Elguin mill, Cemetery Cramatorium and Visitation Centre 1591 Elgin Mills Road, E Richmond Hill. ONT Lasima என்னும் இடத்தில் நடைபெறும், இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சு.தெய்வேந்திரம்
(சுப்ரா உணவகம் - சங்கானை) (60071) (45.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

# தீவகத்தில் சட்டம் – ஒழுங்கு நிலைப்பது யாருக்கோ எங்கோ உதைக்கிறது போலும்

## அதனால் தான் என் மீது சேறுபூசும் நடவடிக்கை என்கிறார் சட்ட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன்



யாழ்ப்பாணம், மே 24

நீதியான விசாரணை நடைபெறுவதற்கும், குறிப்பாக தீவகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படுவதற்கும் நான் முயற்சி செய்தேன். அது சில சக்திகளுக்குப் பொறுக்கவில்லை. தீவகத்தில் சட்டம் – ஒழுங்கு நிலைநாட்டப்படுவது யாருக்கோ எங்கோ உதைக்கின்றது. அதனால் தான் என் மீது சேறுபூசும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு, கொழும்பு பல்கலைக் கழக சட்டபீட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவுச் சம்பவம் தொடர்பில், அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

என்னுடைய பொதுவாழ்வின் எதிர்காலத்தையும், தமிழ் மக்கள் மத்தியில் எனக்கு இருந்து வரும் அரசியல் அங்கீகாரத்தையும், சட்டவாளர் என்றளவில் எனக்கு இருக்கக் கூடிய கௌரவத்தையும், ஒரே நாளில் பூச்சிய நிலைப்படுத்தும் நோக்கில், மாதக் கணக்கில் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்ட ஒரு நாடகத்தின் காட்சிகளை கடந்த சில நாள்களாக மக்கள் தரிசித்துக் கொண்டிருக்கின்றனர்.

35 வருட என்னுடைய சட்டத்துறை அறிவையும் மனித உரிமைகள், பெண் உரிமைகள் பற்றி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அறிவூட்டலில் நான் ஆற்றியிருக்கும் பங்கினை எள்ளவேனும் அறிந்திராத மிலேச்சர்களால் பின்னப்பட்ட சதி வலையில் அப்பாவிப் பொது மக்கள் இழுத்து வீழ்த்தப்பட்டுள்ளார்கள். இது மட்டுமே எனக்கு நெஞ்சு பொறுக்காத விடயமாகக் காணப்படுகின்றது.

தத்தமது ஊன்றிய நலன்களால் உந்தப்பட்ட, ஆனால் அதே வேளை தமக்குள்ளே அரசியலால் மாறுபட்ட மூன்று முக்கிய சக்திகள் சம்பவதினத்தன்று ஒன்றுபட்டுச் செயற்பட்டவிதமே என் மீது அபாண்டமாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்ளின் உண்மைத் தன்மையை உணர வைப்பதற்குப் போதுமானது.


ஆர்ப்பாட்டங்களை முன்னின்று நடத்தியவர்களும் அவை நடத்தப்பட்ட இடங்களும் வித்தியாவுக்கு நடந்த கொடூரத்துக்கான கோபக் கனலை வெளிப்படுத்துவதைவிட, எனக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதையே இலக்காகக் கொண்டிருந்தமையை வெளிப்படுத்தியது.

நான் ஒரு குற்றவியல் சட்டத்தரணி அல்ல. மேலும், முழுநேரப் பல்கலைக் கழக ஊழியர் என்றளவில், நீதிமன்றில் முன்னிலையாக முடியாது. அப்படிச் செய்வதானால் அதற்கான விசேட அனுமதி பெறப்படவேண்டும். என்னால் செய்ய கூடியதெல்லாம் உரிய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு உண்மையான குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படவும் நீதியான விசாரணை நடைபெறவும் தீவிரமாக முயற்சிப்பது தான். அதனையே நான் செய்தேன். அது சில சக்திகளுக்குப் பொறுக்கவில்லை. குறிப்பாகத் தீவகத்தில் சட்டம் ஒழுங்கு நிலை நாட்டப்படுவது யாருக்கோ எங்கோ உதைக்கின்றது.

கருத்தை கருத்தால் மோத முடியாதவர்கள், ஒருவனின் தனிப்பட்ட வாழ்க்கையை விமர்சிப்பதன் மூலம் வெற்றிகாண முடியுமாயின் அத்தகைய விமர்சனத்திலிருந்து எவரொருவரேனும் தப்பிக்க முடியுமா என்பதையும் அறிவுடையவர்களின் தீர்மானத்துக்கு விட்டு விடுகின்றேன்.

எனதுகண்முன்னால்யாழ்பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் அதிகாரிகள் இருவரால், ஒப்படைக்கப்பட்ட சந்தேகநபர் எப்படித் தப்பிச் சென்றார் என்பதற்கு என்னிடம் விடையில்லை. இதற்கு விடையளிக்க வேண்டியவர்கள் பொலிஸாரே. இதே சந்தேகநபர் முதல்நாள் இரவும் தூணில் கட்டிவைத்து அடிக்கப்பட்டதன் பின்னர் தப்பித்துள்ளார். அது எப்படி நடந்தது என்பதும் ஆண்டவனுக்கே வெளிச்சம். யார் இதில் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என்பதை ஊகிக்க ரொக்கட் விஞ்ஞானம் தேவைப்படாது – என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (த–5)

# மரண அறிவித்தல்



## திருமதி. கோணாத்தைப்பிள்ளை சுப்பிரமணியம்

பிறப்பு : 26.07.1922 – இறப்பு : 22.05.2015

வடமராட்சி,புலோலி தெற்கு,"பற்றளையைச்"சேர்ந்த திருமதி கோணாத்தைப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் 22.05.2015 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும்,பேராசிரியன். கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி மற்றும்,பொன்மலர்,பூங்கோதை,மங்கையர்க்கரசி, சிவநேசன், சிவகுமாரி, சிவமலர், ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரஸ்வதி அம்மா, காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை மற்றும் மகேஸ்வரி, விநாயகம்,காலஞ்சென்ற விநாசித்தம்பி, மற்றும் பாலசுந்தரம்,தவமலர்,சிவமயம்,காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் பூதவுடல் 24 . 05 . 2015 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் கல்கிசை மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 11.00 மணிதொடக்கம் ஈமக்கிரியைகள் நடைபெற்று பி.ப 1.30 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்– குடும்பத்தினர். 011 2364289

# மரண அறிவித்தல்

## திருமதி மகாலட்சுமி நவரத்தினம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி நவரத்தினம் 20.05.2015 புதன்கிழமை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், M.S.நவரத்தினம்(ஓய்வுபெற்ற படவரைஞர் - உள்ளூராட்சித்திணைக்களம்) அவர்களின் பாசமிகு மனைவியும், தயாளினி(முன்னாள் நூலகர் - யாழ் பொது நூலகம்), சுதர்சனன் (அறிவிப்பாளர், IBC தமிழ்,லண்டன் ) ஆகியோரின் அன்புத் தாயாரும் சரவணபவன் (கனடா) அவர்களின் அன்பு மாமியும் சத்திய லட்சுமி, செந்தூரியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சுந்தரலிங்கம், குகராசா காலஞ்சென்ற தியாகலிங்கம் மற்றும் சிவராசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பாலசுந்தரம், மகாலிங்கம், திலகரத்தினம் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சாரங்கபாணி, செல்லம்மா, நேசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஞானபண்டித பாடசாலை அருகில்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
021 222 5338

தகவல்:
M.S.நவரத்தினம்(கணவர்)
K.சுந்தரலிங்கம்(சகோதரன்)
K.குகராசா(சகோதரன்)
K.சிவராசா(சகோதரன்)

# ASSOCIATED MOTORWAYS (PRIVATE) LIMITED

AMW என பிரசித்தமாக அழைக்கப்படும் அசோசியேட்டட் மோட்டார்வேஸ் (பிறைவேட்) லிமிடெட் ஆனது ஐக்கிய அரபு ராஜியத்தின் Al Futtaim குழுமத்தின் முழுமையான உரித்துள்ள துணைக் கம்பனியும் 65 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் மோட்டார்வாகன தொழிற் துறையின் முன்னோடியும் ஆகும்.

உலக புகழ்பெற்ற வணிக உரிமைப் பெயர்களான Nissan, Yamaha, Renault, Suzuki, Suzuki Maruti, Piaggio, New Holland, BP, Castrol, Sonax Goodyear மற்றும் Evergreen ஆகியவற்றிற்கு AMW நிறுவனமே இலங்கையில் முகவராகும் EPIC, Marathon, Automall, Pistop மற்றும் Capital Leasing ஆகியவை இந் நிறுவனத்தின் தேசிய வணிக பெயர்களை உள்ளடக்கும் AMW தற்போதய உலகப் புகழ் பெற்ற ட்ரக்டர் ஒன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் எமது செயற்பாடுகளை விவசாயத் துறையில் விஸ்தரிக்கின்றது. விற்பனைக்குப் பின் சேவை மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனை ஆரம்பிப்பதற்காக இலங்கையின் முதலாவது மோட்டார் வாகன கம்பனியின் விவசாயத் துறையில் விஸ்தரிப்புத் திட்டத்தில் இணைவதற்கு திறமையான நபர்களை (Active Individuals) AMW நிறுவனம் வரவேற்கிறது.

## முகவர் சேவை ஒருங்கிணைப்பாளர் (வடக்கு, தெற்கு)

### முக்கிய கடமைகளும் பொறுப்புக்களும்

- ஒழுங்குமுறையாக சேவை முகவர் விஜயங்களை மேற்கொண்டு தேவையான தொழில்நுட்ப தகவல்களை சேகரித்தல்
- SAP முறைமையில் விவரங்களை பதிவு செய்து சேவை முகவர்களுக்கான கொடுப்பனவுகளை தயாரித்தல்.
- முகவர்களுடன் ஒருங்கிணைந்து உத்தரவாத கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்
- சேவை முகவர்களுக்கு யமஹா சேவைக் கட்டட தொகுதியில் 2 மாதங்களுக்கு ஒரு தடவை உற்பத்திப் பயிற்சி திட்டங்களை ஒழுங்கு செய்தல்.
- முகவர் வளாகங்களில் சேவை இயக்கங்களை ஒழுங்கு செய்தல்.

### முக்கிய தேவைகள்

- வாகன துறையில் இது போன்ற பதவியில் 2-3 வருட அனுபவம் இருக்க வேண்டும் (இரண்டு சக்கர வண்டிகள்)
- அங்கீகரிக்கப்பட்டட நிறுவனம் ஒன்றிலிருந்து (ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவகம், NAITA அல்லது VTA) மோட்டார் வாகன பொறியியலில் தொழில்நுட்ப பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.
- க.பொ.த.ப உயர் தரம் வெற்றிகரமாக சித்தியடைந்திருக்க வேண்டும்.
- கணினிக் கல்வியில் அடிப்படைகளை கற்றிருக்க வேண்டும்.
- ஆங்கிலம், தமிழ் மொழிகளில் சிறந்த ஆற்றல் இருக்க வேண்டும்.
- செல்லுபடியாகும் மோட்டார் வாகன, மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணபத்தாரிக்கு கவர்ச்சிகரமான வேதனப் பொதி மற்றும் ஏனைய நன்மைகளும் வழங்கப்படும்.
தகுதியுடையோர் இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் கீழ் காணும் முகவரிக்கு.
உறவினரல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் விபரங்களடங்கிய சுய தரவை மின்னஞ்சல் மூலம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பி வையுங்கள்.

YAMAHA | AMW

பொது முகாமையாளர் - குழு மனிதவளங்கள்
அசோசியேட்டட் மோட்டார் வேஸ் (பிறைவெட்) லிமிட்டட்
185, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
மின்னஞ்சல்: hr@amwltd.com


# கனிஷ்ட ஊழியர்களுக்கான பரீட்சை

யாழ்ப்பாணம்,மே 24
அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் அலுவலகங்களில் கடமைபுரியும் கனிஷ்ட ஊழியர்களை முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு தரம் உயர்த்துவதற்காக இலங்கை பரீ[redacted] திணைக்களத்தினால் [redacted] படும் போட்டிப் பரீட்சை இன்று நாடுமுழுவதும் நடைபெற இருக்கின்றது.

மேற்படி யாழ்.மாவட்ட ஊழியர்களுக்கான பரீட்சை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இன்று காலை 9 மணிதொடக்கம் பிற்பகல் 2.15 மணி வரை மூன்று பாடங்களாக இடம்பெற இருக்கின்றது. (ஒ-288)


Free Course ! Web Design
பாடசாலை மாணவர்களுக்கான இலவச பயிற்சிநெறி
KU Education 0777302882
edu.kugroup.info/itf

உதயன் 0215671111



## சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## பல்கலைக்கழக அனுமதிகள் கல்வியாண்டு - 2014/2015

**நுண்கலைமாணி (கர்நாடகசங்கீதம்/நடனம்/ நாடகமும் அரங்கியலும்/கட்புல, தொழில்நுட்பக் கலைகள்) கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான செய்முறைத் திறன்காண் பரீட்சை**

விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கற்கை நெறிகளை தெரிவுசெய்த பல்கலைக்கழக அனுமதிக்குரிய குறைந்தபட்ச தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பதிவு செய்வதற்கான தகைமைகள்

ஓகஸ்ட், 2014 இல் நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (2014/2015 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கைநூலில் 3.2 பிரிவைப் பார்க்கவும்) அத்தோடு தாம் தெரிவு செய்த பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச்சித்தியும் (C) ஏனைய பாடங்களில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

### பரீட்சை மொழி

செய்முறைத் திறன்காண் பரீட்சைகள் அனைத்தும் தமிழ்மொழி மூலம் மட்டுமே நடத்தப்படும். (2014/2015 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கைநூலில் 8.1.8 பிரிவைப் பார்க்கவும்)

### விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்

விண்ணபதாரிகள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் A4 அளவிலான தாளில் தமது சொந்த விண்ணப்பங்களைத் தயாரித்து அனுப்புதல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணபதாரியும் மக்கள் வங்கிக்கிளையில் ரூபா. 300/- செலுத்திய பற்றுச்சீட்டினை விண்ணப் படிவத்துடன் இணைக்கவேண்டும். இக்கொடுப்பனவை "சிரேஸ்ட உதவி நிதியாளர், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்" கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை என்ற பெயருக்கு வங்கிக் கணக்கிலக்கம் 075-100110000-767 மக்கள் வங்கி, மட்டக்களப்புக் கிளைக்கு வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைச் சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். அவை அதிபர் அல்லது சமாதான நீதிவான் அல்லது கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தல் வேண்டும். மூலப்பிரதிகள் அனுப்பப்படத் தேவையில்லை.

பரீட்சார்த்திகள் சுய விலாசம் இடப்பட்ட ரூபா 30/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை (23X10 செ.மீ) யினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இக்கடித உறை அனுமதி அட்டை அனுப்புவதற்கு பயன்படுத்தப்பட இருப்பதனால் சரியான அஞ்சல் முகவரி எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்திலும் கல்விச்சான்றிதழ்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள பெயரில் ஏதாவது வேறுபாடு காணப்படுமானால் இவை இரண்டும் ஒரே நபரைக் குறிக்கின்றன என்பதை உறுதிப்படுத்தும் உறுதிமொழியும் இணைக்கப்படுதல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமைகளைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகளுக்கு செய்முறை பரீட்சை நடைபெறும் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

பல்கலைக்கழக அனுமதியில் மிகக் குறைந்த தகைமைகளை கொண்டிராத அல்லது உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) சான்றிதழ்கள் இணைக்கப்படாத அல்லது கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இணைக்கப்படாத அல்லது குறித்த திகதிக்குப் பிந்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவம் பதிவுத் தபாலில், **"சிரேஷ்ட உதவிப் பதிவாளர், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், கல்லடி, மட்டக்களப்பு** என்ற முகவரிக்கு **12.06.2015 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்**. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் செய்முறைத்திறன்காண் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

செய்முறைத் திறன்காண் பரீட்சை தொடர்பான விபரங்களை கிழக்குப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் (www.esn.ac.lk) பார்வையிடவும், மாதிரி விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்யவும் முடியும். இது தொடர்பில் மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள 065-2222663 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

**பணிப்பாளர்**
**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**கல்லடி, மட்டக்களப்பு**

**SWAMI VIPULANANDA INSTITUTE OF AESTHETIC STUDIES,**
**EASTERN UNIVERSITY, SRILANKA.**
**APPLICATION FOR UNIVERSITY ADMISSIONS- 2014/2015**
**Admission for BFA (Carnatic Music/Dance/Drama & Theatre/Visual &Technological Arts)**
**Degree Programmes**

01. Name of the Applicant:
(With Initials)
Name Denoted by Initials:
National Identity Card Number:

02. Permanent Address:
Telephone Number:
Fax No: (if available)
E-Mail Address (if available)

03. Result of the G.C.E (Advanced Level) Examination:
Index Number:
Z Score:
General Aptitude Test Marks:

| No | Subjects | Grade | Medium |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |

04. Name and Address of Parent/Guardian:
05. Course of Study Applied for University Admission – 2014/2015:

| | |
|---|---|
| Music | |
| Dance | |
| Drama & Theatre | |
| Visual & Technological Arts | |

06. Documents to be attached (**Please tick the appropriate column**

1. Paying-in Voucher
2. Certified Copy of G.C.E (A/L) Certificate/s
3. Certified Copy of G.C.E (O/L) Certificate/s
4. Certificate in Proof of Eligibility for University Admission Including Z Score/District
5. Affidavit in support of any change in names appearing in differen

Documents/Certificates

I certify that the above particulars furnished by me are true and accurate.

............................ Date ............................ Signature of Applicant

## நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 218

# மார்பக புற்று நோயிலிருந்து தப்பித்துக்கொள்வோம்

இலங்கையில் பெண்களில் அதிகளவாக (22 வீதம்)ஏற்படும் புற்றுநோயாக மார்பகப் புற்றுநோய் காணப்படுகின்றது. இது பெண்களில் மட்டுமல்லாமல், மார்பக புற்று நோயின் ஒரு வீதம் ஆனது ஆண்களிலும் ஏற்படுகின்றது. மார்பக புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்தால் பூரணமாகக் குணப்படுத்த முடியும். இதனை ஆரம்ப நிலையில் கண்டறிவதற்கு சுய மார்புப் பரிசோதனை உதவுகின்றது.

மார்பகப் புற்றுநோயின் அறிகுறிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

- வலியற்ற மார்பகக் கட்டிகள் அல்லது திடீரென அளவில் அதிகரிக்கும் கட்டிகள்
- ஒருபக்க மார்பகத்தின் பருமன் அசாதாரணமாக அதிகரித்தல்
- மார்பகத்தோல் தோடம்பழத்தோலினை ஒத்ததாக இருத்தல்
- மார்பகத்தில் புண் அல்லது நீண்டகாலம் மாறாத புண்கள்
- முலைக்காம்பு வழமையைவிட அசாதாரணமான நிலையில் காணப்படுதல் (உள்ளிழுக்கப்பட்டிருத்தல் அல்லது ஒரு பக்கத்துக்கு திரும்பியிருத்தல்)
- அக்குள் பகுதியில் நிணநீர் முடிச்சுக்கள் வீக்கமடைந்திருத்தல்.

**மார்பகப் புற்றுநோய் ஏற்படும் சாத்தியக் கூற்றை அதிகரிக்கும் காரணிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.**

- ஏற்கனவே ஒரு பக்க மார்பகத்தில் புற்றுநோய் ஏற்பட்டிருத்தல்
- மார்பகப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நெருங்கிய உறவினர்களைக் கொண்டிருத்தல்.
- 50 வயதுக்கு மேற்பட்ட பெண்கள்
- அதிகளவு ஈஸ்ரோஜன் ஓமோன் சுரப்பு உள்ளவர்கள்
- மிகக் குறைந்த வயதில் பூப்படைதல்
- மிகக்கூடிய வயதில் மாதவிடாய் நிறுத்தம்
- பிந்திய வயதில் முதல் கர்ப்பந்தரித்தல் (30வயதுக்கு மேல்)
- குழந்தைகள் இல்லாதவர்கள்
- தாய்ப்பாலூட்டாதவர்கள்
- ஈஸ்ரோஜன் மட்டும் உள்ள கருத்தடை மாத்திரைகளை 5 வருடங்களுக்கு மேல் பாவித்தல்
- மாதவிடாய் நிறுத்தத்தின் பின் ஓமோன் மாத்திரைகளைப் பாவிப்பவர்கள் (Hormone Replacement Therapy)
- உடற்பருமன் அதிகரித்தவர்கள்
- அதிகளவு கொழுப்புணவுகளை உள்ளெடுப்பவர்கள்
- மதுபானம் அருந்துதல்
- புகைப்பிடித்தல்


**பாதுகாப்பு முறைகள்**

- உடல் நிறையை உயரத்துக்கேற்ப பேணுதல்
- அதிக கொழுப்புள்ள உணவுகள், புகைப் பிடித்தல் மதுபானம் அருந்துதல் என்பவற்றைத் தவிர்த்தல்
- சுயமார்புப் பரிசோதனையின்போது மேலுள்ள அறிகுறிகள் தென்பட்டால் காலம் தாழ்த்தாது வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்
- நெருங்கிய உறவினர்கள் மார்பக புற்று நோயினால் பாதிப்பட்டிருப்பின் தகுந்த வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளல்.

**மார்பகப்புற்று நோய்க்கான சிகிச்சை முறைகள்**

மார்பகப்புற்று நோயின் சிகிச்சையில் சத்திர சிகிச்சையே முக்கிய பங்கு வகிக்கின்றது. அதைவிட கீமோதிரப்பி (Chemotherapy) கதிர்வீச்சு சிகிச்சை, ஓமோன் சிகிச்சை என்பன பயன்படுத்தப்படுகின்றன.

சத்திரசிகிச்சையின் போது, புற்றுநோயின் பாரதூரம் மற்றும் பரவியுள்ள தன்மைக்கேற்ப மார்பகம் முழுவதும் அல்லது மார்பகத்தின் ஒரு பகுதி மாத்திரம் வெட்டி அகற்றப்படுகின்றது. இதன் பின்னர் மார்பக மீளமைப்பு சிகிச்சை (Breast Reconstruction surgery) மூலம் மார்பகம் போன்ற அமைப்பு உருவாக்கப்படும்.



**சுய மார்புப் பரிசோதனையை எவ்வாறு செய்வது?**

சுயமார்ப்புப் பரிசோதனையானது ஒருவர் தனக்குத்தானே செய்யக் கூடிய பரிசோதனை முறையாகும்.

ஒரு தடவை இதனைச் செய்வதற்கு 7-10 நிமிடங்கள் செலவிடப்படுகின்றது. மாதவிடாய் ஏற்படும் பெண்கள் மாதவிடாய் ஏற்பட்டு 5ஆம் நாளிலும் மாதவிடாய் ஏற்படாதவர்கள் மாதத்தின் குறிப்பிட்ட ஒரு நாளில் ஒவ்வொரு மாதமும் செய்ய வேண்டும்.

முதலில் கைகள் இரண்டையும் பக்கவாட்டில் தொங்கவிட்டவாறு கண்ணாடியின் முன் நின்று இரண்டு மார்பகங்களையும் அவதானிக்க வேண்டும். இதன்போது மார்பகங்களில் ஏதாவது வீக்கம், சிவந்த தோல், பள்ளங்கள் (Dimpling),புண்கள், முலைக் காம்பில் மாற்றம் போன்றவற்றை அவதானிக்க வேண்டும். இதேபோன்று கைகளை தலைக்குப் பின்புறமாகவும், இடுப்பில் வைத்தும் மீள அவதானிக்க வேண்டும். அதன்பின்னர் மார்பகங்களை விரல்களின் (2ஆம், 3ஆம், 4ஆம்) தட்டையான பகுதியினால் ஏதாவது கட்டிகள் உள்ளனவா என அழுத்திப் பார்க்கவேண்டும். இந்தச் செயன் முறை மார்பகத்தின் வெளிப்புறத்திலிருந்து முலைக் காம்பை நோக்கி சுருளி வடிவிலோ அல்லது முலைக்காம்பிலிருந்து வெளி நோக்கி ஆரை வடிவிலோ செய்யவேண்டும். அதன்பின்னர் அக்குள் பகுதியில் நிணநீர் முடிச்சு வீக்கம் உள்ளதா எனப் பரிசோதிக்க வேண்டும். இறுதியாக முலைக்காம்பை மெதுவாக அழுத்தி ஏதாவது திரவம் அல்லது இரத்தக் கசிவு உண்டா எனப் பரிசோதிக்க வேண்டும். எனவே சுயமார்ப்புப் பரிசோதனையின் மூலம் மார்பகப்புற்று நோயை ஆரம்ப நிலையில் இனங்கண்டு மார்பக இழப்பை, சாவைத் தள்ளி வைப்போம்.

Dr ஷம்பிகா இராஜரட்ணம்
*நீரிழிவு சிகிச்சை நிலையம்,*
*யாழ்.போதனா வைத்தியசாலை.*







Hero
Hunk
BECAUSE MUSCLES MATTER
5
WARRANTY*
உங்கள் கம்பீரத்தை
கட்டவிழ்த்துவிடுங்கள்!
ஆண்மை வீரியத்துடன் LED பின்
விளக்குகளுடன் அலட்சியம் செய்துவிட
முழங்க வலம் வாருங்கள்.
சக்திமிக்க 150 CC
ATFT என்ஜின்
டைனமிக்
டபள் டிஸ்க்
கவர்ச்சியான
டைலொக் கன்சோல்
ரூ. 294,500/- மட்டுமே
facebook.com/HeroMotoCorpSriLanka
Abans
: 0777 340056
நாடெங்கிலுமுள்ள அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் ஹீரோ விற்பனை முகவர்களிடமும் பெறலாம்.

# முயற்சி உடையோரை ஊக்குவிப்பதற்கு

# தூண்டிய சுயகற்றல் நூல்கள் வெளியீடு

முயற்சியுடைய ஒருவரை ஊக்குவித்தால் அவரால் மேற்கொள்ளப்படும் செயல் திட்டங்கள் நிச்சயம் வெற்றி பெறும் என்பதற்கு உதாரணமாக கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான சுய கற்றல் கையேடுகள் வெளியீடு எடுத்தியம்புகிறது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக சு.கிருஷ்ணகுமார் பொறுப்பேற்ற பின்னர்; தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் கல்வி நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அனைவரும் அறிவர். கடந்த வருட ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் 194 மாணவர்கள் பெற்று சித்திய டைந்தமை தென்மராட்சி கல்வி வலயச் செயற்பாடுகளில் ஓர் குறிப்பிடத்தக்க அம்சமாக எல்லோராலும் புகழ்ந்து பாராட்டப்பட்ட சிறப்புச் செயற்பாடாகும் இதற்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் உன்னத சேவையென்றே கூறமுடியும்.

அவ்வாறான ஒரு சிறந்த முயற்சியுடைய அவரின் உன்னத சேவையினை ஊக்குவிக்க சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மேற்கொண்ட ஒரு கல்விச் சேவையே இந்த நூல்கள் வெளியீடாகும். இதற்கு பக்கபலமாக சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் ஆசிரியர் கதவயோகராஜாவும் தனது பங்களிப்பினை வழங்கியதன் பயனாக தென்மராட்சி கல்வி வலயத்தில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு இந்த வருடம் தோற்றும் ஆயிரத்து 100 மாணவர்களுக்கு கணிதம் தமிழ் சுற்றாடல் ஆகிய பாடங்களுக்கான சுயகற்றல் கையேடுகள் வெளியிடப்பட்டன.

இவ்வாறான செயற்றிட்டங்களை பிரதேசத்தில் கல்வி மேம்பாட்டில் சமூக ஆர்வம் உள்ள ஒவ்வொரும் அமைப்புக்களும் வருடாவருடம் முன்வரின் நிச்சயமாக அரசினால் நடத்தப்படும் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை க.பொ.த. சாதாரண தரம் உயர்தரம் போன்ற பரீட்சைகளில் தென்மராட்சி பிரதேச மாணவர்கள் ஏனைய கல்வி வலயங்களை விட சிறந்த பெறுபேறுகளைப் பெற உதவியாக இருக்கும் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த வருடம் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 194 மாணவர்களை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கௌரவித்தபோது அந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் உரையாற்றும்போது ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையின் சித்தி வீதத்தை அதிகரிக்க வலயத்தினால் உருவாக்கப்படவுள்ள செயல் திட்டத்தை நூல் வடிவில் உருவாக்கித் தர லயன்ஸ் கழகம் முன்வர வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கு பதிலளித்த லயன்ஸ் கழகத் தலைவர் லயன் க.தர்ஷன் தனது பதவிக்காலம் முடிவதற்குள் வலயக் கல்விப் பணிப்பாளரின் கோரிக்கையை நிறைவேற்ற முயற்சிகள் செய்வேன் என உறுதியளித்திருந்தார். அதன் பிரகாரம் வலயக் கல்வி அலுவலக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரன் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் அ.மனோரஞ்சிதன் உட்பட்ட குழுவினரால் தயாரிக்கப்பட்ட ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் கணிதம் சுற்றாடல் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய சுய கற்றல் நூல் தயாரிப்பதற்கான பொறுப்பினை சாவகச்சேரி லயன்ஸ் கழகம் பொறுப்பேற்றது. மூன்று பிரிவுகளையும் உள்ளடக்கிய கையேடு அச்சிட்டு தயாரிக்க 2 லட்சம் ரூபாவுக்கு மேல் செலவாகும் என தெரிவிக்கப்பட்டதால் அனைத்துச் செலவுகளையும் பொறுப்பேற்க முடியாத நிலை லயன்ஸ் கழகத்திற்கு ஏற்பட்டது. அவ்வேளையில் இவர்களுக்கு கைகொடுக்க புலமைப் பரிசில்; ஆசிரிய ரானதிரு க.தவயோகராஜா தனது தாயாரின் நினைவாக ஒரு பிரிவைப் பொறுப்பெடுக்க முன்வந்தார். இதன் பிரகாரம் தமிழ் கணிதம் ஆகிய பிரிவுகள் அடங்கிய கையேட்டினை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும் சுற்றாடல் பிரிவுக்கான கையேட்டினை க.தவயோகராஜாவும் பொறுப்பேற்று நூலாக்கினர். இவற்றின் வெளியீடு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் க.தர்ஷன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட இரண்டாவது உப ஆளுநர் லயன் மருத்துவர் வைதியாகராஜாவும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கௌரவ விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட இணைப்பாளர் லயன் வ.ஸ்ரீபிரகாஸும் கலந்து கொண்டனர். இவர்களுடன் சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் சாவகச்சேரி லயன்ஸ் கழக மூத்த உறுப்பினர் எஸ்.எஸ்.அருளானந்தம் ஆகியோரும் வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 39 பாடசாலைகளின் அதிபர்கள் ஐந்தாம் தர வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பொதுமக்கள் மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

விருந்தினர்கள் கல்லூரி வாசலிலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் க.தர்ஷன் தலைமையுரை நிகழ்த்துகையில், தென்மராட்சி கல்வி வலயத்தில் சிறந்ததொரு கல்விச் சமூகத்தை உருவாக்க வயலக்கல்விப் பணிப்பாளர் மேற்கொள்ளும் கல்வி நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பாக கழக உறுப்பினர்களின் பங்களிப்புடன்



கையேட்டினை இன்று அறிமுகப்படுத்தி வெளியிடுகின்றோம் இன்று வெளியிடப்படும் கையேடுகள் வருங்காலத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையவேண்டுமெனவும் கடந்த வருடம் தென்மராட்சிக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் 194 மாணவர்கள் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தி பெற்றுள்ளது போல் வருங்காலத்தில் இந்த நிலையை வீழ்ச்சியுறாமல் மேன்மேலும் அதிகரிக்க மாணவர்களும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அதிபர்களும் முன்வர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அடுத்து கௌரவ விருந்தினர் உரை நிகழ்த்திய லயன் வ.ஸ்ரீபிரகாஸ் சிந்தனையும் முயற்சிகளும் சிறப்பாக இருப்பின் அதன் விளைவுகளும் நன்றாகவே அமையும் என்பதற்கு இந்த கையேடுகள் வெளியீடு உதாரணமாக அமைகிறது. லயன்ஸ் கழகம் ஒன்று இவ்வாறான பெருந்தொகை நிதியைப் பயன்படுத்தி ஒரு செயல் திட்டத்தினை இதுவரை மேற்கொண்டதில்லை அவ்வாறான செயல் திட்டத்தினை உருவாக்க கழகத்தைத் தூண்டியது கடந்த வருடம் தென்மராட்சி கல்வி வலய மாணவர்கள் வெளியுலகுக்கு எடுத்துக் காட்டிய கல்விச் சாதனையே காரணமாகும் இந்தச் சாதனையானது கடந்த வருட பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் இலங்கையின் முதல் பத்து இடங்களுள் ஒன்றாக தென்மராட்சி கல்வி வலயம். வந்து கல்வி உலகுக்கு ஒரு சாதனையை ஏற்படுத்தியதுதான் கழகத்தின் கோட்பாட்டின் பிரகாரம் 7 குறிக்கோள்களில் கல்வித் துறையும் அடங்கும். கழகத்தின் கல்வி தறையினை சரியான முறையில் பயன்படுத்த ஊன்றுகோலாக காணப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளரையும் ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளரையும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகரையும் இவர்களுடன் இணைந்து சிறந்த நூல்களை உருவாக்க பாடுபட்ட ஆசிரியர்களையும் கழகம் பாராட்டுவதுடன் அவர்களின் அர்ப்பணிப்பு சேவைக்கு என்றும் தலைவணங்குகிறது.. ஒரு திட்டத்தை உருவாக்கிவிட்டால் அது தானாகவே பலரால் வளர்க்கப்படும் என்பதற்கு கடந்த 2006 ஆம் ஆண்டு தென்மராட்சி கல்வி வலயத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருமதி அ.வேதநாயகம் அவர்கள் அந்த வருடம் வலயத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்குமாறு கழகத்தைக் கேட்டிருந்தார். அவ்வேளையில் கொழும்பு சென்று கௌரவிப்பு பரிசில்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்பட்டதால் இங்குள்ள சிற் பாசிரியர்கள் மூலம் விருதுகள் உருவாக்கப்பட்டு முதன்முறையாக ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கழகம் கௌரவித்தது. அதன் பின்னர் வருடாவருடம் பல்வேறு நிறுவனங்களால் மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. அதேபோன்று இக் கழகத்தினால் உருவாக்கப்பட்ட கையேடுகள் காலப் போக்கில் அனைத்து நிறுவனங்களாலும் கையேடுகள் தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுமென நம்புகிறேன். மேலும் தென்மராட்சி கல்வி வலயத்தினால் கடந்த வருடம் வெளியிடப்பட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான விழுமியக் கல்விப் பாடத்துறை வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கு வழங்க மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது போல இந்தக் கையேடும் அடுத்த தடுத்த வருடங்களில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாணவர்களும் பயன்பெறக்கூடிய வகையில் உருவாகும் என நம்புகிறேன் என்றார்.

இதனையடுத்து சுயகற்றல் கையேடுகள் வெளியிட இடம்பெற்றது. சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் வெளியிடப்பட்ட கணிதம் தமிழ் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய கையேட்டினை சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட உதவி ஆளுநர் லயன் வை.தியாகராஜா வெளியிட்டு வைக்க வலயக்கல்விப் பணிப்பா ளர் சு.கிருஷ்ணகுமார் பெற்றுக் கொண்டார்.

க.தவயோகராஜாவினால் உருவாக்கப்பட்ட சுற்றாடல் கையேட்டினை அவரே வெளியிட்ட இந்த நூலை உருவாக்க அரும்பாடு பட்ட வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் அ.மனோரஞ்சிதன் பெற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் தென்மராட்சி கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 39 பாடசாலைகளின் அதிபர்களிடம் மாணவர்களுக்கான கையேடுகள் கையளிக்கப்பட்டன.

அதன் பின்னர் சிறப்பு விருந்தினர் உரை நிகழ்த்திய தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கடந்த வருட ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தி பெற்ற 194 மாணவர்களை சித்தி பெறச் செய்த பெருமை வலயத்தின் ஆசிரியர்களையும் அதிபர்களையுமே சாரும். இவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கிய அப்போதைய உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரன் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் அ.மனோரஞ்சிதன் ஆகியோர் ஆசிரியர், அதிபர்களுக்கு வழங்கிய வழிகாட்டல்களே மாணவர்கள் சாதனைபடைக்க உதவியுள்ளது. இந்தச் சாதனையானது 2013ஆம் ஆண்டு பெறுபேறான 8.8 வீதத்திலிருந்து 21.சதவீதமாக உயர்ந்தி மாகாணத்தில் இரண்டாவது இடத்தையும் 100க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களால் 63.74 சதவீதத்தையடைந்து வடமாகாணத்தில் முதலிடத்தையும் பெற்றுள்ளது..இங்கு உரையாற்றிய அனைவரின் உரைகளும் இந்த எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென அமைந்திருந்தது. அதனை மெய்யாக்கக் கூடிய சக்தி எம்மிடம் இல்லையென்றாலும் இவ்வாறான கையேடுகள் வெளியிட்டு மாணவர்களை சுயகற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதால் நிச்சயம் அனைவரின் முயற்சிகளும் ஈடேறும் என நம்புவதாக உரையாற்றினார்.

அதனையடுத்து முதன்மை விருந்தினர் உரையாற்றிய சர்வதேச லயன்ஸ்கழக 306பி1 மாவட்ட உதவி ஆளுநர் லயன் மருத்துவர் வைதியாகராஜா லயன்ஸ் கழக செயற்பாடுகளில் ஒன்றான கல்விச் செயற்றிட்டதினை நல்லமுறையில் பயன்படுத்தும் வலயக் கல்விப் பணிப்பாளரையும் அவர்தம் குழாமையும் பாராட்டுகின்றேன் என்றார்.

– தென்னவன்.




# மீண்டும் கனவுகளை நனவாக்குவதற்கு அறிமுகமாகும் தீவா காணி அதிர்ஷ்டம்

தனது வாடிக்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றியமைக்கும் வகையில், வருடாந்தம் முன்னெடுக்கும் தீவா காணி அதிர்ஷ்டம் நிகழ்வை தொடர்ச்சியாக ஐந்தாவது வருடமாகவும் 2015 மே மாதம் முதலாம் திகதி முதல் ஜூலை மாதம் 31ஆம் திகதி வரை முன்னெடுத்து வருகிறது.

ஹேமாஸ் மெனுஃபெக்ஷரிங் நிறுவனத்தின் முன்னணி டிடர்ஜன்ட் வர்த்தக நாமமான தீவா, நுகர்வோருக்கு ஆடைகளை கழுவும் வேலைப்பழுவை குறைக்கும் வகையில் அமைந்துள்ளதுடன், நுகர்வோருக்கு சகாயமான விலையில் ஆடைகளை கழுவும் பவுடர் வகைகளையும் அறிமுகம் செய்த வண்ணமுள்ளது.

கடந்த வருடங்களில் தொடர்ச்சியாக தனது உற்பத்திகளை மேம்படுத்தியிருந்ததுடன், அண்மையில் தனது புதிய உற்பத்தி தெரிவுகளை அறிமுகம் செய்திருந்தது.

உள்நாட்டு டிடர்ஜன்ட் சந்தையில் முன்னோடியாக திகழும் தீவா, தனது நுகர்வோருடன் தொடர்ந்தும் தொடர்புகளை பேணியிருந்தது. தமக்கென சொந்தக் காணியொன்றைக் கொண்டிருப்பது என்பது பல இலங்கையர்களின் கனவாக திகழ்கிறது.

இதற்கமைய, தீவா இலங்கையர்களுக்கு பெறுமதி வாய்ந்த காணிகளை அன்பளிப்பாக வழங்க முன்வந்திருந்தது. ஹேமாஸ் தமது நுகர்வோரின் வாழ்வுக்கு வளமூட்டும் நடவடிக்கைகளுக்கமைய, கொழும்பை அண்மித்து தீவா காணி அதிர்ஷ்டம் எனும் ஊக்குவிப்பு திட்டத்தை முன்னெடுத்திருந்தது.

முன்னர் இடம்பெற்ற ஊக்குவிப்பு திட்டங்களுக்கமைய, வெற்றியாளர்களுக்கு கொழும்பை அண்மித்து 10 பேர்ச்கள் கொண்ட காணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தன. இன்று வரை மொத்தமாக 16 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள் 16 காணித்துண்டுகளை வெற்றியீட்டியுள்ளனர்.

மொத்தமாக 1 ஏக்கர் பரப்பு காணி பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இலங்கையர்களின் வாழ்க்கையை வளமூட்டும் வகையில் தீவா வர்த்தக நாமம், 300 பணப் பரிசுகளையும், தங்க நாணயங்களையும் மோட்டார் சைக்கிள்களையும் கடந்த நான்கு ஆண்டுகளில் வழங்கியிருந்தது.

2014 ஆம் ஆண்டு வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தவர்களில் ஒருவரான உடுபத்தாவ பிரதேசத்தைச் சேர்ந்த நிஷாந்த வீரசிங்க கருத்து தெரிவிக்கையில், தீவா பயன்படுத்தியதால் என்னால் பணத்தையும், நேரத்தையும், வலுவையும் சேமிக்க முடிந்திருந்தது. தீவாவிடமிருந்து நான் எதிர்பாராத அன்பளிப்பு எனக்கு கிடைத்திருந்தது.

தீவா தெரிவு செய்திருந்ததன் மூலமாக நான் சரியான தீர்மானத்தை மேற்கொண்டிருந்தேன் என்பது இப்போது உறுதியாகியுள்ளது என்றார்.

கடந்த ஆண்டு தெரிவாகியிருந்த மற்றுமொரு அதிர்ஷ்டசாலி வெற்றியாளரான சிசிர ஆனந்த கருத்து தெரிவிக்கையில், எட்டு வருடங்களுக்கு மேலாக நான் வாடகை வீட்டில் வசித்து வந்தேன். காணி ஒன்றை வாங்குவதற்கு பணம் சம்பாதிக்கும் வகையில் எனது மனைவி வெளிநாடு சென்றார். எனது ஒரே குழந்தை என் உறவினர்களுடன் வாழ்ந்து வருகின்றது.



இந்த காணி கிடைத்ததன் மூலமாக, நாம் அனைவரும் ஒன்றாக வாழக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார். தீவா காணி அதிர்ஷ்டம் நுகர்வோர் ஊக்குவிப்பு திட்ட அணி, நகரங்களிலும் கிராமங்களிலும் தமது பயணங்களை மேற்கொண்டு, நுகர்வோருக்கு இந்த திட்டம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவார்கள். இந்த செயற்பாட்டின் மூலமாக தற்போதைய மற்றும் எதிர்கால வாடிக்கையாளர்களுக்கு இந்த நுகர்வோர் ஊக்குவிப்பு திட்டத்தில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படும். நுகர்வோர்கள் தீவா மேலுறைகளை(தீவா சவர்க்காரம், தீவா ரெகியுலர் அல்லது தீவா ஃபிளவர்ஸ்) ஆகியவற்றை தபால் பெட்டி இல. 1289, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலமாக இந்தத் திட்டத்தில் பங்குபற்ற முடியும்.

இந்த ஆண்டு மொத்தமாக 3 வெற்றியாளர்கள்தெரிவுசெய்யப்படவுள்ளதுடன்,கொழும்பை அண்மித்து காணிகள் இவர்களுக்கு வழங்கப்படும். மேலும், தீவா வாடிக்கையாளர்களுக்கு தங்க நாணயங்களை வாராந்த அடிப்படையிலும், 10,000 ரூபா பணப் பரிசுகளை நாளாந்த அடிப்படையில் வெற்றியீட்டுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படும்.

தொடர்ச்சியானஐந்தாவது ஆண்டாக,தீவா தனது வாடிக்கையாளர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் வகையில் காணித்துண் டொன்றை பரிசாக வழங்க முன்வந்துள்ளது. புதுப்பிக்கப்பட்ட ஈடுபாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட பங்குபற்றல் போன்றவற்றின் மூல மாக அதிகளவு எதிர்பார்க்கப்படும் வருடாந்த நிகழ்வாக அமைந்துள்ளது என ஹேமாஸ் மெனுபக்ஷரிங் நிறுவனத்தின் தீவா வர்த்தக நாம முகாமையாளர் ஷனக பிணார்ந்து தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் ஊக்குவிப்பு பரப்புரையில் கொமர்ஷல் வங்கி



மட்டக்களப்பில் கொமர்ஷல் வங்கி வர்ணம் தொலைக்காட்சியுடன் இணைந்து பத்து நாள் ஊக்குவிப்பு பரப்புரை நடவடிக்கையிலீடுபட்டது. வாடிக்கையாளர்கள் பலருடனும் வாடிக்கையாளர்களாக வரக்கூடிய பலருடனும் இந்த ஊக்குவிப்பின் போது தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன.

இந்த இணைந்த ஊக்குவிப்புத் திட்டத்தில் கொமர்ஷல் வங்கி தீவிரமாகப் பங்கேற்றது.

இந்தக் காலப்பகுதியில் கொமர்ஷல் வங்கி ஊழியர்கள் அதன் சேவைகள் மற்றும் வசனகள் பற்றி விளக்கமளிப்பதற்காக 1500 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு பயணம் செய்தனர். இறுதி நாளன்று பெண்களுக்கான விஷேட செயலமர்வு ஒன்றும் நடத்தப்பட்டது. வங்கிப் பிரதிநிதிகளும் மட்டக்களப்பின் வாடிக்கையாளர்களும் பரப்புரை நடவடிக்கையின் போது கலந்துரையாடினர். (த)

## கிளிநொச்சியில் புதிய அலுவலகம் திறந்துள்ளது செலிங்கோ லைஃப்

ஆயுள் காப்புறுதி தலைவர்களான செலிங்கோ லைப் கிளிநொச்சியில் தனது புதிய அலுவலகத்தை திறந்து வைத்துள்ளதன் மூலம் இலங்கையின்வடபிராந்தியத்தில்தனதுநிலையை மேலும் பலப்படுத்தியுள்ளது.



நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரதி நிறைவேற்று அதிகாரியுமான துஷார ரணசிங்க இந்த அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். 1900 சதுர அடி கொண்ட இந்த அலுவலகம் கண்டி வீதியில் போதிய வாகனத் தரிப்பிட வசதிகளுடன் அமைந்துள்ளது.

செலிங்கோ லைப்பின் கிளிநொச்சி வாடிக்கையாளர்களின் தேவைகள் இதற்கு முன்னர் வவுனியா அலுவலகம் ஊடாகவே கவனிக்கப்பட்டு வந்தன. செலிங்கோ லைப்பின் கிளிநொச்சி அலுவலகம் திறந்து வைக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (த)




SINGER
Feel த Deal
ஒவ்வொரு ர.வீ. உடனும் Dialog TV இணைப்பு
trade-in
LED
விசேட பரிமாற்ற தள்ளுபடி
தெரிவுசெய்யப்பட்ட மொடல்களுக்கு DVD பிளேயர்
0% வட்டி இல்லை
UHD
3D
UHDTV
Ultra High Definition
SINGER 55"
தொலைக்காட்சி சகிதம் LEGEND சோபா தொகுதி இலவசம்
SINGER 3D SMART TV UHD
SLE55E6710
விசேட விலை ரூ. 227,799/-
SINGER SMART
சிங்கர் தரும் 3 வருடங்கள் வரையான இணையற்ற உத்தரவாதம்
42% தள்ளுபடி 42" SINGER SLE42E510
வழமையான விலை ரூ. 154,999/- விசேட விலை ரூ. 89,999/-
15,000/- தள்ளுபடி 40" SINGER
விசேட விலை ரூ. 69,999/-
20,000/- தள்ளுபடி 40" SONY
விசேட விலை ரூ. 89,999/-
32" SINGER
விசேட விலை ரூ. 49,999/-
32" SONY
விசேட விலை ரூ. 54,999/-
32" SAMSUNG
விசேட விலை ரூ. 54,999/-
32" SHARP
விசேட விலை ரூ. 49,999/-
32" HITACHI
விசேட விலை ரூ. 49,999/-
28"
விசேட விலை ரூ. 35,999/-
24" SINGER
விசேட விலை ரூ. 32,999/-
24" Skyworth
விசேட விலை ரூ. 26,999/-
0115 400 400
singersl.com
SINGER Plus

# 25 ஆண்டுகளில் 3ஆம் முறை கட்டப்படும் கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயம்

நூற்றாண்டு கால வரலாற்றுப் பெருமை மிக்க வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முள்ளியான் கப்பலேந்தி மாதா ஆலயம் கடந்த 25 ஆண்டு கால வரலாற்றில் மூன்றாவது தடவையாகக் கட்டி எழுப்பப்படுகிறது என்ற செய்தி – அந்த மண்ணும் அங்கு வாழ் கத்தோலிக்க மக்களும் – இனப் பிரச்சினையாலும் இயற்கை இடராலும் அடுத்து அடுத்து சீரழிக்கப்பட்டாலும் – அவர்கள் அனைத்து சவால்களையும் வென்று தம் கத்தோலிக்க விசுவாசத்திற்குச் சான்று பகர்ந்து சாதனை படைக்கத் துடிக்கின்ற மண்ணின் மைந்தர்கள் – என்பதை சரித்திரத்தில் பதிந்து நிற்கிறார்கள்என்பதையேசொல்லுகிறது.



அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்

03-05-2015 அன்று ஞாயிற்றுக் கிழமை பக்கம் 13 இல் உதயன் பத்திரிகையில் வெளிவந்த – மீண்டும் புதுப்பொலிவு பெறுமா கப்பல் ஏந்தி மாதா ஆலயம் – என்ற தலைப்பில் வெளியான செய்தி முற்று முழுதாக தவறான தகவல்களையும் – உறுதிப்படுத்தாத தகவல்களையும் கொண்ட ஒரு செய்தியாகும் எனக் கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலய பங்குத்தந்தை எம். யேசுறட்ணம் அடிகளார் குற்றம் சாட்டிய நிலையில் மேற்படி தவறான செய்தியை சரியாக்கி – உண்மையான தகவல்களை வெளியிடும் நோக்கில் இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

மேற்படி ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதி உதவி வழங்குமாறு யாழ் மேதகு ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையிடம் மக்கள் கோரிக்கை விடுத்தும் இந்தக் கோரிக்கைக்கான பதிலை இதுவரையில் யாழ் ஆயர் தமக்குத் தெரிவிக்கவில்லை என்றும் – துறைசார்ந்த அமைச்சுக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஆலயப் புனரமைப்புப் பணிக்காக உதவுமாறு கோரிக்கை விடுத்தும் எவருமே நிதிக்கான பங்களிப்பு செய்யவில்லை என்றும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்ட செய்தியை பங்குத்தந்தை எம். யேசுறட்ணம் அடிகளார் முற்று முழுதாக மறுத்துள்ளார்.

பங்குத்தந்தை எம். யேசுறட்ணம் அடிகளார் தமது மறுப்புச் செய்தியில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தற்போதைய ஆலயக் கட்டடச் செலவின் ஒரு பகுதியை பொறுப்பேற்றார் என்பதையும் அரசியல்வாதிகள் தமது பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியில் இருந்து சிறிய நிதி உதவியை ஆலயக் கட்டடப் பணிகளுக்கு வழங்கியுள்ளார்கள் என்பதையும் உறுதிபடத் தெரிவிக்கிறார்.

யாழ்.குடாநாட்டின் வடமராட்சிப் பிரதேசத்தின் கிழக்குப்பகுதியில் பனைமரக்காடுகளாலும் தென்னைமரத் தோப்புக்களாலும் சூழப்பட்டதும் கருநிலக்கடலும் அதன் வேக அலை அடிப்பில் கழுவப்பட்ட வெண்மணற் கடற்பரப்பையும் கொண்ட ஒரு சிற்றூரே கட்டைக்காடு கிராமமாகும்.

இலங்கைக் கத்தோலிக்க வரலாற்றில் கரையோரப் பிரதேசங்களே கத்தோலிக்கத்தின் விளை நிலங்களாகவும் வளர் நிலங்களாகவும் திகழ்ந்துள்ளன என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். இது கட்டைக்காடு கிராமத்திற்கும் பொருந்துவதாகவே உள்ளது. 380 குடும்பங்களைக் கொண்ட இந்தச் சிற்றூர் முற்று முழுதாகக் கத்தோலிக்க மக்களைக் கொண்ட ஒரு ஊராகும் என்பது இங்கு ஒரு சிறப்புத் தகவலாகும்.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முள்ளியான் கப்பலேந்தி மாதா ஆலயத்தின் ஆரம்ப வரலாற்றை நோக்குகின்ற போது அது வாய் வழிப் பாரம்பரியமாக 1544 ஆம் ஆண்டு முதலான வரலாற்றைக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு மிகப் பழங்கால வரலாற்றைக் கொண்டுள்ள போதும் 1867 ஆம் ஆண்டு வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முள்ளியான் புனித கப்பலேந்தி மாதா ஆலயம் அரச பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதாக வரலாற்று ஏடுகளை ஆதாரம் காட்டி பங்குத்தந்தை எம். யேசுறட்ணம் அடிகளார் தெரிவிக்கிறார்.

90களின் ஆரம்பத்திலிருந்து இன்று வரையிலான – கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு காலப்பகுதியில் – நூற்றாண்டுகளுக்கு முன்னர் கட்டி எழுப்பப்பட்ட மேற்படி புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தை மூன்று தடவைகள் திரும்பத் திரும்ப கட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். இக்காலம் பற்றியே இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

1867ஆம் ஆண்டு அரச பதிவேட்டில் பதியப்பட்ட கட்டைக்காடு முள்ளியான் புனித கப்பலேந்தி மாதா ஆலயம் யூலை மாதம் 1991ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் பலவேகய என்ற இராணுவ நடவடிக்கையால் சேதமாக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் டேவிற் மனுவேற்பிள்ளை அடிகளார் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். இந்த இராணுவ நடவடிக்கையால் ஆலயத்தின் நடுப்பகுதி பெரிய சேதத்திற்குள்ளானது. மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்தார்கள்.

மேற்படி ஆலயத்தை கட்டி எழுப்புவதற்கான முதலாவது முயற்சி பிரான்சிஸ் அடிகளார் பங்குத்தந்தையாக இருந்த போது 2004 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. முன்பு ஆலயம் அமைந்திருந்த இடத்திலேயே அத்திபாரமிடப்பட்டு கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதேவேளை ஆலயத்திற்கு முன்பாக ஒரு கொட்டிற் கோவில் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடத்தப்பட்டன.

பின்னர் 2004 சுனாமி ஆழிப் பேரலையின் தாக்கத்தால் கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலயம் பெரிதாக சேதமடையவில்லை என்றாலும் நீண்ட கால பராமரிப்பு இன்மையால் கொட்டிற் கோவில் சேதமடையத் தொடங்கியது என்பதோடு இடப்பட்ட அத்திபாரம் அரிக்கப்பட்டு கம்பிகளும் கடலின் உப்புக் காற்றால் துருப் பிடித்து சேதமாகத் தொடங்கின.

சுனாமியின் பின்னர் போர் குறைந்த போது மக்கள் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பிய போது கடலிற்கு அருகில் ஆலயம் அமைப்பது ஆபத்தாகலாம் என்பதால் புதிய இடத்தில் ஆலயத்திற்கான அத்திபாரமும் கலியாண மண்டபத்திற்கான அத்திபாரமும் இடப்பட்டது. இக்காலப்பகுதியில் பி. அன்ரனிதாஸ் அடிகளார் பங்குத் தந்தையாகப் பணியாற்றினார். இந்த அத்திபாரம் அப்படியே இருந்த போதும் கல்யாண மண்டபம் கட்டி எழுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



2006ஆம் ஆண்டு மீண்டும் இராணுவ நடவடிக்கை ஏற்பட்ட போது மக்கள் இடம்பெயர்ந்தார்கள். இராணுவ நடவடிக்கையின் பின்னர் 2011ஆம் ஆண்டு ஆடி மாதம் மக்கள் ஊருக்குத் திரும்பிய போது ஆலயக் கட்டுமானப் பணிகள் பற்றிய சிந்தனை திரும்பவும் ஏற்பட்டது. 2012ஆம் ஆண்டு தற்போதைய பங்குத்தந்தை எம். யேசுறட்ணம் அடிகளார் பொறுப்பேற்றார். 2012ஆம் ஆண்டு புதிய ஆலயத்திற்கான அடிக்கல் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடப்பட்டது. இந்த அடிக்கல்லானது ஏற்கனவே பிரான்சிஸ் அடிகளாரால் பழைய ஆலயம் இருந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டு சேதமடைந்த இடத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. 2012 ஆம் ஆண்டு அடிக்கல் இடப்பட்ட போதும் நிதி சேகரிப்பில் ஈடுபட்ட படியால் ஓராண்டு காலம் கட்டடப்பணி எதுவும் நடைபெறவில்லை எனப் பங்குத்தந்தை எம். யேசுறட்ணம் அடிகளார் தெரிவிக்கிறார்.

ஏற்கனவே ஆலயம் இருந்த பழைய இடத்தில் ஆலயத்தைக் கட்டுவதா அல்லது சுனாமி ஏற்படலாம் என்ற அச்சத்தில் அத்திபாரம் இடப்பட்ட புதிய இடத்தில் ஆலயத்தைக் கட்டுவதா என்ற சர்ச்சை சிலகாலம் இருந்த போதும் இறுதியில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் இறுதி முடிவின்படி நூற்றாண்டு காலமாக ஆலயம் இருந்த பழைய இடத்திலேயே ஆலயத்தைக் கட்டுவது என்ற முடிவுடன் இப்போது ஆலயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது.

கட்டைக்காடு முள்ளியான் கப்பலேந்தி மாதா ஆலயப் பணிகள் யாழ் ஆயரின் நிதி உதவி மற்றும் துறைசார்ந்த அமைச்சுக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறிய உதவி என்பவற்றோடு வேறு உதவிகளும் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டு கூரை அமைக் கும் பணி வரை முன்னேறியுள்ள தாகப் பங்குத்தந்தை தெரிவிக் கிறார்.

90களின் ஆரம்பத்திலிருந்து இன்று வரையிலான காலப்பகுதியில் – நூற்றாண்டுகளுக்கு முன்னர் கட்டி எழுப்பப்பட்ட மேற்படி புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தை மூன்று தடவைகள் திரும்பத் திரும்ப கட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்போது கட்டி எழுப்பப்படும் ஆலயத்தை தனது வலது கரத்தில் கப்பலையும் இடது கரத்தில் இயேசு பாலனையும்; தாங்கியவளாக தலையில் முடியையும் 12 விண்மீன்களையும் சூடி விண்ணக மண்ணக அரசியாக காட்சி தரும் கப்பலேந்தி மாதா துணை புரிவாளாக.











வவுனியா வேப்பங்குளம் தூய சூசையப்பர் தேவாலயத்தின் இசை மழை நிகழ்ச்சியில் கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவின் பாடகர்களுடன் அருட்தந்தையினர் கலந்துகொண்டனர். ஞாயிற்றுக்கிழமை மாலை வரோட் நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குநர் அருட்தந்தை அல்பேட் து. அருள்ராஜ் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது. மழை பெய்த காரணத்தால் குறுகிய நேரத்துக்குள் நிகழ்ச்சிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ)



அகில இலங்கை நல்லுறவு ஒன்றியத்தினரால் தன்னலமற்ற சேவைக்காக தேசமானிய விருது வழங்கப்பட்ட பூநகரி செட்டியகுறிச்சியைச் சேர்ந்த கதிரவேலு ஸ்ரீபாலனுக்கு பூநகரி திகிரி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் அண்மையில் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவித்தனர். ஆலய பரிபாலன சபையின் செயலாளர் தா.அரியரத்தினம் வாழ்த்துப் பா வழங்குவதைக் காணலாம். (வ-9)



அண்மையில் வலி.மேற்கு பிரதேச சபையில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வலி.மேற்கிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையிலான கைவிசேடம் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் மற்றும் கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் ஆகியோர் கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கு கைவிசேடம் வழங்கினர். (வ)







இளைஞர்கழக சம்மேளனங்களின் விளையாட்டு விழா மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் காரைநகர், தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சார்ந்த இளைஞர் கழக சம்மேளனங்களைச் சேர்ந்த இளைஞர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், பொது மக் கள், விளையாட்டு வீரர்கள், பாடசாலை அதிபர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். (வ-86)







சுவாமி சின்மயானந்தரின் 99 ஆவது ஜெயந்தி தினம் இலங்கை சின்மயா மிஷனால் அண்மையில் கிளிநொச்சி, உழவனூரில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.(வ)







வவுனியா வேப்பங்குளம் தூய சூசையப்பர் தேவா லயத்தின் திருவிழாத் திருப்பலி அண்மையில் விக்டர் சோசை குருமுதல்வர் தலைமையில் இடம்பெற்றது. இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை எஸ். சத்தியராஜ். அருட்பணி அந்தோனிமுத்து. அமலமரித் தியாகிகள் சபை அருட்பணியாளர்கள், பம்பைமடு ஆலய பங்குத்தந்தை, வேப்பங்குளம் பங்குத்தந்தை ஆகியோர் இணைந்து திருவிழாத் திருப்பலியை நிறைவேற்றினர். இறுதியில் தூய சூசையப்பரின் திருச்சொரூபப் பவனியாகத் தேவாலய வளாகத்தில் இடம்பெற்றது. (வ)





காரைநகர் 'கிட்ஸ் பார்க்' பாலர் பாடசாலையின் ஆண்டு விழாவும் கலைவிழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் ஓய்வுநிலை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தி னராக யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி மற்றும் யாழ் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி வீரமங்கை யோகரத்தினம், தொழிலதிபர் கல்விக்காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், காரைநகர் பிரதேச சபைத் தவி சாளர் வே.ஆனைமுகன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மேற்படி பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஆறாவது ஆண்டு நிறைவு விழாவிலும் கலை விழாவிலும் பல நூற்றுக்கணக் கான மக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்க மழலைகளின் கலை நிகழ்வுகள் மிகச் சிறப்பாக இடம்பெற்றன. (250)




வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான தினம் மற்றும் விஞ்ஞான தீபம் சஞ்சிகை வெளியீடு பாடசாலையின் ஐயாத்துரை அரங்கத்தில் செல்வன் யோ. பிருந்தாபன் தலைமையில் இடம்பெற்றது. முதல் சஞ்சிகையை பிரதம விருந்தினர் திருமதி பாமினி நரேந்திரன் பெற்றுக்கொண்டார். அத்துடன் மாணவர்களின் கருத்துப்பகிர்வு விவாதமும் இடம்பெற்றது.
(த-421)




நன்றி நவிலலும்
31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் சதாசிவம்
செல்வநாதன்

கடந்த 25.04.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சதாசிவம் செல்வநாதன் அவர்களின் மரணச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை (25.05.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.34, கண்ணன் கோயில் வீதி,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.


# புதிய யோகா பயிற்சிகள் அறிமுக நிகழ்வு நல்லூரில்

யாழ்ப்பாணம், மே 24

யாழ். யோக அரங்கம் நல்லூர்த் தேரடிக்கு அண்மையாக அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் புதிய யோகா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கின்றது. இந்தப் பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுதேச மருத்துவர் க.சோதிதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மருத்துவ பீடத்தைச் சேர்ந்த திருமதி.சாவித்திரி ரவிச்சந்திரன் ஆரோக்கியத்துக்கான யோகா" என்னும் தொனிப்பொருளில் விசேட விரிவுரையை நிகழ்த்துவார்.

யோகா பயிற்சி நெறி – 1, காலை 6 மணி தொடக்கம் காலை 7 மணி வரையும், பயிற்சி நெறி – 2, மாலை 4.30 தொடக்கம் 5.30 வரையும், மூன்றாவது பயிற்சி நெறி இரவு 6 தொடக்கம் 7 மணி வரையும் இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும்.

மருத்துவர்கள் மற்றும் யோகா நிபுணர்களால் இனங்கானப்பட்ட ஆசனம், பிராணாயாமம், தியானம் மற்றும் சாந்தவழி முறைகள் முதன்மைப்படுத்தப்பட்டு, அனுபவமுள்ள ஆசானால் நுட்பமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன் பெண்களுக்கான மேலதிக யோகா பயிற்சிகள் பெண் ஆசிரியரால் வழங்கப்படும். கையேடு மற்றும் சான்றிதழ் என்பனவும் வழங்கப்படும் ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து. பயன் பெறலாம் என்று யாழ்.யோக அரங்கம் அறிவித்துள்ளது. (த)

# கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று

வவுனியா, மே 24

வவுனியாத் தமிழ்ச்சங்கமும் ஒட்டுசுட்டான் செந்தணல் வெளியீட்டகமும் இணைந்து நடத்தும் செல்வி எஸ்.வேதிகாவின் கண்ணாடிப் பூக்கள் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கனகராயன் குளம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியாத் தமிழ்ச்சங்கத்தின் செயலாளர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் சிறப்பு விருந்தினர்களாக படைப்பாளிகள் உலகம் அமைப்பின் தலைவர் த.ஐங்கரனும், தமிழ் எவ்.எம் வானொலி அறிவிப்பாளர் ரி.எஸ்.முகுந்தனும் கலந்துகொள்வர். வரவேற்புரையினை நெடுங்கேணி பிரதேச செயலாளர் க.பரந்தாமனும், வாழ்த்துரையினை வவுனியாத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் எஸ்.என்.ஜி.நாதனும் நிகழ்த்துவர். தலைமையுரையினைத் தொடர்ந்து தொடக்கவுரையினை வவுனியா கல்வியியற் கல்லூரியின் தமிழ்த் துறை விரிவுரையாளர் ஆர்.பார்த்திபனும், சிறப்புரையினை ஈழத்தில் பெண் எழுத்தாளர்கள் எனும் பொருளில் மூத்த எழுத்தாளர் தமிழ்மணி க.க.அருந்தவராஜா (மேழிக்குமரன்)வும், அறிமுகவுரையினையும் வெளியீட்டுரையினையும் செந்தணல் வெளியீட்டக நிறுவுநர் வன்னியூர் செந்தூரனும் வழங்குவர். நூல் விமர்சன உரையை குரும்பையூர் த.ஐங்கரன் நிகழ்த்துவார்.

(த-421)


நினைவஞ்சலிகள்

13ஆம் ஆண்டு | 7ஆம் ஆண்டு



தோற்றம் 31 . 09 . 1923 — மறைவு 13 . 05 . 2002

அமரர்
தம்பையா கணபதிப்பிள்ளை
(எரிபொருள் நிலைய முகாமையாளர் புலோலி ப.நோ.கூ.சங்கம்)



தோற்றம் 05 . 04 . 1924 — மறைவு 23 . 05 . 2008

அமரர்
கணபதிப்பிள்ளை பொன்னம்மா

அன்புக்கு இலக்கணமாய் எங்கள் அப்பா!
ஆறுதலின் சிகரமான எங்கள் அம்மா!!
பண்பின் இருப்பிடமான இருவரும்
இனி எங்கு நாம் உங்களைக் காண்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மாவில் வீதி, புற்றளை,
புலோலி.

குடும்பத்தினர்.
T.P: 0775002162

(59716)(10.6.3)


# வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், மே 24

நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்றுச் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து நடைபெறும் உற்சவங்களில் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறமும் ஜூன் மாதம் 1ஆம் திகதி தேர்த் திருவிழாவும் இடம்பெற்று தொடர்ந்து 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியிறக்கத்துடன் நிறைவடையவுள்ளது. (த-10)


கண்ணீர் அஞ்சலி

எமது வட இலங்கை தேசிய காசரோகத் தடுப்புச் சங்கத்தின் செயற்பாட்டு உறுப்பினரான Lion Dr.K.M.பத்மநாதன் வெஸ்கோ உரிமையாளர் அவர்களின் அன்புச் சகோதரி திருமதி நாகேஸ்வரி தனபாலசிங்கம் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


இலங்கை தேசிய காசரோகத் தடுப்புச்சங்கம்,
வடமாகாணக் கிளை மார்பு நோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை, யாழ்ப்பாணம்.

(60126)(4.3.7)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 22 . 01 . 1943



மறைவு 27 . 04 . 2015

கடந்த 27.04.2015 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

இராசையா கனகராசா (தெய்வம்)

(யாழ். மார்க்கட் வெற்றிலைக் கடை)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (25.05.2015) திங்கட்கிழமை காலை கீரிமலை தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 27.05.2015 புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.
இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தயவுசெய்து தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுறோட், ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை,யாழ்ப்பாணம். (56195)(45.7.3)

தவஞானம் (மனைவி),
கண்ணன் (மகன்).



கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஷ்ட
ஆசிரியை
செல்வி ச.சீவரட்ணேஸ்வரி
அவர்களின் அன்புத்தந்தை
முருகேசு சபாரட்ணம்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மாசாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலை



விழி நீர் சொரிகின்றோம்



கொக்குவில் அரிமாக்கழகத்தின் கலாநிதி லயன் க.மு.பத்மநாதன் PMJF (வெஸ்கோ பாமசி உரிமையாளர், யாழ்ப்பாணம்) பிரதம இணைப்பாளர் அவர்களின் அன்புச் சகோதரி

நாகேஸ்வரி தனபாலசிங்கம்

அவர்கள் மறைந்த செய்திகேட்டு கொக்குவில் அரிமாக்கழகத்தினராகிய நாங்கள் விழி நீர் சொரிகின்றோம்.அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

லயன் செ.சிவலிங்கம் - தலைவர் மற்றும்
லயன்ஸ் கழக உறுப்பினர்கள்
கொக்குவில்.

(60107)(3.9.6)



கண்ணீர் அஞ்சலி

திருமதி நாகேஸ்வரி தனபாலசிங்கம்



எமது சங்கத்தின் பொருளாளர் Dr.லயன் க.மு.பத்மநாதன் அவர்களின் அன்புச்சகோதரி திருமதி நாகேஸ்வரி தனபாலசிங்கத்தின் மறைவு கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அனைவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிப்பதோடு எமது இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடமாகாண புற்றுநோய் எயிட்ஸ்நோய் தடுப்புச் சங்க நிர்வாகத்தினர்

British BUSINESS COLLEGE
Where Students Come First

# தாய்க்கொரு தாலாட்டு

அன்னையரைக் கௌரவிக்க யாழ் குடாநாட்டில் கல்விச் செயற்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற BBC ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலைகளின் 11 வளாகங்களை ஒன்று சேர்த்து நடத்தும் "தாய்க்கொரு தாலாட்டு" மாபெரும் விழா

**அன்னையர் தினத்தை முன்னிட்டு நடைபெறும் மாபெரும் இவ்விழாவில்**

- குழந்தைகளுக்கான நவீன உணவு சமைத்தல், காட்சிப் படுத்தல் போட்டி நிகழ்வு.
- அன்னையர்களின் கலைத்திறன்களை வெளிப்படுத்தும் கலை நிகழ்ச்சிகள்.
- அறிவுத்திறனை வெளிக்கொணரும் போட்டி நிகழ்வுகள்.
- மற்றும் பல சுவையான, விநோத நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

**இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்**
**காலம் : 30.05.2015 சனிக்கிழமை**
**நேரம் : காலை 9.00 - 3.00 மணிவரை**

குழந்தை, பெற்றோர், ஆசிரியர்களுக்கு இடையில் சிறந்த உறவையும் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் ஒன்றான அன்னையரைக் கௌரவிக்கும் இம்மாபெரும் விழாவில் கலந்து சிறப்பிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



நீங்கள் முடி உதிர்வு, பொடுகு, அரிப்பு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா???

இப் பிரச்சினைகளிற்கு தீர்வாக இன்றே பாவியுங்கள் சிறந்த மூலிகைகள் அடங்கிய
"றோயல் அகஸ்தியா கூந்தல் எண்ணெய்"

தலைக்கு குளிர்ச்சியினை அளித்து தலைச் சருமத்துக்கு ஊட்டமளித்து, முடி உதிர்வைத் தடுத்து, கூந்தலைக் கருமையாகவும், நீளமாகவும், அடர்த்தியாகவும் வளரச் செய்து முகத்திற்கு பொலிவை அளிக்கவல்லது.

சந்தைப்படுத்துவோர்: சிவா நறுமணப்பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்) தொ.பே: 021 222 2567
Manufactured by: Royal Industries Colombo -13

Quality Royal A Kasthiya Hair Oil Guaranteed

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துக் கடைகளிலும், மருந்தகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.



# உடனடி வேலைவாய்ப்பு

**கட்டாரில்** முதற்தர கம்பனியில் — **80**
**இலகுரக வாகன சாரதி**
(Gcc லைசன்ஸ் அவசியம்) சம்பளம் 58,000/= — 1600 QR
கட்டார் நாட்டு லைசன்ஸ் முடிவடைந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும். 1QR = Rs. 36.71
May 28 ஆம் திகதி நேர்முகத்தேர்வு Ad.App.No:AL/2769/32/15

**பஹ்ரேனில்** பொதுத்துறை கம்பனியில் — **100**
**கனரக வாகன சாரதி** சொகுசு பஸ்
(Gcc லைசன்ஸ் அவசியம்) சம்பளம் 56,400/= — 160 BD
May 31 ஆம் திகதிக்கு முன் Ad.App.No:AL/2769/32/15- 1BD = Rs. 353.03
(முற்றிலும் இலவசம்)

பொதுவான நியந்தனைகள்:-
* இரண்டுவருட ஒப்பந்தம் * நாள் ஒன்றுக்கு 8 மணித்தியாலம் வாரத்தில் 6 நாள்கள் வேலை. * SLBFE இனால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் மட்டுமே. * தங்குமிடம் மருத்துவம் இலவசம். உணவு கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது. * மற்றையவை அந்நாட்டு தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு அமையும்.

செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் அனுபவசான்றிதழ்களுடன் எமது அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:
Prudential Foreign Employment Agency (Pvt) Ltd
இல. 72/1, 2ஆவது மாடி, கொழும்பு வீதி, குருநாகல்.
077 9200 500 | 037494 5555 | 077 4574555


## கைதடி ச.ச. நிலைய ஒன்றியத்தின் புதிய நிர்வாகம்

கைதடி.மே 24

கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவுகள் அண்மையில் கைதடி குமரநகர் சன சமூக நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த ஆண்டுக்கான தலைவராக இ.கந்தசாமியும் செயலாள ராக கு.சுரேஷ்குமாரும், பொருளாளராக க.தயாளனும் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் பதினொரு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா, சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் செல்வி இ.தர்சினி, சாவகச் சேரி பிரதேச சபையின் சன சமூக நிலைய உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெக தீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு இந்தத் தெரிவை மேற்கொண்டனர்.

மேற்படி சாவகச்சேரி பிரதேச சபையில் ஆறு உப பணி மனைகள் உள்ளபோதும் கைதடி உப பணிமனையிலுள்ள சனசமூக நிலைய ஒன்றியமே இயங்கி வருவது இங்கு குறிப் பிடத்தக்கதாகும். (ஓ-288)


# BEST CHOICE

முதல் முறையாக சீனாவிலிருந்து நேரடியாக வடமாகாணத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட தகரத்தில் அடைக்கப்பட்ட ரின் மீன்களை (BEST CHOICE) மொத்தமாக பெற்றுக்கொள்ள




தொடர்பு:
SMART IMPORTERS & DISTRIBUTORS(Pvt) Ltd.
இல, 350, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:- 021 222 7904

நாளை 25.05.2015 திங்கட்கிழமையிலிருந்து மேற்படி BEST CHOICE ரின்மீன்கள் வாகன விநியோகம் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் விநியோகிக்கப்படவுள்ளது என்பதனை வாடிக்கையாளருக்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.


## சரசாலை சிதம்பர விநாயகர் ஆலய மகோற்சவம்

யாழ்ப்பாணம், மே 24

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10.30 மணிக்கு கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி அதிகாலை 04.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி காலை 08.30 மணிக்கு இரதோற்சவ திருவிழாவும், இரண்டாம் திகதி காலை 08.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (த)


BBC இன் 12வது புதிய கிளை சுன்னாகத்தில்
(NSB வங்கி முன்பாக)

உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு சிறந்த அடித்தளம் அமையுங்கள்
யாழ் குடாநாட்டில் கல்விச் செயற்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலையில் உங்கள் குழந்தையை இணையுங்கள்

BBC 12 வது வருடத்தில்

பாலர் பாடசாலை பிரிவுகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3+ வரை | 3+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

கற்பித்தல் மொழி: ஆங்கில மொழி மூலம், தமிழ் கட்டாய பாடம்

சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்
2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

* Sports Meet * English Day Concert
* முத்தமிழ் விழா * Art & Craft Exhibition
* Carols * Pre School Graduation

பாட விதானமும் கற்பித்தல் முறையும்
NEW SYLLABUS
* Dr. Maria Montessori Method
* Canadian ECE Method
* German LKG, KG, UKG System
எமது கற்பித்தல் முறையும் பாட விதானமும் மேற் கூறப்பட்ட சர்வதேச முறைமைகளைச் சார்ந்து எமது சூழலிற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கல்களும்
* கடந்த 11 ஆண்டுகளாக எமது 11 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.
* யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
* யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை
* எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்
* Percussion Band , Meditation, Speech, Dance & Drama (in English & Tamil)
* குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிற்கிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

BBC யின் 12 பாலர் பாடசாலை வளாகங்கள்

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் |
|---|---|---|
| 64, கோயில் வீதி யாழ்ப்பாணம் | 625, K.K.S வீதி யாழ்ப்பாணம் | பருத்தித்துறை வீதி கோப்பாய் சந்தி |

| மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சுன்னாகம் 1 | சுன்னாகம் 2 | நீர்வேலி |
|---|---|---|---|---|
| 252, யாழ் வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி [illegible] | Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். | இல. 142, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் (NSB வங்கி முன்பாக) | 1வது மைல்கல், இராச வீதி, நீர்வேலி. |

| வடமராட்சி | சாவகச்சேரி | சங்கானை | புத்தூர் |
|---|---|---|---|
| பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, [illegible] | சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | [illegible] | [illegible] |

British BUSINESS COLLEGE — Where Students Come First
BRITISH BUSINESS COLLEGE 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 362 7055, 021 222 4060





கரம்பொன், அன்னை வேளாங்கண்ணி மாதா யாஸ்திரை தல திருவிழா

22.05.2015 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு திருச்செபமாலையும், தொடர்ந்து அன்னையின் திருவுருவம் தாங்கிய கொடி ஏற்றப்பட்டு நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி
22 ஆம் திகதியிலிருந்து தினமும் மாலை 5.00 மணிக்கு திருச்செபமாலையும் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும். 30.05.2015 சனிக்கிழமை நற்கருணை விழாவும், 31.05.2015 ஞாயிற்றுக்கிழமை திருவிழாத் திருப்பலியும் காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி அன்னையின் திருசொரூப பவனியுடன் திருவிழா இனிதே நிறைவடையும்.

அன்னையின் ஆசிர்பெற அன்போடு அழைக்கின்றோம்.
பங்குத்தந்தையும், பங்குமக்களும்.

A.C.D. JAFFNA.


உதயன் advt@uthayan.com 0215671111

## முன்பள்ளிகளுக்கு உதவி வழங்கல்

தென்மராட்சி, மே 24

ரெறேடர்ஸ் ஹோம் நிறுவனத்தினர் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று முன்பள்ளி ஆசிரியைகள் மற்றும் மாணவர்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கியுள்ளனர்.

அண்மையில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு ஸ்ரீகணேச முன்பள்ளி, மறவன்புலோசின் னத்தம்பி முன்பள்ளி, தனங்களப்பு பண்டிதமணி முன்பள்ளி ஆகியவற்றுக்கு உதவிப் பொருள்களை தென்மராட்சி கல்வி வலயம் ஊடாக வழங்கியுள்ளனர்.

சுவிஸ் அபிவிருத்திக் கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மூன்று முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு சைக்கிள்களும், அங்கு கற்கும் சிறார்களுக்குக் கற்றல் உபகரணங்கள், புத்தகப்பைகள், உணவு மற்றும் குடி தண்ணீர் பாத்திரங்கள் போன்றவற்றை அண்மையில் வழங்கியதாக வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் தெரிவித்தார். (த-9)

## கைதடி அபிவிருத்தி: கலந்துரையாடல் இன்று

கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கைதடிப் பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு கைதடி விக்கினேஸ்வரர் வித்தியாலய மண்டபத்தில் கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இகந்தசாமி தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகயாழ் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் கைதடியைச் சேர்ந்த சனசமூக நிலையங்களின் தலைவர் செயலாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(ஒ-288)


### மாகாண கல்வி அமைச்சு, வடமாகாணம்
### சுத்திகரிப்பு சேவை, பாதுகாப்பு சேவை தொடர்பான கேள்விகோரல் – 2015/2016

தலைவர், அமைச்சு பெறுகைகள் குழு (MPC) மாகாண கல்வி அமைச்சு வடமாகாணம் சுத்திகரிப்பு சேவை. பாதுகாப்பு சேவை தொடர்பான கேள்விகோரல்.

Bid No- NP/03/03/f5/S.S/2015
(பாதுகாப்பு சேவை) )

| தொ.இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை பகல்/இரவு |
|---|---|---|
| 1. | யாழ்ப்பாண மாவட்டம் | 110 |
| 2. | வவுனியா மாவட்டம் | 22 |
| 3. | மன்னார் மாவட்டம் | 26 |
| 4. | முல்லைத்தீவு மாவட்டம் | 20 |
| 5. | கிளிநொச்சி மாவட்டம் | 24 |

Bid No- NP/03/03/f5/C.S/2015
(சுத்திகரிப்பு சேவை)

| தொ.இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | யாழ்ப்பாண மாவட்டம் | 73 |
| 2. | வவுனியா மாவட்டம் | 19 |
| 3. | மன்னார் மாவட்டம் | 20 |
| 4. | முல்லைத்தீவு மாவட்டம் | 17 |
| 5. | கிளிநொச்சி மாவட்டம் | 17 |

1. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக்கேள்விபத்திரங்களையும் அலுவலகநேரங்களில் கீழ்காட்டப்பட்ட முகவரியில் (021 205 4095) எமது அமைச்சில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
2. இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் வியாபாரப்பதிவுச் சான்றிதழ். கேள்விப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக்கடிதம் என்பவற்றினை சமர்ப்பித்து ஒவ்வொரு விலைக்கேள்விபத்திரத்திற்கும் ரூபா 1,000 மீளளிக்கப்படமுடியாத கேள்வி வைப்புப்பணத்தினை காசாக செலுத்தி அலுவலகநாட்களில் 25.05.2015ஆம் திகதி தொடக்கம் 15.06.2015 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரையான அலுவலகநேரங்களில் எமது அமைச்சில் பெற்றுக் கொள்ளலாம்.
3. விலைக்கேள்விபத்திரங்கள் 15.06.2015 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு முன்பதாக இவ் அமைச்சில் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக்கேள்விபத்திரங்கள் சமர்ப்பிப்பதற்கான நேரம் முடிவடைந்த உடனேயே விலைக்கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்..

திரு.இ.இரவீந்திரன்.
தலைவர், பெறுகைக்குழு
மாகாண கல்வி அமைச்சு.
வடமாகாணம்.
செம்மணி வீதி.
நல்லூர்.
யாழ்ப்பாணம்.

(C/16152)(10.6.3)

### வீடு வாடகைக்கு

நாவலர் வீதி, ஆனைப்பந்தியில் (சந்திக்கு அருகில்) சகல வசதிகளுடனும் கூடிய இரு அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 949 5010 (60125)(9.3.6)

### சீரடி சாய்பாபா ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்
**சாய்ராம் சாஸ்திரிகள்**

ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டு பிரச்சினை, குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.

காலை 9.00 மணி - மாலை 6.00 மணி வரை.

076 809 7406

Land Mark Yaal inn Hotel
இல.46/1, கஸ்தூரி வீதி, (யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்துக்கு முன்பாக), நீராவியடி, யாழ்ப்பாணம்.

(59429)(4.3.7)

### ஓம் சக்தி ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரபல ஜோதிடர்
**சிவசங்கர் ஜோதிடர்**

உடல்நலக்குறை, திருமண யோகம், தொழில் வியா பாரம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப் பயணங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லப்படும்.

ஒரு முறை எங்களை சந்தித்துப் பயன்பெறுங்கள்.

தொடர்பு: 077 618 7261

காலை 8.00மணி - இரவு - 7.00 மணி வரை
நல்லூர் கோயில் வடக்கு வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.

### Majestic Cineplex Jaffna
### கார்கில்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில் — CEYLON THEATRES




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

### இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்த்திரி ஸ்ரீமுருகன் ஜோதிடம்

வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரிக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கைரேகை பார்த்து பலன் சொல்லுவார், கணவன் மனைவி சண்டை, வேலை தொழில் உத்தியோகம் இப்படிப் பலவாறான தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம். கண்திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இன்மை, குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளைக் காட்டுதல் ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல்படுத்தல் போன்றவற்றையும் செய்வார். தமிழ் மொழிகளில் சொல்லப்படும். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம். இல. 175, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்விருந்தினர் விடுதி, G.G.Hotel, யாழ்ப்பாணம். தொடர்பு: 077 595 0463

### வேலையாள்கள் தேவை

கணக்கு, ஹாட்வெயர்ஸ், கேபிள் T.V போன்ற வேலைகளுக்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. மானிப்பாயிலிருந்து 2Km தூரத்திற்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
(60123)(9.3.6) 021 492 7248, 077 663 0390

### JCB(பைக்கோ) வாடகைக்கு

குறிப்பு:- போக்குவரத்து கூலி அறவிடப்படமாட்டாது.

தொடர்பு இல.



சுன்னாகம்: 077 7712482
யாழ்ப்பாணம்: 0775932007

இல. 207,
புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
K.K.S. றோட், சுன்னாகம்.

### LAND FOR SALE
### காணி விற்பனைக்கு

மேற்படி யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதியில் (Old Park Road) உள்ள பிரதான பாதையில் 5¼பரப்பு மேற்படி விற்பனைக்கு உண்டு. இக்காணி யாழ்ப்பாணக் கச்சேரி St.John's College, Chundukuli Girl's School போன்றவற்றுக்கு மிக அருகில் உள்ளது.

தொடர்பு: 077 938 9201 Or 071 578 8770

(தரகர் தேவையில்லை)

### தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு பெண் பிள்ளைகள் தேவை. (அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

* கொம்பியூட்டர் தமிழ் / ஆங்கிலம் ரைப்பிங் தெரிந்தவர்கள் -04 பேர்
  Photo shop, Corel Drow,Page maker
* போட்டோ கொப்பி எடுப்பவர்கள்-03பேர்
* பாடசாலை உபகரணங்கள் விற்பவர்கள்-02பேர்
* பைண்டிங் தெரிந்தவர்கள்-02பேர் (Book Binding)

அடிப்படை வேதனம்-15000/
Epf ,Etf வசதிகளும்.

தொடர்பு: 076 622 4473

(59995)

### WANTED We are Partners of
### British Council - and City and Guilds

எமது கல்லூரிக்கு ஓர்
Manager / Teaching Assistant தேவை (Female)
தகமை :- GCE A/L வரை படித்திருத்தல் வேண்டும்.
Salary SLR 10,000/= மேல் C.Vயுடன் நேரில் வரவும்

BIRITISH COLLEGE OF ENGLISH
192- Navalar Road Jaffna. T.P :- 021 222 0384/ 077 88 038 87

### மணமகள் தேவை

30 வயதைக் கொண்டுள்ளவரும் 6'0" உயரமுள்ள யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த BSC (Hons) Electrical And Electronic Engineering London இல் பெற்றுக் கொண்டவரும் தற்பொழுது USA இல் Network Power Engineer ஆக நிரந்தரமாக கடமை ஆற்றுப வராகவும் USA UK Citizenship கொண்டவரும் உதயத்து செவ்வாய் கொண்டுள்ள மணமகனுக்கு நல்ல நிறமுடைய குணமுள்ள ஆங்கிலம் நன்றாக பேசக்கூடிய Professionally Qualified such as Medical Professional IT Professional or Engineering Professional கொண்டுள்ளவராகவும் 26 வயதுக்கு உட்பட்டவராகவும் குறைந்த செவ்வாய் குற்றம் உள்ள உயரம்5'6"-5'8" உள்ளவரான மணமகள் தேவை.

Contact: Email manjula56@hotmail.com (60103)(4.3.7)
Tel : 001 4103205856 USA 071 971 3259 Jaffna

### நாகபூஷணி திருமண சேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மற்றும் வங்கி உத்தியோகத்தர், அரச உத்தியோகத்தர் தனியார் துறையைச் சேர்ந்தவர். உள்நாட்டு/ வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் நிறைய உள்ளன. நீங்கள் விரும்பும் மணமக்களின் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு
077 138 7596, 021 222 9306
075 554 6000, 071 894 5692

383/14B, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் கோவில் வடக்குப்பக்கம்)
Email: nakapoosanywedding@gmail.com
வாரத்தின் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.

### TOUR AND SEMINAR IN EUROPE




✓ Subject: Agriculture ✓ Duration: 7 Days
✓ Visa: Schengen Visa ✓ Free Accommodation, Food & Transport

Requirements:
* Age: Over 18 Years Males / Females
* Clean Passport
* Undertaking and Bond

For Details: Call 0778 828 536

CONSOLIDATED ACADEMIC LANKA (PRIVATE) LIMITED
E-mail: info@academiclanka.com
Website: www.academiclanka.com

### CAREGIVERS IN CANADA



✓ Follow the 8 months course in Canada
✓ Thereafter obtain the Work Permit

Qualify for PR
* after 24 months full time live-in-employment OR
* 3900 hours of authorized full time employment

Requirements:
* 3 passes in "A" levels or equivalent
* Age over 18 to 54 years
* Clean Passport

Preference:
* Israel Caregivers
* Nurses and Health Workers
* Others with foreign Experience
* School leavers after "A" levels

For Details: Call 077 882 8536

CONSOLIDATED ACADEMIC LANKA (PVT) LTD
E-mail: info@academiclanka.com Web: www.academiclanka.com

**விற்பனைக்கும் வாடகைக்கும்**

வீட்டுத் தளபாடங்கள் மற்றும் சமைய லறை பொருள்கள் ஆகியன உடனடியாக விற்பனைக்குண்டு.

(குசன்செற்றி, கட்டில் , சாப்பாட்டுமேசை, சில்வர் பாத்திரங்கள், FRIDGE,MICROWAVE OVEN, WALKER, WHEELCHAIR மற்றும் ஏனையவை)

அத்துடன் வீடும் வாடகைக்கு கொடுக்கப்படும்.


தொடர்புகளுக்கு:
077 985 9218

இல.24, கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### முத்தையா தனபாலசிங்கம் (குணம்)



மானிப்பாய் வீதி, கோணாந் தோட்டத்தை வசிப்பிடமாக கொண்ட முத்தையா தன பாலசிங்கம்(குணம்) நேற்று (23.05.20 15) சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மக னும், கந்தையா -நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன் மணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற வர்களான சண்முகம், மீனாம்பிகை, கணே ஸ், காந்தி மற்றும் ராணி, இரத் தினம், ரவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மஞ்சுளா, இந்திரன், ரஞ்சன், ஜீவா, சித்திரா ஆகியோரின் அன்புத் தகப் பனும், விஜி, வனஜா, ஈச ன், குமார் ஆகியோரின் அன்பு மாமனும், காயத்திரி, கார்த்திக், ஜனனி, பார்த் தீபன், லக்ஸன், மிதுசன், லோசனா, திலக்ஷனா, கவிப்பிரியா, தனுசன், கபில் தாஸ், காவியா, நவின்சன், தினேஸ், அர்ஜின், லக்ஷி, கிஷோர் ஆகியோரின் பேரனும், பிரகதி, தரணிஸ், கவிஷன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மானிப்பாய் வீதி, கோணாந்தோட்டத்தில் இருந்து இன்று (24.05.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் ஈமக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

0777 600110

தகவல்: மு. குணரட்ணம் (ரவி)

## மருதங்கேணிப் பிரதேச செயலராக கனகேஸ்வரன்

யாழ்ப்பாணம், மே 24

மருதங்கேணிப் பிரதேச செயலாள ராக கே.கனகேஸ்வரன் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை கடமையேற்றுள்ளார். இதுவரை காலமும் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய என்.திருலிங்க நாதன் மாகாண சபைக்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன் னர், உள்நாட்டலுவல்கள் அமைச்சி னால் இடமாற்றம் வழங்கப்பட்டி ருந்தது. அதில், பிரதித் தொழில் ஆணையாளராகக் கடமையாற் றிய கே.கனகேஸ்வரன், மருதங்கே ணிப் பிரதேச செயலாளராக இட மாற்றம் செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில், நேற்று முன் தினமே அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இதேவேளை, யாழ்.மாவட்ட மேல திக அரச அதிபராகக் கடமையாற் றிய திருமதி ரூபினி வரதலிங்க மும், வடக்கு மாகாண சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

## கனரக வாகனம் மோதி கஜேந்திரன் படுகாயம்



யாழ்ப்பாணம், மே 24

கோப்பாய் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் படுகாய மடைந்து யாழ். போதனா வைத்தி யசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிய வருவது:-

வடமராட்சிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பருத்தித் துறை வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் பயணித்த கஜேந்திர னைக் கைதடி வீதி வழியாகப் பயணித்த ரயில் பாதைப் புனர மைப்புக்குப் பயன்படும் கனரக இயந்திரம் மோதியதால் மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு விபத்தில் படுகாயம டைந்த கஜேந்திரன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். விபத்திற்குள்ளான வாகனத்தைச் செலுத்தி வந்த இந்திய நாட்டுச் சாரதியைக் கோப் பாய் பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

(த-101)

## அரச பணியாளருக்கான ஆக்கத்திறன் போட்டிகள்

தென்மராட்சி, மே 24

அரச பணியாளருக்கான இந்த வருடத்துக்குரிய ஆக்கத்திறன் போட்டி களுக்கான ஆக்கங்கள், கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

அரச மற்றும் அரசுடன் இணைந்த சேவையில் ஈடுபட்டிருக்கும் படைப் பாளிகளுக்கு இலக்கிய ஆக்கத்திறன் தொடர்பான ஊக்கமளிக்கும் மற்றும் அவர்களின் இலக்கிய ஆற்றல்கள் வெளிப்படுத்தும் ஆக்கத்திறன், போட்டித் தொடர் 2015 க்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. சிறுகதை, பாடலாக்கம், குறுநாடகம், சிறுவர் ஆக்கம், கவிதை ஆக்கம், ஓவியம் ஆகிய தமிழ், சிங் கள படைப்புக்களை எதிர்வரும் ஜுன் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு அமைச்சின் செயலாளர் எச்.டி.எஸ்.நீல் காந்தி அறிவித்துள்ளார்.


(த-9)

**வீடு வாடகைக்கு**

124/2, பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ள 8 அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
வர்த்தகர்கள், உத்தியோகத்தர்கள் விரும் பத்தக்கது.

(60132)(4.3.7) தொடர்பு: 076 536 7623

## மரண அறிவித்தல்



### பொன்னையா முருகப்பிள்ளை

சோரண்பற்று பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா முருகப்பிள்ளை 21.05.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சாந்திமதியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2015) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 9.00 மணிக்கு சோரண்பற்று இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **பிள்ளைகள்.**

(60129) (4.3.7)

**Senior/Software Engineers – PHP (3)**

Techtrion Inc., a Canadian full service IT Company is looking for a motivated Senior and Software Engineers for our**Jaffnaoffice** in Sri Lanka. The Successful candidates should be able to work in LAMP environment with PHP5, WordPress providing web services for large, complex web applications. Our developers apply themselves in flexible, creative and cooperative ways to meet our goals. We continually strive for excellence in ourselves, our products and our services.

**Duties and Responsibilities**

- Develop high-performance, stable, robust and secure code from scratch or by adapting existing technology to meet business requirements.
- Maintain existing Web Applications
- Develop enhancements to existing applications
- Test, Identify and resolve any technical problems and glitches
- Hands on experience in HTML5, Javascript, CSS, jQuery and Ajax
- Familiarity with the open source technologies Zen Cart, Drupal and Joomla with ability to create custom modules and customize code if need be.
- Understanding of internet security and ability to develop code that is secure against-all forms of injection
- Exceptional analytical, design and planning skills
- Excellent communication (Written & verbal) and interpersonal skills
- Ability to handle multiple assignments and complete assigned tasks as scheduled
- Ability to work independently with minimal supervision in a collaborative environment
- Ability to adapt and learn new technologies
- Ability to work efficiently in a fast paced environment
- Should be comfortable in working under pressure when required
- Experience in a web Hosting or working directly with hosting providers would be added advantage.

**Preferred Qualifications**

- Bachelor's degree in IT/CS/Software Engineering or any other related degrees
- Around 2 Years of industry experience
- Knowledge of international web standards and protocols
- Familiarity with illustrator/Photoshop/Acrobat Professional
- Relevant certification will be an advantage

**To apply:**
This is a full-time permanent position with competitive salary and benefits. Please send resume and cover letter by email to: umesh@techtrion.com

(60127)(10.6)

**கார் வாடகைக்கு**

இறக்குமதி செய்யப்பட்ட குளிரூட்டப்பட்ட வெள்ளை நிற கார் திருமணம் மற்றும் விசேட நிகழ்வுகளுக்கு வாடகைக்கு உண்டு.
T.p :077 474 2576 ,077 386 8572

**வீடு வாடகைக்கு**

இல. 15, பழைய பூங்கா வீதி, முதலாம் ஒழுங்கையிலுள்ள 3அறைகள் கொமட் வசதியுடனான குளியலறை உள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 077 9710525

**பணியாளர்கள் தேவை**

சிறுவர் பூங்கா கச்சேரியில் உள்ள சிறுவர் சிற்றுண்டிச்சாலைக்கு பெண் பணியாளர் கள் தேவை. அருகில் உள்ளவர்களுக்கும் A/L முடித்தவர்களுக்கும் முன்னுரிமை.
Mob: 0770 780 240

**காணி விற்பனைக்கு**

யாழ். பிரதான வீதியில் சுண்டுக்குழி மக ளிர் கல்லூரியில் இருந்து சில 100 m தூரத் தில் 35 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 6102405

# கல்விச் சுற்றுலா சென்றோரை கலைத்துத் தாக்கியது யானை



கொழும்பு, மே 24

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குக் கல்விச் சுற்றுலா சென்ற பாடசாலை மாணவர்களின் வாகனத்தின் மீது காட்டு யானை தாக்கியதில் ஒரு மாணவியும் இரண்டு ஆசிரியைகளும் காயமடைந்து வைத்தியசாலை சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஹிங்குரத்கொடை ஆனந்த மகளிர் கல்லூரி மாணவிகள் பயணித்த வாகனத்தை நேற்று அதி காலை 5.45 மணியளவில் தம் புள்ளை திகம்பதாவ என்ற இடத்தில் யானை கலைத்துத் தாக்கியதாக தம் புள்ளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட வாகனத்தில் 12 மாணவிகள் இருந்துள்ளனர். அதில் சிலருக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டதுடன் அவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகி உள்ளனர். காயமடைந்தவர்கள் தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களில் இதே போன்று மூன்று சம்பவங்கள் இடம் பெற்றதாகவும், பதினைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததுடன் வாகனங்களும் சேதமடைந்ததாகவும் பொலிஸார் கூறினர். (த-10)

## வித்தியாவுக்காக

கண்டனப் பேரணி ஒன்றை மேற்கொண் டனர்.

திருகோணமலை நகர பஸ் நிலையத்துக்கு அருகில் இந்தப் பேரணி நடைபெற்றது.

நாட்டில் சட்டம் நிலைநாட்டப் பட வேண்டும், இளைஞர் – யுவதிகளின் உயிர்களுக்கு அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டும், வித்தியாவின் கொலையுடன் தொடர்புடைய அனைவரும் தண் டிக்கப் பட வேண்டும் போன்ற பதாகைகளை ஏந்தி மாணவர்கள் கண்டனப் பேரணியில் ஈடுபட்டனர்.

அத்துடன் குறித்த மாணவர்களால் தயாரிக்கப்பட்ட மனு ஒன்று திருகோணமலை பொலிஸாரிடம் இதன் போது ஒப்படைக்கப்பட்டது. (த)

## அதிரடிப்படையின்

போராட்டங்கள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்ட பின்னணியிலேயே, விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். விசேட அதிரடிப் படையின் கலகமடக்கும் பிரிவினரும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

புங்குடுதீவு பள்ளி மாணவியின் படுகொலைக்கு நீதி வேண்டிய போராட்டங்கள், கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நகரில் தீவிரம் பெற்றிருந்தன. கடந்த செவ்வாய்க்கிழமை, நகரப் பகுதிக் கடைகள் யாவும் திடீரென மூடப்பட்டது. மறு நாள் புதன்கிழமை ஹர்த்தால் காரணமாக, யாழ்.குடாநாடு முழுவதும் முழுமையாகச் செயலிழந்திருந்தது. அத்துடன் அன்றையதினம், நீதிமன்றத்தின் மீது கல்வீச்சுத் தாக்குதல் இடம்பெற்று வன்முறையும் இடம்பெற்றிருந்தது. இதனால் குடாநாடு முழுவதும் பதற்றமான நிலைமை தோன்றியிருந்தது.

மறு நாள் வியாழக்கிழமை மற்றும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்களும், யாழ்.நகர் உள்ளிட்ட குடா நாடு முழுவதும் அமைதியான – இயல்பு நிலைக்குத் திரும்பியிருந்தது. மக்கள் போக்குவரத்தும் வழமை போன்று இருந்தது.

இந்த நிலையில், பெண்கள் அமைப்பினால் யாழ்.நகரில் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்குப் பொலிஸார், நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை உத்தரவைப் பெற்றிருந்தனர்.

இதன் காரணமாக, யாழ்.மத்திய பேருந்து நிலையச் சுற்றாடல் முழுவதும் ஆயுதங்களுடன் விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் பவள் கவச வாகனமும் நிறுத்தப் பட்டிருந்தது. போர்க்காலச் சூழல் போன்று நகரப் பகுதி காட்சியளித்தது. நகரின் ஒவ்வொரு சந்தியிலும், இவ்வாறு ஆயுதம் தாங்கிய விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் நிறுத்தப்பட்டிருந்தனர். அவர்களுடன் கலகமடக்கும் விசேட அதிரடிப் படையினரும் இருந்தனர்.

பொலிஸ் நிலையம் மற்றும் நீதிமன்றம் ஆகியவை நேற்றைய தினம் முழு நேரம் அதிரடிப் படையினரின் முழுமையான கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்தது. நீதிமன்றத்தின் முன்பக்க வீதியினால் செல்ல முடியாதவாறு தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் அதிகளவிலான அதிரடிப் படையினர் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.

நேற்று முழுநாளும் ஆயுதங்களுடன் அதிரடிப் படையினர் நகரப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்ததால், ஒரு விதமான பதற்றமான சூழ்நிலையே நிலவியது. (த-5)

## மீள்குடியமர்ந்த

கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகி யோர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நேரில் சந்தித்துப் பேசினர். இதன் போதே மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

வலி.வடக்கு – வலி.கிழக்கில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. மீள்குடியேற்ற அமைச்சு நிதியில்லை என்ற காரணத்தினால் இதனை மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்திருந்தது. இந்த நிலையில் குடியமர்ந்த மக்கள் அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் சுட்டிக்காட்டியுள்ளனர். மீள்குடியேற்ற அமைச்சுக்கு அதிகளவிலான நிதி ஒதுக்குமாறு இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர். அது தொடர்பில் சாதகமான நடவடிக்கை எடுப்பதாக, பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தச் சந்திப்பின் போது மேலும் காணிகளை விடுவிப்பது தொடர்பில் பேசப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## போராட்டங்கள்

பெண் விடுதலை சிந்தனை அமைப்பினால், யாழ்.மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக நேற்றுக் காலை 10 மணிக்குக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கிடையில், யாழ்.நகரப் பொலிஸாரால் நீதிமன்றத்தில் போராட்டத்துக்குத் தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தினால் மூன்று அமைப்புக்களுக்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் சக்தி என்ற அமைப்பு, பெண் விடுதலை சிந்தனை அமைப்பு மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் ஆகியோருக்கே தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் சக்தி அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ள தடை உத்தரவில், நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்திய சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரியும், பிணை வழங்கக் கோரியும் போராட்டம் நடத்துவது, பொதுமக்களுக்கு அன்றாட நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடியதாகும். இதனைக் கருத்தில் கொண்டு போராட்டத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நேற்று 23 ஆம் திகதியிலிருந்து இரு வார காலப் பகுதிக்குள் யாழ்.நகர் எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில், கவனவீர்ப்புப் பேரணிகளையோ, போராட்டங்களையோ நடத்த நீதிமன்றம் தடை உத்தர வைப் பிறப்பித்துள்ளது. (த-5)

## மாணவி

அடுத்து கொக்குவிலில் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, யாழ். மாவட்ட பெண்கள் சமாசம், புத்தூர் கலைமதி பெண்கள் அமைப்பு, புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயக மாக்ஸிச லெனினிசக் கட்சி ஆகியன கலந்துகொண்டதுடன் பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் கண்டி, கொழும்பு, வவுனியா, மாத்தளை பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் விசேட நீதிமன்றம் உருவாக்கப்பட்டு விரைவில் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டது. (த-10)

## 20 ஆவது திருத்தம்

தொகை 225 ஆக வைப்பதா அல்லது அதனை 255 ஆக உயர்த்துவதா என்பது தொடர்பில் இவ்விரு கட்சிகளுக்கிடையில் கருத்து முரண்பாடு நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியினர் 20 ஐ நிறைவேற்றுவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றதுடன், நிறைவேற்றாமல் தடுப்ப தற்காக புதிய சிக்கல்களை உருவாக்கு வதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி சுட்டிக் காட்டியுள்ளது. (த-சி)

## பதவி

உள்ள அமைச்சர்கள் நீண்ட வரிசையில் உட்கார்ந்திருந்தனர்.

பின்னர் வந்த ஆளுநரை ஜெயலலிதா பூங்கொத்துக் கொடுத்து வாழ்த்து தெரிவித்ததோடு, அமைச்சர்களை அறிமுகப்படுத்தினார். இதைத் தொடர்ந்து தமிழ்த் தாய் வாழ்த்து பாடல் பாடப்பட்டது.

முற்பகல் 11.09 மணிக்கு முதல்வராக ஜெயலலிதா பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் ரோசையா பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

இதைத் தொடர்ந்து ஓ.பன்னீர் செல்வம், நத்தம் விஸ்வநாதன், எடப்பாடி பழனிச்சாமி, மோகன், வளர்மதி, பழனியப்பன், செல்லூர் ராஜூ, காமராஜ், செந்தில் பாலாஜி, சம்பத், வேலுமணி உள்பட 28 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.(த)

## போர்க் குற்றம்

இராணுவம் வெளியேற வேண்டும் எமது வளங்கள் பல விதங்களில் பாதிப்படைந்துள்ளன. வளங்கள் சில சூறையாடப்பட்டுப் பிற மாகாணங்களுக்குக் கடத்தப்பட்டு வருகின்றன. நாளாந்த வாழ்க்கை வழமைக்குத் திரும்ப வேண்டுமெனில் இராணுவத்தினர் எமது மண்ணில் இருந்து வெளியேற வேண்டும்.

'நாங்கள் யாவரும் சகோதரர்கள் எமக்குள் நல்லெண்ணம் மலரட்டும் சுமுகமான உறவுகள் உருவாகட்டும்' என்றெல்லாம் மேடைகளில் ஏறிக் கூறிவிட்டுப், போரின் போது போர்க் குற்றமிழைத்த இராணுவத்தினரைத் தொடர்ந்து எம் மண்ணில் ஆக்கிரமிப்புப் படையாக இருந்து ஆளவிடுவது எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்று.

### கவரும் நடவடிக்கை வெற்றியளிக்காது

எமது மாணவ சமுதாயத்துக்கு மேற்படி தொடர் இராணுவப் பிரசன்னம் பலவிதமான பாதிப்புக்களைத் தந்து கொண்டிருக்கின்றது. ஆயுதம் தாங்கிய அரச படைகள் அச்சுறுத்தும் இயல்பைக் கொண்டவர்கள் என்பதை நாம் மறுக்க முடியாது. எவ்வளவுதான் மக்களைத் தம்வசம் கவரும் முகமாக, இராணுவம் நடவடிக்கை எடுத்தாலும் அவர்கள் ஜனநாயகக் கட்டமைப்புக்குள் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் அல்ல.

பொலிஸார் வேறு, இராணுவம் வேறு.பொலிஸார் ஆயுதத்தை நம்பி வாழ்பவர்கள் அல்ல. பொலிஸார் மக்களுடன் மக்களாக மக்கள் நலன் கருதி கடமையாற்ற வேண்டியவர்கள். அவ்வாறான கடப்பாடு எதுவும் இராணுவத்துக்கு இல்லை. நாட்டின் எல்லைகளைக் காப்பாற்றுவதாகக் கூறி எமது மண்ணையும், வளங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டு, போர் முடிந்து 6 வருடங்களின் பின்னரும் வேண்டாத எம்மிடையே, பலாத்காரமாக நிலை நிறுத்தப் பட்டிருக்கும் ஒரு அரச படையே இராணுவமும், கடல் படையும்.

எமது பாதுகாப்புக்காக இராணுவத்தை இங்கு நிலை நிறுத்தியுள்ளதாக அரசு அறிவிக்கின்றது. ஆனால் நாங்கள் எவரும் எங்களைப் பாதுகாக்க நீங்கள் இங்கு இருங்கள் என்று இராணுவத்தினரிடம் கூறியதாகத் தெரியவில்லை. அவ்வாறு யாராவது கூறியிருந்தால் அவர் இராணுவத்தின் அனுசரணையாளனாகவோ இராணுவத்திற்குப் பயந்தவனாகவோ அல்லது அரசின் ஒற்றனாகவோ தான் இருக்க வேண்டும்.

### திட்டமிட்டு திசைமாற்றும் நடவடிக்கை

அண்மைக் காலங்களில் நடைபெறும் மிகக் கொடூரமான குற்றச் செயல்கள் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இங்கு மக்களிடையே அறிந்திராத செயல்கள். 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரான கிருஷாந்தியின் கொலைக்கும் மக்களுக்கும் தொடர்பேதும் இருக்கவில்லை.

ஆனால் தற்போது எமது இளைஞர் – யுவதிகள் சுதந்திர தாகத்துடன் உருவாகக் கூடாது, அறிவில் சிறந்து விளங்கக் கூடாது, தொழிற் பாங்குடன் கடுமையாக உழைப்பவர்களாக உருவாகக் கூடாது என்று திட்டமிட்டுப் பிழையான வழிகளில் அவர்கள் பாதை தவறி நடக்க உரிய சூழலை, யாராவது வழி அமைத்துக் கொடுக்கப் பார்க்கின்றார்களோ என்று எண்ண வேண்டியுள்ளது.

### சிங்கள மக்கள் மனதில் நஞ்சு

எந்த ஒரு அரசும் தமிழர்களுக்கு நன்மை செய்வோம் என்று வெளிப்படையாகச் சிங்கள மக்களிடையே தெரியப்படுத்தத் தயங்குகின்றது. காரணம் அந்த அளவுக்குச் சிங்களச் சகோதர – சகோதரிகள் மனதில் நஞ்சை விதைத்துள்ளார்கள் அரசியல்வாதிகள்.

தமிழர்களுக்குத் தயை காட்டினால் தமக்குத் தேர்தலில் சிங்கள வாக்காளர்கள் அடையாளம் போடமாட்டார்களோ என்ற பயத்தில் எல்லாச் சிங்கள அரசியல் தலைவர்களும் மறைவாகத்தான் எமக்கு உறுதிமொழிகளைத் தருகின்றார்கள். இது அபாயகரமானது.

### வரலாறு

1956 ஆம் ஆண்டில் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண் டாரநாயக்க 24 மணித்தியாலங்களில் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவரப் போவதாக அறிவித்தார். சிங்கள மக்கள் பெருவாரி யாக பண்டாரநாயக்க அவர்களுக்கு வாக்களித்துத் தேர்தலில் வெற்றி வாகை சூட வழி வகுத்தனர். பின்னர் தமிழர்கள் வெகுவாக ஆட்சேபித்ததால் நியாயமான தமிழ் மொழிப் பாவனைக்கான ஒரு சட்ட வரைவைக் கொண்டு வந்தார்.

உடனே அவரின் வீட்டின் முன் சுமார் 200 பௌத்த பிக்குமார் கூடி பிரதமரை வெளியே அழைத்து என்ன சொன்னார்கள் தெரியுமா ? நாங்கள் யாவரும் மிகவும் பிரயாசைப்பட்டு உங்களைப் பதவியில் ஏற்றியது தமிழ் மொழிக்கு நியாயமான இடம் கொடுக்கவா? இல்லை. சிங்களம் மட்டும் நாடு பூராகவும் பாவிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே உங்களுக்கு இந்தப் பதவியைத் தந்தோம் என்றார்கள். உடனே அந்தச் சட்டவரைவைப் பண்டாரநாயக்க பிக்குகள் முன்னிலையிலேயே கிழித்தெறிந்து விட்டார். அடுத்த வருடம் அவர் ஒரு பௌத்த பிக்குவினாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

### வெளிப்படையாக வேண்டும்

இதையேன் உங்கள் முன்னிலையில் இன்று கூறுகின்றேன் என்றால் நாம் மறைவாகக் காரிய மாற்றினால் தப்பி விடலாம் என்று எண்ணுகின்றோம். அது அவ்வாறு நடப்பதில்லை. தமிழர்களுக்கு நாம் உரிய உரித்துக்களைப் பின்னர் பெற்றுக் கொடுப்போம் என்று மறைவாகத் கூறுவோரை அவர்கள் பதவிக்கு வந்தபின் அவர்களுக்கு வாக்கை அளித்த பெருவாரியான சிங்கள மக்கள் இடமளிக்கமாட்டார்கள்.

சிறிசேன தருவார், ரணில் தருவார், சந்திரிகா தருவார் என்று நாம் எண்ணுவதெல்லாம் மடமை. இன்றே நாங்கள் எல்லோருடனும் வெளிப்படையாக ஒரு ஒப்பந்தத்திற்கு வர வேண்டும். இதைத்தான் நாங்கள் செய்வோம். என்று சிங்களத் தலைவர்கள் கூற வேண்டும். இது தான் எமக்கு வேண்டும் என்று தமிழ்த் தலைவர்கள் கூற வேண்டும். மறைவாக காரியங்கள் ஆற்றக் கூடாது என்றே கூறிவைக்கின்றேன் – என்றார். (த-5)

## இன்றைய மோதல்கள்

*ஸ்ரார் ஈகிள்ஸ் வி.க.தொடர்*

யாழ்ப்பாணம். மே 24

மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கிளிபேட்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் லயன்ஸ் அணி மோதவுள்ளது. 2மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் றோயல் அணியை எதிர்த்து வவுனியா சலஞ்சர்ஸ அணி மோதவுள்ளது

*புனித தோமையார் வி.க.தொடர்*

மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெரு விழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11 ஆவது ஆண்டு நிறவையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளான் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. 9.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வட்டுக் கோட்டை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆட்டதில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நெடிய காடு இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ரி–23)

## பாடும்மீன் தாண்டவம்

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில்; பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொழும்புத்துறை ஜெட்லையின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 7:0என்ற கோல் கணக் கில் அபார வெற்றிபெற்றது. (த–ரி–23)

# நண்பர்களின் போரில் கனகரத்தினம் ம.வி அசைக்க முடியாத ஆதிக்கம்

### *எட்டக்கூடிய இலக்கை கோட்டை விட்டது வித்தியானந்தா*

யாழ்ப்பாணம். மே 24

நண்பர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் கனகரத்தினம் ம.மகா வித்தியாலயத்திற்கும் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெறும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத்தில் மூன்றாவது தடவையாகவும் தொடர்ச்சியாக கிண்ணத்தைக் கைப்பற்றி ஹற்றிக் சாதனை படைத்துள்ளது கனகரத்திம் ம. மகா வித்தியாலயம்.



நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கனகரத்தினம் ம.மகா வித்தியாலய அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர். இதன்படி 49 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக விதுசன் 24 ஓட்டங்களையும், சுஜீகரன் 23 ஓட்டங்களையும், கலை 21 ஓட்டங்களையும், பிரசாத் 20 ஓட்டங்களையும் பெற்றனர்;. பந்து வீச்சில் வித்தியானந்தாக் கல்லூரி சார்பாக அருணா 3 இலக்குகளையும், அஞசயன் 2 இலக்குகளையும், அஜிதன் 2 இலக்குகளையும், லோகீசன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

300 பந்துகளில் 172 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற எட்டக்கூடிய இலக்கைநோக்கி களமிறங்கிய வித்தியானந்தாக் கல்லூரி அணியினர் கனகரத்தினம் ம. மகாவித்தியாலய அணியினரின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறினர். இதனால் வித்தியானந்தாவின் வெற்றி ஆரம்பத்திலிருந்து ஆட்டம் கண்டது. முடிவில் 36.2 பந்துப்பரிமாற்றங்களில் வித்தியானந்தா சகல இலக்குகளையும் இழந்து 128 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். அதிகபட்சமாக அருணா 38 ஓட்டங்களையும், வினோசன் 34 ஓட்டங்களையும், விதுசன் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் கனகரத்தினம் ம. மகா வித்தியாலய அணி சார்பாக பிரசாந் 4 இலக்குகளையும், விதுசன் 2 இலக்குகளையும், கலை, சஞ்சீவன், டிலக்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர். (த–ரி–422)

## இலங்கை கனிஷ்ர மெய்வன்மையில் தமிழ் மாணவர்கள் வலுவான ஆதிக்கம்



ஜெனோசன்



டிலானி



அனித்தா



தர்சிகா

யாழ்ப்பாணம், மே 24

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்படும் கனிஷ்ர பிரிவினருக்கான மெய்வன்மைப் போட்டி பியகம சர்வதேச விளையாட்டரங்கிலும் சுகததாச விளையாட்டரங்கிலும் தற்பொழுது நடைபெற்று வருகிறது.

*சம்மட்டி எறிதல்*

இதில் சம்மட்டி எறிதல் போட்டி யில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர் இருவர் வெள்ளிப் பதக்கத்தினை தமதாக்கிக் கொண்டனர். 23வயதுப்பிரிவு பெண்களுக்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி தர்சிகா 23.17மீற்றர் தூரத்துக்கு எறிந்து இரண்டாம் இடத்தினைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினைக் கைப்பற்றினார். 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் ஜெனேசன் 29.14 மீற்றர் தூரத்துக்கு எறிந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளர். இவர்கள் இருவரும் வவுனியா மாவட்ட மெய்வன்மை சங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடதக்கது.

**கோல் ஊன்றிப்பாய்தல்**

கோல் ஊன்றிப்பாய்தல் போட்டியில் மகாஜனக்கல்லூரி மாணவிகளான டிலானி தங்கப்பதக்கத்தையும், அனித்தா வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றினர். சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில், 18வயதுப் பிரிவில் டிலானி 2.70மீற்றர் தூரத்தை பாய்த்து முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தினை கைப்பற்றிய அதேநேரம் 20 வயதுப்பிரிவில் அனித்தா 3.1மீற்றர் தூரத்தினை பாய்த்து இரண்டாத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தை பெற்றுள்ளர். (ரி–23)

## குறிஞ்சிக் குமாரன், அராலி பாரதி அபாரம்

மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெருவிழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்ற ஆட்டங்களில் குப்பிளான் குறிஞ்சிக்குமாரன் விளையாட்டுக் கழக அணிக்கும் சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குப்பிளன் குறிஞ்சிக்குமாரன் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அராலி பாரதி விளையாட்டுக்கழக அணிக்கும் காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் அராலி பாரதி விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ரி–23)

# புனித சவேரியார் வி.க. முடிவுகள்

யாழ்ப்பாணம். மே 24

தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தேவன்பிட்டி புனித சவேரியார் விளையாட்டுக் கழகம் வட மாகாண ரீதியாக நடத்தும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் தேவன்பிட்டி புனித சவேரியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் தோட்டவெளி ஜோசப்வாஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் முல்லைத்தீவு ஜங்கர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தோட்டவெளி ஜோசப்வாஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கிராஞ்சி விளையாட்டுக்கழக அணிக்கும் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.வெற்றிதோல்வி காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்ன. இதில் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சிலாவத்தை மருதம் விளையாட்டுக் கழக அணிக்கும் முல்லைத்தீவு இளம்பறவை விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எது வித கோலையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்ன. இதில் முல்லைத்தீவு இளம்பறவை விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக அணிக்கும் பெரியகடை எவர்கிறின் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரணைமாதாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரணை மாதா நகர் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

*தொடரும்......*




# மனது சென்னை என்கிறது வரலாறு மும்பை என்கிறது



நடப்பு ஐ.பி.எல்லில் பல இடர்களையும், தடைகளையும் தாண்டி சென்னை மற்றும் மும்பை இரண்டு அணி களும் இறுதியாட்டத்தில் மோதுவதற்கு தகுதியாகி இன்று இரவு கிண்ணத்துக் காக போரிடுகின்றன. இந்த இறுதியாட் டத்தில் ரசிகர்கள் ஆதரவு அதிகம் உள்ள அணியாகவும் கிண்ணம் வெல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் அணியாகவும் சென்னையுள்ள நிலை யில் சென்னையை வீழ்த்தி மும்பையே கிண்ணத்தை கொண்டு செல்லும் என்று ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

அதாவது நடைபெற்று முடிந்த 7 தொடர் களின் புள்ளிப்பட்டியலில் 2வது இடம் பிடிக்கும் அணிதான் கடந்த 4 தொடர் களிலும் கிண்ணம் வென்றுள்ளது. அதன் படி பார்த்தால் நடப்புத்தொடரில் லீக் ஆட்டத்தில் இரண்டாவது இடத்தில் மும் பையே உள்ளது எனவே குறித்த புள்ளி விவரத்தின்படி கிண்ணத்தை தட்டிச் செல்லப் போவது மும்பை அணிதான். இதனால், லீக் சுற்றில் முதலிடம் பிடித்த சென்னையை விட 2வது இடம் பிடித்த மும்பை மீதே ரசிகர்கள் கவனம் திரும் பியுள்ளது.

முதலாவது தகுதியாட்டத்திலும் இந்த இரண்டு அணிகளுமே மோதியிருந்தன. இந்த ஆட்டத்தில் சென்னையை மும்பை தோற்கடித்திருந்தது. இதனால் இறுதி யாட்டத்தில் மும்பையை பழிதீர்க்கும் நோக்கத்தில் சென்னை மிகவும் தீவிரம் காட்டும் இதனால் புள்ளிப்பட்டியலில் முதலாவது, இரண்டாவது விடயமெல் லாம் சென்னையிடம் எடுபடாது என்றே தெரிகிறது. (ரி)

# இலங்கைப் பெண்கள் கிரிக்கெட்டில் பாலியல் லஞ்சம் பெறப்பட்டது உறுதி

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி யில் இணைவதற்காகவும் தொடர்ந்து நீடிப்பதற்காகவும் வீராங்கனைக ளிடம் அதிகாரிகள் பாலியல் லஞ் சம் பெற்றதற்கான ஆதாரம் உள்ள தாக விசாரணைக் குழு தெரிவித் துள்ளது.

கடந்த ஆண்டு மகளிர் கிரிக்கெட் அணியில் பாலியல் லஞ்சம் பெறப் படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டது. இதனை விசாரிக்க கடந்த நவம்பர் மாதம் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி நிமல் திஸநாயக்க தலைமையில் மூன்று பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவின் விசார ணையில் மகளிர் கிரிக்கெட் அணி நிர்வாகிகள் பலர், வீராங்கனைகளிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டமை தெரிய வந்துள்ளதாக இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திஸா நாயக்க நேற்றுத் தெரிவித்துள்ளார். தவறு செய்த அதிகாரி கள் மீது விரைவில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த-ரி)

# இங்கிலாந்தை பந்தாடுகிறது நியூஸிலாந்து

லாதம், குப்ரில், வில்லியம்சன் ஆகியோ ரது அரைச்சதங்கள் கைகொடுக்க இரண் டாம்நாள் ஆட்டநேர முடிவில் 2 இலக்கு கள் இழப்புக்கு 302 ஓட்டங்களைக் குவித்து பலமான நிலையில் உள்ளது நியூஸிலாந்து.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து முதல் இன்னிங்ஸிற்காக 389 ஓட்டங் களைப் பெற்றது.

பந்து வீச்சில் நியூஸிலாந்து சார்பாக ஹென்றி மற்றும் போல்ட் தலா 4 இலக்கு களையும் சௌத்தி மற்றும் கிறைக் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

390 ஓட்டங்களைப் பெற்றால் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெறலாம் என்ற நிலையில் களமிறங்கிய நியூஸி லாந்துக்கு அதன் ஆரம்பவீரர்களான லாதமும் குப்ரிலும் மிகச்சிறப்பான ஆரம் பத்தைக் கொடுத்தனர். 60 என்ற சரா சரியில் ஓட்டங்களைக்குவித்துக்கொண்டி ருந்தனர். சொந்த மண்ணில் செய்வதறி யாது திக்குமுக்காட ஆரம்பித்தது கிரிக் கெட்டின் தாயகம். ஆளுக்கொரு அரைச் சதமும் கடந்தாயிற்று இலக்கு மட்டும் விழுந்த பாடில்லை. இணைப்பாட்ட மாக 148 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த வேளையில் ஒருவாறு முடிவுக்கு வந் தது. லாதம் 59 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். அடுத்த பந்துப்பரிமாற்றத்தி லேயே குப்ரில் 70 ஓட்டங்களுடன் பவி லியன் திரும்ப துள்ளிக் குதித்தார்கள் இங்கிலாந்து வீரர்கள். நியூஸிலாந்தின் வலுவான நிலையை தொடர்ந்தும் தக்க வைக்க தீவிரம்காட்டினார் வில்லியம் சன். வில்லியம்சன் பாணியில் ரெய்லர் இருவரும் இணைந்து மற்றுமொரு சிறந்த இணைப்பாட்டத்தை அரங்கேற் றினார்கள். ஆரம்பவீரர்களின் அதே சராசரியில் அரைச்சதம் கடந்து சதத் தைநோக்கிச் சென்றுகொண்டிருந்தார் வில்லியம்சன். ரெய்லரும் சிறப்பான பங்களிப்பு- இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் நியூஸிலாந்து 303-2. வில்லி யம்சன் 92 ஓட்டங்களுடனும் ரெய்லர் 47ஓட்டங்களுடனும்களத்தில்உள்ளனர்.(ரி)

MITSUBISHI MOTORS
Drive@earth
L200
வேலைக்கும் பயணத்திற்கும் முழுமையான சிறப்பு
மிட்சுபிசி L200 கடினமான வேலைகளுக்கு நம்பகரமாக பாவிப்பதுடன் 20 வருட கால வரலாற்று பெருமைமிக்க ஓர் டபல் கெப் ரகமாகும். உயர் தரம் நம்பிக்கை செயற்திறன் அழகிய தோற்றம் இடவசதி மற்றும் வசதி போன்ற சிறம்பம்சங்களி-னால் உலகம் பூராகவும் கடினமான வேலைகளுக்காக தெரிவு செய்யப்படும் முதற் தெரிவாக விளங்குகின்றது.




L200 Double Cab Suntern - ரு.6,390,000/-

யுனைட்டட் மோட்டர்ஸ் லங்கா பீஎல்சி

காட்சியறை: 100, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02.
தொலைபேசி: 011 244 8112/4, 011 479 7200 தொலைநகல்: 011 244 8113
மின்னஞ்சல்: info@unitedmotors.lk இணையதளம்: www.unitedmotors.lk
தொலைபேசி: 011 494 6422/3 தொலைநகல்: 011 269 0282
525, யூனியன் பிளேஸ் (Lipton Circus), கொழும்பு 02.

| | | | |
|---|---|---|---|
| நுகேகொடை | 0777 898 455 | குருநாகல் | 0773 849 561 |
| அநுராதபுரம் | 0773 444 376 | மாத்தறை | 0773 595 269 |
| கண்டி | 0773 608 859 | இரத்தினபுரி | 0777 354 981 |
| நுவரெலியா | 0773 858 096 | யாழ்ப்பாணம் | 0773 325 521 |

யாழ்ப்பாணம் காட்சியறை
கிரிதரன் 0773 325 521

# துடுப்பாட்டம் பலம்பெற்றால் சென்னை கிண்ணம் வெல்லும்



சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சியாளரும், நியூஸிலாந்தின் முன்னாள் தலைவருமான ஸ்ரீபன் பிளெமிங் சென்னை கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டுமானால் முன் வரிசை வீரர்கள் அதிரடியாகச் செயற் படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

சென்னை கிண்ணம் வெல்வது தொடர்பாக பிளெமிங் தெரிவித்ததாவது:–

சென்னையின் பந்து வீச்சும் களத் தடுப்பும் கிண்ணத்ந்தக் கைப்பற்றக் கூடிய விதத்தில் பலமாக உள்ளது. ஆனால் சென்னையின் துடுப்பாட்டமே தற்பொழுது கேள்விக்குறியாகியுள்ளது. மக்கலம் களத்தில் நின்றால் எதிரணி வீரர்களுக்கு பதட்டமாக இருக்கும். இந்தப்பதட்டத்தை உருவாக்க வேண்டிய வீரர்களே தற்பொழுது அணிக்குத்தேவை. இதை விட முதல் பத்துப்பந்துப்பரிமாற்றங்களில் குறைந்த பட்சம் 75 தொடக்கம் 80 ஓட்டங்களைப் பெற்றாலே அதிரடி வீரர்களான ரெய்னாவும், பிளாஸிஸ்ஸும், ஜடேயாவும், நெகியும், டோனியும் பதட்டமில்லாது இன்னிங்ஸை கொண்டு செல்ல முடியும். இதை உணர்ந்து ஆரம்பவீரர்கள் செயற்பட வேண்டும்.

புந்துவீச்சைப் பொறுத்த மட்டில் எதிரணியினரை டோனி குழப்பமடையச் செய்துள்ளார். எந்தப் பந்துவீச்சாளருக்கு எத்தனை பந்துப்பரிமாற்றங்களைக் கொடுப்பார் என்று எவராலும் எதிர்வுகூற முடியாத நிலையை களத்தில் டோனி ஏற்படுத்தி விட்டுள்ளார். இது ஒரு நல்ல திட்டம். எனவே சென்னையின் பந்து வீச்சை வைத்து எதிரணி வியூகம் வகுப்பது அவ்வளவு எளிதானதல்ல. மொத்தத்தில் துடுப்பாட்ட வரிசை பலம்பெற்றால் சென்னை கிண்ணம் வெல்லும்' என்றார்.

(த–ரி)

## காரைநகர் அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சபையின் பொதுக்கூட்டம் 22.03.2015 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த போதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப் பட்டது. இக்கூட்டமானது எதிர்வரும் ஜூன் மாதம் 07ஆம் திகதி (07.06.2015) ஞாயிற்றுக்கிழமை காரைநகர் அபிவிருத்திச்சபைத் தலைவர் தலைமையில் நடைபெறும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றோம். அத்துடன் அனைத்து காரைநகர் அபிவிருத்தி சபை அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்: காரைநகர் அபிவிருத்திச்சபை மாணவர் நூலக மாநாட்டு மண்டபம்.
புதுறோட் சந்தி, காரைநகர்.
நேரம்: முற்பகல் 9.00 மணி
தகவல்: செயலாளர்

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நவீன உணவகங்களுக்கு பின்வரும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமானவர்கள் தேவைப்படுகின்றனர்.

1 உதவி முகாமையாளர்கள்-02
- ஹோட்டல் முகாமைத்துவப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கிலம், சிங்களம் மொழிகளிலும் உரையாடக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- ஏற்கனவே 2 வருடங்களுக்குக் குறையாத ஹோட்டல் முகாமைத்துவ அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயது எல்லை 25-50 வரை

2. சமையல் உதவியாளர்கள்
3. உணவு பரிமாறுபவர்கள் (Waiter)
4. சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் (Cleaning)

(60099) (10.6.3)

தொடர்பு: 077 3478427

## கணினிப்பதிவாளர் தேவை

கொழும்பில் தலைமையகத்தைக் கொண்டுள்ள யாழ்ப்பாணகிளை நிறுவனத்திற்கு கணினிப்பதிவாளர் தேவை.
விண்ணப்ப முடிவு திகதி:30.05.2015

விபர்ப இலக்கம்:5063
பே/உ நயன்
361 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## எழுதுவினைஞர் தேவை

கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள எமது நிறுவனத்திற்கு கட்டாயமாக ஆங்கிலத்தில் கடிதம் வரையவும்,ஆவணங்களைக் கையாளுவதில்(Document controller) 2-3 வருட அனுபவமும் உள்ள பெண் எழுதுவினைஞர் (Accounts clerk) தேவை.

தொடர்பு: Pinnacle development - consultant (Pvt)Ltd
90,Hill street, Dehiwala.
077 774 8802/077 493 2910

## விற்பனைக்கு

MORRIS MINOR (மொறிஸ் மைனர்) கார் (EN-xxxx) மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: (சி/16132)(4.3.7)
077 311 6079, 077 995 1505

## German Language Academy

கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள், ஜேர்மன் தூதரகம் கேட்கும் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு Video, Audio மூலம் எங்கும் இல்லாதவாறு மிகச்சிறந்த முறையில் கற்பிக்கப்படுகின்றது.

ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
077 970 7322
(59844)(9.3.6)

## அருந்ததி

இணைய திருமண சேவை

- உலகளாவிய சேவை வலைப்பின்னல்
- தரகுப்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.
- பதிவுக் கட்டணம் மாத்திரமே.
- நீங்களே இணையத்தில் பதிவு செய்யலாம்

0044 203 475 2590 (இலண்டன்),
0777 164 524 (இலங்கை)

Colombo: 14, 3/1J, 37th Lane, Wellawatte. Tel: 011 40 63 282
Jaffna: 20, K.K.S Road, Kokuvil East, Kokkuvil. Tel: 021 49 27 527

www.arunthathee.com

## மருத்துவ ஆய்வுகூட சேவைகள்

லக்ஸ்மி மருத்துவ ஆய்வுகூடம்
யாழ். வீதி, மானிப்பாய். (கொமர்சல வங்கி முன்பாக)
லக்ஸ்மி மெடிகெயார்
சென்.பீற்றர் தேவாலயம் அருகில், நவாலி.
CLINDIAG - SA-20-2014-Belgium தயாரிப்பு Bio Chemistry Analyzer - மூலம் துல்லியமான ஆய்வுகள். அநுபவமிக்க MLT விரைவான சேவை. மனிதாபிமானமான கட்டணங்கள்.
7.00AM - 7.30 PM
Call: 021 790 4444, 077 44 44 180

## kathir

Civil Engineering & Contractor's
Phone : 0772417103-0215618129
Serman Street, karaveddy North karaveddy.

## சங்கமம்

வயலின் வாத்தியக் கலையகம் நடாத்தும்

### சங்கமம் - 2015

3ம் ஆண்டு நிறைவு விழாவும் இசை நிகழ்வும்

இடம் : கைலாசபதி கலையரங்கு
யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
காலம் : 24.05.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 3.30 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.



– சங்கமம் வயலின் வாத்தியக் கலையக மாணவர்கள்

## LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்

**IELTS**
Duration: 60 hours, Week/ Week end
- ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீன மயப் படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-7.0 Band பெறுவதற்கான உத்தரவாதம்

**IELTS**
life skills A1,B1 (Speaking and Listening)
Duration: 48 hrs, Week/ Week ends
- UK settlement visa இற்கு அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாவிற்கான IELTS A1 வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

**Certificate In SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning program)
Duration: 48hours, Week/ Week ends
- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH**
Duration: 3 Months, Week/ Week ends
Writing -60Hrs Reading -48Hrs, Listening -48Hrs,Speaking -48Hrs
- தொழில்தேடுவோர்,தொழில்புரிவோர், A/Lபரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறை மூலம் விரிவாக கற்பிக்கப்படும்
- 2014 A/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்குசெய்யப்படு

Week days: 25.05.2015 | 01.06.2015
Week ends: 24.05.2015 | 31.05.2015
அனைத்து கற்கைநெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## மரண அறிவித்தல்

### நாகேஸ்வரி தனபாலசிங்கம்



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் 81, மணிக்கூட்டு கோபுரவீதி (பெருமாள் கோயிலடி) யாழ்ப்பாணத்தை வசிப்பிடமா கவும் கொண்ட நாகேஸ்வரி தனபாலசிங்கம் 20.05.2015 சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகரெத்தினம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் நா.தனபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், வைத்திய கலாநிதி லயன் மு.கதிர்காமநாதன் (மன்னார்), காலஞ்சென்ற மு.வரதராஜன் (திரைப்பட தயாரிப்பாளர்- சென்னை), காலஞ்சென்றவர்களான விஜயலட்சுமி, சேனாதிராஜா மற்றும் பாலசுப்பிரமணியம் (கனடா), பிரபல தொழில் அதிபர் கனகேந்திரநாதன் (தென் ஆபிரிக்கா), Dr.லயன் க.மு.பத்மநாதன் (உரிமையாளர் வெஸ்கோ பாமசி, யாழ்ப்பாணம்) ஆகியோரது அன்புச் சகோதரியும், பூலோகேந்திரன் (இந்திரன் சுவீட்ஸ்- கனடா), கஜேந்திரன் (கனடா), வியேந்திரன் (கனடா), சுரேந்திரன் (கனடா), ஜெஜேந்திரன் (கனடா), நாகராசா (ஜேர்மனி), பாலதேவன்- வரதா (ஜேர்மனி), சுதனி (கனடா) ஆகியோரின் பெரியம்மாவும், நாகேஸ்வரி, பத்மாதேவி, கமலாதேவி (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், வைத்திய கலாநிதி ச.சுஜாதா (ஒக்ஸ்போட்-லண்டன்), வைத்தியகலாநிதி க.சுதாகர் (பிராந்திய வைத்திய தொற்று நோயியலாளர்- மன்னார் மாவட்டம்), வ.மதியழகன் (இயக்குநர்- சரஸ்வதி மருத்துவக் கல்லூரி, சரஸ்வதி மருத்துவமனை, திரைப்படத் தயாரிப்பாளர்- புதுடெல்லி, இந்தியா), வ.சுரேஸ் (தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர்- அமெரிக்கா), வைத்தியகலாநிதி பிரஷனா, பிரவீந்த் (தொழில்நுட்ப பொறியியலாளர்), பிறின்சிகா (மாணவி) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு 81, மணிக்கூட்டு கோபுர வீதியில் (பெருமாள் கோயிலடி) உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நா.தனபாலசிங்கம் (கணவர்)
லயன் வைத்தியகலாநிதி மு.கதிர்காமநாதன் (மன்னார்)
லயன் Dr.K.M. பத்மநாதன் (வெஸ்கோ பாமசி- யாழ்ப்பாணம்.)

(60053)(4.3.7)

# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ் 24.05.2015





# நல்லவேளை ஈழத் தமிழ் ஆன்மா சாகவில்லை

# நல்லவேளை ஈழத் தமிழ் ஆன்மா சாகவில்லை

பிரேம்

புங்குடுதீவில் பள்ளி மாணவி ஒருவர் வக்கிர மான கொடூரத்துடன் கொலை செய்யப்பட்டமை இலங்கை முழுவதி லும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் நோக்கங்களைக் கொண்டோர் அத னைத்தத் தமது அரசியல் தேவைகளுக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அதன் ஒரு பகுதியாக இப்போது மக்கள் போராட் டங்களை அடக்குவதற்கான தடையுத்தரவும் பெறப்பட்டுவிட்டது. தெற்கில் உள்ள அரசைப் பாதுகாப்பதற்காக வடக்கு கிழக்கில் மக்கள் தமது சொந்த சமூக நோய்களைக்கூட குண மாக்க ஒன்று திரளக்கூடாது என்று கூறவதில் என்ன நியாயம் இருக்க முடியும்?

நியாய அநியாயங்களைப் பற்றிக் கவலைப் படும் காலத்திலா நாம் வாழ்கிறோம் என்று நீங்கள் கேட்டால் அதுவும் சரிதான். ஏனெ னில் 18 வயது மாண்வி ஒருத்தி வக்கிரமான கொலையாளிகளால் சாகடிக்கப்பட்டாள் என்று அறிந்தபோது ஈழத் தமிழ்ச் சமூகத் தின் எதிர்வினை எப்படி இருந்தது? அந்த உண்மை மிகச் சோகமானது.

புதன்கிழமை பள்ளி மாணவி காணாமற் போனாள். அன்றே அவள் கொல்லப்பட்டு விட்டாள் என்று மருத்துவ சோதனைகள் எதிர்வு கூறுகின்றன. வியாழக்கிழமை காலை யில் அவளது உயிரற்ற உடல் கண்டுபிடிக் கப்படுகிறது. ஊடகங்களில், காணாமற்போன ஒரு மாணவி கொல்லப்பட்டாள் என்று செய்தி வெளியாகிறது. அவள் வன்புணரப்பட்ட பின் னர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சில ஊட கங்கள் மேலதிகமான தகவல்களைத் தரு கின்றன. அன்றைய தினம் முழுவதும் புங் குடுதீவைத் தவிர்த்து குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் இலங்கையின் ஏனைய இடங் களிலும் இந்தச் சம்பவம் ஒரு செய்தியாக மட் டுமே கேட்கப்படுகிறது, பார்க்கப்படுகிறது, வாசிக்கப்படுகிறது. சம்பவத்துடன் தொடர்பு டையவர்கள் என்ற சந்தேகத்தில் ஒரே குடும் பத்தைச் சேர்ந்த மூன்று பேரைப் பொலிஸார் கைது செய்கிறார்கள்.

மறுநாள் வெள்ளிக்கிழமை மாணவி வன் புணரப்பட்ட பின்பே கொல்லப்பட்டாள் என்ற உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் பத்திரிகை களில் முன்னுரிமையுடன் வெளியிடப்படு கின்றது. இதில் பலர் தொடர்புபட்டிருக்கிறார் கள் என்ற சந்தேகமும் வலுக்கிறது. இது ஒரு வக்கிரமான கோரக் கொலை என்று பத்திரி கைகள் உறுதிப்படுத்துகின்றன.

ஈழத் தமிழ்ச் சமூகம், அதிலும் குறிப்பாக வடக் குச் சமூகம் இந்தச் செய்தியை வாசிக்கிறது அல்லது நுகர்கிறது. அதன் பின்னரும் எந்தச் சலனமும் இன்றி தன்னுடைய அன்றாடப் பணிகளில் மூழ்கிப் போகிறது. வன்முறையை ஜீரணிக்கப்பழகிக் கொண்ட ஈழத் தமிழ்ச் சமூகம் மாணவி கொலையையும் அப்படியே ஜீரணித்துக்கொண்டு கடந்துபோகத்தான் எத்தனித்தது. ஏனெனில் இதற்கு முன்னரும் இப்படி நடந்த பல சம்பவங்களை அது அப் படித்தான் கடந்து போயிருக்கிறது. எனவே இது ஒரு பெரிய விடயமாக ஈழத் தமிழ் ஆன் மாவுக்கு உறைக்கவேயில்லை. அது ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தது. ஒரு செய்தியாக, எங்கோ அறியப்பட்ட சம்பவமாக, விசாரணை செய் யப்படவேண்டிய ஒரு குற்றமாக மட்டுமே அதனை விழுங்கிக்கொண்டு முன்னேற எத்தனித்ததே தவிர தனது ஆழ்நிலை தூக் கத்தைக் கலைக்க ஈழத் தமிழ் ஆன்மா தயாராக இருக்கவில்லை.

### தூக்கம் கலைக்கும் முயற்சி

வடக்கில் இருந்த ஒவ்வொருவரையும் இந்தச் சம்பவம், குற்றம் பாதித்திருந்தபோதும் அதனை கூட்டுப் பொறுப்புணர்ச்சியோடு அணுகுவ தற்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை. அச்சம் அதில் பிரதான பாத்திரத்தை வகித்தது. ஒட்டுமொத்த ஈழத் தமிழ் ஆன்மாவையும் தட்டியெழுப்பும் வல்லமையை அந்தச் சம் பவம் ஆரம்பத்தில் கொண்டிருக்கவில்லை. வெள்ளிக்கிழமை பகல் 10.30 மணிவரை யில் இந்த நிலையே தொடர்ந்தது. அதன் பின் னர் விழித்துக்கொண்ட சில ஊடகர்களும் சமூக ஆர்வலர்கள் சிலரும், தூங்கிக் கொண் டிருந்த ஈழத் தமிழ் ஆன்மாவைத் தட்டியெ ழுப்ப முயற்சி செய்தனர். அது சவால் மிக்க பெரும் முயற்சியாக இருந்தது. தமது கூட்டுப் பொறுப்பிலிருந்து நழுவுவதற்கே பலரும் முயன்றார்கள். அதன் மீதிருந்த நியாயத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டிருந்தாலும் வெளிப்படுத்தல் தமக்கு ஆபத்தானதாக முடியும் என்று அஞ்சினார்கள்.




பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசி ரியர் சங்கங்கள், பல்கலைக்கழக ஆசிரியர் கள், மாணவர்கள் அவைரிடமும் முன்வைக் கப்பட்ட கோரிக்கை உடனடியாக ஒரு அடை யாளப் போராட்டத்தை நடத்தவேண்டும் என் பதுதான். பெண்கள் மீதான, மாணவிகள் மீதான வன்முறையை இந்தச் சமூகம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது என்ற செய்தியை உறுதியாகவும் தெளிவாகவும் பதிவு செய்ய வேண்டும் என்பதுதான் அந்தக் கோரிக்கை யின் உள்ளார்த்தம்.

இதன் நியாயத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள் என்றபோதும், பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற மாதிரி முதலில் அதனை ஆரம்பிப்பதற்கான தயக்கத்தைப் போக்குவது சிரமமானதாக இருந்தது. பல் கலைக்கழக மட்டத்தில் இது இலுகுவான தாக, உடனடியான ஏற்றுக்கொள்ளப்பட்ட தாக இருந்தது. ஆனால் பாடசாலை மட்டத்தில் தயக்கம் பெரும் சவால்விட்டது.

### ஓங்கி விழுந்த மிதி

அதனை உடைத்து முதலில் வெளியே வந்த தில் கிளிநொச்சிக்கே முதன்மையான பங் குண்டு.

ஓரிரு மாதங்களுக்கு முன்னர்தான் அந்த மாவட்டத்திலும் ஒரு பள்ளிச் சிறுமியின் இறப் புக்கும் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கும் தொடர்பு இருப்பதாக விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டிருந்தன. ஆனால் ஈழத் தமிழ் ஆன்மா அந்த விடயத்தை வெறும் செய்தியாக, சம்பவமாகவே கடந்து சென்றது. சமூகத்தில் சிறு சலனம்கூட ஏற்படவில்லை. அதற்கு பாட சாலை மாணவர்களை வீதிக்கு இறக்கி ஒரு எதிர்ப்பைப் பதிவு செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி கண்டுகொள்ளப்படவேயில்லை என்று அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் சமூக ஆர்வலர் ஒருவர் கவலை தெரிவித்திருந்தார்.

இந்த நிலைமைகள் ஏற்படுத்தியிருந்த உணர் திறனோ என்னவோ கிளிநொச்சியைச் சேர்ந்த பெண்கள் பாடசாலை ஒன்றின் மாணவி களே முதன் முதலில் வீதிக்கு இறங்கி சமூகத் தின் கூட்டு முகத்தின் மீது ஓங்கி மிதித்தார் கள். அந்த மிதியில்தான் ஈழத் தமிழ் ஆன்மா துயில் கலைந்தது. அதன் பின்னர் யாழ்ப் பாணத்தில் வடமராட்சியிலும் வேறு சில இடங்களிலும் பாடசாலை மாணவர்கள் வீதி களுக்கு இறங்கினார்கள். தமது எதிர்ப்பைப் பதிவு செய்தார்கள். பள்ளிகளுக்கு வாரக் கடைசி நாளான வெள்ளிக் கிழமை என்ப தால் அனைத்துப் பாடசாலைகளையும் ஓர ணிக்குள் கொண்டுவருவதும் ஒன்றிணைப் பதும் முடியாததாக இருந்தது. விரைந்து உட னடியாக அதனைச் செய்யக்கூடிய வளத்தை யும் வாய்ப்பையும் கொண்டிருந்தவை ஆசி ரியர் சங்கங்கள் மற்றும் அதிபர் சங்கங்களே. ஆனால், அவை உடனடியான எதிர்வினை யாற்றலுக்குத் தயாராக இருக்கவில்லை. பின்னாள் வரக்கூடிய ஆபத்து குறித்த பய மும் இதற்கு மக்களிடமிருந்து ஆதரவு கிடைக் குமோ என்ற சந்தேகமும் ஆசிரியர்களை யோசிக்க வைத்திருக்கும் என்பதில் நியாயம் இருக்கவே செய்கிறது. அதனைக் குறை கூற வும் முடியாது. அவர்கள் நிதானிக்க விரும் பினார்கள் என்று தெரிகிறது. அதிபர் சங்கத் தைச் சேர்ந்தவர்களுடன் யாரும் பேசியதா கத் தகவல் இல்லை. அவர்களாகக் கூடி எதிர் வினையாற்றலுக்குத் தயாரானதாகவும் தகவல் இல்லை.

ஆனால், போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் களின் படங்கள் சனிக்கிழமையும் ஞாயிற் றுக்கிழமையும் ஊடகங்களில் வெளிவரத் தொடங்கியபோது, கல்விச் சமூகத்தின் ஆன்மா முதலில் தூக்கம் கலைந்தது. தாங்கள் எங்கே தவறுவிட்டு விட்டோமோ என்று உறுத்தத் தொடங்கியது. தவறைத் தவறு என்று சொல்லச் சில பாடசாலைகள் முன்வந்த போது, நீதியை நிலைநாட்டக் கோரி அவை போராடியபோது தாமும் கூடச் சேர்ந்து கொள்ளாதது குற்றமோ என்று அவை எண்ண ஆரம்பித்தன. ஒருங் கிணைப்புச் சரியாக இருந்திருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது என்ற குற்றச்சாட் டுக்கள் கூடக் கிளப்பப்பட்டன.

அவை வெறும் குற்றச்சாட்டுக்கள் மட்டுமே. சமூகம் தன்னெழுச்சியாகத் தனது கூட்டுப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய நேரத் தில் அறிக்கை விட்டு அணி திரட்டி, போராட வாருங்கள் என அழைப்புவிடுத்து செய்வ தற்கு இது அரசியல் அல்ல. அறப் போராட் டம். தார்மீகக் கோபத்தின் வெளிப்பாடு. அவன் வருவானா இவன் வருவானா என்று பார்த்து பாதமில்லை என்று உறுதியாதன் பின்னர் போராடுவதற்கு இது ஆதாயம் தேடும் போராட்டமும் அல்ல. நீதிக்கான போராட்டம். எதிர்காலத்திற்கான போராட்டம். பாடசாலைச் சமூகத்தின் ஆன்மாவில் ஆழ மாகக் கீறலிட்ட இந்த உறுத்தல், திங்கட் கிழமை மேலதிக மாணவர்களை வீதிகளில் இறக்கியது. அப்போதுகூட எல்லாப் பாடசாலை களும் திரளவில்லை. மே 18ஆம் திகதியான திங்கட்கிழமை போராட்டம் நடத்தினால், அதுவேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்து விடுமோ என்ற அச்சம் பல பாடசாலைகளை அமைதிகொள்ள வைத்தன. யாழ்ப்பாண நக ரத்திலிருந்த பெரிய பாடசாலைகள் பலவும் அப்படித்தான் இருந்தன. ஆனால் இந்தப் பாட சாலைகள்தான் சமூகத்தின் அதி புத்திசாலி மாணவர்களை தன்னகத்தே கொண்டிருப் பதுடன், நாளைக்கு சமூகத்தின் உயர்நிலை மாந்தர்களையும் உற்பத்தி செய்து அனுப்பிக் கொண்டிருக்கின்றன. எனினும் அவை எல் லாவழிகளிலும் தமது பாதுகாப்பை, அச்சுறுத் தலின்மை யை உறுதிப்படுத்திய பின்னர் தான் செவ்வாய்க்கிழமை போராட்டக் களத் திற்கு வந்தன.

### தலைமைத்துவம் எது?

இதற்கிடையில், வெள்ளிக்கிழமை ஏற்படுத் திய அதிர்வு, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடமிருந்து புதன் கிழமைக்கான முடக்க (ஹர்த்தால்) போராட்ட அறிவிப்பாக ஞாயிற்றுக்கிழமை வெளியானது. சமூக அணி திரட்டலுக்கான தலைமைத்துவத்தை அது எடுத்துக் கொண்டது.


வெள்ளிக்கிழமையே யாழ்ப்பாணப் பல்க லைக்கழகத்தின் ஆசிரியர்களும் மாணவர் களும் தமது வளாகத்திற்குள் ஒரு எதிர்ப்புக் குரலைப் பதிவு செய்துவிட்ட பின்னர் அமைதி யாகி விட்டனர். இந்தப் போராட்டத்தை ஒட்டு மொத்த சமூகத்தின் ஆன்மாவைத் தட்டியெழுப் பும் தலைமைத்துவத்தை முன்பொரு தடவை அது எடுத்துக் கொண்டிருந்தபோதும் இந்தத் தடவை அதனைப் பல்கலைக்கழகம் செய்ய வில்லை. வன்முறையை ஜீரணித்துப் பழக் கப்பட்டுவிட்ட போக்கின் பக்க விளைவா கக்கூட அது இருக்கலாம். இருந்தாலும் கல் விச் சமூகத்தைச் சேர்ந்த ஓர் அமைப்பு அந் தத் தலைமைத்துவத்தை வழங்கியமை வரவேற்புக்குரியதுதான்.

செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண வர்த்தகர்கள் திடீரெனக் கடையடைப்பில் இறங்கியதுடன் ஈழத் தமிழ் ஆன்மா முழுமையாகத் துயில் கலைந்து விழித்துக் கொண்டது. எனவே புதன்கிழமை அழைப்பு விடுக்கப்பட்ட முடக் கப் போராட்டத்தில் அது தனது கூட்டுப் பொறுப்பை முழு மனதுடன் - முன்னெப் போதும் இல்லாத வகையில் - நிறைவேற்றி யது. ஆனால், மாலையில் சில கட்டுமீறிய வர்களின் வன்முறை, விழித்தெழுந்த ஈழத் தமிழ் ஆன்மாவை மீண்டும் ஆழ் துயிலுக் குள் கொண்டு செல்வதற்கான முன்னகர்வை ஏற்படுத்தியது. இப்போது பிறப்பிக்கப்பட்டிருக் கக்கூடிய ஒன்றுகூடுவதற்கான தடையுத் தரவுகூட ஈழத் தமிழ் ஆன்மாவை அடக்கும் முயற்சிதான் என்பதில் சந்தேகமில்லை.

நோய் ஏற்படுகிறது என்பதற்காக உடம்பை யாரும் கொன்றுவிடுவதில்லை. அதேபோன்று வன்முறைகள் நடந்தன என்பதற்காக சமூ கத்தின் தார்மீகக் கோப வெளிப்பாட்டின் மீது கட்டுப்பாட்டை விதிப்பது அல்லது அதனை அடக்க நினைப்பதும் ஏற்புடையதல்ல. கட்டு மீறியவர்களையும் வன்முறையில் ஈடுபட்ட வர்களையும் சட்டத்தின் பிடியில் இருத்தி அவர்களைச் சீர்ப்படுத்த வேண்டும். அவர் களுக்காகப் அமைதியாகப் போராட்டம் நடத்துபவர்களும் அதனைச் செய்யக்கூடாது என்பது அடக்குமுறைதான். யாருடைய அர சியல் நலன்களுக்காகவோ துயில் கலைந்த ஈழத் தமிழ் ஆன்மாவை மீண்டும் ஆழ் துயிலிற்குள் கொண்டு சென்று விடப்போகி றோமா என்பதை சமூகத்தின் ஒவ்வொரு அங்கமும் சிந்திக்க வேண்டும். அது நடக் குமா என்பது தெரியவில்லை. இருந்தாலும், துயிலெழுப்ப முடியாத அளவிற்கு ஈழத் தமிழ் ஆன்மா செத்துவிடாமல் இருந்ததே என்பது தான் இப்போதைக்கு ஆறுதலளிக்கும் ஒரே விடயம்.

### ஓரம்போன அரசியல்

இந்தப் போராட்டங்களில் காணப்பட்ட மிகப் பெரிய மற்றொரு சாதகமான அம்சம், அரசி யல்வாதிகள் ஈழத் தமிழ் ஆன்மாவுக்குள் கரைந்துபோனமைதான். போராட்டங்களுக்கு அரசியல் சாயம் பூசி அவற்றின் தலைமைத் துவத்தைக் கைப்பற்றுவதற்கு அவர் முயலா மல் ஒதுங்கியிருந்தார்கள் அல்லது அதற்கு கரைந்துபோயிருந்தார்கள் இருந்தார்கள் என்பதே சமூகத்தின் ஆன்மாவுக்கு உள்ள பலத்தை எடுத்துக்காட்டியது. அரசியல்வாதி களை வழிப்படுத்தும் அபரிமிதமான சக்தியை அது கொண்டிருக்கிறது என்பதும் தெளிவா னது. தூங்கிக் கொண்டிருந்தால் அதனைச் சாதிக்க அந்த ஆன்மாவால் முடியாது. ஆனால் விழித்துக் கொண்டிருக்க அதனை அரசியல் வாதிகள் அனுமதிப்பார்கள் என்றும் சொல்லி விட முடியாது.



# அம்மா நீ மட்டும் போதும்

பெண்ணாய்ப் பிறந்திட
மாதவம் செய்தேனோ?
பாதகம் செய்தேனோ?
பாரதி இன்றிருந்தால்
என்னதான் செல்வாரோ?

பள்ளி செல்ல நினைத்த
வளை
படர்ந்த காட்டினில்
கட்டிவிட்டு
பங்குபோட்டு பாதகம்
செய்தவர்கள்
பாவம் இந்தச் சிறுமி என
ஏன் நினைக்கவில்லை?

அம்மா போயிட்டு
வாரேனென
எந் நம்பிக்கையில் நான்
சொல்வேன்?
பயமாய் இருக்குதம்மா
பள்ளி செல்ல– என்
வழிப் பயணத்திலும்
தடங்கல் வந்திடுமோவென!

பாடசாலை மாணவியாக
வேண்டாமம்மா
பள்ளிப் படிப்பும் வேண்டாமம்மா
பாதுகாப்பு இல்லாத நாட்டினிலே –நீ
மட்டும்
போதுமம்மா எனக்கு!

அரியாலையூர், மிஷாந்தி

விண்ணுலகிலிருந்து
வரைகின்றேன்
விழி நீர் மடலொன்று என் தோழர்
தோழியர்க்காய்
கடவுளிற்கும் தெரியாமல். களவாய்
அனுப்புகின்றேன்
அது உங்களைச் சேர்வதற்காய்

நான் பட்ட நரக வேதனைகள்
புரியாமல்
கண்ணாக வளர்த்த பெற்றோர்க்கு
கண்ணில் மண்தூவி
காதலனைச் சந்திக்க காட்டிற்கு
சென்றவளென்றும்
கலாசாரம் கெட்டவள் என்றும்
அநியாயப் பழி சொல்லும்
நரம்பில்லா நாக்குகளிற்கு கூறுங்கள்
நாளை உங்கள் வீட்டிலும் இந்த
நிலை நேரலாமென்று

மலரமுன்பே கருக்கப்பட்ட
மொட்டானேன்
மனசெல்லாம் வலிக்குதடா என்

தோழியை
உங்கள்
தோள்கள்
சுமக்காது

என் அன்புத்
தோழியரே.
மண்ணுலகை
விட்டு வந்தபோதும் எந்தன் உயிர்
எரியுதடி பட்ட வேதனைகள்
அவமானங்களால் என் நெஞ்சம்
வலிக்குதடி எந்தனது அவலநிலை எந்த
சோதரிக்கும் வேண்டாமடி

தட்டிக் கேட்ட நம்ம(நல்ல)வர்கள்
தமிழ் மண்ணை விட்டுப் போனதனால்
குட்டிச் சுவராகி நம் கலாசாரம் கெட்டுச்
சிதைவதனைக் கண்டீரோ

வடக்கின் கல்லூரிச் சோதரரே
வாழ்விழந்தது உங்கள் சந்தியா - ஆனால்
துகிலுரியப்பட்டது
மொத்த தமிழ் மானம்

# விண்ணுலகிலிருந்து ஒரு விசும்பல்.....



தோழர்களே
கயவர்களின் காமவெறியில்
அணுஅணுவாய் நான் இறந்தபோது
கண்மூடி இருந்தாரா கடவுள் - இன்றேல்
கல்லாகிப் போனாரா எப்போதோ?

வானம் பொழிகிறது வசந்த காலம்
என்கின்ற மக்களிடம்
வசந்த கால மழை அல்ல இது
விண்ணுலகிலிருந்து நான்
விட்ட கண்ணீர் மழையெனக் கூறுங்கள்
வண்ணப் பறவையாய் உங்களுடன்
வாழ்கின்ற காலம் நிறைவுற
முன்பே வாலிபம் கெட்ட
கயவர்களால் - என் வாழ்வு
முடிந்து போனதுதான் ஏனடா

தோளிலே எனை சுமந்த
எந்தன் தோழர்களே
தோளை விட்டு என் உடலை
இறக்கினாலும் - உங்கள்
நெஞ்சைவிட்டு என் நினைவு
அகலாததை நான் அறிவேன்
மனிதாபிமானமற்ற
பிசாசுகளை மண்ணுலகில்
இனியும் அனுமதிக்காதீர்

'இருட்டறை' என்றும் எம்மைக்
காக்காது அந்த
இருட்டறைக்குள் புகுந்து
அதை உங்கள் கட்டுக்குள்
எடுத்தால்தான் இன்னுமொரு

உங்கள் பலத்தை உலகிற்குக் காட்ட
எம் தோழியை கடித்துக் குதறிய
நாய்களை என்ன செய்யப் போகிறீர்கள்
தோழர்களே!

கல்லால் எறிந்து கொல்வதா? கண்ட
துண்டமாய் வெட்டுவதா?
கதறக் கதற ஊசியால் குற்றிக்
கிழித்து அணுஅணுவாய் கொல்வதா?
தண்டனையைத் தீர்மானிப்பவர்களாய்
இருங்கள்
பக்க பலமாய் இருந்து
பாதகர்களை அழியுங்கள்
விடைபெற்றும் விடைபெறாமல் உங்கள்
சந்தியா......

*இனியவள்*

# காமப் பேய்கள்.....!



புலிப் பற்கள் அருகிவிட்டன
புராதன மருந்துகளும் இல்லை!
குக்கல் விக்கல் சிக்கல்- என இன்று
கூடிப்போய்விட்டன.......
தீராப் பிணிகள் பல......... எம் தேசத்தில்!
கொழுந்துவிட்டெரிகிறது................
காமத் தீ ....!
கொடுமை மிக்க அரக்கர்களால்.......
தாய்க்கும் தங்கைக்கும்
அடையாளம் புரியாத .....
போதை மனிதர்களின் பேயாட்டம்
பாதியில் பறிக்கிறது
பாவம் எம் சிறுமிகளை.........!?

*த. மோகன்ராஜ், மடத்துக்கடவை*

குறிப்பு:- 'என்ன பிரயாசித்தம் செய்ய முடியுமெம்மால்' என்ற தலைப்பில் 10ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள கவிதை அருணனால் எழுதப்பட்டது.

# மனித உருவில் அரக்கன்

பாடசாலை செல்லும் செல்லச்
சிறுமி அவளை
உன் காமப் பசிக்கு இரையாக்கி
விட்டாயே!
திட்டமிட்டு செய்தாயோ?
தினம் நீ கண்ட பசிக்கு
சிறுமியை சித்திரவதை
செய்தாயோ?
அடர்ந்த காட்டுக்குள் அவள்
அடுப்புக்கு விறகொடிக்கக்கூட
போனதில்லையே!
நீ-அவளை
பச்சை மர விறகுக்குள்
சுடலையில் வேக விட்டாயே!
சின்னச் சிறுமி அவள்
என்ன கனவு கண்டாளோ?
பெற்ற தாய் பொக்கிஷமாய்
வளர்த்தாளே!
கூடப் பிறந்தவன் குற்றம்
பொறுப்பானோ?
நீ கண்ட பசிக்குள்
கண்ணீர்த் துளிகள் மீதமானதே!
உன்னை என்ன செய்ய?

*சுதர்சினி-திருநாவுக்கரசு,*
*வேலணை*

# சாவொறுப்பு வரட்டும்.....!

பால்வதனம் சுமந்து
பள்ளியிலே நடந்து
பார் புகழும் பேருடனே
பல கலைகள் பயின்ற– உனை
காமுகர்கள் கூடிச் சிதைத்தனரோ....!
ஊர் உலகம் அருகிருந்தும்
யார் துணையுமின்றி – அன்று
பாதகர்கள் வன்கொடுமை–உனை
பாழ்படுத்திச் சென்றதுவோ...!
மானிடராய்ப் பிறந்து
அரக்கர்களாய் இருந்த
நாயினத்தால் – நீ
உதிர்ந்த கதை ஆழ்மனது வலிக்கிறதே...!
போதையிலே மூழ்கி
பாதை வழி மாறி
போக்கிழந்த பேடிகளாய்
ஒன்று கூடியிருந்த நாய்க்குலமே
நீங்கள் தாய் வயிற்றில் தானா
பிறந்தீர்கள்...? ஐயகோ...!
பண்பாடு கலாசாரம்
தன்மானம் எல்லாமும்
எம் இரத்தத்தில் கலந்திருக்க–ஈனர்களே
எவ்வழியால் வந்தீர்கள்
எம் இனத்தைப் பாழ்படுத்த....?
சட்டங்கள் மாறட்டும்
குற்றங்கள் புரிந்த– இந்த
பொல்லாப் பேர்வழிக்கு
சாவொறுப்பு வரட்டும்
நிம்மதியாய் நாடிருக்க– எம்
சந்தியாவின் ஆன்மாவுக்கு
ஒற்றுமையாய் செய்திடுவோம்
சாந்தி... சாந்தி...

*பா.பொன்நிலவன், மீசாலை*



# நிறைந்த பயன் தரும் உயிரிகள்

## (இயற்கையை அறிவோம்)

■ மு.வீரையன்

மண், விண், கடல் என்ற மூவுலகும் மாசாகிவிட்டன. மண்ணையும், விண்ணில் உள்ள காற்றையும் மாசாக்கிய மனிதன் இப்போது விண்கலத்தில் பறந்து சந்திரனையும், செவ்வாய் கிரகத்தையும் மாசாக்குவது எப்படி என்று திட்டமிடுகிறான்! அதற்கு நிறைய அவகாசம் வேண்டும் என்பதால் நீர்மூழ்கிக் கப்பல் வழி சென்று ஆழ் கடலைத் தேடி அங்கு வாழும் அரிய உயிரினங்களை அழிக்க ஆரம்பித்து விட்டான்.

மணல் திட்டுகளில் இருந்து நாம் ஒட்டு மொத்த மணலையும் அள்ளுவது போல் பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து, ஜெர்மனி நாட்டினர் கடல் மண்ணை அள்ளுகிறார்கள். 2ஜி, 3ஜி, 4ஜி, 5ஜி என்று 'ஜி'க்கள் வளர்ச்சிக்கு உதவும் ஒலிவாங்கி மூலப்பொருள் தேடலா? அணுக்கதிர் வீச்சு மூலப் பொருள் தேடலா? ஆழ்கடல் ரகசியங்களை யார் அறிவார்?

மண்ணிலும், விண்ணிலும், ஆழ்கடலிலும் கண்ணுக்குப் புலப்படாத நுண்ணுயிரிகள் கோடி கோடி கோடி என்று ஒன்றுக்குப் பின் எவ்வளவு கோடி பூஜ்ஜியங்களைப் போட்டாலும் நிரப்ப முடியாத நுண்ணுயிர்க் கூட்டமான உயிரியல் உலகம் பசுமையையும், விவசாயத்தையும் காப்பாற்றும் விந்தையை நாம் அறிவது நன்று.

குறிப்பாக, உணவு விவசாயத்துக்கும், உயிரிகளின் செயல்பாட்டுக்கும் உள்ள உறவு விசித்திரமானது. உயிரிகளின் செயல்பாட்டுக்குப் புத்துயிர் வழங்குவதன் மூலமே உலகம் பசியின்றியும், பிணியின்றியும் வாழ முடியும். ஏனெனில், மருத்துவத் துறையிலும் நுண்ணுயிரிகளின் பங்கு ஒப்பற்றது. கோடி கோடியாக லாபத்தை அள்ளித் தரும் துறை உயிரி தொழில்நுட்பம் (பயோ டெக்னோலஜி) என்றால், அதன் மூலதனம் உயிரிகளின் உலகமே.

பக்டீரியா என்றும், வைரஸ் என்றும், ஆல்கே என்றும், ஃபங்கஸ் என்றும், பிளாஸ் மிட் என்றும் அழைக்கப் படுபவை கண்ணுக்குப் புலப்படாத நுண்ணுயிரிகள் என்றாலும், கண் விரித்துப் பார்க்கும் மாபெரும் யானைகளைவிடச் சக்தி மிகுந்தவை. மனிதர்களுக்கு நலன் பயப்பவை.

வேளாண்மை, உணவு, மருத்துவம், சுகாதாரப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் உயிரிகளின் பயன் அதிகம். எல்லாவுற்றையும்விட நமது உயிர்ச் சூழல் மண்டலத்தில் (Ecological Zone) இடம்பெற்று மண்ணை வளப் படுத்துவதுடன், மண்ணை நஞ்சாக்க விடாமல் காப்பாற்றுவதும் நுண்ணுயிரிகளின் செயல்.

'நைட்ரஜன்' – 'கார்பன்' – 'கந்தகம்' போன்ற உலோகங்கள் கொண்ட மண் வேதனச் சுழற்சிக்கும் (Geo Chemical Cycle) கண்ணுக்குப் புலப்படாத உயிரிகளின் உலகமே ஆதாரம். உயிர்களுக்கு ஆதாரமான பஞ்சபூத சக்தி இயக்கமும் இதுவே. உலகத் தொழில் வளர்ச்சியில் முதலி டத்தில் உள்ள உயிரித் தொழில்நுட்ப வர்த்தகத்தில் ஏகபோகம் அமெரிக் காவிடமே உள்ளது. அதன் வளர்ச்சி யுடன் உலக வரலாறைத் தொடர்பு செய்யலாம்.

அமெரிக்காவில் தஞ்சம் புகுந்த யூதர்களே மாபெரும் விஞ்ஞானிகளாகத் திகழ்ந்தனர். காரணம், அவர்கள் முதலில் ஜார் மன்னரால் ரஷ்யாவிலிருந்து விரட்டப்பட்டனர். பின்னர் இரண்டாம் உலகப் போருக்கு முன் ஹிட்லரால் விரட்டப்பட்டனர். பொதுவாகவே ஐரோப்பியர்களுக்கு யூதர்களைப் பிடிக்காது.

இயேசு பிரானை யூதர்கள் வஞ்சனையால் கொன்ற காரணமா? ஆரிய குருதிக்கலப்பு இல்லாத செமிட்டிக் என்ற காரணமா? தெரியவில்லை. யூதர்கள் மிகவும் புத்திமான்களாக இருந் ததும் அடிப்படைக் காரணம். அன்றைய ரஷ்யாவில் உயிரியல் – மண்ணியல் ஆய்வுகளைச் சிறப்புடன் நிகழ்த்தியவர்கள் யூத விஞ்ஞானிகளே. பென்சிலினுக்குப் பின் ஸ்ட்ரெப்டோமைசினை கண்டு பிடித்து நுரையீரலைப் புண்ணாக்கும் காச நோய்க்கு விடை வழங்கிய ஆல்பர்ட் ஷாட்ஸ் (Albert Schaltz) என்ற அமெரிக்க விஞ்ஞானி, ரஷ்யாவிலிருந்து வெளியேற்றப்பட்ட யூதர் ஒருவரின் வாரிசு ஆவார்.

மண்ணிலும், விண்ணிலும், ஆழ்கடலிலும் கண்ணுக்குப் புலப்படாத நுண்ணுயிரிகள் கோடி கோடி கோடி என்று ஒன்றுக்குப் பின் எவ்வளவு கோடி பூஜ்ஜியங்களைப் போட்டாலும் நிரப்ப முடியாத நுண்ணுயிர்க் கூட்டமான உயிரியல் உலகம் பசுமையையும், விவசாயத்தையும் காப்பாற்றும் விந்தையை நாம் அறிவது நன்று.

உண்மையில் ஆல்பர்ட் ஷாட்ஸ் மண்ணை வளப்படுத் தும் பல நுண்ணுயிரிகளைக் கண்டு பிடித்தவர். ஆல்பர்ட் ஷாட் ஸின் தாத்தாவுடன் அமெரிக்கா வில் இயற்கை விவசாயத்தைத் தோற்றுவித்த ஜே.ஐ.ரோடேலின் தந்தையும் ஜார் – ரஸ்புடீனால் ரஷியாவிலிருந்து விரட்டப்பட்டவர். ஷாட்ஸின் ஆய்வுகளை ஜே.ஐ.ரோடேல் நூலாக வெளியிட் டார்.

முதல் உலகப் போர் தொடங்குவதற்கு முன்பே ஐரோப்பிய நாடுகளிலிருந்து விரட்டப்பட்ட யூதர்கள் லட்சக்கணக்கில் அமெரிக்காவில் அடைக்கலம் பெற்றனர். விடயம் என்னவென்றால், யூதர் வெறுப்பு நிகழ்ந்திராவிட்டால் உயிரியல் தொழில்நுட்பத்தில் ரஷ்யாவும், ஜெர்மனியும் முதன்மை பெற்றிருக்கலாம். போர் நடந்ததன் காரணத்தால் அமெரிக்கா அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டது. அதற்குக் காரணம் யூதர்கள்.

தற்போது விவசாயத்தில் ஏராளமாக நுண்ணுயிரிக் கலவைகளின் பயன்பாடு உயர்ந்துவிட்டது. ஒரு பயிர் நோயின்றி வாழ வேர் மண்ணில் 'ஹ்யூ மஸ்' என்று சொல்லப்படும் கரிமம் உயர வேண்டும். வனங்களில் இயற்கையா கவே கரிமங்கள் உருவாகின்றன.

ஒரு மரத்தின் அடியில் நின்றால் குவியல் குவியலாக சருகுகள் பரப்பப் பட்டிருக்கும். அவற்றை விலக்கிவிட்டு மண்ணைக் கையில் எடுத்துப் பாருங்கள். அது மண் போல் கனமாயிருக்காது. எடையில்லா மல் லேசாக இருக்கும். அதுவே இயல்பானகரிமம்.

இந்தக் கரிமத்தை சோதித்துப் பார்த்தால் கோடானு கோடி நுண்ணுயிரிகள் தென் படும். இப்படிப்பட்ட நுண்ணுயிரி களை அடையாளப்படுத்தி செயற்கை முறையில் கல்ச்சர் செய்து குப்பிகளில் அடைத்து லிட்டர் ரூ. 300 முதல் ரூ.600 வரை விற்கப்படுகிறது.

இவ்வாறு கல்ச்சர் செய்வதற்குரிய தாய் நுண்ணுயிரிகளைக் கலந்து மலிவு விலையில் விற்பதும் உண்டு. இதில் உள்ள பிரச்சினைகரிப்பொடிக் கலவையில்நுண்ணுயிரிகளை நீண்ட நாள் சேமிக்க முடியாது. இறந்து விடும். ஈத்தர் போன்ற குளிர்ச்சியான திரவங்களில் காப்பாற்ற லாம்.

எல்லாவிதமான பிராணிகள், பறவைகள் ஆகியவற்றின் கழிவுகளிலும் – தொழுவரத்திலும் உள்ள நைட்ரஜனை நைட்ரேட்டாக பயிருக்கு ஏற்றுவதில் நுண்ணுயிரி பாக்டீரியாக்களின் பணி ஒப்பற்றவை. பாலைத் தயிராக்கும் லாக்டோபேசிலஸ் நுண்ணுயிரிகளும் விளைச்சலுக்கு உதவும். நமது முன்னோர் நல்ல விஞ்ஞானிகளே. அதனால்தான் அவர்கள் மாட்டுச் சாணத்தையும் கோமியத்தையும் விவசாயத்துக்குப் பயன்படுத்தினார்கள். ஏனெனில், அவற்றை சோதனைக் கூடத்தில் பரிசோதித்தபோது அனைத்து நுண்ணுயிரிகளும் லட்சக் கணக்கில் பெருக்கமாவது புலனா யிற்று.

செயற்கையாக கல்ச்சர் செய்யப்படும் நுண்ணுயிர் திரவங்களில் பேரூட்டங்களான நைட்ரஜன், பொஸ்பரஸ், பொட்டாஷ் இருக்காது. நாமே தயாரிக்கும்போது பேரூட்டங்களும் உண்டு.

உயிர்களுக்கு ஆதாரமானவை பஞ்சபூத சக்திகளே என்று வள்ளலார் முன்வைத்துள்ளதை நுட்பமாக ஆராய்ந்தால் – விஞ்ஞான முடிவின்படி மாட்டுச் சாணம் அடங்கிய உரத்தில் பயிர்களின் வளர்ச்சி ஊக்கியாகச் செயல்படும் அனைத்து நுண்ணுயிரிகளும் அடங்கியுள்ளன. எனவே விவசாயத்தில் அதனைப் பயன் படுத்தி நன்மைபெறுவோம்.

# ஆண் பெண் பேச்சு மொழி



கே.என். ராமசந்திரன்,

“ பெரும்பாலான ஆண்களிடம் ஒரு பிரச்சினையைச் சொன்னால், அவர்கள் உடனே அதற்குத் தீர்வுகாண முயல்வார்கள். "நான் குண்டாயிட்டேனா?" என்று மனைவி கேட்டால் உடனே கணவன், மெலிவதற்கான உத்திகளை அடுக்கத் தொடங்கிவிடுகின்றான் அல்லது உடல் பருமனால் ஏற்படும் நோய் உபாதைகளைப் பற்றி உததேசம் செய்யப் புறப்பட்டு விடுகின்றான்.



ரயில் ஓடிக்கொண்டிருந்தது. எனக்கு எதிரேயிருந்த இருக்கையில் கணவனும் மனைவியும் அமர்ந்திருந்தனர். இரண்டு பேருக்கும் வயது நாற்பதுக்குள் இருக்கும். சிற்றுண்டி விற்கும் இளைஞன்கூவிக்கொண்டே வந்தான். தேநீர் அருந்தப் போகிறீர்களா? என்று மனைவி கணவனிடம் கேட்டார். தனக்கு வேண்டாம் என்று தலையசைத்துவிட்டு வாளாவிருந்தார் கணவர்.

உடனே கோபத்துடன் திரும்பி அமர்ந்து கொண்டார் மனைவி. அதைப் பார்த்த கணவர், இவள் எதற்கு முகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டாள் என்று புரியாமல் விழித்தார்.

எனக்குப் புரிந்தது. மனைவி தேநீர் குடிக்க விரும்பினார். எனக்குக் தேநீர் வாங்கிக்கொடுங்கள் என்று நேரடியாகச் சொல்லாமல், இருவரும் தேநீர் குடிப்போம் எனப் பொருள்படும்படியாக, கணவரிடம் கேட்டார். கணவருக்குத் தேவையில்லை என்றாலும், தனக்காக அவரும் சேர்ந்து குடிப்பார் என்று நினைத்திருப்பார். அல்லது உனக்கு வேண்டுமென்றால் குடி என்று கூறி வாங்கித் தந்து பரிவாவது காட்டுவார் என்று எதிர்பார்த்திருக்கக் கூடும். இரண்டும் நடக்கவில்லை. அதனால் ஏமாற்றமும் எரிச்சலும் அடைந்தார். அதனால் வெடுக்கென முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

**ஆணறியாப் பெண் மொழி**

அந்தப் பெண்ணின் மொழியைப் புரிந்துகொள்ளும் திறமை கணவருக்கு இல்லை. மனைவியும், கணவர் தனக்குத்தான் வேண்டாம் என்று சொன்னார், நமக்கும் சேர்த்துச் சொல்லவில்லை என்பதைப் புரிந்துகொள்ளவில்லை. எனக்குத் தேநீர் வேண்டும் என்று அந்தப் பெண் கேட்டிருந்தால் நிச்சயம் கணவர் வாங்கித் தந்திருப்பார்.

ஒரே உரையாடலை ஆணும் பெண்ணும் வெவ்வேறு விதமாக அர்த்தம் செய்துகொள்வதால்தான் குடும்பங்களில் குழப்பம் ஏற்படுகிறது. அத்துடன் ஒரே விடயத்தை அவர்கள் வெவ்வேறு பாணிகளில் சொல்கிறார்கள். அதன் காரணமாக, கணவன் சுயநலவாதி என்று மனைவியும், மனைவி அசட்டுப் பிடிவாதம் பிடிக்கிறாள் எனக் கணவனும் ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக் கொள்கிறார்கள்.

**அமெரிக்க ஆய்வு**

ஆண்களும் பெண்களும் பேசுகிற போது வெவ்வேறு உரையாடல் விதிகளைப் பின்பற்றுகிறார்கள் என்று அமெரிக்க ஆய்வுக்குழு ஒன்று கண்டறிந்துள்ளது. இந்த உரையாடல் வேறுபாட்டை கணவன், மனைவி புரிந்துகொண்டுவிட்டால் குடும்பத் தில் சண்டையே வராது.

ஓர் ஆண் உரையாடுவதற்கு, எதிராளியைவிடத் தான் மேலானவன் என நிறுவுவதும், எதிராளி தன்னைவிட மேலானவன் அல்லன் என நிறுவுவதுமே முதன்மையான காரணங்கள். அவனுடைய பேச்சுகள் அந்த நோக்கிலேயே வெளிப்படும். ஆனால், பெரும்பாலான பெண்கள், எதிராளியுடன் சமத்துவத்தை நிறுவி – பரஸ்பரம் இசைந்த கருத்துகளையும் ஆதரவுகளையும் பரிமாறிக்கொள்கிற விதமாகவே பேசுகிறார்கள்.

கணவனும் மனைவியும் வெவ்வேறு ஊர்களில் பணியாற்ற வேண்டிய நிலை. அப்போது வேண்டப்பட்ட ஒருவர், “எப்படிச் சமாளிக்கிறீர்கள்..? கடும் கஷ்டமாயிருக்குமே?" என்று கேட்டால், பெண் நன்றியுடன் அந்தப் பரிவையும் அனுதாபத்தையும் அங்கீகரித்து ஏற்றுக்கொள்வாள். ஆனால் அதையே ஆணிடம் சொன்னால், "இதில் என்ன கஷ்டம்? இந்தக் காலத்தில் இரண்டு பேரும் சம்பாதித்தால்தான் குடும்பம் நடத்த முடியும். நான் வாரா வாரம் சனி, ஞாயிறுகளில் ஊருக்குச் சென்று விடுகிறேன். அவசர, அவசியத்துக்கு லீவு போட்டுவிட்டு குடும்பத்துக்கு உதவி செய்துவிட்டு வருவேன்" என்பான்.

அவர் சொல்வதெல்லாம் உண்மைதான். எல்லா ஆண்களுமே வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவே விரும்புவார்கள். ஓர் ஆணிடம் போய், நீயும் உன் மனைவியும் பிரிந்திருப்பது கஷ்டமாயில்லையா? என்று யாராவது கேட்டால், அதில் ஓர் உள்ளர்த்தம் இருப்பதாக அவருக்குத் தோன்றுகிறது. நீ திருமணம் செய்து கொண் டதில் அர்த்தமே இல்லை. என்னைப் பார், நானும் என் மனைவியும் ஒரே ஊரில் இருக்கிறோம். நான் உன் னைவிடச் சந்தோஷமாயிருக்கிறேன். ஆகவே, நான் உன்னைவிட மேலானவன்! என்று குத்திக் காட்டுவதாகவே அவன் உணர்வான். அப்படியில்லை, நான்தான் உன்னைவிட மேலானவன் என்று நிறுவமுயற்சி செய்யத் தொடங்குவான்.

**முடிச்சுகளால் இணைந்த உலகம்**

பெண்களோ உலகத்தை ஒரு வலையமைப்பாகவே பார்க்கிறார்கள். வலையிலுள்ள ஒவ்வொரு முடிச்சும் அடுத்துள்ள முடிச்சுகளுடன் இணைந்திருப்பதைப் போலச் சக மனிதர்களும் ஒருவருக்கொருவர் பலவகையான உறவுகளால் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் எல்லோரும் இணக்கமாயிருந்தால்தான் வாழ்க்கை சீரானதாயிருக்கும் என்பதையும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

அவர்களுக்கு உறவுகளும் நட்புகளும் தாங்கல்களும் முக்கியமானவை. உறவுகளின் நெருக்கத்தைப் பராமரிக்கவே பெண்கள் முயல்வார்கள். மகாபாரதத்தில்கூடப் பெண் பாத்திரங்கள் கடைசிவரை ஒருவருக்கொருவர் அனுசரணையாக இருக்கிறார்கள். ஆண்கள்தான் மற்றவருடன் ஒட்டாத சுயேச்சைத் தன்மையை அடைய முயல்கிறார்கள். இந்த வேறுபட்ட அணுகுமுறைகளும் கண்ணோட்டமும் ஒரே சந்தர்ப்ப சூழ்நிலையை ஆணும் பெண்ணும் வெவ்வேறுவிதமாகப் பார்க்க வைக்கின்றன.

ஒரு கணவன் தன் நண்பர்களிடம், எதுக்கும் என் மனைவியின் கருத்தைக் கேட்டு விடுகிறேன் என்று வெளிப்படையாகச் சொல்ல வெட்கப்படுகிறான். ஆனால் மனைவி, அய்யோ! அவரைக் கேட்காமல் ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போட மாட்டேன்! என்று சொல்வதைப் பெருமையாக நினைக்கிறாள்.

**இணக்கம் முக்கியம்**

குடும்பத்தில் நடக்கும் உரையாடலை கோரிக்கை, ஆலோசனை, உத்தரவு என மூன்று வகையாகப் பிரிக்கலாம். வீட்டுக்கு ‘பெயின்ட்’ அடிக்க வேண்டும் என்பது கோரிக்கை. என்ன நிற வண்ணம் பூசலாம், நீல வண்ணம் நல்லாயிருக்குமில்லையா? என்பது ஆலோசனை. நீல வண்ணம்தான் அடிக்க வேண்டும் என்பது உத்தரவு. மூன்றுக்கும் நோக்கம் ஒன்றுதான். ஆனால், சில பெண்கள், கோரிக்கையை உத்தரவாகத் தப்பர்த்தம் கொண்டுவிடுவார்களோ என்று அஞ்சி, அதை ஆலோசனையைப் போல வெளியிடுவார்கள். கணவன் அதைப் புரிந்துகொள்ள மாட்டார். என்ன நிறம் வேண்டும் என்று நேரடியாகச் சொல்லிவிடு என்று கணவர் சிடு சிடுப்பார். நீல வண்ணம்தான் அடிக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருந் தால் கூட அவ்வளவு கோபம் அவருக்கு வந்திருக்காது.

பெரும்பாலான கணவர்கள் இது போன்ற சின்ன விஷயங்களில் மனைவிக்கு விட்டுக் கொடுத்து விடுகிறார்கள். நிறத்தைவிடக் குடும்பத்தின் இணக்கம் அதிக முக்கியம் வாய்ந்தது என்பதே அவர்களுடைய கொள்கை.

பெரும்பாலான ஆண்களிடம் ஒரு பிரச்சினையைச் சொன்னால், அவர்கள் உடனே அதற்குத் தீர்வு காண முயல்வார்கள். "நான் குண்டாயிட்டேனா?" என்று மனைவி கேட்டால் உடனே கணவன், மெலிவதற்கான உத்திகளை அடுக்கத் தொடங்கிவிடுகின்றான் அல்லது உடல் பருமனால் ஏற்படும் நோய் உபாதைகளைப் பற்றி உததேசம் செய்யப் புறப்பட்டு விடுகின்றான்.

இதனால் மனைவிக்குக் கோபம் வருகிறது. எதற்காக மருத்துவரிடம் போக வேண்டும்? இது என்ன வியாதியா? நான் குண்டாயிருந்தால் உங்களுக்குப் பிடிக்காதா? என்று சீறு கிறாள்.

அவளது கேள்வியின் அர்த்தம் உடலை மெலியச் செய்வதைப் பற்றியதல்ல, தன்னுடைய உடல் அழகு குறித்த கணவனின் அபிப்பிராயத்தை அறி வது தான்.

"நீ ஒன்றும் குண்டாக இல்லை. கொஞ்சம் பூசினாற் போல இருக்கிறாய்" என்று அவன் சொல்லியிருக்க வேண்டும். முன்னை விட அழகு கூடியிருக்கிறது என்று கூடச் சேர்த்துக்கொண்டிருக்கலாம். அப்போது மனைவி இன்னும் இணக்க மானவளாக வந்திருப்பாள்.

பெண்களுக்கு மற்றவர்களுடன் நிறையப் பேசப் பிடிக்கும். தன் மனதிலிருப்பதை உரத்த சிந் தனையாகவாவது பக்கத்தில் இருப்பவர்களிடம் அவர்களுக்குச் சொல்லிவிட வேண்டும். ஆனால், பல ஆண்கள், உரையாடல் என்பது உருப்படியான தகவல் பரிமாற்றமாக மட்டுமே இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

மனதில் தோன்றுவதை யெல்லாம் வெளியில் சொல்லிக் கொண்டிருப்பது அவசியமில்லை என்பது அவர்களது கருத்து. அப்படிச் சொல்லிக் கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனம் என்றுகூட அவர்கள் நினைக்கிறார்கள். இது தான் ஆண் – பெண் இருவருக்கும் இடையிலுமான புரிதல் இடைவெளி. இதனை வெற்றிகரமாகக்கடந்தவர்கள் அன்னியோன்னியமான தம்பதிகளாக வலம் வருகிறார்கள்.



# 36 வயதினிலே முழுத் திருப்தியல்ல

திருமணத்துக்குப் பிறகு. தனக்கென்று ஒரு தனிப்பட்ட வாழ்க்கையே இல்லாமல். குடும்ப வட்டத்துக்குள் முடங்கும் ஒரு பெண். ஒரு கால கட்டத்துக்குப் பின் அதே குடும்பத்தினரால் ஒதுக்கப்படும்போது எப்படி மீண்டும் தன் சுயத்தைக் கண்டடைகிறாள் என்பதே 36 வயதினிலே படம். 'ஹவ் ஓல்ட் ஆர் யூ' மலையாளப் படத்தின் தமிழ்ப் பதிப்பு. அதை இயக்கிய ரோஷன் ஆண்ட்ரூஸ் இதையும் இயக்கியிருக்கிறார்.

பணம் சம்பாதிக்க அயர்லாந்துக்குப் போக வேண்டும் என்பது ரகுமானின் கனவு. மனைவி ஜோதிகாவின் 36 வயது அதற்குத் தடையாகிறது. கணவனும் மகளும் இதனால் எரிச்சல் அடைகிறார்கள். விசா கிடைக்கும் நேரத்தில் ரகுமான் ஒரு விபத்தை நிகழ்த்திவிட சிக்கல் ஆரம்பிக்கிறது. தன் மீது வழக்கு வந்துவிடக் கூடாது என்பதால் மனைவியை அதற்குப் பொறுப்பேற்கச் சொல்கிறார். சட்டப்படி அதிலும் சிக்கல் வர. ரகுமானின் எரிச்சல் உச்சத்தை அடைகிறது.

ஜோதிகாவின் மகளுடைய பள்ளிக்கு வரும் இந்தியக் குடியரசுத் தலைவர். அவள் கேட்கும் கேள்வியைக் கண்டு அசந்துபோகிறார். அதை சொல்லிக் கொடுத்தது அவளது அம்மா என்று தெரிந்ததும் அவரைப் பார்க்க வேண்டும் என்கிறார். ஒரே நாளில் ஜோதிகாவின் மதிப்பு கிடுகிடுவென்று உயர்கிறது. வீட்டிலும் அலுவலகத்திலும் இளக்காரமாக நினைத்தவர்கள் வாயைப் பிளக்கிறார்கள். ஆனால். பாதுகாப்புக் கெடுபிடிகளால் திணறும் ஜோதிகா. குடியரசுத் தலைவரைச் சந்தித்ததும் மயக்கம்போட்டு விழ. ஊரே அவரைப் பார்த்துச் சிரிக்கிறது. இந்த நேரத்தில் கணவரும் மகளும் வெளிநாட்டுக்குக் கிளம்பி விடுகின்றனர். வயதான மாமனார். மாமியாருடன் வசிக்கும் ஜோதிகாவைக் கழிவிரக்கம் கவ்வுகிறது.

தனக்கென ஓர் அடையாளமோ. மரியாதையோ இல்லாத வாழ்வில் ஜோதிகாவால் தன் அடையாளத்தை மீட்டுக்கொள்ள முடிந்ததா?

இரண்டு முக்கியமான பிரச்சினைகளை இந்தப் படம் தொடுகிறது. 1. நம் சமூக அமைப்பில் திருமணத்துக்குப் பிறகு பெண்களுக்கு ஏற்படும் அடையாளச் சிக்கல். 2. இயற்கை வேளாண்மை.

இந்த இரண்டையும் பொருத்தமான கதையில் இணைத்து விறுவிறுப்பாகச் சொல்லியிருந்தால் குறிப்பிடத்தகுந்த படங்களில் ஒன்றாகியிருக்கக்கூடும். ஆனால் இந்தப் படம் அப்படியல்ல. இரு பெரும் கருக்களை எடுத்துக்கொண்டபோதும் வழக்கமான வியாபார சினிமாவின் வரையறைகளுக்குள்ளும் நிற்க முயன்றதால் கடும் தள்ளாட்டம் தெரிகின்றது.

பாத்திர வார்ப்புகள், சம்பவங்களில் நாடகத் தொனி, ஜோதிகாவின் மேல் அனுதாபம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அவரது அலுவலக சகாக்கள், கணவன், மகள் என எல்லோரையும் கிட்டத்தட்ட எதிரிகளாகவே காட்டுவது என பல ஓட்டைகள் படம் முழுவதும் விரவிக்கிடக்கின்றன. படம் அத்தனை இயல்பாக இல்லை.

கல்லூரிப் பருவத் தோழி அபிராமியின் மூலம் ஜோதிகாவுக்கு உத்வேகம் கிடைப்பது. பேஸ்புக் மாரத்தான் என்று புதிய அத்தியாயம் தொடங்குவது. காய்கறி விற்பனை மூலம் திருப்பம் வருவது என்று எதை எடுத்தாலும் அதிரடி அவசர திருப்பம்தான். ஜோதிகாவின் உரையைக் கேட்டுவிட்டுச் சட்டசபையில் எல்லா உறுப்பினர்களுக்கும் இயற்கை வேளாண்மை பாடம் எடுப்பதாக அமைச்சர் சொல்வதும் குடியரசுத் தலைவரிடம் இருந்துவரும் இரண்டாவது அழைப்பும் நம்ப வைக்கிற அழுத்தத்துடன் சொல்லப்படவில்லை.


மனதைத் தொடும் சில காட்சிகளும் படத்தில் உள்ளன. தன்னைச் சம்பளம் இல்லாத வேலைக்காரப் பெண்ணாக வெளிநாட்டுக்குக் கூப்பிடுகிறார்கள் என்பதை ஜோதிகா உணரும் இடம் அழுத்தமானது. பெரிய கடையில் வேலை பார்க்கும் மூதாட்டியை அவரது வீட்டுக்குச் சென்று ஜோதிகா சந்திக்கும் இடமும் குறிப்பிடத்தக்கது. பாசத்தை வைத்து தன் குடும்பம் விரிக்கும் வலையில் விழாமல் ஜோதிகா உறுதியாக நின்று சாதிப்பது முக்கியமான தருணம்.

திரைக்கதை நைந்து தொங்கும் நேரங்களில் படத்தைத் தாங்கிப் பிடிப்பது வசனகர்த்தா விஜி. நடுத்தர வயதை நெருங்கும் பெண்களின் நிலையைப் பொட்டில் அறைந்ததுபோல் சொல்லும் வசனங்கள் படத்தின் மதிப்பைக் கூட்டுகின்றன.

சந்தோஷ் நாராயணனின் இசையில் வாடி ராசாத்தி பாடல் திரும்பக் கேட்கத் தூண்டுகிறது.

ஜோதிகாவுக்கு அட்டகாசமான மறுபிரவேசம். படத்தை முழுவதுமாகத் தாங்குகிறார். கணவன் தன்னை இழிவுபடுத்தும்போது அவர் வெளிப்படுத்தும் முக பாவனை இன்றைய பெண்களின் துயரத்தின் அடையாளமாக நம் மனதில் தங்கிவிடுகிறது.

குடும்பத்துக்காகத் தன் அடையாளத்தையும் கனவையும் தொலைத்துவிட்ட பெண்கள். குடும்பச் சுமையில் சிக்கி இயந்திரமயமான வாழ்வை வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். குடும்பத்துக்காகவே பல விடயங்களை இழக்கிறார்கள். அவர்களது உழைப்பை உறிஞ்சிக் கொண்டு போதாமைகளைச் சுட்டிக் காட்டிக் குடும்பமே அவர்களை இழிவுபடுத்துகிறது. இவற்றைப் பொறுத்துக் கொண்டுபோகும் பெண்களின் வலியைச் சொன்னவிதம் சரிதான். ஆனால் அதை இன்னும் யதார்த்தமாகச் சொல்லியிருக்கலாம்.



# பொதுவுடமை 'கவரிங்'

பாலு என்கிற பாலுச்சாமி (ஆர்யா) இந்தியாவில் புரட்சியை ஏற்படுத்த விரும்பும் பொதுவுடைமைப் போராளி. ராணுவத்தினரைத் தாக்கிக் கொல்ல முயன்ற வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவன். சாவுத் தண்டனையை நிறைவேற்ற நியமிக்கப்பட்ட சிறை அதிகாரி மெக்காலே (ஷாம்). அரசுப் பதிவேட்டின்படி தகுதியுள்ள தூக்குத் தண்டனை நிறைவேற்றும் தொழிலாளியான எமலிங்கம் (விஜய் சேதுபதி) மூலம் அதை நிறைவேற்றத் துடிக்கிறார். அதே எமலிங்கம் உதவியுடன் பாலுவைச் சிறையிலிருந்து தப்பிக்கவைக்க முயற்சி எடுக்கிறாள் பாலுவின் கூட்டாளியான குயிலி (கார்த்திகா). குயிலியும் அவளது அணியினரும் தங்கள் முயற்சியில் வென்றார்களா? பாலு சிறையிலிருந்து தப்பித்தாரா அல்லது தூக்கில் தொங்கினாரா? இதுதான் படத்தின் அடிப்படையான கதையோட்டம்.

தூக்குத் தண்டனைக்கு எதிராகக் குரலெழுப்பியிருக்கும் இயக்குநர் எஸ்.பி. ஜனநாதனுக்கும், கதாபாத்திரங்களைக் கச்சிதமாகச் சித்தரித்திருக்கும் ஆர்யா, ஷாம், விஜய் சேதுபதி, கார்த்திகா ஆகியோருக்கும் தாராளமாகவே பாராட்டுத் தெரிவிக்கலாம். தம் மக்களின் விடுதலைக்காகப் போராடும் இளைஞன் பாலு. அரசைப் பொறுத்தவரை அவன் ஒரு தேசத் துரோகி, பயங்கரவாதி. இந்த முரண்பாடு நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.

தொடக்கம் முதல் இறுதிவரை படம் இலகுவாக நகர்கிறது. திரைக்கதை எந்த உராய்வுமின்றி வழுக்கிக்கொண்டு செல்கிறது. சுவாரசியமான சிறு சிறு திருப்பங்கள் படத்தை வேகமாக நகர்த்திச் செல்கின்றன. பாலுவின் சாவுத் தண்டனையை நிறைவேற்ற வேண்டிய எமலிங்கத்தை வைத்தே பாலுவைத் தப்பிக்கவைக்க முயலும் உத்தி சிறப்பானது.

ராஜஸ்தான் பாலைவனத்தில் மக்கள் பசியும் பஞ்சமுமாக வாட, அவர்களுக்காக நிறைய உணவு தானியங்களுடன் வரும் ரயிலைக் கொள்ளையடித்துத் தருகிறார் பாலு. ஆனால் அந்தச் சம்பவங்களில் பின்னணிக் காரணங்கள் தெரிவிக்கப்படாததால் அவை அழுத்தமான பாதிப்பை ஏற்படுத்தத் தவறிவிடுகின்றன. பிரதான பாத்திரத்தின் உணர்வோடு பார்வையாளர்கள் ஒன்றுமளவுக்கு அந்தப் பாத்திரமோ அதன் பின்புலமோ வலுவாகச் சித்தரிக்கப்படவில்லை. தலைமறைவு இயக்கம்போலச் செயல்படும் குயிலி குழுவில் உள்ளவர்கள் போராளிக் குழுவுக்குரிய அழுத்தமான பாத்திரங்களாக வெளிப்படவில்லை.

சாவுத் தண்டனைக்கு எதிராக உலக அளவிலும் இந்திய அளவிலும் பெரிய அளவில் எதிர்ப்புக் குரல்கள் ஒலித்துவரும் வேளையில் இந்தப் படத்தை அதற்கான வெளிப்பாட்டுக் களமாகப் பயன்படுத்திக்கொண்டுள்ளார் இயக்குநர் ஜனநாதன். அதில் எந்த வகையிலும் குறையுமில்லை. ஆனால் ஒரு சினிமாவாக சாவுத் தண்டனைக்கு எதிராக ஏற்படுத்த வேண்டிய அழுத்தத்தைப் படம் ஏற்படுத்தவில்லை. படம் முடிந்து வெளியே வரும்போது சாவுத் தண்டனை பற்றிய யோசனை எழும் அளவுக்கு அப்பிரச்சினை அது அழுத்தமாகப் பேசவில்லை.

பாத்திர வார்ப்பில் ஜனநாதன் சிறப்பாகச் செய்திருக்கிறார். குறிப்பாக, ஷாமின் பாத்திரம். சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் ஒரு மனிதாபிமான அதிகாரியான ஷாம் எங்கேயும் சட்டத்தின் கடமையை தவறுவதில்லை, கண்ணியத்தையும் மீறுவதில்லை. போராளிகளின் குரல் வலுவாக ஒலிக்கும் படத்தில் அதற்கான மாற்றுக் கருத்தை ஷாமின் வழியே ஒலிக்கச் செய்துள்ளது படத்துக்கு ஒரு சமநிலையைத் தருகிறது.

விஜய் சேதுபதியின் நடிப்பு விசேஷமான பாராட்டுக்கு உரியது. தண்டனையை நிறைவேற்றிவிட்டுச் சரிந்து உட்காரும் இடத்தில் அபாரமாக நடித்திருக்கிறார். போராளிக்குரிய தீவிரத் தன்மையை முகத்தில் வெளிப்படுத்தியபடி பைக்கில் ஏறிப் பறக்கும் கார்த்திகா, தமிழ்க் கதாநாயகிகளைப் பற்றிய பொதுப் பிம்பத்தை அனாயாசமாகத் தகர்க்கிறார். குருவி தலையில் பனங்காயை வைத்தது போன்றது அவர் பங்கு. பாரத்தை முடிந்த அளவு தாங்குகிறார்.

பாலு பாத்திரத்தில் ஒரு போராளியாகவே மாறியிருக்கிறார் ஆர்யா. தன் கழுத்தில் கறுப்புத் துணியை மாட்டும்போது அவர் முகத்தில் தென்படும் உணர்வில் சாவின் சுவடு தோன்றி மறைவது மறக்க முடியாதது. பாலுவைத் தூக்கில் தொங்கவிட்டுத்தான் திருமணமே செய்து கொள்ள வேண்டும் என்ற முடிவில் இருக்கும் கடமை தவறாத காவல் அதிகாரியாக ஷாம் கம்பீரமாக நடித்துள்ளார்.

கலை இயக்குநர் செல்வகுமார் சிறைச்சாலையைக் கண்முன் கொண்டுவந்துள்ளார்.

எல்லாம் இருந்தும் புரட்சி, பொதுவுடைமை போன்ற பெரும் அர்த்தம் மிக்க சொற்களை மிக வலுவிழந்த வகையிலேயே படம் வெளிப்படுத்துகிறது. லெனின் பற்றி குயிலி பேசும் இடம், பாலுவைக் காப்பாற்ற அவர் சிறைக்கு வரும் காட்சி போன்றவை நம்பும்படியாக, யதார்த்தமாக இல்லை. மனித வெடிகுண்டாக மறுநாள் காலையில் போவதால் முந்தைய நாள் இரவில் பாலுவுடன் குயிலி காதல் பாடல் பாடுவது தமிழ்ச் சினிமாவின் மாற்றவே முடியாத அபத்தத்தின் உச்சம். இராணுவத்தின் மீதான தாக்குதல் நடவடிக்கை காட்சிப்படுத்தப்பட்டுள்ள விதமும் நகைப்பிற்கிடமானது. அதுபற்றிய அறிவே அற்றவர்களால் செய்யப்பட்டதுபோன்று உள்ளது. 18 ஆண்டுகள் சிறையில் கழிக்கும் ஒருவர் குற்றமற்றவர் என விடுவிக்கப்படுவதில் உள்ள அபத்தத்தின் குரூரத்தைப் பொட்டில் அறைந்தது போல் ஒரு காட்சி சொல்லிவிடுகிறது. இதுபோன்ற காட்சிகள் படத்தில் அழுத்தமாக வெளிப்பட்டுள்ள அளவுக்கு படத்தின் மையக் கருவான தூக்குத் தண்டனை குறித்த கேள்வி அழுத்தம் பெறவில்லை.

தூக்குத் தண்டனைக்கு எதிரான முழக்கத்தையே ஏற்படுத்தியிருக்க வேண்டிய படம் வெறும் முணுமுணுப்பை மட்டுமே ஏற்படுத்தியுள்ளது.



# கவனத்தில் கொள்ளப்படவேண்டிய நாடு திரும்பும் அகதிகளின் நலன்!

ஸூடோ ஸ்வாமி

தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகள் தாயகம் திரும்புவதற்கு வசதியாக இந்திய – இலங்கை கப்பல் சேவையை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. இந்த வேண்டுகோளை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகப் பிரதிநிதி ஹொலம் அப்பாஸ் விடுத்திருக்கிறார்.

கடந்த 13ஆம் திகதி இலங்கையைச் சேர்ந்த 65 அகதிகள் ஐ.நா. தூதரக உதவியுடன் சென்னையிலிருந்து விமானம் மூலமாக இலங்கையை வந்தடைந்தனர். இதையொட்டிக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்.

இந்தியாவிலிருந்து அகதிகள் மீள இலங்கைக்குத் திரும்புவது ஒன்றும் புதிய விடயமல்லாத போதிலும் குறித்த 32 குடும்பங்களைச் சேர்ந்த 65 அகதிகளின் திரும்பல் சற்று விசேடமாகவே நோக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் உட்பட்ட அதிகாரிகளால் வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்நாட்டுப்பிரச்சினை நடந்து கொண்டிருந்த காலத்தில், போர் உக்கிரமடைந்திருந்த பொழுதுகளில் உயிரைக் கையில். பிடித்துக்கொண்டு அகதிகளாக நாட்டை விட்டு வெளியேறியவர்கள், பெருமளவில் இந்தியாவிலேயே அடைக்கலம் தேடினர். அதிலும் பாக்கு நீரிணையை பாதுகாப்பற்ற படகு பயணங்கள் மூலம் கடந்தே அகதிகள் இந்தியாவில் தஞ்சமடைந்தனர். அத்தகைய பயணங்களின்போது இறப்புகள் சம்பவித்த வரலாறுகளும் உண்டு. வெற்றிகரமாக இந்தியாவைச் சென்றடைந்தவர்கள் அங்கே முகாம்களிலும் உறவினர் நண்பர் வீடுகளிலும் தங்கி வாழ்ந்தனர்.

சென்னையிலுள்ள இலங்கையின் உதவி உயர் தூதரை மூலமாகக் கொண்டு மீள்குடியேற்றத்துக்கான அமைச்சு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் படி 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையைச் சேர்ந்த 102,000 அகதிகள் இந்தியாவில் வாழ்கின்றனர். இவர்களுக்காக 110 முகாம்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. அத்தகைய முகாம்களில் 19,916 குடும்பங்களைச் சேர்ந்த 67,436 அகதிகள் வதிகின்றனர். இவர்களை விட 34,757 அகதிகள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் வசிக்கின்றனர். 2011 தொடக்கம் 2014 முடிவு வரையான காலப் பகுதியில் மொத்தமாக 3,941 அகதிகள் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.

மீள்குடியேற்றத்துக்காக இலங்கைக்கு மீளும் அகதிகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், இந்தியாவிலுள்ள அகதிகளில் பெரும்பாலானோர் இலங்கைக்குத் திரும்புவதில் நாட்டம் காட்டவில்லை என தெரிவித்திருந்தார். திரும்பி வரும் அகதிகள் நீண்டநேர விசாரணைக்கு உட்படுத்தப்படுவதே இதற்குக் காரணம் என்றும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்போகிறார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த ஆண்டு மாசி மாதமளவில் ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த சிறி வர்ணசிங்க கருத்துத் தெரிவிக்கையில், இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை மீள இலங்கைக்கு அழைப்பதை எதிர்ப்பதாகக் கூறியிருந்தார். காரணம் ஜே.என்.டீக்ஷித்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 1983 கலவரத்தையடுத்து இந்தியா சென்ற இலங்கையருக்கு இந்திய குடியுரிமையும் இலங்கையிலுள்ள இந்திய மக்களுக்கு இலங்கைக் குடியுரிமையும் வழங்கப்பட்டதாகவும் இந்த நிலையில் இந்தியாவிலுள்ள அகதிகளை இலங்கைக்கு அழைப்பதானது அந்த ஒப்பந்தத்தை முறிவடையச்செய்யும் ஓர் முயற்சியாகும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

**ஐ.நா. உதவி**

இதுவரை மொத்தமாக 7,000இற்கும் மேற்பட்ட அகதிகள் இந்தியாவிலிருந்து இலங்கை திரும்புவதற்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் உதவியுள்ளதாக ஹொலம் அப்பாஸ் குறிப்பிடுகிறார். நாடு திரும்புபவர்களை விமான நிலையத்தில் சந்திக்கும் ஐ.நா. பிரதிநிதிகள் அவர்களுக்கு குடிவரவு பாதுகாப்பு மற்றும் சுங்க விவகாரங்களில் உதவி வருகின்றனர். இதனைவிட வங்கிக் கணக்கு ஒன்றினை ஆரம்பித்து குறித்த தொகை பணத்தை வைப்பிலிட்டு வாழ்க்கையை மீள ஆரம்பிப்பதற்கான மற்றும் சேதமடைந்த வீட்டை திருத்துவது போன்ற நடவடிக்கைகளுக்கான செலவை ஈடு கட்டுவதிலும் ஐ.நா. பங்களிப்புச் செய்து வருகிறது.

நாடு திரும்பிய அகதிகள் விமான நிலையத்திலிருந்து தத்தமது பிரதேசங்களுக்குச் செல்வதற்கான பயணக்கொடுப்பனவும் வழங்கப்படுவதுடன் தாம் மீளக்குடியமரும் பகுதியில் உள்ள ஐ.நா. கள அலுவலகத்தில் பதிவு செய்யுமிடத்து அவர்களின் மீள்குடியமர்வு மற்றும் ஏனைய விடயங்களில் கண்காணிக்கப்பட்டு அக்கறை செலுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாயகம் திரும்பிய அகதிகளிடையே விசேட தேவைஉடையோர் மற்றும் சட்ட ஆலோசனை தேவையுடையோரை இனங் கண்டு வழிப்படுத்துவதிலும ஐ.நா. உதவி வருகிறது.

2009இல் ஆயுதப்போர் ஓய்வுக்கு வந்தபோதும் 2015இல் மைத்திரிபால ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டபோதும் நாட்டைவிட்டு வெளியேறியவர்களை மீளத்திரும்புமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும் அந்த அழைப்புக்கள் அகதிகளின் கவனத்தை அதிகளவில் ஈர்க்கவில்லை. உண்மையில் மீளத்திரும்புகின்ற அகதிகள் மீதான கரிசனை தொடர்பில் இலங்கை அரசு கவனம் செலுத்த வேண்டும். எவ்வளவு விரைவாக அவர்களால் தமது சொந்தப் பிரதேசத்தில் மீள இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடிகிறதோ அவ்வளவுக்கு அவர்களால் மீளத்திரும்பியமை தொடர்பில் திருப்தி கொள்ள முடியும். இதுவே ஒருவகையில் எஞ்சியுள்ள அகதிகளைத் தமது சொந்த நாட்டுக்குத் திரும்பும் ஆர்வத்தை அதிகரிக்கவும் செய்யும்.

ஹொலம் அப்பாஸ் வலியுறுத்தியுள்ள கப்பல் சேவை பற்றிய முன்மொழிவும் இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்தியாவிலுள்ள அகதிகள் தமது வீட்டுத்தளபாடப் பொருள்கள் உள்ளிட்ட சொத்துக்களைச் சொந்த நாட்டுக்குக் கொண்டுவர கப்பல் சேவை உதவுமென்கிறார் இலங்கை அகதிகள் புனர் வாழ்வு நிறுவகத்தை சேர்ந்த எஸ்.சூரியகுமாரி.

இலங்கையை பொறுத்தவரையில் போர் காரணமாக இடம்பெயர்ந்து அகதிகளானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ளனர். தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கான விருப்பம் அவர்களுக்கு இருப்பினும் சட்டியிலிருந்து அடுப்பில் வீழ்வதை ஒத்த நிலவரம் மீள் திரும்பலில் நேரலாம் எனும் அச்சம் அவர்களிடையே உண்டு. காணிகளை விடுவிப்பது மாத்திரமன்றி வாழ்வாதாரத்துக்கான ஏற்பாடுகளும் செய்யப்படுமிடத்து கணிசமானோர் தாயகம் திரும்புவதை நிச்சயப்படுத்த முடியும்.



# என்ன பிராயசித்தம் செய்ய முடியுமெம்மால்?

சித்திர வதைகள் சிலபலதைக்
கேட்டுள்ளேன்..,
மொத்த உடலை
அரைநாளாய் பத்துப்பேர்
மொய்த்துக் கடித்துக் குதற...
அதைத்தாங்கிச்
செத்த கணம்வரை அச் சீவன்
துடிதுடித்து உற்ற வலி நோவை...
எண்ண உடல்கொதித்து
நானுமொரு தணலாய் எரிந்து
கிடக்கின்றேன்!

ஆடொன்றைப் பங்குபோட்ட மாதிரியாய்
இளங்கிளியின்
மேனியைப் பாகம் பாகமாய் உருசித்தழித்த
நாய்கள் கிடைத்தால்...நான் கவிஞன் ஆக
நிற்கேன்!

இத்தனை வெறிப்பேய்கள் சூழ்ந்து பிய்க்க,
கைகால்கள்
கட்டப்பட்டிருக்க, ஓலம் வெளிவராமல்
வாய்க்குள் அடைத்த உடைவதைக்க,
எதிர்ப்பேதும்
காட்ட வழியற்று, கடவுளும் துணைவராது,
ஏழெட்டு மணிநேரம் என்ன பாடுபட்டிருக்கும்
பாவம் அப் பள்ளிமொட்டு?

நினைக்கவே...நான்
நீறுகிறேன்!

ஏதோ விதத்தில்
அறிந்தவள்தான்
எனத் தெரிந்தும்
'நானும் என் பங்கிற்கு
வன்புணர்ந்தேன்' எனச்
சொன்னான்
காமுகன்...
அவன் கிடைத்தால்...
என்செய்வேன் நானறியேன்!

என்னதான் காரணந்தான்
என்றாலும்
இக்கொலைக்கு
எந்தவித மன்னிப்பும் கூடாது...
முரசறைந்தேன்!

குற்றம் புரிந்தவைகள்
'மனித வகைக்குள்' வரா...
ஈவிரக்கம் பாராமல் தண்டிக்க
வேண்டுகிறேன்!

வெளிநாட்டு காசு, விருந்து,
அனுபவிக்க
வெளியூர் இருந்துவந்த
வேகம், திட்டமிட்டு
வழிமறித்த வன்மம், வதைத்து
இரசித்த வக்ரம்,
'யார் தட்டிக் கேட்பார்'
எனும்கொட்டம்,
இத்தகைய
பாதகம் புரியப் பதைக்காத
பேய் உள்ளம்,
பிடிபட்டால் என்னாகும்?
தண்டனை அவமானம்

இவை... புரியாப் பிசாசுமனம்,
மென்பனித் தளிர்மலராள்...
என்றுணரா வெறித்தாகம்,
இறைநீதி அறம் கொல்லும்
என்பதெண்ணாக்
கொலைப்போதை,
மனச்சாட்சி என்றஒரு
பொருள்மறந்த கோரம்,
இத்தனையால்...
என் தங்காய்
பலியானாய் பாவியடி!

நின்ஆத்ம சாந்திக்காய்
என்ன பிராயசித்தம்
செய்யவுள்ளதிச் சமூகம்?
தன்னுயிர்ப்பைத் தொடர்ந்தும்
காக்கவேண்டும் நீதி ஆயம்!

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**24.05.2015 முதல்
30.05.2015 வரை**



## மேடம்

வாகனம் ஓட்டும்போதும்இ எங்கும் எதிலும் மிதமாகவே போவது நல்லது. நட்பு ஸ்தானத்தில் ராகு இருப்பதால் புது நண்பர்களை சரியாப் புரிந்துகொண்ட பிறகு கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்ளவும். குறுந்தகவல் அல்லது மின்னஞ்சலில் வரும் தகவல் அல்லது கேள்விக்கு அவசரப்பட்டு பதில் அனுப்பவேண்டாம். ஆழ்ந்த யோசனை செய்து பிறகு முடிவெடுங்கள். ஏழுக்குரிய சுக்கிரன் ஆட்சியில் இருக்கிறார். காதலுக்காக ஃ காதலிக்காக நிறைய காசு செலவிட வேண்டியிருக்கும். சிநேகிதர்களைவிட சிநேகிதிகள் அதிகம் உதவுவார்கள். எல்லாம் மனம் போல் நடக்கும். நாலில் குரு என்பதால் மாணவர்களுக்குப் பொற்காலம்தான். ஆட்சி பெற்ற சுக்கிரனுடன் சூரியன் இருப்பதால் அரசியல்வாதிகளுக்கு பலன் கை மேல் கிடைக்கும்.



## இடபம்

ராசிநாதன் சுக்கிரன் நன்மைகளை அள்ளிக் கொடுக்கப் போகிறார். மேலிடம் பாராட்டும். செவ்வாயை சந்தோஷப் படுத்த முருகரின் வேலை வணங்கவும். கடல் கடந்து போய் உத்தியோகம் பார்க்க முயற்சிகளை எடுக்கவேண்டும். அலுவலகத்தில் நல்ல பெயர் கிடைக்கும். ராசிநாதன் சுக்கிரன் ஆட்சியால் வீட்டிலும் நல்ல பெயர் கிடைக்கும். அக்கம் பக்கத்தில் புகழாரம் குவியும். அதே சுக்கிரனின் பலம் காரணமாகத் திருமணம் முடிவாகித் திகதி குறிப்பீர்கள். நான்காம் வீட்டுக்கு உரிய சூரியன் ரிஷபத்தில் இருப்பதால் தாயாரால் நிறைய நன்மை நடக்கும். இதே நான்காம் வீட்டோனின் இதே உச்சம் காரணமாக வீடு வாங்குவீர்கள். சொத்து வாங்கும் செலவு வரும்.



## மிதுனம்

ராசிநாதன் புதன் லாப ஸ்தானமாகிய பதினொன்றாம் வீட்டில் அமர்ந்திருப்பதால் சுய பச்சாதாபத்தைச் சுருட்டித் தூக்கிப் போட்டு. வேலையில் தீவிர கவனம் செலுத்துங்க. எட்டுக்குரிய சனிஇ ஆறில். இதனால் திடீர் ஏற்றம் வரும். சூரிய பகவான் பன்னிரண்டாம் வீட்டில் உள்ளார். அதிகாரம் கொடுத்தால் அதை நல்ல விதத்தில் பயன்படுத்திப் புகழ் பெறுவதில் கவனமாக இருங்கள். தன்னிச்சையாக பாராட்டு கிடைக்கும். முன்பைவிட வேகம் பிடித்திருக்கும் குரு பகவான் பாதுகாப்பாக வைத்திருக்கிறார் உங்களை! போட்ட திட்டம் மாறினால் கோபப்படாதீர்கள்.



## கடகம்

உங்களுக்கு இப்போது நல்ல காலம் நடந்துகொண்டுள்ளது. உங்கள் ராசியின் மீதே குரு பகவான் இருக்கிறார். அவர் உச்சமாக இருக்கிறார். நிறையப் பணம் புழங்கும் இடத்தில் வேலை பார்ப்பவர்கள் நேர்மையாக நடந்து கொள்ளவும். பூர்வ புண்ணியமாகிய ஐந்தாம் வீட்டில் சனி பகவான் இருப்பதால் அவர் நியாயவான் என்பதால் உங்கள் பாவ புண்ணியங்கள் துணைக்கு வரும். முற்பகல் நீங்கள் மற்றவர்களுக்குச் செய்வதுதான் பிற்பகல் உங்களுக்கு நடக்கும். அதை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டு வேலையில் இறங்குங்கள்.



## சிம்மம்

யார் யாருக்கெல்லாமோ உதவி செய்யும் நீங்கள் குடும்பத்தையும் கொஞ்சம் கவனிக்க வேண்டும். ராசிநாதன் சூரிய பகவான் லாபத்தைக் குறிக்கும் பதினோராம் வீட்டில் இருக்கிறார். மறைந்திருந்த உங்கள் நல்ல குணங்கள் வெளிப்பட்டுப் பாராட்டை தேடித் தரும். நீங்கள் சிரித்த முகத்துடனே நடமாடினாலும் உள்ளே கடல் பொங்கியபடி இருக்கும். எனவே அமைதியாய் இருக்கவும். குழந்தைகளஜல் சந்தோஷம் கிடைக்கும். புது வேலையில் சேர நினைக்கறீங்களா? நிச்சயமாய் கிடைக்கும்.



## கன்னி

கவலை வேண்டாம். எல்லாவற்றையும் சரிவரச் செய்கிறார் பதினோறாம் வீட்டில் இருக்கும் குரு. கேதுவை அவர் பார்ப்பதும் சிறப்பானதுதான். குருவின் உச்சம் காரணமாகக் குழந்தைகளுக்கு நன்மைகள் ஏற்படும். போட்டியான நிலை மாறி அதிர்ஷ்ட நிலை வரும். நினைத்தும் பார்க்க முடியாத நன்மைகள் அதுவும் பல காலத்திற்குப் பிறகு கிடைக்கும். விரய ஸ்தானமாகிய பன்னிரண்டாம் வீட்டிற்கு உரிய ரிஷபத்தில் பலமாக அமர்ந்திருக்கும் காரணத்தால் சொத்துஇ வாகனம் வாங்குவீர்கள். அலுவலகவாசிகளுக்குப் பத்தாம் வீட்டின் புதன் பலம் பெற்றிருப்பதால் உங்கள் சமயோசிதமும் அறிவாற்றலும் உலகம் அறிந்த ஒன்று. அது உங்களை எப்போதும் காக்கும்.



## துலாம்

ராசிநாதனாகிய சுக்கிரன் தன் வீட்டில் அமர்ந்து ஆட்சியாக இருப்பதால். மகிழ்ச்சியான சந்தர்ப்பம் ஒன்று ஏற்படப்போகிறது. துணையிடம் அன்பு பெருகும். பன்னிரண்டில் ராகுவும் அந்த வீட்டிற்குக் கேதுவுடைய பார்வையும் இருப்பதால் வெளிநாட்டில் இருப்பவர்களுக்கு இரட்டிப்பு நன்மைகள் ஏற்படும். குடும்ப ஸ்தானமாகிய இரண்டாம் வீட்டை குரு பார்ப்பதால் தெய்வம் நின்று கொடுக்கும். நிறைய விஷயங்கள் லாபகரமாய் முடியும். இன்னும் ஏழரைச் சனி முடியவில்லை என்பதாலும் அலுவலகத்தில் பணிச்சுமை கூடும். ராசிநாதன் சுக்கிரனால் உங்கள் வழக்கமான கவர்ச்சி கூடும்.



## விருச்சிகம்

ஆரோக்யத்தில் கவனம் செலுத்த வேண்டும். தீர்க்க வேண்டிய கடன்களை விரைவில் தீர்ப்பது நல்லது. மனதில் தெம்பும், மகிழ்ச்சியும் கூடும். பாராட்டுகளை குவியும். நான்காம் வீட்டுக்கு உரிய சனி இ ராசியிலேயே அமர்ந்திருப்பதால் பெரிய நன்மை உண்டு. வீடு வாகனங்கள் வாங்குவார்கள். ராசிக்கு குரு பார்வை இருப்பதால் நிறையத் தங்கம் சேரும் . சகோதரர்களிடம் மனம் ஒருமித்து நடக்கவும். ஒன்பதாம் வீட்டில் குரு உச்சம். இப்போதைக்கு வேலை மாற வேண்டாம். மாணவர்கள் நான்காம் வீட்டுக்கு உரியோன் சனி என்பதால் அதிக முயற்சி எடுக்க வேண்டும்.



## தனுசு

எட்டாம் வீட்டில் மறைந்திருந்தாலும். இரண்டாம் வீட்டைப் பார்ப்பதால் இந்த வாரம் முழுவதும் விசேஷங்களில் கலந்துகொள்வீர்கள். குடும்ப ஸ்தானமாகிய இரண்டாம் வீட்டை குரு பார்ப்பதால் திருமணம் ஆகாதவர்களுக்குப் வெற்றிலை பாக்கு மாற்றவும் திருமணம் ஆனவர்களுக்கு வளைகாப்புக்கு திகதி குறிக்கவும் நேரம் வரும். பேச்சில் கவனம் முக்கியம். இரண்டாம் வீட்டுக்கு உரிய சனி பன்னிரண்டில். ஆனால், சரியாகத் திட்டமிட்டுப் பேசினால் நன்மை கிடைக்கும். அந்த இரண்டாம் வீட்டை குரு பார்ப்பதால் ஆறாம் வீட்டில் சுக்கிரன் இருப்பதால் கேட்ட கடன் தொகை கிடைக்கும்.



## மகரம்

அற்புதமாக பெயர் கிடைக்கும். அலுவலகம் அக்கம் பக்கம் நண்பர்கள் வட்டம் உறவினர் குழாம் என்று எல்லோரிடமும் பாராட்டுப் பெறுவீர்கள். சம்பள உயர்வு நாடி வரும். வருமானம் வெளிநாட்டுப் பணமாகவும் இருக்கும். எட்டில் ராகு - உடல் நலத்தைக் குலைக்கும் பழக்கங்கள் வேண்டாம். அதிக வருமானம் வரும். ஐந்தாம் வீட்டில் சுக்கிரன் ஆட்சியால் குழந்தைகளின் செயல்கள் பெருமிதம் அளிக்கும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். கோயில்கள் சென்று பழைய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். திருமணம். குழந்தைப் பேறுக்காகக் காத்திருந்தவர்களின் குடும்பங்களில் குதூகலம்தான்.



## கும்பம்

வாகனத்தை மிகவும் கவனமாகச் செலுத்தவும். நல்ல விஷயத்துக்கு நிறைய செலவு செய்வீர்கள். நல்ல குணங்களெல்லாம் தலை தூக்கி, நல்ல பெயரைத் தரும். எல்லோரும் மதிப்பார்கள். பாராட்டுவார்கள். ராசிநாதன் சனி. செவ்வாய் வீட்டில் அமர்ந்திருப்பதால் சிறு சிறு பயங்கள் தோன்றும். குடும்ப ஸ்தானமாகிய இரண்டாம் வீட்டை குரு பார்ப்பதாலும் அது அவரின் வீடாகவே இருப்பதாலும் வீட்டில் குதூகலம் ததும்பும். புது வேலை ஏற்பதற்காக வேறு ஊருக்குச் செல்ல வேண்டியிருக்கும். பலகாலம் கற்பனையில் கட்டியிருந்த கோட்டைகள் நிஜ வடிவம் எடுக்கும்.



## மீனம்

நிறையப் பணம் வரும்; அடுத்தடுத்து நல்ல செய்தியும் உண்டு. இந்த வீட்டை ராகு பார்ப்பதால் வெளிநாடு வெளியூர் போவீர்கள். சிலருக்கு வேலை கிடைக்கும். சிலருக்கு மாலை கிடைக்கும். நாலாம் வீட்டுக்கு உரிய புதன் இரண்டாம் வீட்டில் அமர்ந்திருப்பதால் தாயார் உடல்நலம் முற்றிலும் தேறிவிடும். யாரையும் குறைச்சலாய் மதிப்பிட வேண்டாம். ராகு பார்வையால் வெளிநாட்டுப் பயணம் அலுவலக ரீதியாகப் பெரிய அளவில் வெற்றி தரும். ஐந்தாம் வீட்டில் குரு அமர்ந்திருப்பதால் குழந்தைகளின் வாழ்வில் படிப்படியான நன்மைகளும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

# நல்லது செய்யும் நகைச்சுவை

ரம்யன்



இடுக்கன் வருங்கால் நகுக. மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறிவரும் இயற்கை நியதிகள்–இரவு போனால் நிச்சயம் பகல் வரவே செய்யும், பகல் முடிந்தால் இரவுதான். இதனை உணர்ந்தவர்கள் இன்பமானால் என்ன துன்பமானால் என்ன இரண்டையும் ஒரே விதமாகவே ஏற்றுக் கொள்கிறார்கள். அதற்கெல்லாம் மனதில் பக்குவம் வேண்டும். இன்பம் வரும் போது அதனை அளவு மீறி கொண்டாடாமலும் துன்பம் வரும் போது அது அப்படியே இருந்துவிடப் போவதில்லை. ஒரு நாள் மாற்றம் வரவே செய்யும் என்றும் ஏற்றுக்கொள் கிறார்கள். மனிதனுக்கு இன்ப துன்பங்களை சமாளித்துக் கொள்வதற்கு இயற்கை சில வழிகளை வைத்திருக்கிறது. அதில் ஒன்றுதான் மறதி. ஒருவனுக்கு வாழ்க்கையில் ஒரு சமயத்தில் சொல்லொணாத துன்பங்கள் வரலாம். ஆனால் அவை கால ஓட்டத்தில் மறைந்துவிடும் – மறக்கப்பட்டுவிடும். அதேபோன்றுதான் இன்பகரமான நிகழ்வுகளும்.

துன்பத்தை மறக்கவும் அதிலிருந்து விடுபடவும் இன்னொரு மார்க்கமும் இருக்கிறது. அதுதான் நகைச்சுவை. அதைத்தான் வள்ளுவப் பெருமானும் "இடுக்கன் வருங்கால் நகுக" என்று கூறினார். துன்பம் வரும்போது அதனை புன்முறுவலோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அது அப்படியே நீடிக்கப் போவதில்லை. விரைவாகவோ காலம் சென்றோ அது மறைத்துவிடத்தான் போகிறது.

துன்பம் நேர்கையில் யாழ்.எடுத்து நீ இன்பம் சேர்க்கமாட்டாயா என்று பாரதிதாசனார் பாடுவார். இனிமையான இசையும் கூட துன்பத்தைப் போக்கிவிடும் என்பதாகும். பலநோய்களுக்கு சிரிப்பு ஒரு மருந்தாகும் என்று கூட கூறப்படுகிறது.

நாம் இன்று மேதைகளாகவும் அறிஞர்களாகவும் போற்றுகின்ற அனேகர் தம் வாழ்க்கை நிகழ்வுகளையே நகைச்சுவையாக நடத்தி மகிழ்ந்திருக் கிறார்கள்.

பெரியார் இராமசாமி நாயக்கர் ஒரு முறைதாம் கட்டியெழுப்பியுள்ள கல்லூரி திறப்புவிழாவுக்கு பெரிய பிரமுகர்களுக்கெல்லாம் அழைப்பு விடுத்திருந்தார். கல்லூரியின் வளர்ச்சிக்கென வந்தவர்கள் பலரும் நன்கொடைகள் வழங்கினார்கள். விழாவுக்கு வந்திருந்த தொழில் அதிபர் நாயுடு, பெரியாரைக் கிண்டல் செய்வதாக ஓர் அணா நன்கொடை எழுதியிருந்தார்.

எல்லோரும் பெரும் பெரும் தொகைகளை எழுதி வழங்கியிருக்கும் போது நாயுடு அவர்கள் ஓர் அணா வழங்கியிருப்பதை பார்த்த பெரியார் கோபமடையவில்லை. அவர் பேசுகையில் கூறினார். விழாவுக்கு வந்த எல்லோரும் பெரும் தொகைகளை வழங்கியிருக்கிறார்கள். எல்லோருக்கும் நன்றி. என்னை கேலி செய்வதற்காக நாயுடு ஐயா! மட்டும் ஓர் அணா போட்டிருக்கிறார். ஐயா! ஒன்றை மறந்து விட்டார்கள். ஓர் அணா போட்டதாலே ஐயாவுக்கு தான் ஓர் அணா நட்டம் அந்த வகையில் எனக்கு இலாபம்தான் என்றார். சபையில் இருந்து அனை வரும் இந்தச் நகைச் சுவையை சுவைத்து மகிழ்ந்தார்கள்.

நகைச்சுவை மன்னர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனும், ரி.ஏ.மதுரமும் ஒரு பயணம் மேற்கொண்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். கார் சாரதி காரை மிக வேகமாக செலுத்திக்கொண்டு போனார். ஓர் இடத்தில் காரை நிறுத்தும்படி சொன்னார், கலைவாணர். சாரதி அதிர்ச்சியடைந்து காரை நிறுத்தினார். காரிலிருந்து வெற்றிலைப் பெட்டியுடன் இறங்கிய கலைவாணர் மதுரத்தையும் இறங்கச் சொல்லி வீதிக்கு அருகில் வசதியான ஓர் இடத்தில் அமர்ந்து வெற்றிலையை மடித்தபடி, சாரதி எங்களுக்கு அப்படி ஒன்றும் அவரசமில்லை. உமக்கு அவசரமாய் இருந்தால் போய் அலுவலை முடித்துக்கொண்டு வாரும். நாங்கள் இந்த இடத்தில் ஆசுவாசமாக இருந்துவிட்டு வருகிறோம் – என்றார். சாரதிக்கு என்னவோ போலாகி விட்டது. வழிந்து கொண்டு நின்றார். இதில் கலைவாணரின் நகைச்சுவை மட்டுமல்லாது சாரதிக்கு ஒரு படிப்பினையும் கிடைத்தது.

பேர்னார்ட்ஷா ஒருமுறை ஒரு குறுகிய பாதை வழியாக நடந்து போய்க்கொண்டிருந்தார். எதிர்ப் புறத்தில் அவரை பிடிக்காத ஒருவர் வந்துகொண்டிருந்தார். இருவரும் நெருங்கி வந்தபோது எதிரில் வந்தவர் சடுதியாக பாதையின் நடுவில் நின்றுகொண்டு அயோக்கியன்களுக்கு வழிவிடும் பழக்கம் எனக்கில்லை என்று கடுப்பாகக் கூறினார். ஷா சடுதியாக விலகி , அவருக்கு வழிவிட்டபடி எனக்கு அந்த பழக்கம் உண்டு என்று கூறிக் கொண்டு தன் வழியே போனார். ஷாவின் விகடமான பதிலும் எதிரியை அவர் மொழியாலேயே சாடிய விதமும் பின்னர் தான் எதிரில் வந்தவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆசைபோட ஒரு விடயம்



நாடகங்களிலும் திரைப்படங்களி லும் கூட நகைச்சுவைக் கென்று ஒரு பகுதியை ஒதுக்குகிறார்கள். படத்தின் கதைப் போக்குக்கேற்ப நகைச்சுவையை புகுத்துகிறார்கள். அவ்வாறு நகைச்சுவை பாத்திரங்களுக் கென்றே நடிகர்களும் உண்டு.

இப்பொழுது மேடைப் பேச்சுக்களிலும் தனியான நகைச்சுவையாக பேசும் கலைஞர்கள் பெருகிவருகிறார்கள்.

அண்மையில் நகைச்சுவை பேச்சாளர் ஒருவர் பின்வரும் கதையைச் சொன்னார். மாணவர்களுக்கு ஏதோ வேலை கொடுத்து விட்டு வகுப்பாசிரியர் தனது குறிப்பு புத்தகத்தில் முக்கியமான ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். இரண்டு மாணவர்கள் பின் வாங்கிலிருந்து சத்தமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அமைதியாக கொடுத்த வேலையை செய்யும்படி கூறி விட்டு மீண்டும் தன் வேலையில் இறங்கினார் ஆசிரியர். அந்த இரண்டு பையன்களும் மீண்டும் பெரிதாக குரல் எழுப்பி வாதிட்டார்கள். ஆசிரியருக்கு கோபம் வந்துவிட்டது. என்னடா நான் ஒருத்தன் இங்கே இருப்பது தெரியவில்லையா உங்களுக்கு, என்று கோபமாகக் கேட்டார். பையன்கள் பலமாக சிரித்துவிட்டார்கள். ஆசிரியருக்கு கோபம் மீறிவிட்டது. எழும்புங்களடா இரண்டுபேரும் எதற்காக சிரித்தீர்கள். சொல்லாவிட்டால் அதிபரிடம் போகவேண்டியிருக்கும் என்று கத்தினார். ஒருவன் தயக்கத்துடன் கூறினான் இவன் என் அப்பாவை பற்றி மோசமாகப் பேசினான்–என்றான் அதற்கு ஏண்டா சிரித்தீர்கள்– ஆசிரியர்.

துன்பத்தை மறக்கவும் அதிலிருந்து விடுபடவும் இன்னொரு மார்க்கமும் இருக்கிறது. அதுதான் நகைச்சுவை. அதைத்தான் வள்ளுவப் பெருமானும் "இடுக்கன் வருங்கால் நகுக" என்று கூறினார். துன்பம் வரும்போது அதனை புன்முறுவலோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதுதான் சேர் எங்கள் அப்பாவை இவன் திருடர், பொய்க்காரர் என்று திட்டினான். அதற்குநான் உங்கள் அப்பா தானடா திருடர், கள்ளர்,முடிச்ச விழ்க்கி...,மொள்ள மாரி....என்று பேசினேன். அந்த நேரத்தில்தான் நீங்கள் நான் ஒருத்தன் இருக்கிறேன் தெரியவில்லையா என்று கேட்டீர்கள்–என்றான். முழு வகுப்பறையும் கொல்லென்று சிரித்தது. ஆசிரியரின் முகத்தில் அசடு வழியக் கேட்டக வேண்டுமா?

தமிழ்நாட்டில் தொலைக்காட்சிகளில் மட்டுமன்றி மேடைப் பேச்சுகளிலும் மதுரை முத்து என்பவர் நகைச்சுவையை மட்டுமே மையமாக வைத்து பேசிக் கலக்கி வருகிறார். அவர் அண்மையில் நிகழ்த்திய நகைச்சுவை சொற்பொழிவில் பின்வரும் ஒன்றை குறிப்பிட்டார்.

இந்தக் காலத்தில் பல்லில்லாதவர்களைப் பார்க்கலாம். ஆனால் பாக்கெற்றில் செல் இல்லாதவர்களைப் பார்க்க முடியாது என்று ஆரம்பித்த அவர் இந்தக் காலத்து சிறுவர்கள் மிகவும் சூட்டிகையாக இருக்கிறார்கள். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு வீடுகளில் பெரியவர்களால் பதில் சொல்ல முடிவதில்லை.. அதனால்தான் அனேக பெற்றோர் சின்ன வயசிலேயே சிறுவர்களை நேசரிக்கு அனுப்பி விடுகிறார்கள் போலிருக்கிறது.

இப்படிதான் ஒருவர் தன் 5 வயதுடைய மகனை பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு எங்கோ போய்க்கொண்டிருந்தார். சிறுவன் தகப்பனிடம் பலகேள்விகளைக் கேட்டு குடைந்து கொண்டிருந்தான். கடைசியில் பஸ்ஸில் சாரதிக்குப் பக்கத்தில் மாட்டப்பட்டிருக்கும் திருவள்ளுவர் படத்தைப் பார்த்துவிட்டு அது யாருடைய படம் என்று கேட்டான். பையனை சமாளிக்க தகப்பனும் அதுவா, அதுதான் இந்த பஸ்ஸின் ஓனர்– சொந்தக்காரர்" என்று சொல்லி வைத்தார். அவன் விடுவானா அது ஏன் கையில் பேனையை வைத்து எழுதிக்கொண்டிருக்கிறார் என்று கேட்டான். தகப்பனும் பையனை சமாளிக்க இந்த பஸ்ஸில் எராளம் பேர் பயணம் செய்கிறார்கள் அல்லாவா அதனால் வரும் பணத்தை கணக்குப்போட்டு பார்க்கிறார். எழுதி வைக்கிறார்– என்றார். பிறகு ஏன் தலையில் குடுமிகட்டியிருக்கிறார் என்றான் பையன். அதுவா வருமானம் நிறைய வருவதால் தலையை வாரிகட்டுவதற்குக் கூட அவருக்கு நேரமில்லை –என்றார். அப்ப சரி அது ஏன் சட்டை போடாமல் இருக்கிறார் என்று அடுத்த கேள்வியைக் கேட்டு வைத்தான் பையன். தகப்பனும் அடுத்த பொய்யை அவிழ்த்துவிட்டார்– இதோ பார் பஸ்ஸில் எவ்வளவு நெரிசல் அதோடு இங்கே ஏ.சியும் இல்லை அதனால்தான் வேர்க்காமல் இருக்க சட்டை போடமால் இருந்து வேலை செய்கிறார்.

அடுத்த கேள்வியைக் கேட்பதற்கு முன் தரிப்பிடம் வந்துவிட்டதால் இருவரும் பஸ்ஸை விட்டு இறங்கினார்கள்.

# பெண் நிலைவாதமும் மகளிர் நிலைப்பாடும்

ரிஸ்கா நவாஸ்
விசேட கல்வித்துறை இரண்டாம் வருடம்
கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி

ஒரு பெண்ணின் மூளைக்கு கரண்டியின் கைப்பிடிக்கு அப்பாலுள்ள எதுவும் எட்டாது என்று, அன்று நாம் சிந்தித்து வாழ்ந்த காலத்தில் நாட்டுக்கு நாடு சமூகத்துக்கு சமூகம் வெவ்வேறு பரிமாணங்களை உள்ளடக்கியதாக பெண்களின் வாழ்க்கை முறைகள் அமைந்து காணப்பட்டது. பெண்கள் பரிதாபகரமான துயர்தோய்ந்த நிலையில் வாழ்க்கை நடத்தினர். பெண்களுக்கு சமூகத்தில் எந்தவித உரிமையும் இல்லை. உயர் கல்வி இல்லை. சிறு வயதுத் திருமணம், விதவையர்க்கு மறுமணம் இல்லை. போன்ற அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் பெண்கள் பெரிதும் பாதிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். ஆண்களைப் போன்ற சுதந்திரம் இல்லாதவர்களாகவும், ஆண்களுக்கு கீழ்ப்பட்டவர்களாகவும் நமது சமூகத்தில் பெண் நோக்கப்பட்டாள். வளர்ச்சியடைந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் போலல்லாது எமது நாடு உட்பட ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் கூட பெண்நிலைவாதக்கருத்தும் பரிமாணமும் வேரூண்றி நிற்பதை நாம் காணலாம்.

முற்காலத்தைப் போலல்லாது இன்றைய காலகட்டத்தில் நவீன தொழில்நுட்ப முறைகளும், விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் இன்று பெண்களை உழைத்து வாழும் சுதந்திர புத்தி ஜீவிகளாக மாற்றியது மட்டுமல்லாது பல துறை களிலும் முன்பிருந்ததை விட முன் னேற்றம் அடைந்தும் காணப்படுகின் றனர். இத்தகைய நிலைமையை நாம் மகளிர் நிலைப்பாடு என அறியப்படுத்தலாம்.

பெண்கள் தங்கள் கலாசார, சூழல் அவர்களை மதவாதம், தேசிய வாதம், குலத்தலைமைத்துவம், ஆணின் ஆட்சி என்பவற்றால் தான் வாழும் சமுதாயத்துக்குள்ளே தனது தலைவிதியை நிர்ணயித்துக் கொள்ள வேண்டியுள்ளது. அவர்கள் தமது வாழ்வை தமது கணவன்களோடும், குழந்தைகளோடும் பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. அவர்களிடமிருந்து விலகி வாழ்வது அவளால் முடியாத காரியமாய் இருக்கின்றது. இவ்வாறு இணங்கி வாழ்வதைப் புறக்கணிப்பதும் பெண் விடுதலையை அல்லது தங்களை பெண்கள் விடுதலைப் போராளிகள் என்ற நிலைப்பாட்டுக்கு உறுதிப்படுத்தவும் முடியாது. இந்தச் செயற்பாடு பயனளிக்கவும் மாட்டாது. குடும்பத்தில் ஆணும் பெண்ணும் சமமானபங்களிப்பை செலுத்த வேண்டும் என்ற கருத்தே இன்றைய நிலைப்பாட்டில் மேற்கொள்ள வேண்டிய கடப்பாடாகும். இந்தக் கருத்தை நிலைப்படுத்தி வீட்டில் பெண் வகிக்கும் பங்கை குறைவாகக் கணிப்பது அர்த்தமற்றதாகி விடும்.

சமூகப் பொருளியல் வாதியான கால் மாக்ஸின் உற்ற நண்பனான ஏங்கல்ஸ் பெண்ணினத்தின் அன்றைய நிலைமையை எடுத்துரைக்கும் போது சமூக உற்பத்தியில் இருந்து வெளியேற்றப்பட்ட பெண் தனியே வீட்டுக்குள் அடங்கினவளாய், ஆண்களுக்கு இன்பம் தரும் போதைப் பொருளாகவும், பிள்ளை பெறும் இயந்திரமாகவும் மாறிவிட்டாள். பெண்ணினத்தின் உரிமை புறக்கணிக்கப்பட்டது பெண் சமூக வரலாற்றில் பெற்ற மாபெரும் தோல்வியாகும். அதே போலவே இன்றைய சமூக பொருளாதார கண் கொண்டு நோக்கும் போது வளர்முக நாடுகளில் கெடிய வறுமை, பிரதிபலனற்ற வறுமை, கடும் குடும்பச்சுமைகள், குறைவான ஆதரவு இவையெல்லாம் பெண்களின் யதார்த்தங்களாகும். அது மட்டுமல்லாது கூடுதலான குழந்தைகள், குறைந்த தேர்ச்சிகள் அவர்களது பெறுமதிக்குக் குறைந்த அங்கீகாரம் என்பனவெல்லாம் பெண் மக்களின் வாழ்வை சீரழித்து வருகின்றன. இந்தச் சீரழிவானது அவர்களது குடும்பம், சமூகம், தேசங்களிலும் கூட வியாபிக்கின்றது. இந்தப் பிணைப்பிலிருந்து விடுபடுவது முழு மனித சமுதாயத்தின் பெண்களின் அபிவிருத்திக்கு வழிகோரும்.

இந்த வேளையில் பெண்களின் விழிப்புனர்வுகளைத் தூண்டும் பல செயற்திட்டங்கள் எமது இலங்கை தேசத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுஉத்தியோக பூர்வ பெண்கள் பணியகமும், மகளிர் விவகார அமைச்சும் தாபிக்கப்பட்டுள் ளது. இவ்வாறான நடவடிக்கை கார ணமாக ஆண்– பெண் சமத் துவம் பேணப்படுகிறது. ஆரச துறை தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதில் பெண்களுக்கு எதிரான தடை நீக்கப் பட்டது. சுதந்திர வர்த்தக நிலையத்திலும், தொழில் நுட்ப நிலையங்களிலும் சுற்றுலாத்துறைகளிலும் பெண்களுக்கு அதிகளவு தொழில் வாய்ப்புக் களை தோற்றுவித்தன. ஆத்தோடு இன்றைய நிலைப்பாட்டில் பெண்கள் அதிகமானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு குடிபெயர்ந்து வீட்டுப் பணிப் பெண்களாக தொழில் புரிவதை நாம் காணக் கூடியதாக உள்ளது. சகல துறைகளில் கூடுதலான வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்ட ஹிபுஜுதும் இன்னமும் பெண்களின் நிலைமை கலவைக்கிடமாகவே காணப்படுகிறது. மூன்றாம் உலக நாடுகளை நாம் உற்று நோக்கும் போது நவீனமயமாக்கலும், அது தொடர்பான உல்லாசப் பயணத் துறைகளிலும் பெண்கள் மிக மோசமான சுரண்டலுக்கும் கலாச்சார சீரழிவுக்கும் பெண்களை விபச்சரத்திலும் ஈடுபடுத்துகிறார்கள். இத்தகைய நிலைமையில் பெண்கள் பொருளாதார சுரண்டலுக்கும் எயிட்ஸ் நோய்கும் ஒழுக்க சீர்கேட்டுக்கும் ஆன்ம அழிவுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். அது மட்டுமல்லாது வர்த்தக விளம்பர துறைகளின் விளம்பரங்களில் ஒரு விம்பமாக பெண்களைப் பயன்படுத்தும் போக்கும் செயற்பாடும் வரவர அதிகரித்துக் கொண்டே வருகி றது. வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் பத்திரிகைகள் தொலைக்காட்சிகள் போன்ற பொது சன தொடர்பு சாதனங்கள் சில வியாபாரப் பண்டங்களுக்கு சமமாக தொடர்பு படுத்தி காண்பிக்கப்படுகின்றனர். பொதுவாக நடைமுறை வாழ்வுக்கு எதிர்மாறாகவும், ஆபாச உணர்ச்சிக ளைத் தூண்டுவனவாகவும் அமைந்துள்ளமையே கவலைக்குரிய விடயமாகும் இதேபோன்று நாட்டுக்கு நாடு நடைபெறுத் அழகு ராணிப் போட்டிகளும் இந்த நிலைப்பாட்டில் இருந்து தவறவில்லை. இன்று கல்வி பெண்களில் பெரும்பாலானோர் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்கள். உட்பட வேலை யற்று இருக்கிறார்கள். வேலையற்றோர் எண்ணிக்கையில் ஆண்களை விட பெண்களே அதிகம் காணப்படுகின்றனர். பெண்களினை பொறுத்தவரையில் இந்தப் பரணியில் விண் வெளிக்கப்பலில் கூட ஆரம்பித்து விமானம் ஓட்டிகளாக வும் தொழில் ஆலோசகர்களாகவும், நாட்டை நிர்வாகிக்கும் பிரதம மந்திரிக ளாகவும், ஜனாதிபதியாகவும், போர்ப்ப டைக்கு ஆலோசகராகவும் இன்றைய பெண்கள் முன்மாதிரியாக திகழ்கிறார்கள். பெண்களின் அந்தஸ்து பிரச்சினைகள், பெண் விடுதலைபோக்ற செயல்களில் விழிப்புனர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும். கடமைப்பாடு நமது சமூகத்துக்கு உண்டு. உலகெங்கிலும் மகளிர் இயக்கங்களும் பெண்ணுரிமைக் கழகங்களும் தோன்றியுள்ளன. ஆனால் பெண்ணிணத்துக்கு எதிரான வன்முறைகளும் துஸ்பிரயோகங்களும் மேலோங்கியே காணப்படுகின்றது. வீட்டுடன் பெண்களைப் பூட்டி அல்லது பிணைத்து வைக்கும் பாரம்பரிய அணுகுமுறையை இந்த நடைமுறை நலிவடையச் செய்தாலும் பெண்களை பெண்ணினமாகவும், தாயாகவும் மகளாகவும் பார்க்க மவறிவிடுகிறது.

ஆகவே பெண்களுக்கு சமஉரிமைகளை அளித்து அவர்களை பாதுகாத்து நம் தேசத்தின் வளர்ச்சிக்கு உழைக்கும் பெண்ணின் சக்தியை உருவாக்குவது நமது கரங்களிலேயே உள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



## பெண்ணுரிமை..

பெண்கள்,
அழைப்பில்லா சமுதாயத்தில்
அழையாத விருந்தாளிகள்...
பிழைக்கப் பிழைப்பிருந்தும்
தழைக்க முடியாமல்
தாழும் கொழு கொம்பற்ற
கொடிகள்......

பிறந்தவுடன் கள்ளிப்பால்,
உயிர் தப்பிப் பிழைத்தால்
நாங்கள் உயிர் வாழ்வது
உங்களின் மன்னிப்பால்.....
அப்படி என்ன தவறு
செய்து விட்டோம்?

உங்களது மேற்பார்வையில்
நாங்கள், நெல்வயலில்
வேண்டாது முளைந்திருக்கும்
கலைய வேண்டிய
களைகலல்லவா?

அம்மா,
நெஞ்சைத் தொட்டுச்சொல் ,
சமுதாயச் சிந்தனையற்று
என்றாவது எனக்கு
தாய்ப்பால் புகன்றிருப்பாயா?

பத்துமாதக் கருவறைக்குள்
சுகமாய்தான் இருந்தேன்,
நான் பெண் என்று
பத்து மாத முடிவிலல்லவா
உங்களுக்கு தெரிந்தது?

நாளிதழில் நடக்கும்
தினம் ஒரு திருவிழா
பெண்ணுரிமைப் போராட்டம்.....
போராட்டத்தின் பக்கத்துக்கு
செய்தியே ,
பத்து வயுது சிறுமி
பாலியல் படுகொலை.....

ம்ம்ம்... வெட்டிப் பேச்சிலும் ,
மலட்டு எழுத்திலும்,
மலடாகி மனம்
புழுங்குகின்றது,
பெண்ணுரிமைச் சுதந்திரம்.......

பல்லாயிரம் தலைவர்கள்
பேசிப் பட்டுப்போன
பெண்ணுரிமை,
என் பேனா மை பட்டு
துளிர்த்து விடுமா என்ன?

சமுதாய மரமே,
எனக்கு உரிமை வேண்டாம்,
தயவு செய்து
எம்மை உதிர்க்காமல் இரு........

தையிட்டி. இராசதுரை

# தென்திசைத் தலைவனின் யப்னாசிற்றி பயணம்....!

எதிர்வரும் மகா சிவராத்திரி தினத்திலன்று ஜெமநாதம் தினசரிப் பத்திரிகையின் பணிப்பாளரான சிறி ஜெம தர்மராஜா அவர்களும் அதன் செய்தி ஆசிரியையான ஜெம குண்டோதரி அவர்களும் அதன் போட்டோகிராபரான ஜெமகுண்டம் அவர்களும் கூடியிருக்கிறார்கள். பூலோகத்திலிருந்து கொண்டு வரப்பட்டவர்களின் கடும் புகார்களுக்கிணங்க, அங்கே... தினசரியாய் நடந்துவரும போதை பொருள் பாவனைகள், பாலியல் வன்முறைகள், கோவில்களில், கடைகளில், வீடுகளில், இடை வழிகளில் 'த்திறில்' லாய் நடந்து முடியும் கொள்ளைகள், கொலைகள், வழிப்பறிகள்.... போன்ற கேவலங்களையும் கிலிசை கேடுகளையும் நேரில் போய்ப் பார்த்து வந்து, பூலோகத்தின் கனதியை ஒரு கணிப்பீடு, மதிப்பீடு செய்வதும், அவசியமேற்பட்டால் ஜெமநாத சிந்தனையின் ஓர் அவசரகால, ஓர் அவசிய கால, திடீர் அதிரடி நடவடிக்கையாக, பூலோகத்தில் இப்படியான குற்றங்களைச் செய்பவர்களைப் பிடித்திழுத்து வந்து நரகப் படுகுழியில் விழுத்தி, போட்டு விடுவதற்கு சகல நிறைவேற்றதிகாரங் களையும் பெற்று விடுவதையும் நோக்கமாகக் கொண்டு மகாவல்லமை பொருந்திய அதியுயர்வணக் கத்துக்குரிய உலகாதிபதியான திருநீல கண்டப் பெருமானிடத்து வந்திருக்கிறார்கள். இதுக்கென்றதோர்.... ஸ்பெஷல் பெர்மிஷன் வாங்கிக்கொள்வது தான் அவர்களின் நோக்கம்.

"நடுநிசி நேரத்திதல் Jaffna townணின் சன நடமாட்டமில்லாத, ஒரு ஒதுக்குப்புறத்தில் எயர் ஜெமலோகமான எருமை வாகனத்தில் வந்து தரையிறங்கினார்கள்"

மேற்கொண்ட தலைப்பில் ஜெமநாதம் பத்திரிகையில் முன்பக்கச் செய்தியாய், பெரும் பரபரப்போடு பிரசுரிக்கப்பட்டு விட்டது இந்தப் பூலோக பயணம் தொடர்பான செய்தி. ஜெமலோகத்திலுள்ள அத்தனை, ஜெமசனங்களும் பெரும் சோட்டைகொண்டு, விழுந்துவிழுந்தும், விழுந்துகிழுந்து போகாமலும் தான் படிபடியென்று, படித்தும் கொண்டார்கள் அதனை.

மகா சிவராத்திரி தினத்து நட்டநடு நிசி நேரம்...! சிவனே பரனே யென்றுதானிந்த, மாசி மாதத்துக் கொடும்பனி... கடும்பிடியாய்... மழையென ஊத்திக் கொண்டிருந்தது. உண்மையாய், சிவன் சாட்சியாய், சிவனருளாய், சிவராத்திரி விரதத்தை அதன் மகிமையோடு பிடித்துக்கொண்டவர்களும் – எவ்வளவு பேறுமை தான் அள்ளிக் கொட்டிப் பூசினாலும் இந்தச் சிவராத்திரி விரதத்தோடு தொடுகிலும்தான் ஒட்டிப்பிடித்துக் கொள்ளவும் ஏலாதவர்களும்... இந்தப் பொல்லாத ஐரோப்பா நிகர், பனிக்குளிரில், நடுநடுங்கிச் செத்துத் தொலைவது போல்...?

அந்த, ஏயர் ஜெமலோகமான.... எருமை வாகனம்... அருமையாய் அந்த மூவரையும் சுமந்து கொண்டே வந்து... மனித புதைகுழிகள், மகா சரித்திரம், கண்டும் விட்ட அந்த, 'பேமஸ்' செம்மணியில் தரையிறங்கியும் விடுகின்றது...!

செம்மணியைப் பார்த்து பணிப்பாளர், ஒரு வகையாய் நமுட்டுச் சிரிப்புடன் செய்தி ஆசிரியையின் கரங்கள் மளமளவென்று.. ஏதோ... கிறுக்கிக்கொண்டிருந்தன....!

பூலோகத்திலிருந்து, கொண்டுவரப் பட்டவர்கள்... சொல்லிச் சொல்லி, வாயூறிய வேளையை 'மயின்ற்' கிறுக்கித்தள்ள... மூவரும் உல்லாசப் பயணிகளாய் உருமாற்றிக் கொண் டனர்...! தெருவெல்லாம் ஒரே திரு விழாக்கோலம்! அந்த ஜெமலோ கத்தவர் மூவரும்... புதினம் பார்த் தபடியே... சனத்தோடு சனமாய் கால்போன போக்கில் எந்தப் பக்க மென்றில்லாமல் போய்க் கொண் டிருந்தார்கள். கோவில்களிலிருந்து மணியோசைகளும் மங்கல வாத்திய ஓசைகளும் ஒலி பரப்பிகளில் சிவராத்திரி தினக் கலை நிகழ்ச்சி களின் ஓசைகளும் காது குளிரக் கேட்டவண்ண மிருந்தன. இந்தா! ஆள்களை அடித்து விழுத்திவிட்டு.... இந்த மனிதாபிமானத்துக்கு மேலால்... தப்பி ஓடுகிறம் பாரென்ற... கீசறிநாசறியாய்.. தலைதெறிக்க ஓடிய வாகனங்களின் ஓட்டபாட்டங்களுக்கும் வகைசொல்லிக் கொண்டே, இந்த, ஜெமநாதம் தின சரியின் பணிப்பாளரும்... செய்தி ஆசிரியையும் அதிகம் பயந்தவர்கள் போல் காட்டிக் கொண்டே... ஒரு, 'சயிட் டாக' ஒதுங்கி, ஒதுங்கிப் போய்க்கொண்டிருந்தனர். 'போட்டோகிராப்'ரான, ஜெமகுண்டத்தார் மாத்திரம் குண்டு போடவும் ரெடியென்ற கணக்காய், எத்தனையோதேவையற்ற தலைசொறிவுகளோடு கொஞ்சம் பின்னுக்குப் பின்னுக்காய்.... மயிந்தி, மயிந்தி போய்க்கொண்டிருந்தார். 'சைற்கியிற்' என்றில்லாமல் அலைபாயுமவர் 'மயின்றில்' இந்தப் பூலோகத்துப் போதை வஸ்து தியானமும் பாலியல் நடவடிக்கைகளும் வேறும் என்னென்னவோ எல்லாம் கிடந்து சின்ன மேளமாடித் தொலைந்தன. இந்த, ஜெமலோகம் எங்கே...? ஜெம நாதம் எங்கே..? பணிப்பாளர் எங்கே...? செய்தி ஆசிரியை எங்கே...? என்று தன்னுடைய மூளையையும் மயின்ரையும் கண்களையும் ஜெப்னா சிற்றியில் கை தவறவிட்டு விட்டுத் தடவுவது போல் திணறிப்போய் நின்றார்.

திடீரென்று கோலொன்று உயிரெடுக்க, திடீர்த் தடுதாழியில் கமராவை எடுத்துக் காதடிக்குக் கொண்டும்போய்விட்ட குண்டம், நாக்கைக் கடித்தபடியே செல்போனை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டே.... "அலோ... அலோ... " என்றும் கத்திக் கதறிப் பதறியடிக்கத் தொடங்க...

"இடியற்... பூபூல்... பூலோகம் வந்தவுடன மூளை கீழையெல்லாம் 'அப் செற்' ஆகிப்போச்சா என்ன? கமராவுக்கும் செல்போனுக்கும்

> பட்டவர்கள்... சொல்லிச் சொல்லி, வாயூறிய வேளையை 'மயின்ற்' கிறுக்கித்தள்ள... மூவரும் உல்லாசப் பயணிகளாய் உருமாற்றிக் கொண் டனர்...! தெருவெல்லாம் ஒரே திரு விழாக்கோலம்! அந்த ஜெமலோ கத்தவர் மூவரும்... புதினம் பார்த் தபடியே... சனத்தோடு சனமாய் கால்போன போக்கில் எந்தப் பக்க மென்றில்லாமல் போய்க் கொண் டிருந்தார்கள்.

வித்தியாசம் தெரியேலை என்ன..? நீயொரு, பத்திரிகையாளன் எண்டதைக்கூடி மறந்திட்டியா... எருமைப் பயலே..! போதைவஸ்து... பாலியல்... எல்லாம் வாங்கவா பூலோகம் போனனீர்...? இப்பிடியயல்லாம் ரூட்மாறி... அதுவும் 'ரோங்சயிற்றிலை'?" என்றெல்லாம், போட்டோகிராபரின் தகடுதத்தங்களை எல்லாம் தமது ஞான வலிமை பார்த்துத் தெரிந்து கொண்ட ஜெமதர்மராஜா கடும் கத்துக் கத்தி அவுட் பண்ணியும் விடுகின்றார்.

ஜெமநாதத்தின், பணிப்பாளரான ஜெமதர்மராஜாவின் ஜெமகர்ச்சனையோடு பாடோரியாய் சொக்கிச், சிக்கி, சப்பியாய்ப் போய்விட்ட, ஜெமகுண்டனார் ஒரு இத்திரியும் காலெடுத்து வைத்து அசையக்கிசயவும் ஏலாதவராய் நின்ற இடத்திலேயே ஒரு மரமாகவோ ஒரு கல்லாகவோ அப்செற்றாய் நின்று கொண்டிருந்தார்.

மந்திரமாயஜாலப் படங்களில் வரும் மந்திரதந்திரக் காட்சியாய் குண்டனார்.. ஜெமதர்மன் பணிப் பாளருக்கும்... ஜெமகுண்டோதரி செய்தி ஆசிரியைக்கும் முன்னாலும்... அந்தப் படியவே, நின்று கொண்டிருக்கும் அற்புதமான அந்தக் காட்சியை என்னே என்பது! இந்த, ஜெமனாரின் ஞான வலிமையை நினைத்து, அப்படியே 'சர்ப் பிறைஸ்'ஸலாகிப்போன குண்டனார், எனித் தம்மிலே தாம் வலு கவனமெடுக்க வேண்டுமென்ற கணக்காய், மிச்சம் ஓவராய், சுடலை ஞானத்தில் மூழ்கத் தொடங்கி விட்டார். அதேநேரத்தில் தண்டவாளத்தில் ஓடிய... ரயில் வண்டி... ரோட்டிலும்... கடலிலும்தான்... ஓட முழுமையாய் 'ரெடி' ஆகிவிட்ட கணக்காய்...

ஐஸ்கிறீம்களையும் அதிகமாய் சூப்பிக்கொண்டே 'பண்டில்'கணக்காய், சிகரெட்டுகளை ஊதித்தள்ளிக் கொண்டே எங்கோ... எதுக்கோ... 'ரீனேஜ்'சுகளையும்... பைக்குகளில்... சுப்பராய்.. அப்பராய்... கொண்டுபோகும் வாலிபங்களின் காட்சிகளையும் பார்த்த பின்னர் இந்த, 'ஐயிற்றங்கள்' எல்லாம் தம்மையும் சும்மாயிருக்க விடாதென்று புரிந்துவிட்டது குண்டனாருக்கு!

எனித்தாமும் ஐஸ்கிறீம்களை வாய் கொள்ளாமல் சூப்பித் தள்ளி இந்தப் பணிப்பாளரும்தான் மூச்சடிக்கிச் செத்த கணக்காய்...

சிகரெட், சிகரெட்டாயும் தானூதித் தள்ளி இந்தச் செய்தி ஆசிரியையும் பொறாண்மைப்படும் விதமாய்...

எவருடைய பைக்கை, 'பைபோசாய்' பறித்தென்றாலும் ஒரு பூலோக சுந்தரியையும் கச்சிதமாய்க் கிளப்பியெடுத்துக்கொண்டே... என்றெல்லாம் சிந்தனை ஓடத் தொடங்கியே விட்டது குண்டனாருக்கு. சிந்தனைப் போக்குப் புரிந்ததும் தலையில் இடி விழுந்தே விட்டது போன்ற... 'அற்ராய்க்'..!

குண்டத்தின் தறிகெட்டுப்போன ரயில் வண்டியைத் தடம்புரள வைத்துஆற்றிற்குள்ளும்பாயவைத்து விட்ட கதையாய் ஞானப் பார்வை வலிமை கொண்ட பணிப்பாளரின் இரும்புக் கரங்களினால் வாங்கித் தெளிந்த அகோர குட்டுக்களின் தாக்கத்துக்கு கிஞ்சிற்றும் நின்று பிடிக்க முடியாமல் குண்டத்தார்... குண்டிகுத்தன, விழுந்தேபோய் விடுகின்றார்...!

அந்த நேரத்தில், குட்டுகள் வாங்கிய குண்டத்தை தரித்து நின்று அவதானித்துக்கொண்டு போனவர்களுக்கும் அந்தக் குட்டுக்கள்... நோகவும் வலிக்கவும்தான்.. பிடித்திருக்குமோ...!??

தனது பத்திரிகை அலுவலக 'நோட்புக்'கையெடுத்து... செய்தி ஆசிரியை.... இது தொடர்பான செய்திக் கட்டுரைக்குத் தேவையான ஏதோ ஒரு முக்கியத்தை மள மளவென்று கிறுக்கித் தள்ளி விட்டதும்.... பணிப்பாளர் அதனைப் படித்துப் பார்க்காமலேயே சபாஷ் போட்டும் விடுகின்றார்.

பிழையான றூட்டில் போக முனைந்த குண்டத்தின் தலையில் விழுந்து விட்ட பணிப்பாளரின் பலமான குட்டுகள் 'ரோங்சயிட்'டில்... போய்க் கொண்டிருக்கும் இந்தப் பூலோக வாசிகளின் தலையில் விழுந்து விட்ட குட்டுகளுக்குச் சமானமானதே...!



(16 ஆம் பக்கம் பார்க்க..)



# பீட்ரூட் வடை

பாடசலை முடிவடைந்து வீட்டிற்கு பசியோடு வரும் குழந்தைகளின் பசியைப் போக்க நினைத்தால், அவர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் வண்ணம் பீட்ரூட் வடை செய்து கொடுங்கள். குறிப்பாக இந்த வழி காய்கறி சாப்பிடாத குழந்தைகளுக்கு ஏற்ற ஒன்று. மேலும் இந்த வடை மிகவும் சுவையாகவும் இருக்கும். சரி, இப்போது அந்த பீட்ரூட் வடையை எப்படி செய்வதென்று பார்க்கலாம்.




## தேவையான பொருள்கள்

பீட்ரூட் – 4, வெங்காயம் – ஒரு கப் (நறுக்கியது), துவரம் பருப்பு – 200 கிராம், வரமிளகாய் – 6, சீரகம் – 1/2 தேக்கரண்டி, உப்பு – தேவையான அளவு, எண்ணெய் – தேவையான அளவு

**செய்முறை**

முதலில் துவரம் பருப்பை நீரில் ஒரு மணிநேரம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அதனை நன்கு கழுவி, மிக்ஸியில் போட்டு, அத்துடன் வரமிளகாய், சீரகம் ஆகியவற்றைச் சேர்த்து வடை பதத்திற்கு அரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் பீட்ரூட்டை துருவிக் கொண்டு, அதனை சட்டியில் போட்டு எண்ணெய் சேர்க்காமல், வதக்க வேண்டும். பின்பு அத்துடன் வெங் காயத்தையும் சேர்த்து 2 நிமிடம் வதக்கி இறக்கி, அதோடு உப்பு மற்றும் அரைத்து வைத்துள்ள கலவையை சேர்த்து, வேண்டும் எனில் சிறிது தண்ணீர் சேர்த்து சிறு உருண்டைகளாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். இறுதியில் ஒரு சட்டியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்குத் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், உருட்டி வைத்துள்ளதை வடை போன்று தட்டி எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுத்தால், பீட்ரூட் வடை தயார்.



# உடற்பயிற்சியில் நிதானம் தேவை

உடற்பயிற்சிகளை மிகவும் அதிக முறை செய்யும்போது தான் பிரச்சனைகள் உண்டாகின்றன. நல் ஆரோக்கியத்தையும் நல்ல உடல்வாகையும் மேனி அழகையும் உறுதியான இதயத்தையும் பெற, அனைத்து உடல் உறுப்புகளும் சீராகச் செயல்பட, சில விதிமுறைகளை ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்க வேண்டும். உடற்பயிற்சிகள், நடைப்பயிற்சி, ஓட்டம், பளு தூக்குதல், விளை யாட்டுப் பயிற்சிகள் என எதுவாயினும், முதலில் சிறியதாகத் தொடங்கி, உடல் மற்றும் மனம் உறுதிபட தொடங்கியவுடன், கொஞ்சம் கொஞ்சமாக அடுத்த பகுதிக்கு முன்னேற வேண்டும். அப்போதுதான் இதய–நுரையீரல்களின் உறுதி, தசை மண்ட லங்களின் உறுதி, எலும்பு மற்றும் எலும்பு இணைப்பில் உறுதி ஆகியவை கிடைக்கும்.

சிறப்பு பயிற்சிகளை இதயம்–நுரையீரல்கள் உறுதி செய்யுமாறு செய்ய வேண்டும் எமது உடலில் உள்ள அனைத்துத் தசைகளும் உறுதிபடச் செய்ய, அந்தந்த தசைப்பகுதிகளுக்கு அளவான பளுக்களை தேர்வு செய்து அந்த தசைகளின் தன்மைக்கேற்ப, ஒருநாள் உடலின் மேல் உறுப்பு தசைகளுக்கும், அடுத்த நாள் கீழ் உறுப்பு தசைகளுக்கும் மாறி மாறி பளு தூக்கும் பயிற்சி அவசியம். மெது நடைப்பயிற்சி, வேக நடைப்பயிற்சி, மெது ஓட்டம், மித ஓட்டம், வேக ஓட்டம் என அடுத்தடுத்து முன்னேற்றம் காண வேண்டும். இதனால் உடலின் முழுத்தசை மண்டலங்களும் உறுதிப்படுவதோடு, அதிக ஒட்சிசன் பெற்று, நல்ல இரத்த ஓட்டம் அடைந்து, நீங்கள் களைப்படையாமல் சுறுசுறுப்பாக இருக்கலாம் அளவான உடற்பயிற்சி, சீரான நடை / ஓட்டம், தேவையான பளு தூக்குதல், சைக்கிள் ஓட்டுதல், ஏரோபிக்ஸ், நீந்துதல், பரத நாட்டியம், கதகளி, குச்சுப்பிடி, மேலை நாட்டு ஆட்டக்கலைகள் என இவை அனைத்துமே உடலை நன்றாக வளைந்து கொடுக்கும் திறமையை அதிகரிக்கும். தேவையில்லாத கொழுப்புதான் நம் உடலைக் கெடுக்கும் முதல் எதிரி.

ஒவ்வொரு நாளும் நம் உடலில் தேவைக்கு அதிகமாக உள்ள கொழுப்பு சக்தியை எரித்துவிட வேண்டும். இதற்காக நீங்கள் தினமும் செய்துவரும் உடற்பயிற்சியின் பல தரங்கள், வகைகளை வேகமாக செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

மேலே கூறிய அனைத்துப் பயிற்சிகளையும் 20 –60 வினாடிகள் முடிந்தால் சற்று கூடுதலாக சிறிது சிறிதாக வயதுக்கு ஏற்றவாறு கூட்டுவது கொழுப்புச் சக்திகளை எரிக்க மிகவும் ஏற்றது. ஏரோபிக்ஸ் பயிற்சிகள் இதில் முதலிடம் பெறுகின்றன.



# பருவால் உண்டான வடு நீங்க பேஸ் பேக்

**ஸ்டிராபெர்ரி பேஸ் பேக்**

பழுத்த ஸ்டராபெர்ரி முகப்பருவால் வரும் வடுக்களை விரைவில் குறைக்க உதவுகிறது. இது தோலில் உள்ள அனைத்து அசுத்தங்கள் மற்றும் கெட்டதை வெளியே இழுக்க உதவுகிறது. இதிலுள்ள சாலிசிலிக் அமிலம், ஒரு இயற்கை வடிவம் கொண்டிருக்கிறது. இதனால் முகப்பரு வடுக்கள் எளிதில் குறைந்து அழகான தோற்றத்தை தருகிறது. மேலும் சருமத்தின் நிறத்தைக் கூட்டுகிறது.

**வீட்டில் ஸ்டிராபெர்ரி பேஸ்ட் செய்யும் முறை**

3 ஸ்டிராபெர்ரி எடுத்து நன்றாக மசித்து கொள்ளவும். இப்போது அதனுடன் தயிர் கலந்து கொள்ளவும். இதனை முகம் முழுவதும் போட்டு 20 நிமிடங்கள் உலர வைத்து பின்னர் தண்ணீர் கொண்டு துடைக்க வேண்டும். இந்த பேஸ் பேக் உங்கள் தோலில் இருக்கும் காயங்கள், முகப்பரு வடுக்களை மாற்றி நல்ல நிறத்தைதரும். இந்த பேஸ்பேக்கை தினமும் போட்டு வர வேண்டும்.

**தக்காளி பேஸ் பேக்**

3 தக்காளி எடுத்து தோல் நீக்கி அதனுடன் தயிர் ஒரு தேக்கரண்டி, மஞ்சள் தூள் ஒரு தேக்கரண்டி சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும். இந்த பேஸ்ட்டை முகம் முழுவதும் தடவி 20 நிமிடம் உலர விட்டு குளிர்ந்த நீரால் கழுவி விடவும். அதனைத் தொடர்ந்து ஒரு நாள் விட்டு ஒரு நாள் செய்து வந்தால் பருவால் உருவான வடுக்கள் படிப்படியாக மறைவதைக் காணலாம்.

# பஞ்சு போன்ற உள்ளங்கைக்கு

பெண்களின் கைகளுக்கு உழைப்பு அதிகம். பாத்திரம் கழுவுவது, துணி துவைப்பது, கரண்டி பிடித்துக் கிண்டுவது, சமைப்பது என, நம் கைகள் எல்லா நேரமும் வேலைதான். அதற்காக வேலை பார்க்காமல் இருக்க முடியுமா...? என்றால், முடியாது தான். ஆனால், உங்களின் உணவு முறையிலும், கைகளை பராமரிப்பதிலும் சற்று கவனம் செலுத்தினால்... உங்கள் உள்ளங்கையை மென்மையாக மாற்ற முடியும்.

உள்ளங்கையில் போதிய ஈரப்பதம் இல்லாமல் போனால் சிலருக்கு வெடிப்புகள் தோன்றி, கறுப்பாக மாறிவிடும். அவர்கள் அடிக்கடி கைகளில் வேசலின் தடவிக் கொள்ள லாம். உள்ளங்கை மற்றும் கையின் மேல் பகுதியில் தேங்காய் எண் ணெய் தடவி, தினமும் ஐந்து நிமி டங்கள் கைகளை மூடி மூடித் திறந்தால், தோலின் சுருக்கங்கள் நீங்கி தசைகள் விரியும்.

நேரம் கிடைக் கும் போதெல் லாம் ஓர் எலு மிச்சம்பழத்தை உள்ளங்கையில் வைத்து உருட் டிக் கொண்டே இருங்கள். பஞ்சுபோல் உள்ளங்கை மிருதுவாக இருக்கும். ஓர் உரு ளைக் கிழங்கை வேகவைத்து, அதில் 5 சொட்டுகள் ஆலிவ் எண்ணெயைக் கலந்து அரைத்துக் கொள் ளுங்கள். இதைக் கைகளுக்குப் பூசி, தேய்த்துக் கழுவுங்கள். ஒலிவ் எண்ணெய், தோலுக்கு நல்ல ஈரப்பத்தைக் கொடுக்கும். உருளை, கருமையை நீக்கிவிடும். வெடிப்புகள் தொடராமல் இருக்க... அதிக தண்ணீர், பால், ஒரேஞ்சு, அப்பிள் ஜுஸ் குடியுங்கள். காய்ச்சிய, வெது வெதுப்பான பாலில் விரல்களை அமிழ்த்தி ஊறவிடலாம்.



# facebook

# twitter Follow me!

# வலைப்பக்கம்

பிரதமருக்கும், சென்னை அமிர்தாவுக்கும் உள்ள ஒற்றுமை..... கைநிறைய சம்பளம், வெளிநாட்டுல வேலை.

அதிக மதிப்பெண் எடுத்த பலர் யதார்த்த வாழ்வியலை அறிந்திருப்பதில்லை. ஆனால் சராசரி மதிப்பெண்களை எடுக்கும் பல பேர் யதார்த்தவாதியாகவே இருப்பர்!!!

உங்களுக்கு பிடித்தமான நண்பர் என்பவர் நீங்கள் இவ்வாக்கியத்தை படிக்கும்போதே முதலில் நினைவுக்கு வருபவர்தான்...!

கோழைகள் எப்போதும் வீரமாய் பேசிக்கொண்டே இருக்கிறார்கள்...!


காலறியாமல் நழுவும் கொலுசைப்போல்... உன் நினைவில் உதிர்கிறதொரு புன்னகை

போனமாசம் 45 கிலோ எடை இருந்தேன். இப்ப 50 கிலோ எடை இருக்கேன். போடும் பேண்டு சைசும் மாறல, சேர்ட் சைசும் மாறல. அப்ப அறிவுதான் வளர்ந்து இருக்கும்.

ஆழமாய்த் தாக்கிய சொல்லுக்கு உளியின் குணம் இருந்தது.

நமக்கு காய்ச்சலோ, இல்லையோ, அம்மாதான் பணிவிடை செய்கிறாள். அம்மாவுக்கு காய்ச்சலோ, இல்லையோ அவளே பணிவிடை செய்கிறாள் எல்லோருக்கும்.




# வெறித்தனமான பிரார்த்தனை

ஒரு பாதிரியாரும், ஒரு பஸ் சாரதியும் ஒரே சமயத்தில் இறந்து மேலுலகம் சென்று எமதர்மனை சந்தித்தனர்.

நான் கிராமத்து பாதிரியார். சொர்க்கத்தில் எனக்கு இடம் கிடைக்கும் என நான் நம்புகிறேன் என்று பாதிரியார் கூறினார்.

நான் கிராமத்தை சேர்ந்த பஸ் சாரதி. எனக்கும் சொர்க்கம் செல்ல ஆசை என்றான்.

சரி என்ற எமதர்மர்,

நீங்கள் சில வருடங்கள் காத்திருக்க வேண்டும் என்று பாதிரியாரிடம் சொல்லிவிட்டு, பஸ் சாரதியிடம், நீங்கள் இப்போதே சொர்க்கத் துக்கு போகலாம் என்று கூறினார்.

அதிர்ந்த பாதிரியார்,

ஒரு நிமிடம்!. நான்தான் ஒவ்வொரு ஞாயிறும் தேவாலயத்தில் மக்களுக்கு பிரார்த்தனை செய்வது எப்படி என்றும் நன்மை செய்வது எவ்வாறு என்றும் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். ஆனால் அவன் வெறும் குடிகார சாரதி தானே? என்று கேட்டார்.

அதற்கு எமதர்மன் சொன்னான்,

அது சரிதான். ஆனால் நீங்கள் சொல்லிக் கொடுக்கும்போது மக்கள் தூங்கிக் கொண்டுத் தான் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவன் பஸ் ஓட்டும்போது, உள்ளிருந்த் அனைவரும் எவ்வளவு வெறித்தனமாக பிரார்த்தனை செய் தார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?!




1.உன் கால் கொலுசு ஒலி கேட்கும் போது எனக்கு மாடு சலங்கை ஞாபகம் வருகிறது

2.நீ ஒரு மொக்கை ஃபிகர் என்பதை உன் கூடவே சுற்றும் செவ்வாழை ஃபிகர் சொன்னதே இல்லையா உன்னிடம்.?

3.நீ நினைக்கும்போதெல்லாம் எனக்கு விக்கல் எடுக்குமா என சோதிக்க இது நேரமில்லை,பாவிமவளே ஷேவிங் பண்ண சலூன் போறேன்

4.உன்னைவிட்டு பிரிந்து சென்ற கணம், என்னிடம் ஏதோ தொலைந்ததாக உணர்ந்தேன்! பாவி! பர்ஸை அடிச்சுட்டா!

5.அன்பே உன்னை பார்க்கையில் என் கண்ணும்,கன்னமும் சிவக்கிறது -என்னா அடி!!

6.உன்னை பிரிந்தாலும் எல்லா இடங்களிலும் உன் முகத்தை பார்க்கின்றேன்!பின்ன முக்காவாசி உன்னமாதிரி அட்டுபீஸ் தானே?

7.காலையில் எழுந்து அவளை ஏழு மணிக்கு பார்க்க சென்றேன்... ஆனால் வருவது ஏழரை என்று அறியவில்லை!

8.நான் பசுமரமாய் இருக்கும்போதே என் மனதில் அறையப்பட்ட துருப்பிடித்த ஆணி நீ..!

9.நீ எனக்காக சிந்திய
கண்ணீர் தித்தித்த
போதுதான் உணர்ந்தேன்
உன் பரம்பரைக்கே சர்க்கரை
வியாதியென.!

10.முதன்முதலில் நீ பாடியதை
கேட்டபோதுதான்
உணர்ந்தேன் பேய்களுக்கும்
பாட வரும் என்பதை..

எதுக்கு தலைவரே
சி.பி.ஐ அதிகாரி
கெட்டப்போட சட்ட
சபைக்குப் போறீங்க...?
என்னைப் பார்த்தும்
எதிர்க்கட்சிக்காரங்க
மிரளணும்னு நீதானே
சொன்னே?...



தொடர்ச்சி.....

# தென்திசைத் தலைவனின் யப்னாசிற்றி பயணம்....!

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி ஆசிரியையின், இந்த 'வேடிங்'கை, பல தடவை குழம்பிக், குழம்பி வாசித்துப் பார்த்தும் விட்ட, குண்டம்...

எனியென்றாலும்தான்... திருந்தி நடந்து ஒரு அச்சாப்பிள்ளையாகி.. ஜெமநாதம், தினசரியின், மதிப்புக்குரிய பணிப்பாளராகவும்தான் வரவும் பார்த்திடவேண்டும் உன்றெல்லாம் மீண்டும் சுடலை ஞான, வடை சுட்டடுக்கத் தொடங்கியதும்... இலேசாய்ச் சிரித்தும் கொண்ட, பணிப்பாளர், ஜெமதர்மன், சிவன்கோயிலில் நடைபெற்றுக்கொண்டிருக்கும், சாவித்திரி சத்தியவான் கூத்தைப் பார்த்து இரசித்துவிடும், 'ஐடியா'வோடு - துறுதுறுத்த குளப்படிகாரப் பையனைப் பெற்றோர் அங்காலிங்காலும் ஓடவிடாது கைப்பிடியோடு குறஇழுவையாக இழுத்துப் போகுமாய் போல்.. இந்தப் பூலோகத்துக்குக் குணம் பற்றிப்போன குண்டத்தையும் கைப்பிடியோடு, குற இழுவையாய் இழுத்துக் கொண்டு செல்லத் தொடங்கினார்.

இந்தக் காட்சியை, பூலோகவாசிகள் வலு புதினமாய்ப் பார்த்துத் சிரித்து, விசிலடித்துக் கூக்காட்ட குண்டத்தாருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

''எவனடா இந்த போதைவஸ்து.. பாலியல் எல்லாம் கரைச்சுக் குடிச்சு வைச்சிருக்கிற இந்த 'பிளடி' பூலோகத்தான்... இந்தப் பெரிய பத்திரிகையாளனை இப்பிடியெல்லாம்.. ராக்கிங்...செய்ய''' என்றெல்லாம் குண்டத்தார் வெகுண்டெழுந்தார். எனி இந்தப் பணிப்பாளரும் செய்தி ஆசிரியையும் பார்க்கக் கூடியதாகத் தான் திருந்திக்காட்டி, ஒரு சன்மார்க்கனாய், உத்தமனாய், 'பேமஸ்' 'ஜேணலிஸ்ராய்' ஜெமலோகம் போய்.. இந்தப் பூலோகத்து போதைவஸ்துக்களையும்... பாலியல்களையும் பார்த்து விழுந்து விழுந்து சிரித்து மகிழ்ந்து, விசிலடித்துக் கூக்காட்டி என்றெல்லாம் குண்டத்தார் யோசிக்கவும் தொடங்கிவிட்டார்.

மறுபுறமோ குண்டத்தாரை குற இழுவையில் இழுத்து வந்த ஜெமதர்மன், சத்தியவானின் இன்னுயிர் மீட்க... சாவித்திரி ஜெமதர்மனோடு..... போராடும் காட்சியைக் கண்டுவிட்டார். அதைப் பார்த்து அந்தப்படியே சொக்கிப்போய் நிற்க... பக்கத்தில் ஒரு ரசிகர், இவர் முதுகில் தட்டி "அந்த 'ஒறிஜினல்' ஜெமதர்மனே உண்மையிலை வந்து இந்த 'ரோலி'லை... 'பிளே' பண்ணின மாதிரி இருக்கு." என்றெல்லாம் பாராட்டித் தள்ளினார்...! ஜெமதர்மன், குளிர்ந்து போனார்! செய்தி ஆசிரியை மளமளவென்று ஏதோ கிறுக்கித்தள்ளத் தொடங்கினார்!

ஜெமதர்மன் சத்தியவானின் உயிரை திருப்பிக் கொடுத்துவிட்ட காட்சிக்கு மீண்டும் விசிலடிப்புக்கள் கைதட்டல்கள்..!

"இந்தக் கோதாரி பிடிச்ச இயமன்... செத்துத் துலையவேணும்...! அப்பதான் பாருங்கோ, எல்லாத்தையும் கூலா 'என்ஜொய்' பண்ணிக் கொண்டு நாங்களும், 'ஜென்றில்மென்' மாதிரியா, எண்டைக்கும் சாகாமல் இந்த உலக இயற்கையை, நியதியை, யதார்த்தத்தை, மறுவளம் திருவளமாக்கி, இறப்பையே வென்றிடும் யோசனையுடன் ஒருத்தர் வளவத்தார். இப்படியொரு மானிடம் தன்மனம் போனபோக்கில், தன்வாய் போன போக்கில் கதைத்துவிட்டதும் ஒரு கணம், பெரிதாய்த் திடுக்கிட்டுப்போன ஜெமதர்மன், இப்படிக் கடவுளைத் தூக்கிக் கவிழ்த்துவிடும் பாணியாய்க் கதைத்துவிட்ட இந்த, மானிடத்தின் வாழ்க்கை ஓட்டத்தைக் கடகடவெனக் கணித்தார். அந்த மானிடத்தின் 'பினிஷிங் பொயின்ட்' இந்தா பிடியென்ற கணக்காய், எட்டித் தொட்டுவிடப் போகும் தூரத்துக்கு வந்து விட்டதையும் அறிந்து கொண்டார்.

செய்தி ஆசிரியையின் கைகள் சுறுசுறுப்பாய்... விறுவிறுப்பாய்... 'பங்ஷன்' பண்ணிக்கொண்டிருக்க... இந்த, மானிடத்தின், 'ஹைப்பாட்' அலட்டலோடு குண்டம் 'கூல்றிங்'சாய்க் குளிர்ந்தே போய் விடுகின்றார்.

எனி.... எந்தக் கதைகாரியத்துக்கும் இடமில்லாத முறையில் பணிப்பாளர் 'போஸ்ற்' தமக்கேதானென்று எண்ணி தனக்குத்தானே கைலாகு கொடுத்தவிட்டவர் போலாகியும் விட்டார்.

இந்தக் கோழிப்புரியாணியும் தமது அதியுயர் ரேஸ்ற் கற்பனையில் உதித்த அதற்கும் மேலான, பூனைப் புரியாணியும் ஏனைய 'என்ஜோய்புல்' 'ஐயிற்றங்'களும்தான் வலும் 'ஈசி'யாய் தம்மை வந்து 'ரச்'பண்ணிக்கொள்ளும் என்றெல்லாம் குண்டனாரின் எண்ணங்கள் தறிகெட்ட குதிரையாய் ஓடிக் குதித்தன.

இப்படியே வந்ததில் செம்மணிச் சுடலையில் எல்லோருமாய் நின்றுகொண்டிருப்பது அப்போதுதான் அவருக்கு திடீரென ஞாபகத்திற்கு வந்தது. முடிசார்ந்த மன்னரும் ஒரு பிடி சாம்பல்தானென்ற இந்த மானிடத்தின் முடிவின் யதார்த்தம் அங்கே அச்சுறுத்தும் வகையாய் சொல்லப்பட்டிருப்பதுபோல் இரண்டு, மூன்று, எரிந்து சாம்பலாகி விட்ட, சடலங்களுக்குப் போட்டுக் கொளுத்தப்பட்ட, அரைகுறைக் கட்டைகளிலிருந்து ஒரு வெடில் நாற்றப்புகை வந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்தும் முகர்ந்தும் விட்டதும்தான், இதுதான் இந்தப் பூலோகத்துக்குக் கட்டக் கடைசி 'விசிற்', பூலோகத்து 'ஐயிற்றங்களி'ன், சிரசின் மீதே பெரிதாய் வாந்தி எடுத்து விடுமாப்போல ஜெமகுண்டனார் வயிற்றையும் மனதையும் பிரட்டித்தள்ள, எனியிந்த ஜெமலோகம் எப்ப..... என்றுதான் 'பிளையிற்'றுக்கு, அவசரப்பட்டுக் கொண்டிருந்தார்.

தம்முடைய, 'சப்ரரை' முடித்துக்கொண்ட செய்தி ஆசிரியை, இந்தப் பூலோகத்து..... 'உதயன்' பத்திரிகைக்கும் தோற்காத வகையில்...... இந்தப் பூலோக பயணம் தொடர்பான கட்டுரை ஜெமநாதத்தில் ஒரு, கலக்குக் கலக்கிக் கொண்டுதான் வரும் என்றெல்லாம் ஒரு, பத்திரிகையாளருக்குரிய யதார்த்தமாய்ப் பெருமைப்பட்டு, ஒரு மேட்டிமையாய் நின்று கொண்டிருந்தாள்.

அரூபி நிலையிலிருந்து, மீண்டு கொண்ட ஏயர் ஜெமலோகமான எருமை வாகனமும் தனது 'பிளைற்'றுக்கு ரெடியாகிவிடுகின்றது..!

விடிகாலப் பறவைகளின் விதம்விதமான ஓசைகள் ஒலிகள் இந்த, மானிடத்தின் ஈறாந்தத்தை ஏந்திக்கொள்ளும் செம்மணிக்கு வைகறை வணக்கம் கூறுமாப்போல் திடீரென்று, த்திறில்லாயொரு...... 'பட்டா படி' வாகனமொன்று செம்மணிக்குள் திடீர்பிரவேசமாகி விடுகின்றது! அதனுள்ளே! ஒரு, பிரசித்த 'ரெம்பிளில்' பரசுத்தியாய் அள்ளப்பட்டுவிட்ட பெறுமதிமிக்க பொருள்களும், எதிர்க்க வந்த கோவில் குருக்களைக் கண்டதுண்டமாய் வெட்டிப் பொடிபண்ணி நெல்லுச்சாக்கும்.... சாக்கு செம்மணியில் வீசப்பட...! குண்டத்தின் 'கமெரா' பல கோணங்களிலும் இதனை கிளிக்செய்தும்விட.... 'பிளையிற்', ஓகோவென்று புறப்பட்டது.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 370

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ✿ | 4 | 5 | 6 |
| 7 | | | ✿ | 8 | | | |
| 9 | | | 10 | | ✿ | 11 | |
| | ✿ | 12 | | | 13 | | ✿ |
| 14 | 15 | | ✿ | 16 | | ✿ | 17 |
| ✿ | | ✿ | 18 | | | 19 | |
| 20 | | 21 | | | ✿ | 22 | |
| 23 | | | | ✿ | 24 | | |

அனுப்புபவர் பெயர்:........................................

பூரணமான தபால் விலாசம்: ........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. காலம் பிந்துவது
4. நகைகளில் செய்யும் அலங்கார வேலை
7. உபகரணம்
8. பொருத்தமான
9. யமனிடமிருந்து கணவனை மீட்டெடுத்தவள்
11. ஒரு சரியை உருபு
12. நிற்றல்/ நிறுத்துதல்
14. பீதி அனுபவம்
16. செல்வம்
18. தொடக்கம்
20. சில்லு
22. மாங்கள
23. தலையில் சூடும் முடி
24. சமாதான சூழல்

### மேலிருந்து கீழ்

1. விடாய் தீர்த்தல்
2. உருமாறி
3. அந்தரப்படுதல்
4. சிரி
5. பல்லினால் வெளிப்படுத்தப்படும் சினக் குறிப்பு
6. மகன் எனப் பொருள்படும்
8. மிடி
10. மூன்று
13. வழங்கும்
15. ஒரு திசை
17. கணவன் - மனைவி
18. மாலை
19. பச்சைப் பசேலென்ற தோற்றம்
20. ஒரே அளவான
21. தாண்டு

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 368 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) விவசாயி (4) மாதவி (7) வானம் (8) ஈர்விழி (9) தம்பிமார் (11) ராசி (12) அப்பு (14) ஏணி (15) தம்புரா (16) நான் (17) கும்மி (18) நம்ப (19) கன (20) குண்டு (21) திட்டம்

### மேலிருந்து கீழ்

(1) விவாதம் (2)வனம் (3) சாம்பிராணி (4) மார் (5) தவிர்ப்பு (6) விழி (8) ஈர் (10) மாசி (12) அம்மி (13) புராதனம் (14) ஏன் (15)தம்பதி (16) நான்கு (17) கும் (18) நடு (19) கட

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.370
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(03.06.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.370 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 07.06.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 368 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
சி.பிரதீபா,
அந்தணத்திடல்,
கரவெட்டி.

**2 ஆம் பரிசு**
தேவதாசன் மோகேந்தர்,
அனிஞ்சியன் குளம்,
யோகபுரம்.

**3 ஆம் பரிசு**
திருமதி க.ராதாதேவி
தபாலக வீதி,
சாவகச்சேரி.

**4 ஆம் பரிசு**
சி.ஜோ.கிறேஸ் ஏஞ்சலின்
தென்னிந்திய
திருச்சபை,
அச்சுவேலி.

**5 ஆம் பரிசு**
திருமதி க.செல்வராணி
இல.61, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

க.பரமேஸ்வரி,
பண்டாவத்தை,
புலோலி வடக்கு,
பருத்தித்துறை.

சூ.யோ.மரியதாசன்,
அலுக்கை,
அளவெட்டி.

இரவீந்திரன் விமலாதேவி,
இல.61/6, பாரதிவீதி,
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி 368 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.



மூலம்:
தி கார்டியன்

# மகிழ்ச்சி மட்டுமே வாழ்க்கையல்ல!

நாம் எப்போதுமே நம்பிக்கையோடு வாழ வேண்டும், எது நடந்தாலும் அது நன்மைக்கே என்று எடுத்துக்கொள்ள வேண்டும், எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக்கப் பழக வேண்டும் என்ற ஆலோசனைகள் அனைத்துமே மனித மனதின் இயல்புகளைப் புரிந்துகொள்ளாததன் விளைவே. நான் என் கூட்டை உடைத்துக்கொண்டு வரப்போகிறேன், உங்களுக்கெல்லாம் அதிர்ச்சி தரக்கூடிய – ஏன் அவமானகரமான – உண்மையை ஒப்புக்கொள்ளப் போகிறேன். நான் மகிழ்ச்சியான மனிதன் அல்லன். தெருவில் போகிற ஆளைப் பார்த்து, ஏன் முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டிருக்கிறாய், மகிழ்ச்சியாக இரு என்று ஆலோசனை கூறும் ஆளும் அல்லன். காரணம், அப்படி எப்போதுமே நடக்காது.

அதேவேளையில், நான் மகிழ்ச்சியற்ற மனிதனும் இல்லை. சிரிப்பதில் எனக்கு விருப்பம்தான். என்னுடைய நாவல்களில் சிலவற்றை நல்ல நகைச்சுவைக் கதைகளாகவே படைத்திருக்கிறேன். எல்லோரையும் போலவே எனக்கும் உணர்ச்சிகள் மாறிமாறி வரும். சில வேளைகளில் மகிழ்ச்சியாக இருப்பேன், சில வேளைகளில் சோகமாக இருப்பேன், பெரும்பாலான நேரங்களில் எந்தவித உணர்ச்சியும் அதிகமாக இல்லாமல் சாவதானமாக – அதேவேலளயில் எதையோ சிந்தித்துக் கொண்டே – இருப்பேன். ஏமாற்றம், அச்சம், இழப்பு என்று அனைத்துக்குமே என்னுடைய வாழ்க்கையில் இடம் உண்டு. நம்பிக்கை, மகிழ்ச்சி என்பவை என்னுடைய வாழ்க்கையின் அங்கங்கள். எல்லா உணர்ச்சிகளும் எனக்கு ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். குறிப்பிட்ட இந்த உணர்ச்சிதான் என்று இல்லாமல் எல்லாம் கலந்த கலவையாகத்தான் ஒரு மனிதன் இருக்க முடியும் என்பதைச் சமூகம் ஏற்பதில்லை. நான் எப்போதும் பல்வேறுபட்ட உணர்ச்சிகளோடு தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருப்பேன். சிலவேளைகளில் கருணை பெருகும், சில வேளைகளில் உற்சாகம் என்னை ஆட்கொள்ளும், சில வேளைகளில் எதிர்பார்ப்பு மேலோங்கியிருக்கும். இப்படி இல்லாவிட்டால் சமூக விரோதியாகவோ, எல்லோரையும் சபித்துக்கொண்டிருக்கும் முதியவனாகவோதான் இருப்பேன். நல்லவர்கள்தான் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்கிற நம்பிக்கைபடிப் பார்த்தால் நான் நல்லவன் இல்லை. எல்லாவற்றையும்விட முக்கியம், நான் தோற்றுப் போனவன். ஏனென்றால், வெற்றி வீரர் [illegible]தானே எப்போதும் சிரித்துக் கொண்டிருக்க முடியும்?

### மகிழ்ச்சிதான் உரைகல்லா?

மகிழ்ச்சிதான் மனிதனை எடைபோட நல்லதொரு உரைகல் என்ற பாசிசக் கண்ணோட்டம் சமீபத்தில்தான் அமெரிக்காவிலிருந்து எல்லா நாடுகளிலும் இறக்குமதி ஆகியிருக்கிறது. வாழ்க்கையின் லட்சியமே மகிழ்ச்சிதான். கடுமையாக உழைப்பதன் மூலமும் கடைக்குப் போவது, விளையாடுவது, உடற்பயிற்சி செய்வது, தரும காரியங்களுக்கு நன்கொடை அளிப்பது, முதலாளித்துவத்தின் நவீனநாடகத்தில் நாமும் ஒருபங்காக இருப்பது போன்றவற்றின் மூலம்தான் நாம் மகிழ்ச்சியை அடைய முடியும் என்று நம்முடைய மனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

காரணம், மகிழ்ச்சி என்ற இலட்சியத்தை முதலாளித்துவம் விரும்புகிறது. மகிழ்ச்சி அடைய வேண்டும் என்றால், ஏராளமான நுகர்பொருள்களை நீங்கள் வாங்கிப் பயன்படுத்த வேண்டும். ஒருவேளை அந்தப் பொருள்களால் உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படாவிட்டால்? கவலையே வேண்டாம், மாற்றுப் பொருள்களை அவர்களே அறிமுகப்படுத்திவிடுவார்கள். வணிகம் என்பது உங்களுடைய சோகத்தைத்தான் அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது.

ஒல்லியாக இருந்தால், அழகாக இருந்தால், கவர்ச்சியாக இருந்தால், அனைவருக்கும் தெரிந்தவராக இருந்தால், அனைவரும் விரும்புகிறவராக இருந்தால், நீங்களும் மகிழ்ச்சியாக இருக்க முடியும்! இதற்கு உதவத்தான் செல்போன், கணினி, கார், சொக்லேட், ஆடைகள், நகைகள், வீடுகள் விற்கப்படுகின்றன!

நீங்கள் எப்போதும் சோகம் கப்பிய முகத்துடன் இருக்க வேண்டும் என்று சொல்பவன் அல்லன் நான். மாறாக, மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று விரும்புபவன். மகிழ்ச்சி உங்களுக்கும் உங்களைச் சுற்றியிருப்பவர்களுக்கும் நல்லது. நீங்கள் விரும்புகிறவர்களிடம் மகிழ்ச்சியாக இருப்பதும் அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதையும்விடப் பெரிய சாதனை ஏதும் இல்லை. அப்படி உங்களால் முடியாவிட்டால் அதற்காக நீங்கள் வெட்கப்பட வேண்டியதில்லை. அதைத்தான் நான் சொல்ல வருகின் றேன்.

நானும் எல்லா நேரமும் மகிழ்ச்சியாக இருக்கவே விரும்புகிறேன். ஆனால், அது சாத்தியம் என்று தோன்றவில்லை. செய்தி அலைவரிசைகளைத் திறந்தால் அதில் வந்து கொட்டும் சோகச் செய்திகளைக் கேட்கும் போது மகிழ்ச்சி கரைந்துவிடுகிறது. நான் நிரந்தர மானவன் அல்லன் என்ற உண்மையே என் மகிழ்ச்சியைக் குறைத்து விடு கிறது. முதுமையும் நோயும் என்னை அச்சுறுத்துகின்றன. தகவல் தொடர்புக்கான சாதனங்கள் அதிகமாக அதிகமாக மக்கள் தனிமைப்படுவதும் அதிகரிக்கிறது!

அதிகாரத்தில் இருப்பவர்களின் ஊழலும் கயமைத்தனமும் எல்லா இடங்களிலும் அநீதியே நிரம்பியிருக்கிறது என்ற உண்மையைப் பறைசாற்றுகின்றன. இந்த நாட்டின் பெரும்பாலான மக்கள் கடுமையாக, மேலும் கடுமையாக, முன்னிலும் அதிகமாக வேலை செய்வதே... இருக்கும் நிலையில் அப்படியே நீடிப்பதற்காகத்தான் அல்லது உயிர் வாழ்வதற்காகத்தான் என்றறியும் போது, என்னுடைய மகிழ்ச்சியெல்லாம் உறிஞ்சப்பட்டுவிடுகிறது.

நல்ல வேலைகள் அல்லது தொண்டுகள் மூலம் மகிழ்ச்சியடையலாம் என்று சிலர் கூறுவதுண்டு. இது வெறும் சித்தாந்தம்தான். நல்ல தொண்டை ஆரம்பித்துவிட்டு, மகிழ்ச்சியடைவதைப் போல ஏமாற்றத்தை அதிகரித்துக்கொள்வதற்கும் சம வாய்ப்பு இருக்கிறது. எனவேதான், நல்ல தொண்டுகளைச் செய்வதும் கடினமாக இருக்கிறது.

1970இல் தொடங்கி நாம் எல்லோரையுமே மகிழ்ச்சியாக வைத்திருக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டோம். ஆனால், நாம் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் எதிர்வினையையே தோற்றுவித்தன. கிடைப்பதைக் கொண்டு திருப்தியோடு வாழ்வது என்பதை அப்படியே ஏற்காமல், அந்தத் திருப்திக்கு மகிழ்ச்சி அவசியம் என்று நாமாகக் கற்பித்துக்கொண்டோம். இதனால் வாழ்க்கை திருப்தியாக அமைந்தால்கூட மகிழ்ச்சியாக இல்லையே என்று நுணுகிப் பார்த்து சோகத்தைத் தழுவுகிறோம்.

மகிழ்ச்சி மகிழ்ச்சி என்று தேடி அலைந்ததால் மகிழ்ச்சியற்ற நிலையில் வாழ்கிறோம். அப்போதெல்லாம் நாங்கள் மகிழ்ச்சியாக இருந்தோம் என்று சொல்லும் அளவுக்கு, குறிப்பிடத்தக்க அந்த காலகட்டத்தில் நாம் உண்மையில் முழுக்க மகிழ்ச்சியாக இருந்ததில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

> வெளிச்சம் இருளை நம்பித்
> தான் வாழ்கிறது! இதை நாம்
> ஒப்புக்கொண்டால் மகிழ்ச்சி,
> மகிழ்ச்சியற்றது என்ற
> விவகாரத்தில் நாம்
> மறுத்துக்கொண்டிருப்பதன்
> சுமை குறையும்.
> அப்படியென்றால் என்ன,
> நாம் முன்பைவிட மகிழ்ச்சி
> யோடு இருப்போம்!

### மனச்சோர்வின் காலம்

படுக்கையில் தள்ளுகிற அளவுக்கு மனச்சோர்வுநிலை இப்போது பலருக்கு முற்றிவிட்டது. பள்ளியில் படிக்கும் குழந்தைகள் முன்காலத்தைவிட அதிகமான மன அழுத்தத்துக்கு ஆளாகிறார்கள், ஆசிரியர்களும் அப்படியே. 35 வயதுக்குக் கீழே உள்ள ஆடவர்களில் பலரின் சாவுக்குத் தற்கொலையே காரணமாக இருக்கிறது.

தொலைக்காட்சிகளும் இணையதளங்களும் மிகவும் மகிழ்ச்சியான, துடிப்பான, உற்சாகம் மிகுந்த ஒரு சமுதாயம் நம்மிடையே இருப்பதுபோலப் பாவனை காட்டுகின்றன. அதைப் பார்க்கும்போது நல்ல சம்பாத்தியம் இருந்தாலும், வாழ்க்கையில் பெரிய குறைகளோ, தோல்விகளோ இல்லாவிட்டாலும் என் வாழ்க்கை, திரையில் காட்டப்படுகிறவரின் வாழ்க்கை அளவுக்கு மகிழ்ச்சிகரமாக இல்லை என்ற எண்ணமே ஏற்படுகிறது. வாழ்க்கை என்பது சிலவேளைகளில் நன்றாகவும் சில வேளைகளில் மோசமாகவும் இதர வேளைகளில் இரண்டும் கலந்துதான் காணப்படுகிறது. ஆனால் நாம் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என நினைக்க நிர்ப்பந்திக்கப்படுகிறோம்.

பழங்காலத்தில் வாழ்ந்தவர்கள் மகிழ்ச்சி என்பதற்கு வேறு இலக்கணம் வைத்திருந்தனர். வாழ்க்கையில் தமக்கு ஏற்படக்கூடிய தோல்விகள், ஆபத்துகள், துயரங்கள் குறித்து அவர்கள் தெரிந்து வைத்திருந்தனர். நீ நினைக்கிறபடி அது மோசமாக இருக்காது, படு மோசமாக இருக்கும் என்று அறிவுறுத்தி வந்தார்கள். ஆனால், இப்போதோ வேறு மாதிரி கேள்விப்படுகிறோம்.

ஆக்கபூர்வமான எண்ணங்கள் நமக்கு இருந்தால் வான மேகங்களில் நாமும் சிறகடித்துப் பறக்கலாம் என்று இப்போதைய சிந்தனையாளர்கள் உண்மைக்கு மாறாகக் கூறுகிறார்கள். 'ஸ்லாவாய் ஜிஜெக்' கூறியதைப் போல நான் கூற விரும்பவில்லை. உங்களை மிகவும் மன அழுத்தத்தில் ஆழ்த்துவது எது? என்று ஒருமுறை அவரிடம் கேட்டபோது, முட்டாள்களின் மகிழ்ச்சிதான் அது என்று பதில் அளித்தார். ஆனால், அவர் எதைச் [illegible] வந்தார் என்று எனக்குப் புரிகிறது.

அறிவாளியாகவும் உணர்ச்சிமிக்[illegible]கவும் சிந்தனையோடும் இருப்பவர்[illegible] உலகையும் தன்னையும் பார்க்கிற [illegible]யானது பெரிய வியப்பு எதையும் [illegible] விடாது. வெளிச்சம் இருளை நம்பித் [illegible] வாழ்கிறது! இதை நாம் ஒப்புக்கொண்[illegible] மகிழ்ச்சி, மகிழ்ச்சியற்றது என்ற விவ[illegible]தில் நாம் மறுத்துக்கொண் டிருப்பதன் [illegible] குறையும். அப்படியென் றால் என்ன[illegible] முன்பைவிட மகிழ்ச்சி யோடு இருப்[illegible]

ஜோ.ஜெஸ்ரின்.



# கோபமும் ஒரு கொலைதான்

சமையல் முடித்து சற்று நேரம் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தாள் நிசா. பிற்பகல் 3.15 மணிக்கு ஒரு குறும்தகவல் அவளது தொலைபேசிக்கு வந்திருந்தது. "உன்னுடையவன் என்னுடன்தான் இருக்கின்றான். இப்போது நாடகம் பழக்கிக் கொண்டிருக்கின்றான்." என்றது அந்தக் குட்டிச் செய்தி. அதைப் பார்த்தும் நிசாவுக்கு ஒரு விதமான கோபம் பொங்கி வந்தது. இருந்தாலும் சற்றுநேரம் சிந்தித்துக்கொண்டிருந்தாள்....

அப்போது வித்தியாசாகரின் செல்பேசியிலிருந்தும் ஒரு குறும்தகவல் பறந்து வந்தது. "நிசா நான் நாடகம் பழகிக்கொண்டிருக்கின்றேன். உன் புருசன் பிசி. பின்னர் கதைக்கின்றேன்" என்றது அந்த வைபர் செய்தி.

ஏற்கனவே இருந்த கோபத்தில் நிசா தன் செலபேசியை எடுத்து மளமளவென எழுத்துக் கோர்த்தால். சற்று நேரத்தில்... "இனிமேல் என்னோடு கதைக்கவேண்டாம். எஸ்.எம்.எஸ். அனுப்பவேண்டாம். நேரில் என்னைப் பார்க்கவும் வரவேண்டாம்" என்ற வார்த்தைகளுடன் நிசாவின் பதில் அவள் புருசனின் செல்பேசியில் டிங் என்றது.

வித்தியாசாகருக்கு இனம்புரியாத கலக்கம் ஏற்பட்டது. செய்தி இயல்பைக் குலைத்தது. என்ன நடந்தது? ஏன் இப்படி ஒரு தகவல்? அறிய ஆவலாக இருந்தது. ஆனால் கடமை தடுத்தது. கடமைக்கு முன்னுரிமை கொடுத்தான். நாடக ஒத்திகையிலேயே சற்று நேரம் கண்ணயிருந்தான். ஆனால் மனசு ஒட்ட மறுத்து அடம்பிடித்தது. "எப்படியாகினும் நேரில் சென்று கதைக்கவேண்டும்" என்று முடிவெடுத்தான். ஒத்திகையை அவசர அவசரமாக முடித்ததும் கொடிகாமத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி அவனது மோட்டார் சைக்கிள் பறந்தது.

"வாங்கோ மாப்பிள்ளை! என்ன இந்த நேரத்தில் வந்திருக்கிறியள்?" "இல்லை! இங்கால ஒரு அலுவலாக வந்தனான். அதுதான் வந்தன். உடன கொடிகாமம் திரும்ப வேணும்" என்று சமாளித்துவிட்டான். ஆனால் அதிர்ஷ்டம் அவனுடன் கூட இருக்கவில்லை. நிசா சொல்லாமல் கொள்ளாமல் எங்கேயே சென்றுவிட்டாள் என்ற செய்தி அவனை மேலும் கலங்கடித்தது.

வித்தியாசாகர் ஒவ்வொரு கணத்தையும் கடக்கப் பெருந் துடிப்புடன் இருந்தான். பின்னர்தான் தெரிந்தது சீனி முடிந்ததால் அருகில் உள்ள கடைக்கு சீனி வாங்கச் சென்றிருந்தாள் நிசா என்று. சுவையான தேநீரை பருகத்தந்தாள். ஆனால் முகத்தில் மலர்ச்சியில்லை. வரவேற்பில் ருசியில்லை.

அன்று பௌர்ணமி நாள். முற்றத்தில் அமர்ந்திருக்கின்றாள் நிஷா. வட்ட வடிவமாக நிமிர்ந்து நிற்கும் நிலாவை பார்க்காமல் தலைகுனிந்திருந்தாள் அவள். எதுவும் பேசவில்லை என்பது அவனுக்கு கலக்கமாகவே இருந்தது. "நீங்கள் அருகில் வரவோ டச் பண்ணவோ வேண்டாம். போய் வாருங்கள்!" என்ற நிசாவின் வெறுப்பான வார்த்தைகள் அவனுக்கு வலித்தது.

முல்லைத்தீவில் இருந்து கொடிகாமத்துக்கு உடன் திரும்பியே ஆகவேண்டும் என்ற நிலை அவனுக்கு. "சரி! நிசா நான் போட்டுவாறான்" என்ற போது வாசல் வரைவந்து வழியனுப்பி வைத்தாள். ஆனால் புன்னகையில் புத்துணர்ச்சியில்லை. குழப்பதுக்கான காரணம் புரியாத புதிராகவே தொடர்ந்தது அவனுக்கு.

> **தனக்கு வரப்போகும் மணமகன் வேறு யாருடனும் தொடர்பற்றவராக இருக்கவேண்டும் என்று நினைத்தவளுக்கு... இப்படி ஒரு தகவல் முதலில் வியப்பையும் போகப் போகப் பயத்தையும் இறுதியில் கோபத்தையும் கொண்டு வந்தது.**

முல்லைதீவு வீதிகளை அவனது மோட்டார் சில்லுகள் கோபத்துடன் சீறித் தேய்த்தன. அதைவிடக் கோபத்துடன் அவனது மனது கனன்று கொண்டிருந்தது. ஒரு பார்வை, ஒரு முத்தம் எதுவும் அவனுக்கு இல்லாமல் போனதுகூட வருத்தம் இல்லை. அது ஏன் இல்லாமல்போனது என்பது தெரியாமல் போனமைதான் மண்டையைக் குடைந்து கொண்டிருந்தது.

ஒரு அநாமதேய குறுந்தகவல்தான் இத்தனை குழப்பங்களுக்கும் காரணம் என்று அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. கொடிகாமத்தில் நாடகம் பழக்கிக் கொண்டிருக்கும் வித்தியாசாகர் என்னுடன்தான் உல்லாசமாக இருக்கிறார்... என்று ஒரு பெண்ணின் பெயரைப் போட்டிருந்த அநாமதேய குறும்தகவல் மெல்லத் தன் வேலையைக் காட்டியது.

அந்தத் தகவலும் தொடர்ந்து வித்தியாசாகரிடம் இருந்து வந்த தகவலும் நிசாவுக்கும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தன.

தனக்கு வரப்போகும் மணமகன் வேறு யாருடனும் தொடர்பற்றவராக இருக்கவேண்டும் என்று நினைத்தவளுக்கு... இப்படி ஒரு தகவல் முதலில் வியப்பையும் போகப் போகப் பயத்தையும் இறுதியில் கோபத்தையும் கொண்டு வந்தது.

வித்தியாசாகர் நயவஞ்சகமான செயலை செய்தானா என்று ஆராயந்து கொண்டிருந்தாள்.

வித்தியாசாகர் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தில் பட்டம் எடுத்து கொடிகாமத்தில் நாடக ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

நிசாவைப் பெண் பார்த்து நிச்சயம் நடத்திய பின்பு இருவருக்குள்ளும் பாசம் முளைவிடத் தொடங்கியது. அது வளர்ந்து பயிராவதற்குள் பிரச்சினை குறுந் தகவல் ரூபத்தில் சத்தத்துடன் வந்து சேர்ந்தது. சந்தேகம் விதையாகிவிட்டது. அதுவே விபரீதத்தை விருட்சமாக்கியது.

இரவு 8மணிக்கு வானொலிச் செய்தியில் ஆனையிறவுப் பகுதியில் மோட்டார் வாகனம் ஒன்று மின்கம்பத்துடன் மோதியதில் இளைஞன் பரிதாபச் சாவு என்று அறிவித்தார்கள்.

என்னதான் நடந்தது என்று நிசா இன்னமும் தேடிக்கொண்டிருக்கிறாள்.

---

# எங்கே நிம்மதி எங்கே நிம்மதி

கலாபூஷணம் மு.மாசிலாமணி

தலைப்பை வாசித்ததும் மூத்த வாசகர்களுக்கு பழைய சினிமா பாடல் ஒன்று ஞாபகத்துக்கு வரலாம். 'அந்தநாள் ஞாபகம் வந்ததே' எனும் பாடலும் மனத்திரையில் ஓடலாம்.

சினிமாப் பாடல்கள் பழையனவாகவோ புதியவையாகவோ இருப்பினும் எமது சமுதாயத்துக்கு பல நல்ல கருத்துக்களை அப்பப்போ சொல்லி வருகின்றன. மூத்த பிரஜைகள் அடிக்கடி சொல்வது என்ன பாட்டுகள் வந்தாலும் அந்தக்கால பாட்டுகளைப்போலை வராது என்பதுதான்.

தியாகராஜ பாகவதர் படங்களில் வந்த பாடல்கள், தமிழில் பண்டிதர் பட்டம் பெற்றவர்களுக்குத்தான் புரியும். பாமர மக்கள் இசையை மட்டுமே ரசித்தனர் என்பதுதான் உண்மை. அவரது பாடல்கள்தான் பலருக்குப் புரியாமல் இருந்தது என்றால் தற்கால சினிமா கவிஞர்களும் தமது திறமையைக் காட்டி வருகின்றனர். தியாகராஜ பாகவதர் காலத்து பாடலில் வதனமே சந்திர பிம்பமோ மலர்ந்த சரோசமோ? என கதாநாயகியின் அழகை வர்ணிக்க வைரமுத்து போன்றோர் ஆம்பர் ஆம்பர் என எழுதி இசைக்காகத் தமிழை வருத்தி வருகின்றனர். அது மெட்டுக்கு பாட்டாம்.

நிற்க. நான் சொல்ல வந்த விடயம் எமது சமுதாயம் வேண்டி நிற்பது நிம்மதிதான். அந்த நிம்மதி முக்கியமாக யாழ். குடாவில் இல்லவே இல்லை என்பதுதான்.

அதிகாலை நான்கு மணிக்குப் பின் எமது கோயில்களின் மணியோசையும் ஒலிபெருக்கியின் ஓலமும் நிம்மதியாகத் தூங்கும் வயோதிபர்கள். சிறுவர்கள் என பாரபட்சம் இல்லாமல் துயில் எழுப்பி விடுகின்றன. மாணவர்கள் காலையில் எழுந்து படித்தால் பாடங்கள் இலகுவாக மனதில் பதியும். ஆனால் எமது கோயில் குளாய்களின் ஒப்பறேற்றர் அவர்களைப் படிக்கவிடாமல் 100 டெசிபெல் அளவில் பாட்டைப்போட்டு குளப்பிவிடுவார். சரி! றேடியோவைத்தான் கேட்போம் என்றால் ஒவ்வொரு வானொலியும் தமது வானொலியை சத்தமாக போட்டு பாட்டைக் கேட்கும் நேயர்களைப் புகழ்ந்து நேயர்களை நோயர்களாக மாற்றி விடுகின்றனர்.

அண்மையில் எனது நண்பர் ஒருவரின் இறுதி யாத்திரைக்குச் சென்றிருந்தேன். இறுதிச் சடங்கு முடிவுற்று அவரது பூதவுடல் இறுதியாத்திரை புறப்பட இளைஞர்கள் வெடிகள் வெடித்து குதூகலம் கொண்டாடி பட்டாஸ்களை கொளுத்தி வீதியால் போவோர் வருவோரைக் கவனத்தில் கொள்ளாது வீசி எறிந்து மகிழ்வதைக் காணக்கூடியதாக இருந்தது. இறந்தவரோ மிகவும் பண்பானவர். அவர் இந்தச் செயலை முற்கூட்டியே அறிந்திருந்தால் மிகவும் வருந்தியிருப்பார். அவரது உறவினர்கள் இதையயல்லாம் கவனத்தில் கொள்வதில்லை.

இறுதியாத்திரையிலும் ஆரவாரமாகப் போகவேண்டுமென விரும்புகிறார்களே தவிர இறந்தவரின் விருப்பத்தைக் குறித்துச் சிந்திக்கிறார்கள் இல்லை. கண்ணீர் அஞ்சலி நோட்டீஸ்களை அடுத்தவர். அயலவர்கள் அனுமதி யின்றி மதில் சுவரில் ஒட்டி விலாசம் காட்டுவதில் இன்பம் அடைகின்றனர். இப்பொழுதெல்லாம் கலியாண வீடு. சாமத்தியச் சடங்கு. பிறந்த நாள் எனக் கொண்டாட்டங்களுக்கு பெரிய பெரிய பொக்ஸ் ஒலிபெருக்கிகளை உச்ச ஒலியில் ஒலிக்கவிட்டு. குறைந்தது அயலில் உள்ள பத்து வீட்டுக்காரர்களையாவது குழப்பி விடுவதில் இன்பமடைகின்றார்கள் நம் மக்கள்.

எங்கே நிம்மதி எங்கே நிம்மதி எனப் பாடிவிட்டு வாயை மூடிக்கொண்டு இருக்கவேண்டியதுதான் என முடிவெடுக்க. முயற்சி செய்ய. இளைஞர் ஒருவர் எனது ஆதங்கத்தைப் புரிந்துகொண்டு அங்கிள் யாழ்ப்பாணத்தில் நிம்மதியாய் இருக்க விரும்பினால் இருக்கவே இருக்கிறது என்னிடம் மருந்து என்றார். 'அது என்ன மருந்து தம்பி எனக் கேட்ட போது சகல விதமான போதை வஸ்துகள். மதுபானங் கள் தாராளமாய் தரலாம்' எண்டார்.



# காதல்: மூளையின் விளையாட்டுத்தான்

மனிதன் காதலை உணர ஆரம்பித்ததிலிருந்து காதலைத் தன்னால் முடிந்த அளவு கொண்டாடி வருகிறான். காதலால் சாம்ராஜ்யங்கள் எழும்பியுமிருக்கின்றன, வீழ்ந்துமிருக்கின்றன. ஆதி மனிதன் நாகரிக மனிதனாவதற்குக் காதல் முக்கிய காரணம் என்று கவிஞர்களும், ஏன் வரலாற்றாளர்களும், அறிவியலாளர் களும்கூடச் சொல்கிறார்கள்.

காதல், குறுக்கு வெட்டி விளக்க முடியாத அற்புத உணர்வு. காமம் என்று சொல்லப்பட்டாலும் அது காமம் மட்டுமல்ல, நேசம் என்று சொல்லப்பட்டாலும் அது நேசம் மட்டுமல்ல. அது உயிரின் ரகசியத்தைப் போல, கடவுளைப் போல, பிரபஞ்சத்தின் தோற்றுவாய் போல முழுவதும் வரையறுக்க முடியாத ஒன்று.

இப்படி எத்தனையோ கவிதைகளையும் விளக்கங்களையும் காதலுக்கு அளித்தாலும் உண்மையில் காதல் என்ற உணர்வு என்ன? அது ஏன் இவ்வளவு அழகாக இருக்கிறது? மனிதர்களை உற்சாகமாக்குகிறது, நேசம் மிகுந்தவர்களாக்குகிறது, சாதிக்கவும் வைக்கிறது, சாகடிக்கவும் செய்கிறது. காதலின் இந்த வலிமைக்கு என்னதான் காரணம் என்று விஞ்ஞானம் தொடர்ந்து தேடிவருகிறது. அந்தத் தேடலுக்குச் சில விடைகளும் கிடைத்துள்ளன.

சீன விஞ்ஞானிகள், காதலில் இருப்பவர்கள், காதல் முறிந்தவர்கள், இதுவரை காதலே புரியாதவர்கள் என மூன்று தரப்பிலிருந்தும் தலா 34 நபர்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தியிருக்கிறார்கள். மூன்று தரப்பிலும் சேர்த்துப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 102 பேரும் ஒரே வயது மற்றும் ஒரே மாதிரியான சமூக நிலையிலிருப்பவர்கள்.

இந்தப் பரிசோதனையில் காதல் குறித்த அறிவியல் உண்மைகள் பல புரிய வந்திருக்கின்றன. காதலில் இருப்பவர் களுக்கு மூளையின் சில பகுதிகளில் செயல்பாடு அதிகரித்திருக்கிறது. அவர்கள் காதலில் செலவழித்த நேரத்தைப் பொறுத்து மூளையின் சில பகுதிகளின் செயல்பாடும் அதிகரித்திருக்கிறது. அதே சமயம் காதலில் முறிந்தவர்களுக்கும், காதலிக்காதவர்களுக்கும் முன் சொன்ன மூளைப் பகுதிகளின் செயல்பாடு காதலில் இருப்பவர்களைவிடக் குறைவாகவே இருந்துள்ளது.

மூளைப் பகுதிகளின் செயல்பாடுகளைத் தூண்டிவிடும் ஆற்றல் ஆக்சிடோசின், செரோடின் போன்ற மூளை வேதிப் பொருள்களால் ஏற்படுகிறது. இந்த வேதிப் பொருள்கள் சுரக்கும்போது மேற்சொன்ன மூளைப் பகுதிகளின் செயல்பாடுகள் அதிகரித்து இன்பத்தை உணர்கின்றன. மூளையின் பகுதிகள் இன்பமாக உணர்வதால், உலகம் ரம்மியமாகிறது, ரசனை பெருகுகிறது, அன்பு பொங்குகிறது. ஆனால், காதல் வந்தவுடன் குறிப்பிட்ட இந்த வேதிப் பொருள்கள் எப்படிச் சுரக்கின்றன? மூளைப் பகுதிகளில் ஏற்படும் இந்த வேதியல் மாற்றம் காலத்திற்கும் நீடிக்குமா? மூளைப் பகுதிகளின் வேதியல் மாற்றங்களைப் பரிசோதித்து அதன் மூலம் ஒருவர் உண்மையில் காதலில் இருக்கிறாரா என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா? வேதியல் விளையாட்டுகளைத் தாண்டி உயிரைப் போன்றே காதலும் முழுவதும் வரையறுக்க முடியாத செயல்பாடல்லவா? நேசத்தை உயிர் வேதியியலின் அடிப்படையில் விளக்கிவிட முடியுமா?

இப்படி மேலும் பல கேள்விகள் கிளம்பிய வண்ணம் இருக்கின்றன. ஆனால் உயிரையும் பிரபஞ்சத்தையும் காதலையும் விஞ்ஞானம் ஒரு நாள் முழுவதுமாக விளக்கிவிடலாம். எது எப்படியானாலும், காதல் என்று ஒன்று இல்லை. ஈர்ப்பு என்று ஒன்று இல்லை எல்லாம் மாயை என்ற பம்மாத்துக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டது அறிவியல்.



## எங்கும் எழுதலாம்! எதிலும் எழுதலாம்!

தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். "அவரோட முகவரியா சொல்றேன் எழுதிக்கொள்" என்றதும் நமது கைகள் பரபரக்கும். அப்போதான் பேனாவையும், பேப்பரையும் தேடுவோம். கிடைக்காது. பதற்றத்தில் எரிச்சல்படுவோம். இனிமேல் அதெல்லாம் வேண்டவே வேண்டாம்.

பேப்பரில் மட்டும் அல்ல, உள்ளங்கையில், சுவரில், தரையில், பக்கத்தில் இருப்பவரின் முதுகு, எதிரில் இருப்பவர் முகம் உள்பட எதில் வேண்டுமானாலும் இப்படி அவசரத்துக்கு எழுதலாம். அப்படிப்பட்ட மாயப் பேனா தயாராகிவிட்டது.

இஸ்ரேலைச் சேர்ந்த 'ஓ.டி.எம். டெக்னோலஜிஸ்' எனும் நிறுவனம் 'ப்பிரி'எனும் அந்த மாயப் பேனாவைத் தயாரித்துவிட்டது. செல்போன், ரப்லெட், லப்டாப் உள்ளிட்ட ப்ளூடூத் டெக்னாலஜி உள்ள எந்த ஒரு கருவியிலும் அது இணைந்துகொள்ளும். அந்த மாயப் பேனாவை வைத்துக் குழந்தைகள் ஓவியம் வரையலாம். பெரியவர்கள் குறிப்புகள் [illegible]தலாம். பெரிய திரையில் வரைபடம் வைத்து விவா[illegible]க்கும் பெரிய மனிதர்கள் ஒவ்வொருவரும் அதில் தங்கள் குறிப்புகளை வரைந்து விவாதத்தைத் தெளிவாக நடத்தலாம். மைக்ரோ சொப்ட் ஓபிஸ், வன்நோட் போன்ற மென்பொருள்களிலும் இது இணைந்துகொள்ளும்.

எதிலும் எங்கேயும் எழுதலாம். உலகமே உங்கள் பேப்பர்தான். சும்மா எழுதுவதற்கு மட்டுமா? அதுவே ஒரு ப்ளூடூத் ஹெட்செட். காதிலே மாட்டிக்கொண்டு பேசலாம். இசை கேட்கலாம். குறுஞ்செய்திகளை அனுப்பலாம்.

இந்த ஆல் இன்ஆல் அழகுராஜா மாயப்பேனா 30 கிராம் எடையில் 8.5 மில்லிமீற்றர் அகலத்தில் இருக்கும். அடுத்த வருடம் சந்தைக்கும் வருகிறது. சுமார் 25 ஆயிரம் ரூபாய் வரை விலை இருக்கலாம்.



## நாயோடு என்ன உறவு?

நாய்கள் தங்கள் எஜமானர்களை அதிக நேரம் வெறித்துப் பார்க்கும்போது எஜமானர்களின் தலையில் ஹார்மோன் எழுச்சி அடைகிறது. அந்த ஹார்மோனின் விரைவு நடவடிக்கைதான் இருவரையும் பிரியம் கொள்ளத் தூண்டுகிறது என்று ஜப்பானிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான வருடங்களாக நீடிக்கும் மனிதர்கள்-நாய்கள் நட்புக்கு இந்த ஹார்மோன் அடையும் உற்சாகம்தான் காரணமாம். அந்த ஹார்மோனின் பெயர் ஆக்சிடோசின். எஜமானர்களுக்குக் கிடைக்கும் உற்சாகம் அதே அளவு நாய்களின் மூளையிலும் நிகழும் என்கின்றனர்.

இதே ஆக்சிடோசின் ஹார்மோன்தான், குழந்தையின் கண்களைத் தாய் பார்க்கும்போதும் அவருடைய மூளையில் பெருகிவழியுமாம். இந்த உடல்ரீதியான விளைவுதான் தாய்மை உணர்வை உருவாக்குகிறது. அத்துடன் அந்த நிகழ்வு தாய்க்கும் குழந்தைக்கும் உளப் பிணைப்பையும் அதிகரிக்கிறது.

நாய்களுக்கும் மனிதர்களுக்கும் இவ்வளவு சிறப்பான பிணைப்பு ஏன் திகழ்கிறது என்பதைப் புலனாய்வு செய்வதற்கு சில வேடிக்கையான பரிசோதனைகளையும் விஞ்ஞானிகள் நடத்தியுள்ளனர். 30 நாய் உரிமையாளர்களை அரைமணி நேரம் அவரவர் செல்லப் பிராணிகளுடன் விளையாடச் செய்தனர்.



அவற்றில் ஆண் நாய்களும் பெண் நாய்களும் உண்டு. விளையாட்டுக்கு முன்னும், பின்னும் எஜமானர், பிராணிகள் இரு தரப்பினரிடமும் நடத்தப்பட்ட சிறுநீர் பரிசோதனைகளில் ஹார்மோன்கள் கிளர்ச்சி அடைந்திருப்பது தெரியவந்தது.

மனிதர்களுடன் ஏன் நாய்கள் இணக்கமாக இருக்கின்றன என்பது குறித்து ஆழமாக அறிந்துகொள்வதன் வழியாக நமது நாகரிகத்தின் தொடக்கத்தை நோக்கிப் போகலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

## நீங்களும் நடிக்கலாம் வாங்க

'டப்ஸ் மாஷ் அப்' அப்ஸ் பற்றித் தெரியுமா உங்களுக்கு? உங்களுக்குள் தூங்கிக் கொண்டிருக்கும் நடிகரைத் தட்டி எழுப்பும் அன்ட்ராய்டு அப்ஸ்தான் இது. இதை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து உங்களுக்குப் பிடித்த நடிகர்களின் வசனங்களை உங்களது முகப் பாவனையில் அவர்களது குரலில் பேசலாம்.

அதெப்படி? டப்ஸ் மாஷ் ஆப்பில் தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் படங்கள் என பஞ்சு டயலாக்குகள் பதிவாகியிருக்கும். அது மட்டுமல்லாமல் அரசியல்வாதிகள், பிரபலங்களின் முக்கிய வசனங்களும் ஒரு குரல் வங்கிபோலச் சேமிக்கப் பட்டிருக்கும். அதில் ஏதோ ஒரு வசனத்தைத் தேர்ந்தெடுத்தவுடன், உங்கள் ஸ்மார்ட் போன் செல்ஃபி கேமரா தானாகவே ஆன் ஆகிவிடும். உடனடியாக அந்த வசனம் ஒலிக்கும் அதன் வரிகளும் ஓடும்.

இப்போது அந்த வசனம் ஆடியோவாக ஓட அந்தப் படத்தில் நடிகர் காட்டிய ரியாக்ஷனை நீங்களே நடித்துக் காட்டி அதை வீடியோவாகப் பதிவு செய்வதுதான் டப்ஸ்மாஷ். இதில் நடிகர் வடிவேலு மற்றும் ரஜினியின் பஞ்ச் டயலாக்குகள்தான் எக்கச்சக்கமாக பதிவு செய்யப் பட்டுப் பேஸ் புக்கில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.



# போர் வெற்றியும் தோற்கடிக்கப்பட்ட பிரிவினை வாதமும்

சந்திரசேகர ஆசாத்



தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஆயுத வடிவம் பெரும் பின்னடைவுக்கு உட்படுத்தப்பட்டு மௌனமாகி ஆறு வருடங்கள் கடந்துவிட்டன. காலம் வருடங்களால் கடந்து கொண் டிருந்த போதிலும் இந்தப் போரில் அரச படைகள் பெற்ற வெற்றியை மூலதனமாகக் கொண்டு இனவெறி அரசியல் வர்த்தகம் மஹிந்த ராஜபக்ஷவாலும், அவரின் ஆட்சி பீடத்தாலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தது. சிங்கள தேசத்தின் அரசியலில் இனவாதம் ஒரு லாபகரமான மூலதனமாக விளங்கி வருவதால், அதை உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டே எந்த விதமான மக்கள் விரோத நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும் என்றொரு நிலை நிலவி வருகிறது.

அந்த வகையில் கடந்த 6 வருடங்களாக மஹிந்த ராஜபக்ஷ அரசு தமிழ் மக்களுக்கு எதிரான போரின் வெற்றியை வருடா வருடம் பிரமாண்டமான முறையில் கொண்டாடி வந்தது. நகரங்களிலிருந்து மட்டுமல்ல தொலைதூரக் கிராமங்களிலிருந்தும் கூட லட்சக் கணக்கான மக்களைப் பேரூந்துகளில் ஏற்றிச் சென்று ஒரு மையத்தில் குவித்து பிரமாண்டமான விழாக்கள் நடத்தப்பட்டன. இராணுவத்தினருக்குப் பாராட்டு என்ற பேரில், அந்த இராணுவத்தை வெற்றியை நோக்கி வழி நடத்திய மாபெரும் தலைவராகவும், நாட்டைப் பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றிய ஒப்பற்ற வீராதி வீரனாகவும் சிங்கள மக்கள் மத்தியில் மஹிந்த ராஜபக்ஷ தன்னை நிலை நிறுத்த இந்த விழாக்களைப் பயன்படுத்திக் கொண்டார். ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேசம் போர்க் குற்றங்களையும் மனித குல விரோத நடவடிக்கைகளையும் முன் வைத்து கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றும் போது அவற்றைப் பெருமைக்குரிய சாதனையாக சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் காட்டுவதற்கு இந்த விழாக்கள் முழுவீச்சில் பயன்படுத்தப்பட்டன.

அதேவேளையில் அதே 6 வருட காலப் பகுதியில் தமிழ், முஸ்லீம் மக்களுக்கெதிரான கொடிய இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளும் தொடர்ந்து கொண்டே இருந்தன. அந்த ஒடுக்குமுறைகள் பயங்க்ரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் எனவும், முஸ்லிம் அடிப்படை வாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் எனவும் வர்ணம் பூசப்பட்டு நியாயப் படுத்தப்பட்டன.

எனினும் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம்நாள் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் அவர் போட்டு வைத்த இனவாத வலையையும் தாண்டி அவரைத் தோல்விக்குள் தள்ளி விட்டது. எனினும் நீண்ட காலமாக சிங்கள அரசியல் தலைமைகளால் பின்னப்பட்டு, பின் அவரால் வலுப்படுத்தப்பட்ட இன வாத வலை தொடர்பான நம்பிக்கையை அவர் இழக்கவில்லை. அதை இறுகப் பற்றியவாறு மீண்டும் மேலெழ பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்.

எனினும் ஆட்சி அதிகாரம் மைத்திரிபால சிறிசேனவிடம் கைமாறி விட்டதால் இந்த வருடம் போர் வெற்றி விழா ரத்துச் செய்யப் பட்டுவிட்டது. வழமை போலவே மாத்தறையில் பிரமாண்டமான முறையில் கொண்டாடப் பட்டிருந்த் அந்த விழா இம்முறை இல்லாமற் செய்யப்பட்டதுடன் அது பிரிவினை வாதத்தைத் தோற்கடித்ததன் நிறைவு விழாவாக நடத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆறு வருடங்களில் தெற்கில் போர் வெற்றி கோலாகலமாகப் பெரும் பொருள் செலவில் கொண்டாடப்பட்டு தமிழ் மக்களுக்கு மீண்டும் மீண்டும் அவர்கள் அடிமைப்படுத்தப்பட்டு விட்டனர் என்ற மன ஓட்டத்தைத் திணிக்க முயற்சிகள் முழுவீச்சில் இடம்பெற்ற வேளையில், வடக்கு - கிழக்கில் போரில் உயிரிழந்த தமிழ் மக்களை நினைவு கூரும் உரிமை கூட மிருகத் தனமாக மறுக்கப்பட்டது. அப்படித் தடைகளையும் மீறி நினைவு கூர தமிழ் மக்கள் முற்பட்ட வேளையில் ஆயுத வன்முறைகள் மூலம் தடுக்கப் பட்டனர். ஏற்றப்பட்ட சுடர்கள் காலால் உதைத்து அணைக்கப்படுமளவுக்குக் கூட மிருகத்தனம் மேலோங்கி இருந்தது. எங்கும் படையினர் குவிக்கப்பட்டு அச்சுறுத்தும் சூழல் உருவாக்கப் பட்டது.

ஆனால் இந்தவருடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மே-18, போர் வெற்றி தினம் அல்ல எனவும் இது போரில் உயிரிழந்த அனைவரையும் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தும் தினம் எனவும் பகிரங்கமாக அறிவித்தார். அதன் மூலம் போரில் உயிரிழந்த இராணுவத்தினரை மட்டுமன்றி தமிழ், முஸ்லிம் மக்களையும் நினைவு கூர்ந்து அஞ்சலிக்க முடியும் என்ற செய்தி வெளியிடப்பட்டது. அந்த வகையில் முல்லைத்தீவில் சில இடையூறுகளைப் பொலிஸார் மேற்கொண்ட போதிலும் வடக்கு, கிழக்கு எங்கும் போரில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக நடத்தப்பட்டன.

இது மஹிந்த ராஜபக்ஷவுக்கு சினத்தை மூட்டிவிட்டது. அவர் இது போரில் உயிரிழந்த இராணுவ வீரர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி எனக் கொதித்தெழுந்தார். கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது கொன்றவர்களுக்குச் செய்யப்படும் அநீதி என்பது அவரின் அரசியல் நாகரிகம் கூறும் அர்த்தம்.

எனினும் போர் வெற்றி விழாவுக்குப் பதிலாகப் பிரிவினை வாதத்துக்கு எதிரான விழாவாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது. இதில் அவர் ஆற்றிய உரையில் கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்தவர்களாலும் சரி எதிர்க் கட்சியில் இருந்தவர்களாலும் சரி பின்பற்றப்பட்டு வந்த கொள்கைகளுக்கும் ஆற்றப்பட்ட உரைகளுக்கும் மாறான விதத்தில் அமைந்திருந்தமை மிகவும் முக்கியமான ஒருவிடயமாகும்.

இலங்கையில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித குல விரோத நடவடிக்கைகளை கடந்த அரசு மறுத்து விட்டதுடன், அவை தொடர்பான சர்வதேச விசாரணைகளை எதிர்த்தும் வந்தது. உள்ளக விசாரணைகள் எனச் சொல்லிக் காலம் கடத்தும் முயற்சிகளிலேயே ஈடு பட்டு வந்தது. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால மேடையில் பகிரங்கமாகவே உண்மைகள் கண்டறியப்படாமல் ஒரு நிலையான நல்லிணக்கத்தை உருவாக்க முடியாது எனத் தெரிவித்தார். இது மஹிந்த ராஜபக்ஷ கையாண்ட வழிமுறைகளுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு தலையடியாகும்.

மேலும் அவர் கடந்த காலத்தில் உடைந்த கட்டங்கள் மட்டும் கட்டப்பட்டன எனவும் உடைந்த மனங்களும் உறவுகளும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கண்டனம் செய்தார். சகல இனங்களும் ஒன்றிணைந்து போராடியே இலங்கையின் சுதந்திரம் பெறப்பட்டதெனவும், இனவாதம் அந்த ஐக்கியத்தைச் சீர்குலைத்து விட்டதெனவும் கடந்த 30 வருடங்களுக்கு முன்பு இலங்கையை ஆட்சி செய்த அரசின் நடவடிக்கைகள் காரணமாகவே போரும் போரின் காரணமான பேரழிவுகளும் ஏற்பட்டன என்பதையும் அவர் விழா மேடையிலேயே ஏற்றுக் கொண்டார்.

இது கால வரை எல்லா அரசியல்வாதிகளும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பிரிவினைவாதம் எனவும், பயங்கரவாதம் எனவும் மாசுபடுத்தும் வகையிலேயே கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். இலங்கையின் ஆட்சியாளர்களின் இன ஒடுக்குமுறை நவடிக்கைகளே தமிழ் மக்களைப் போராட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளியது என்பதை எவருமே ஏற்றுக் கொண்டதில்லை. ஆனால் மைத்திரிபால போரின் காரண கர்த்தாக்கள் யார் என்ற உண்மையைப் பெருந்தன்மையுடனும் துணிவுடனும் ஒப்புக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் உரை உண்மைகளை உணர்ந்து அவற்றை நேர்மையான முறையில் ஒப்புக் கொள்ளும் ஒருவரின் உரையாகவும் எதிர்காலத்தில் இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக நியாயமான ஒரு தீர்வை எட்ட மனப்பூர்வமாக முயற்சி செய்யும் ஒருவரின் துணிச்சலான கருத்து வெளிப்பாடாகவும் தோன்றிய போதிலும் தமிழ் மக்களிடம் சில கேள்விகள் எழத்தான் செய்கின்றன.

முதலில் இந்த விழா போரில் உயிரிழந்தவர்களை அஞ்சலிக்கும் விழாவாக இடம் பெறும் என அறிவிக்கப்பட்டபோதிலும், பின்பு அது பிரிவினை வாதத்துக்கு எதிரான விழாவாக அறிவிக்கப்பட்டது. அது மட்டுமன்றி ஜனாதிபதி தனது உரையின் இறுதியில் மீண்டும் பங்கரவாதம் தலைதூக்க இடமளிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார். இங்கு எவருமே இப்போது பிரிவினை வாதத்தைக் கோரவில்லை. இது தொடர்பாக இலங்கை வாழ் தமிழ் மக்கள் எந்த ஒரு கோரிக்கையையும் வைக்கவில்லை. தமிழ் மக்கள் 1977 இல் தமிழீழக் கோரிக்கையை முன் வைக்கவில்லை. சம அந்தஸ்து, சமஷ்டிபோன்ற கோரிக்களையே முன் வைத்தனர். எனினும் பண்டா- செல்வா ஒப்பந்தம் மூலம் பிரதேச சுயாட்சியையும் டல்லி-செல்வா ஒப்பந்தம் மூலம் மாவட்ட சபை முறையையும் ஏற்றுக் கொண்டனர்.

> உரிமை இழந்தவர்கள் உரிமைகளுக்காகப் போராடும்போது அது எப்படிப் பயங்கரவாதம் எனக்கொள்ள முடியும்.

எனினும் கூட அவையெல்லாம் பிரிவினைக் கோரிக்கைகளாகவே சிங்கள மக்கள் முன் காண்பிக்கப்பட்டன. பண்டா! செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட போது இலங்கைப் படத்தைப் பார்த்து வடக்குக் கிழக்கைப் பிரித்து தமிழர்களுக்குத் தாரை வார்க்கப்பட்டு விட்டது என ஜே.ஆர். ஜெயவர்த்தனா கண்டி யாத்திரையை நடத்தி பெரும் இனக் கலவரத்தை ஏற்படுத்தியதை மறந்து விட முடியாது.

எனவே மைத்திரிபால சிறிசேன எதிர்ப்பது எந்தப் பிரிவினை வாதம் என்பதைத் தெளிவுபடுத்தப்பட வேண்டும். அது தனி நாட்டுக் கோரிக்கையை மட்டும்தான் குறிக்கிறதா அல்லது ஒன்றுபட்ட இலங்கைக்குள் வடக்கு, கிழக்கு இணைந்த உள்ளக சுய நிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சியையும் குறிக்கிறதா என்பதை தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமன்றி சிங்கள மக்கள் மத்தியிலும் முன்வைக்க வேண்டும். பிரிவினைவாத எதிர்ப்பு என்ற பேரில் தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகள் மறுக்கப்படுமானால், ஜனாதிபதி கூறியதைப் போல 30 வருடங்களுக்கு முன்னைய ஆட்சியாளர்கள் எப்படிப் போருக்குக் காரணமாய் அமைந்தர்களோ அதே தவறை இந்த அரசு செய்தாகவே முடியும்.

இனி எப்போதுமே பயங்கரவாதம் தலை தூக்கிவிடப் போவதில்லை என்ற கருத்தும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும்.

30 வருடங்களின் முன்பு தமிழ் மக்களின் உரிமைகள் ஆட்சியாளர்களால் பறிக்கப் பட்டமையாலேயே போர் ஆரம்பமானது என்பதை ஜனாதிபதியே ஒப்புக்கொண்டுள்ளார்.

எனவே உரிமை இழந்தவர்கள் உரிமைகளுக்காகப் போராடும்போது அது எப்படிப் பயங்கரவாதம் எனக் கொள்ள முடியும். அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல விடுதலைப் போராளிகள் என்பது ஒப்புக்கொள்ளப்படும் போதே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் நியாயப்படுத்தப்பட முடியும். ஆயுதப் போராட்டத்தைத்தான் பயங்கரவாதம் எனக் கூறப்படுகின்றது என்றால் ஆயுதப் போராட்டம் மீண்டும் தலைதூக்காது இருக்க என்ன செய்யப் போகிறார்கள்.

கடந்த காலத்தில் அஹிம்சைப் போராட்டமும் சரி ஆயுதப் போராட்டமும் சரி ஆயுத வன்முறை மூலம் அடக்கப்பட முயற்சிகள் எடுத்தமையால் தான் ஆயுதப் போராட்டம் விரிவடைந்து போராக மாறியது. ஜனாதிபதி கூறியது போல உண்மையைக் கண்டறிந்து போருக்கான காரணங்களைக் களையும் போது ஆயுதப் போராட்டம் மீண்டும் எழும் சூழ்நிலை தானாகவே இல்லாமற் போய்விடும்.

ஜனாதிபதியின் நடவடிக்கைகளும் உரைகளும் ஒருபுறம் நம்பிக்கையூட்டும் வகையில் இருந்தாலும் பாடப்படும் பழைய பிரிவினை வாதம் பயங்கரவாதம் போன்ற பல்லவிகள் முன்னைய ஆட்சியாளர்களின் பாதையில் இவரும் இறங்கி விடுவாரோ என்ற சந்தேகத்தை எழுப்புகின்றன.

எப்படி இருப்பினும் ஜனாதிபதியின் நல்லெண்ணம், இனவாத சக்திகளால் மழுங்கபடிக்கப்பட்டு திசை திருப்ப விடாமல் தடுக்கப்பட வேண்டுமானால் தமிழ் மக்களும் தமிழ் தலைமைகளும் எமது உரிமைப் போராட்டத்துக்கு உறுதியாக இருப்பதே ஒரே வழியாகும்.

# யேமனில் மீண்டும் மோதல்



## மனிதாபிமான நெருக்கடிகள் தலைதூக்கும் அபாயம்

■ ரெங்கன்

யேமன் நாட்டில் போர் நிறுத்தம் மீறப்பட்டதை அடுத்து சவூதி அரேபியா தலைமையிலான கூட்டணிப் படைகளின் போர் விமானங்கள் தீவிரவாதிகளின் நிலைகள் மீது கடும் தாக்குதல்களைத் திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பித்தன. 5 நாள் போர் நிறுத்தம் பரிதாபகரமாக முடிவுக்கு வந்ததால் தரைச் சண்டைகளும் மீண்டும் வெடித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடும் மோதல்கள் ஏற்பட்டிருப்பதனால் மனிதாபிமானபேரழிவுகள் விரிவடையக்கூடும் என்றும் அஞ்சப்படுகின்றது.

ஹவூதி போராளிகளுக்கும் பதவி நீக்கம் செய்யப்பட்ட அதிபரின் ஆதரவாளர்களுக்கும் இடையில் கடும் மோதல்கள் நடைபெறுகின்றன. பதவி இழந்த அதிபரின் ஆதரவாளர்களுக்குச் சார்பாக சவூதி அரேபிய படையணிகளின் தலைமையிலானகூட்டணிப்படைகளும்போரில்இறங்கியுள்ளன. இந்தப் போரில் இதுவரை 1,600 மக்கள் கொல்லப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. போரினால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள மருத்துவ, எரிபொருள் மற்றும் உணவு பொருள்கள் கிடைக்கச் செய்வதற்காக 5 நாள் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. என்றாலும் இந்த நிவாரணப் பொருள்கள் பெரும்பாலான மக்களுக்கு போய்ச் சேரவில்லையென்று முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. போர் நிறுத்தம் மேலும் நீடிக்கப்படும் என்றே ஐ.நா. மற்றும் அமெரிக்க அதிகாரிகள் எதிர்பார்த்தார்கள். ஆனால் திங்கட்கிழமை பல நிலைகள் மீது தாக்குதல்கள் இடம்பெறத் தொடங்கின. ஏடன் நகரின் பல நிலைகளும் ஹவூதிகளின் ஆதிக்க நிலைகளும் கடும் தாக்குதல்களுக்குள்ளாகின. சவூதி எல்லையிலுள்ள சாதா மாகாணத்தில் ஹவூதி நிலைகள் தாக்குதலுக்குள்ளாகின. ஹவூதி போராளிகளுக்கு எதிராக சவூதி அரேபியா கடந்த மார்ச்சில் விமானத் தாக்குதல்களை ஆரம்பித்தது. சமீப காலத்தில் ஷையித்களான ஹவூதி போராளிகள் கைப்பற்றியுள்ள பிரதேசங்களில் இருந்து அவர்களை வெளியேறச் செய்வது சவூதி அரேபியாவின் நோக்கம். நாட்டைவிட்டு ஓடியுள்ள முன்னாள் அதிபர் அபெது றப்போ மன்சூரை மீண்டும் பதவியில் அமர்த்துவது தங்கள் நோக்கம் என்று சவூதி அரேபிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஹவூதி போராளிகளுக்கு ஈரான் ஆதரவு வழங்குவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள்.

சவூதி தலைமையிலான படைகள் வான்வழி, தரை மார்க்கம் மற்றும் கடல்வழி தடைகளை ஏற்படுத்தியிருக்கின்றன என்று மனிதாபிமான உதவி அமைப்புக்கள் கூறுகின்றன. கடந்த 12ஆம் திகதி ஆரம்பமான தற்காலிக போர் ஓய்வின்போது உதவிகளை தேவையான பகுதிகளுக்கு கொண்டு செல்வதில் மனிதாபிமான அமைப்புக்கள் பெரும் சங்கடங்களை எதிர்கொண்டன.

**அன்பார் மாகாணத்தை மீட்டெடுக்க ஈராக் புதிய யுக்தி**

ஈராக்கின் மிகப்பெரிய மாகாணத்தின் தலைநகரை இஸ்லாமிய அரசு தீவிரவாதிகளிடமிருந்து மீட்டெடுப்பதற்காக ஈரானிய ஆதிரவு ஷையித் தீவிரவாதிகள் ஒருங்கிணையத் தொடங்கியிருக்கிறார்கள். ரமாதி நகரிலிருந்து இஸ்லாமிய போராளிகளை பின்நோக்கி துரத்துவதற்காக ஈராக்கிய படைகளுடன் ஆயிரக் கணக்கான போராளிகள் இணைந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க படைகளை எதிர்த் துப் போராடிய அனுபவமிக்க போராளிகளும் இதில் அடங்குவர்.

அன்பார் மாகாணத்தில் ஷையித் போராளிகளைப் பயன்படுத்துவதில் அமெரிக்க மற்றும் சவூதி அதிகாரிகள் எச்சரிக்கையுடனேயே செயற்பட விரும்புகிறார்கள். ஏனென்றால் இந்தப்பகுதி சன்னி சிறுபான்மையினரின் பிரதான ஆதிக்கப் பகுதியாகும். எனவே இனக் குழுக்களுக்கு இடையிலான மோதல்கள் உருவாகி விடலாம் என்பது அவர்களின் அச்சம்.

என்றாலும் ஈராக்கிய படைகளுக்கு ஆயுதப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதுடன் சரியான முகாமைத்துவம் இல்லாமையினாலும் கடந்த வாரம் ரமாதி பகுதியிலிருந்து துரத்தப்பட்டுவிட்டார்கள். அதனால் போராட்டத்தில் இராணுவத்துடன் சேர்ந்து கொள்ளுமாறு ஷையித் போராளிகளுக்கு பிரதமர் யஹயிதர் அல்-அயாதி அழைப்பு விடுத்துள்ளார். இவ்வாறு முன்னாள் போராளிகளை இணைத்துக்கொள்வதற்கு அன்பார் மாகாண சபையும் ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

**ஷையித் -சன்னி மோதலாக மாறலாம்**

இருந்தாலும் இஸ்லாமிய அர்சு போராளிகள் சன்னி இனத்தவர்களாக இருப்பதால் ஷையித் போராளிகள் அந்தப் பிரதேசத்துக்குள் வருவதை இனரீதியிலான ஒரு போராக வெளிப்படுத்த உள்ளூர் மக்களின் ஆதரவை தங்களுக்குச் சார்பாக அவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் அபாயம் தென்படுவதாக ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளார்கள். ஷையித் போராளிகள் ஏற்கனவே இஸ்லாமிய அரசு படைகளிடமிருந்து மீட்கப்பட்ட பகுதிகளில் சன்னி இனத்தவர்களுக்கு எதிராக பழிவாங்கும் செயல்களில் ஈடுபட்டு, மனித உரிமை மீறல்களை செய்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கின்றது. ஷையித் போராளிகளை பயன்படுத்த வேண்டாம் என்று அமெரிக்காவும் சர்வதேச சமூகமும் கூறியுள்ள நிலையிலும்– ஈராக்கிய அதிகாரிகள் அதனைச் செய்வது ஈராக்கில் மட்டுமன்றி பிராந்தியம் முழுவதிலுமே சன்னி– ஷையித் மோதலை தீவிரப் படுத்தி விடும் என்கிறார்கள் விடயம் தெரிந்தவர்கள். இஸ்லாமிய அரசு படைகள் கடந்த வாரம் ரமாதியில் இருந்து கிழக்கு திசையில் 80 மைல் தொலைவிலுள்ள பக்தாத்துக்கு நெருங்கும் வகையில் முன்னேற முயன்று கொண்டிருந்தார்கள்.

கிளர்ச்சியாளர்களின் இப்போதைய பெரிய நோக்கம் ஹப்பானியா விமான நிலையத்தின் மீது தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு வழி தடங்களை சுத்தமாக்குவது இந்தத் தளம் பாக்தாத் செல்லும் வழியில் 20 மைல் தூரத்தில் உள்ளது.

ரமாதியை மீட்பதற்கான போரில் ஷையத் போராளிகள் ஒரு பங்குவகிக்கப் போகிறார்கள் என்று வொஷங்டனில் பென்டகன் பேச்சாளர் கேணல் ஸ்டீவ் வாரன் என்பவர் கூறியுள்ளார். மத்திய ஈராக்கிய அரசினால் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப் படு வார்களானால் போரில் அவர்கள்

## உலக நடப்பு

ஈடுபடுவதில் சிக் கல் இருக்காது என்று அவர் கருத்து வெளியிட் டார்.

கடந்த மாதம் டிக்கிரியை சலாஹுதீன் மாகாணத்தில் தீவிரவாதிகளிடமிருந்து ஈராக்கிய படைகள் மீட்டுக் கொள்வதில் ஷையித் போராளிகள் மீதே பெரிதும் தங்கியிருந்தார்கள் என்று கூறப்படுகின்றது.

**தாய்லாந்து முன்னாள் பிரதமர் யின்லக்மீது விசாரணை ஆரம்பம்**

தாய்லாந்தின் பதவி நீக்கப்பட்ட முன்னாள் பிரதமர் யின்லக் சினாவாத்ராதம் மீதான ஒரு வழக்கு விசாரணைக்காக நீதிமன்றில் பிரசன்ன மாகியிருந்தார். இந்த வழக்கானது நாட்டை ஆளுகின்ற இராணுவ ஆட்சியாளரால் சினாவாத்ரா குடும்பத்தின் மீது பழி தீர்த்துக்கொள்வதற்காக சோடிக்கப்பட்டது என்று பலரும் கருதுகிறார்கள். பெரும்பாலும் அவருக்கு பத்து வருட கால சிறை தண்டனை விதிக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது. குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்படும் பட்சத்தில் தாய்லாந்து அரசியலில் யிங்லக்கின் குடும்பத்துக்கு இருந்துவரும் ஆதிக்கம் முடிவுக்கு வந்துவிடும் என்று கருதப்படும் அதேவேளை, இனவாத அரசியலின் அடிமட்டம் ஆதரவாளர்களை இது கிளர்ச்சியில் ஈடுபடச் செய்யக் கூடிய அபாயம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. சினாவாத்ரா குடும்பத்தின் ஆதரவாளர்கள் கடந்த காலங்களில் (றெட்ஷேர்ட்) சிவப்பு சட்டை அமைப்பினர் இந்தக் குடும்ப ஆதரவில் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியதுண்டு. ஆனால் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதன் பின்னர் அவர்கள் அமைதியாக இருந்து வந்துள்ளார்கள். தாய்லாந்து உச்ச நீதிமன்றம் பாங்கொக்கின் வடபகுதியில் கூடியபோது அரசு 5 பேர்களுக்குமேல் கூட்டம் கூடாக் கூடாது என்று சட்டம் விதித்திருந்த போதிலும் சினாவாத்ராவின் பியு தாய் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலர் உட் பட 50 பேருக்கு மேல் கூடியிருந்தது. சமீப காலத்தில் ஓர் அபூர்வநிகழ்ச்சியாகும்.

நான் குற்றமற்றவன் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நீதிமன்றம் எனக்கு நீதிவழங்குமென்று நம்புகிறேன். எதுவும் சட்டப்படி நடக்கும் என்றே நம்புகிறேன் என்று யிங்லுக் சினாவாத்ரா பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

**ஆயர்களுக்கு பாப்பரசர் அறிவுரை**

நம்பிக்கையோடு வருகிற விசுவாசிகளிடம் இதை செய்யுங்கள் அதைச் செய்யுங்கள் என்று கட்டளையிட்டுக் கொண்டிருக்காதீர்கள். ஊழல்களை ஒழிப்பதற்கு பாடுபடுங்கள், கூடிய வரை நல்ல போதகர்களாக நடந்துகொள்ளுங்கள் என்று பாப்பரசர் பிரான்சிஸ் இத்தாலிய ஆயர்களின் மாநாட்டில் அறிவுரை வழங்கினார். வத்திகானில் இந்த மாநாடு நடைபெற்றது. வருடாந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்து பாப்பரசர் உரை நிகழ்த்தினார். உரோமாபுரியின் ஆயராகவும் பணிபுரியும் பாப்பரசர் தொடர்ந்து தமது உரையில், ஆயர்களை இயேசு நாதரைப் போன்று அதிக அடக்கத்தோடும், இரக்கத்தோடும் கருணை மற்றும் ஞானத்தோடும் செயற்படுங்கள் என்றுகேட்டுக் கொண்டார். பொதுவான மற்றும் தனிப்பட்ட ஊழல்களை கண்டிப்பதில் விடப்படும் சுபாவத்தைக் கைவிடவேண்டும்.

இம்மாதிரி ஊழல் நிலைமைகள் வசதிகளற்ற குடும்பங்கள் நேர்மையான வேலையாள்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்கள் மத்தியில் காணப்படலாம்.

ஆயர்கள் தமது பங்குகளில் சாதாரண மக்களுக்குரிய தவிர்க்க முடியாத பங்களிப்பை மீண்டும் வலுவாக்கிக்கொள்ளும் படி கேட்டுக்கொண்டார். உண்மையில் சொல்லப்போனால் சாதாரண பங்கு உறுப்பினர்கள் அதிகார பூர்வமான கிறிஸ்தவ ஒருங்கிணைப்பை கொண்டிருப்பார்களானால் அவர்கள் தம் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு எல்லாவித நிலைகளிலும் ஆயரின் கட்டளை போதகரின் கட்டளை அல்லது எழுத்துமூலமான அறிவுறுத்தல்கள் தேவைப்படமாட்டாது. இது அரசியலிருந்து சமூக செயற்பாடுகள் மற்றும் பொருளியலில் இருந்து சட்ட இயற்றும் நிலைவரைக்கும் பொருந்தும்– என்றார்.

# சென்னையா?




# மும்பையா?

## அனல் பறக்கப்போகும் இறுதியின் ஒரு பார்வை

கடந்த இரண்டு மாதகாலமாக நடைபெற்று வந்த ஐ.பி.எல். தொடர் தனது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. லீக் ஆட்டங்கள், முதலாவது தெரிவாட்டம், விலகலாட்டம், இரண்டாவது தெரிவாட்டம் இவ்வாறான பல தடைகளைத் தாண்டி மும்பை, சென்னை இந்த இரண்டு அணிகளும் கிண்ணக் கனவுடன் இன்று களமிறங்குகின்றன. இந்த இரண்டு அணிகளில் எந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்ற அதிக வாய்ப்பைக் கொண்டுள்ளது என்பதனை சற்று அலசுவதே இந்தக் கட்டுரை.

முதலில் மும்பையை எடுத்துக்கொண்டால் ஆரம்பத்தில் பஞ்சாப்புடன் தரவரிசை பட்டியலில் கடைசி இடத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக போரிட்டுக்கொண்டிருந்தது. திடீர் எழுச்சி கண்டு தொடர்வெற்றிகள் மூலம் படிப்படியாக முன்னேறி லீக்சுற்றில் சென்னைக்கு அடுத்தபடியாக புள்ளிப்பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பிடித்தது. அத்துடன் நின்றுவிடவில்லை முதலாவத தகுதியாட்டத்தில் சென்னையையே வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு சென்ற முதலாவதுஅணி என்ற பெயரைப்பெற்றது. இவ்வாறு பலதடைகளைக் கடந்து சாதித்த மும்பை இறுதியில் சென்னையை விழ்த்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கத்தான் செய்கின்றன. துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று மூன்றிலுமே மும்பை வீரர்கள் சிறப்பான திறனில் நீடிக்கிறார்கள். துடுப்பாட்டத்தைப் பொறுத்தமட்டில் சிம்மொன்ஸ், பார்த்திவ் பட்டேல் என்று வலது, இடது பக்க துடுப்பாட்டம் மும்பைக்கு அமைந்துள்ளது. தொடக்க வீரர்கள் விடும் தவறுகளையும் அணியின் சரிவையும் சமன் செய்து மத்தியவரிசை அதிரடி வீரர்களுக்கு பதட்டம் இல்லாத இன்னிங்ஸை கொடுக்கக்கூடிய வகையில் அடுத்தடுத்த இடங்களில் ரொகித் சர்மாவும் ராயிடுவும் உள்ளனர். ஆதிரடியில் ஆட்டத்தை நிறைவுசெய்ய பொலார்ட், பாண்யா, ஹர்பஜன்சிங் போன்ற வீரர்கள் உள்ளனர். பந்தவீச்சில் மலிங்கவும் மக்கெல்நாதனும் வேகத்தில் மிரட்டும் அதே நேரம் ஹர்பஜன்சிங் சுழலில் திக்குமுக்காட வைக்கிறார். அனைத்தையும் விட மூன்றிலும் அசத்தக்கூடிய பொலார்ட் மும்பையின் பலம். மும்பையின் இந்தப் பலமான படையை தோற்கடிக்கக்கூடிய வகையில் சென்னை உள்ளதா என்று நிச்சயமாக சென்னையின் ரசிகர்களும் சற்றுச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். ஏனெனில் தொடர் ஆரம்பமானபொழுது இருந்த சென்னை வேறு தற்பொழுது உள்ள சென்னை வேறு. மக்கலத்தின் இழப்பு சென்னையில் தனியாக உணரப்படுகிறது. ஹசி ஒரு சிறந்த விரர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவரால் நிச்சயமாக மக்கலத்தின் இடத்தை நிரப்ப முடியாது. ஹசி இலக்குச் சரிவை தடுக்கக்கூடியவர். இலக்குச்சரிவை தடுப்பதால் ரி–20 ஆட்டங்களில் அவ்வளவு பலன் வந்துவிடாது. இதைத்தான் சென்னையின் பயிற்றுவிப்பாளர் பிளெமிங்கும் முன்வரிசை வீரர்கள் குறைந்த பட்சம் முதல் பந்துப்பந்துப் பரிமாற்றத்தில் 75 ஓட்டங்களைப் பெறக்கூடிய வகையில் செயற்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். ஆனால் சென்னையின் மத்தியவரிசை மும்பையின் மத்தியவரிசையை விட பலம்பெற்றுள்ளது. ராயிடுவையும் ரொகித் சர்மாவையும் விட அடித்தாடக்கூடியவர்கள் ரெய்னாவும் பிளாஸிஸ்ஸும். ஆனால் இவர்கள் இருவரும் கடந்த சில ஆட்டங்களாக தடமாறுகின்றமையே சென்னையின் தற்பொதைய தலையிடி. இவர்கள் இருவரும் மீண்டும் போரமுக்குத் திரும்பும் பட்சத்தில் மும்பையின் கிண்ணக்கனவு தவிடுபொடியாகும்.

மும்பையை பலவீனமடையச் செய்யக்கூடிய பந்துவீச்சாளர்களுக்கு சென்னையில் பஞ்சமில்லை. அஸ்வின் சுழலில் அங்கும் இங்குமாக வீரர்களை அலைக்களிக்கிறார். நெக்ராவும், பிராவோவும், மொகித் சர்மாவம் கட்டுக்கோப்பாக வீசுகிறார்கள். களத்தடுப்பில் பிராவோ, பிளாஸிஸ், ஜடெயா மூவரும் கொடிகட்டிப் பறக்கிறார்கள் எனவே இவற்றையெல்லாம் வைத்துப்பாரக்கின்ற பொழுது சென்னையின் பிரச்சனை மத்தியவரிசை துடப்பாட்டமே என்பது தெளிவாகிறது. இதனைச் சரிசெய்யும் பட்சத்தில் சென்னை மூன்றாவது முறையாக கிண்ணத்தை சொந்;தமாக்கும் இல்லையேல் மும்பையின் கைகளில் கிண்ணம் தவளவேண்டி வரும். ■

---


# துப்பாக்கி முனையில் துடுப்பாட்டம்




கிரிக்கெட்டை பிரதான விளையாட்டாக ஏற்றுக்கொண்டுள்ள பல நாடுகளில் பாதுகாப்பற்ற நாடு என்ற சங்கடத்தை கொண்ட நாடு பாகிஸ்தான். இந்த சங்கடங்களையும் அவப்பெயரையும் சிம்பாப்வேயை வைத்து துடைத்தெறிய திட்டமிட்டுள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட்.

கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த பொழுது இலங்கையணி பயணித்த பஸ்மீது தீவிரவாதிகள் தாக்குதலை நடத்தினார்கள். இதற்கு பலநாடுகளும் தமது கண்டனங்களைத் தெரிவித்ததுடன் பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் செய்வதை முற்றாக புறக்கணித்தனர். இந்த நிலைமை கடந்த ஆறு ஆண்டுகளாக நீடித்தது. இந்த ஆறு ஆண்டுகளில் பாகிஸ்தான் பலநாடுகளை தம்முடன் கிரிக்கெட் தொடருக்காக ஒப்பந்தம் செய்யும்படி கேட்ட போதிலும் எந்த நாடும் சம்மதிக்க முன்வரவில்லை. இதனால் சர்வதேச மட்டத்தில் பாகிஸ்தானுக்கு மேலும் அவப்பெயர் ஏற்பட்டது.

இந்த நிலையில் 6 ஆண்டுகளின் பின்னர் பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் செய்ய ஏற்றுக்கொண்டது சிம்பாப்வே. சிம்பாப்வே எதிர் பாகிஸ்தான் இடையிலான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு சில நாட்களிலேயே பாகிஸ்தானில் தீவிரவாதிகள் பஸ் ஒன்றை வழிமறித்து தாக்குதல் நடத்தியதில் பல.பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதனையடுத்து தனது ஒப்பந்தத்தை ரத்து செய்ய சிம்பாப்பேமுயன்றபோதிலும்பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தீவிர முயற்சியால் முதன்முதலாக தற்பொழுது பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்ய ஏற்றுக்கொண்டு விளையாடி வருகிறது சிம்பாப்வே.



பாகிஸ்தானுக்கு வந்த சிம்பாப்வே அணிக்கு பாகிஸ்தான் கொடுத்திருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுளே அந்த நாட்டில் கிரிக்கெட் விளையாடுவது பயங்கரமானது என்பதனை சொல்லாமல் சொல்லி நிற்கிறது. விரர்களின் பாதுகாப்புக்காக மட்டும் மூவாயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரவு பகலாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதாவது ஒரு வீரருக்கு இருநூறு பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்ற அடிப்படையில். வீரர்கள் ஆட்டத்துக்காகவோ அல்லது பயிற்சிக்காகவோ மைதானம் நோக்கி புறப்படும் வேளையில் வீரர்களின் பஸ்ஸிற்கு முன்னாலும் பின்னாலும் விசேட பாதுகாப்பு வாகனங் கள் அணிவகுத்து வருவதுடன் ஹெலி ஹொப்டர்கள் வான் வழியான பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளன. ஆட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேளையில் மைதானத்துக்கு மேலாக ஹெலி ஹொப்டர்கள் நகரைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றன. இதைவிட மைதானத்தின் இருபுறமும் உள்ள உயர்ந்த கட்டடங்களில் தொலைநோக்கியுடன் பொலிஸார் பாதுகாப்பில் உள்ளனர். பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கட்டடத் தொகுதிக்கு முன்னால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சி.சி.ரி. கமெராக்களின் மூலம் நகர் முழுவதும் கண்காணிக்கப்படுகிறது. மொத்தத்தில் 4 ஆட்டங்களுக்காக 25 கோடிகளை பாகிஸ்தான் அரசு செலவிடுகிறது.

தனது நாட்டுக்கு சுற்றுப்பயணம் செய்யும் வீரர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதில் தற்பொழுது பாகிஸ்தான் அரசு தீவிரம் காட்டினாலும் இவ்வாறான பலத்த ஏற்பாடுகளே பாகிஸ்தானில் தீவிரவாதம் எந்தளவுக்கு தலைதூக்கியுள்ளதென்பதனை சொல்லாமல் சொல்லி நிற்கின்றன. எது எவ்வாறாயினும் பாகிஸ்தானுக்கு சர்வதேச நாடுகள் சுற்றுப்பயணம் செய்வதில்லை என்ற சங்கடத்துக்கு பாகிஸ்தான். முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. ■